# மாத்வமித்ரன்

புஸ்தகம் 8 [illegible] 8–11

[illegible] 5 — 1936.

[illegible]
[illegible] 21193. K,
N35.8.8–11.9.
208165



# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.


EDITOR:

Adyam Bhagavatha Ranganathachariar,

KUMBAKONAM.


பௌர்ணமிதோறும் வெளிவரும்.


21 DEC 1936




| | | |
|---|---|---|
| 9. | தாத்ருநாம ஸம்வத்ஸரம். | No. 5. |
| ...ம் 9 | கார்த்திக மாஸம். (12—11—36) சனிவாரம். | நெ. 5. |



பொருளடக்கம். பக்கம்.


ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) 129

சங்கர லீலா விலாசம் 138

ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) 142

ஆசாரமாலை 146

அணுபாஷியம் 149

சண்டியம்மன் சரிதை 150

சண்டாளர்களின் அனந்தசயனம் ஆலயப்பிரவேசம் 158

விசேஷ தினங்கள் 160



ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்ப புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி வி[illegible]தாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடை[illegible] பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்

## வெகு சொற்பம் தானிருக்கின்றன.

## உடனே அவைகளைப்பெற

## முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வ மித்திரன்.

1409

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिर्नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

| VOL. 9 | தாத்ரு நாம ஸம்வத்ஸரம். கார்த்திக மாஸம். | NO. 5 |
|---|---|---|

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.

(முன் 107ம் பக்கம் தொடர்ச்சி, காபிரைட்)

### இருபத்தி ஏழாவது அத்தியாயம்.

### பீமசேனரின் யுத்தம்.

இந்த அத்தியாயத்தில் கர்ணபர்வம் கதை நிரூபிக்கப்படு
றது. துரோணாசாரியார் சரீரம் விட்டபின் அரசனை துரி
பாதனன் அசுவத்தாமாசாரியாரிடமிருந்து ஆக்ஞையைப்பெற்று
ணனை ஸேனாதிபதியாய்ச் செய்தார். கர்ணன் கவசம் போட்டுக்
காண்டு யுத்தத்திற்கு புறப்பட்டான். அவனுடைய ஸேனாதி
த்யத்தில் பாண்டவர்களுக்கும் திருதராஷ்டிர குமாரர்களுக்கும்
காக்ரூரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தின் மத்தியில்
.தய பர்வதத்திற்கு சமமான யானையின் மீது உதித்த சூரியனைப்
போல் விசேஷமாய் தோஷமற்ற பீமசேனரைப்போல் காணப்பட்

டார். அரசர்களை விரட்டும் பீமசேனரிடம் க்ஷேமதூர்த்தராஜன் வந்து சேர்ந்தான். அவன் பீமசேனரின் யானையை ஸம்ஹரித்தான். அவன் பராக்கிரம மதங்கொண்டவனென்று பீமசேனர் அறிந்து அவனை சீக்கிரமே யமனுடைய வீட்டுக்கு அனுப்பித்தார். இவ்வாறு பீமசேனர் க்ஷேமதூர்த்த ராஜனைக்கொன்று சத்ரு பக்ஷத்திலிருக்கும் யௌவனவயதுள்ளவர்களின் தலையை சேதனம் செய்துகொண்டு எப்படி நரிநாய்களை சிம்ஹம் விரட்டுமோ அப்படி சத்ரு சைனியத்தை விரட்டினார். பீமசேனர் விரட்டும் அந்த சைனியத்தைப் பார்த்து அசுவத்தாமாசாரியார் தன் ரதமேறி பீமசேனரிடம் யுத்தத்திற்கு வந்தார். பீமசேனருக்கும் அசுவத்தாமாசாரியாருக்கும் மிகவும் பயங்கரமானதும் ஆச்சரியமுள்ளதுமான யுத்தம்நடந்தது. இம்மாதிரியானயுத்தம் முன்பு எந்தவீரனுக்கும் எப்பவும் நடந்ததில்லை. இந்த யுத்தத்தைப் பார்த்து தேவர்கள், கந்தர்வர்கள், ரிஷிகள் இவ்வாறு பேசினார்கள். இப்பேர்ப்பட்ட தர்மயுத்தத்தை நாங்கள் இதற்கு முன்பு பார்த்ததில்லை. இனி நடக்கப்போவதுமில்லை. இந்த யுத்தத்தின் ஒரு வீசம் யோக்யதை கூட எந்த யுத்தமும் அடையவில்லை. முக்யப்ராணரையும் பரமசிவனையும் தவிர வேறு யாருக்கு இம்மாதிரியான க்ஞான சம்பத்தும் பலமும் எப்படி வரும். க்ஞானம் பலம் இவைகளின் மேலான சேர்க்கை இந்த பீமசேனர் அசுவத்தாமாசாரியார் இவர்களிடம் தான் இருந்து வருகிறது.

இவ்வாறு தேவர்கள் சொல்லும்பொழுது மேலான பராக்கிரமமுள்ள மனுஷ்யோத்தமர்களான பீமசேனர் அசுவத்தாமாசாரியார் இவர்கள் பாணங்களால் எல்லாதிக்குகளையும் இடைவெளியில்லாமல் செய்தனர். இந்த யுத்தத்தைப் பார்த்து மகாரதிகர்கள் ப்ரீதியை அடைந்தனர். பீமசேனர் அசுவத்தாமாவின் தனுஸ்ஸை சேதித்துவிடவும் அசுவத்தாமா பீமசேனரிடம் மகா அஸ்திரங்களை ப்ரயோகம் செய்தார். பலிஷ்டனும் பயமில்லாதவருமான பீமசேனர் அந்த அஸ்திரங்களை ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞையின் பேரில் பதில் அஸ்திரங்களை விட்டு சாந்தப்படுத்தினார். மறுபடியும் அவ்விருவர்கள் ஒருவருக்கொருவர் பாணங்களால விசித்ரமாயும் பலமாயும் மகாயுத்தம் செய்தனர். அப்பொழுது

208165



பீமசேனரின் பாணங்களால் மிகவும் ஹிம்சிக்கப்பட்டவராய் அசுவத்தாமாசாரியார் ப்ரக்ஞையற்று ஜடமாய் விழுந்தார். அசுவத்தாமாசாரியாரின் பாணப்ரஹாரத்தால் கொஞ்சம் சஞ்சலமடைந்த தேகமுள்ள பீமசேனர் யுத்தசிரமம் இல்லாதவராய் தனுர்தாரியாய் இருந்து, அசுவத்தாமா முதலில் யுத்தம் விட்டுப் போகவும் தன் கர்ஜனையால் பத்துதிக்குகளை பதில் சப்தம் கொடுக்கும்படி செய்துகொண்டு, யானைகூட்டத்தில் யுத்தத்திற்குசென்றார்.

அவர் யானைகளைக் கொல்லும்பொழுது துரியோதனன் தர்மபுத்திரரிடம் யுத்தத்திற்கு வந்தார். இவ்விரண்டு ராஜர்களும் வெகுகாலம் யுத்தம் செய்தார்கள். தர்மபுத்திரர் ஸாமர்த்யமாக துரியோதனனின் ரதத்தை நாசம் செய்தார். துரியோதனன் பாரமுள்ள கதாயுதத்தை எடுத்தான். பீமசேனர் கதாயுதத்தை எடுத்துக்கொண்டு துரியோதனனிடம் வந்துசேர்ந்தார். பீமசேனர் யுத்தத்திற்கு வருவதை கிருபாசாரியார் பார்த்து துரியோதனனை தன்ரதத்தில் உட்கார்த்திவைத்துக்கொண்டு பீமசேனரின் சமீபத்திலிருந்து திருப்பிக்கொண்டுபோனார். அப்பொழுது கர்ணனும் நகுலனும் பாணங்களால் மஹாயுத்தம் செய்தனர். கர்ணன் நகுலனை ரதமில்லாதவனைச்செய்து பிறகு ஓட்டம் பிடித்த நகுலனை விரட்டிவந்து அவனுடைய கழுத்தில் தனுஸ்ஸை மாட்டினான். க்ரூரமான வார்த்தைகளைப்பேசி குந்திதேவியிடம் வாக்கு கொடுத்திருப்பதில் கௌரவம் வைத்து நகுலனை ஸம்ஹரிக்கவில்லை. நகுலனை விட்டுவிட்டு சத்ருக்களிடம் சென்றான். பிறகு க்ரூரமான பராக்கிரமமுள்ள ஸாந்ப்ரதி கேகயதேசத்தின் ராஜாக்களான விந்தன் அனுவிந்தன் இவர்களிடம் யுத்தத்திற்கு வந்தான். அநேக உத்தம பாணங்களை விருஷ்டி செய்யும் விந்தானுவிந்தர்களுக்கும் ஸாத்யகிக்கும் க்ரூரமான யுத்தம் நடந்தது. அவர்களால் தடுக்கப்பட்ட ஸாத்யகி தன் பலத்தைக்கொண்டு அனுவிந்தனுடைய தலையை சேதித்தான். பிறகு விந்தன் என்பவன் ஸாத்யகியுடன் யுத்தம் செய்தான். அவ்விருவர்கள் அந்த உத்தமமான யுத்தத்தில் ஒருவருக்கொருவர் ரதமில்லாமல் செய்துகொண்டனர். பிறகு அவ்விருவர்கள் கத்தி கேடயம் எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் இரண்டு ராஜாளி பக்ஷிகளைப்போல் சஞ்சாரம் செய்தனர்.

கத்தியுத்தத்தில் பரிசிரமம் பெற்றிருக்கும் இவ்விருவர்கள் ஒருவருக்கொருவர் கேடயத்தை சேதித்து உத்தமமான கத்திபிடித்தவர்களாய் ஒரே சமயம் ஓடிவந்தனர். அவர்களில் ஸாத்யகி இடது புறமாய் கத்தியை சுழற்றி விந்தன் என்பவனின் கர்ணகுண்டலங்களுடன் கூடிய தலையை யுத்தத்தில் சேதித்தான். இவ்வாறு ஸாத்யகி விந்தானுவிந்தர்களைக் கொன்று பந்துஜனங்களால் மரியாதை பெற்றவனாய் மற்ற சத்ருக்களை நடுங்கும்படிசெய்து யுத்தம் செய்யப்போனான்.

திருஷ்டத்யும்னன் தன்னிடம் கிருபாசாரியார் யுத்தத்திற்கு வருவதைப் பார்த்து அவர் தபஸ்ஸினால் தன்னை ஸங்கடப்படுத்துவார் என்று தெரிந்து பீமசேனரை சரணமடைந்தான். எல்லா பக்கத்திலேயும் ஸேனையை ஹிம்ஸிக்கும் கர்ணனிடம் அர்ஜுனன் யுத்தத்திற்கு வந்தான். ஒருக்ஷணத்தில் யுத்தத்தில் கர்ணனை ரதமில்லாமற் செய்தான். பிறகு கர்ணன் தன் எல்லா சைனியங்களையும் திரும்பும்படி கட்டளையிட்டான்.

அன்று ஸேனாதிபதியாகி முதல்நாள் யுத்தத்தில் அர்ஜுனனால் பராஜயமடைந்திருக்கும் கர்ணன் ராத்திரி துரியோதனனின் கையைப் பிடித்துக்கொண்டு இவ்வாறு சொன்னான். ஹே துரியோதனா! யுத்தத்தில் வேறு விஷயத்தில் மனது வைத்திருந்த என்னை அர்ஜுனன் ஜயித்தான். என் இஷ்டப்படி பரசுராமர் கொடுத்த பேதிக்க முடியாததான ரதம் தனுஸ் இவைகள் இருக்கின்றன. ஆனால் ஸ்ரீகிருஷ்ணரைப் போலுள்ள ஸாரதி மட்டியில்லை. சல்யராஜன் எனக்கு ஸாரதியாகும் பக்ஷத்தில் உன் சத்ருவான அர்ஜுனனைக் கொல்கிறேன். என்று இவ்வாறு கர்ணன் சொல்லவும் துரியோதனன் சல்யராஜனைக் கர்ணனுக்கு ஸாரத்யம் செய்யும்படி சொன்னான். அப்பொழுது சல்யராஜன் கோபமடைந்தவர் போல் காட்டிக் கொடுத்தார். அதற்கு துரியோதனன் ராஜனே! ஸாரதி என்பவன் ரதிகனைவிட உத்தமனாய் இருக்கவேண்டும். அதனால் சொன்னேன் என்று சொல்லி சல்யராஜனை ஸமாதானம் செய்தான். ரதிகனைவிட புத்தியாலும் பலத்தாலும் க்ஞானத்தாலும் தைரியம் வீரியம் முதலியவைகளாலும் உத்தமனாயிருப்பவன் ஸாரதியாகவேண்டும். இவ்



வாறு அர்ஜுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் ஸாரதியாக இருக்கிறார். முன்பு பரமசிவன் த்ரிபுரத்தை எரிக்கும்பொழுது சதுர்முகன் ஸாரதியாக இருந்திருக்கிறார். துரியோதனனுடைய இத்யாதி வாக்யங்களால் சல்யராஜன் சமாதானம் அடைந்தவர்போல் ஆகி கர்ணனுக்கு ஸாரதியாக ஆனார். கர்ணன் சல்யராஜனுடன்கூடி ஸேனையை வ்யூகம் கட்டி யுத்தத்திற்கு வரும்பொழுது எனக்கு யார் அர்ஜுனனை காண்பிக்கிறாரோ அவருக்கு சந்துஷ்டனாய் தடையன்னியில் பணத்தைக்கொடுக்கிறேன் என்று அகங்காரத்துடன் பேசினான். இவ்வாறு பலதடவை பேசும் கர்ணனைப் பார்த்து சிரித்துக்கொண்டு சல்யராஜன் பேசினான். எந்த அர்ஜுனனால் நிவாத கவசர்கள் என்னும் அஸுரர்கள் கொல்லப்பட்டனரோ காண்டவனம் கொளுத்தப்பட்டதோ அந்த அர்ஜுனனை எந்த புருஷன் தான் ஜயிப்பான். சதுர்முகனாயிருந்தால் ஜயிப்பான். அர்ஜுனனின் சக்தியை நீங்கள் உத்தரகோக்ரஹணத்தில் பார்த்திருக்கிறீர்கள். காக்கைபோலும் நரியைபோலும் காரியங்கொண்ட நீ ஹம்ஸத்திற்கும் ஸிம்ஹத்திற்கும் ஸமானான அர்ஜுனனிடம் யுத்தத்திற்கு செல்லாதே, அர்ஜுனனால் கொல்லப்பட்டு யமலோகத்திற்கு செல்லாதே. இவ்வாறு சல்யராஜனால் சொல்லப்பட்ட கர்ணன் சல்யராஜனுடைய தேசமான மத்ர தேசத்தை விசேஷமாய் நிந்தித்தான். அதற்கு சல்யன் எல்லா தேசங்களிலும் நீசர்கள் மத்யமர்கள் உத்தமர்களான ஜனங்கள் இருக்கின்றனர் என்று சொல்லி அர்ஜுனனின் ஹிதத்திற்காக கர்ணனுக்கு ஸாரத்யம் செய்தார். கர்ணன் சல்யராஜன் ஓட்டிய ரதத்துடன் பாண்டவ ஸேனைக்குவந்து துரியோதனன் கிருபாசாரியார் முதலானவர்களாலும், மகா அஸ்திரங்களை தெரிந்தவரான அசுவத்தாமாசாரியாராலும், யுத்தத்தில் சம்ரக்ஷிக்கப்பட்டவனாய் பாணங்களால் ஸைனியத்தை எங்கும் ஓட்டினார். பீமசேனர் திருஷ்டத்யும்னன் ஸாத்யகி இவர்களால் சம்ரக்ஷிக்கப்பட்ட பாண்டவ ஸைனியம் கர்ணனிடம் பாணவிருஷ்டியை செய்தது. பிறகு கர்ணன் அந்த ஸேனையை பாணச்ரேஷ்டங்களால் பேதித்து தர்மபுத்திரரிடம் வந்து சேர்ந்தான். பிறகு கர்ணன் க்ரூரமான பாணங்களால் தர்மபுத்திரரை ரதமில்லாதவராய்ச்செய்து அவருடைய கழுத்தில்

க்ரூரமான பாணங்களால் நாண்கட்டிய தனுஸ்ஸை மாட்டி உரக்க க்ரூரமான வார்த்தையைப் பேசினான். தர்மபுத்திரரை கர்ணன் சங்கடப்படுத்துவதைப் பார்த்து பீமசேனர் துரியோதனனை சீக்கிரமே ரதம் தனுஸ் இவைகள் இல்லாமற்செய்து அதிகமாய் அடித்தார். பிராண சந்தேகங்கொண்ட துரியோதனனை சல்யராஜன் பார்த்து கர்ணனுக்கு அந்த நிலைமையைக் காண்பித்து இவ்வாறு பேசினார். எந்த துரியோதனனின் க்ஷேமத்தின்பொருட்டு இந்த யுத்தம் நடக்கிறதோ நீயும், இந்த ஸைனியமும்இருக்கிறதோ பீமசேனரால் பிடிக்கப்பட்டவனாய் இப்பொழுது யமலோகத்திற்கு ப்ரயாணம் செய்ய விருப்பமுள்ள அந்த துரியோதனனை சீக்கிரம் காப்பாற்று. தர்மபுத்திரரை வீணாய் சங்கடப்படுத்துவதில் உனக்கு என்ன பிரயோஜனம். என்றிவ்வாறு சல்யன் சொன்ன வார்த்தையைக்கேட்டு கர்ணன் தர்மபுத்திரரை விட்டு தன் ராஜனான துரியோதனனின் ஸம்ரக்ஷணையில் விசேஷ அபிப்பிராயத்துடன் அங்கு சென்றான். அமிதமான காந்தி பொருந்திய பீமசேனர் கர்ணனைப்பார்த்து கோபத்துடன் அவனைக் கொளுத்துபவர்போல் அவன் எதிரில் வந்தார். தர்மபுத்திரரை ஸம்ரக்ஷிப்பதில் ஸாத்யகியையும் த்ருஷ்டத்யும்னனையும் ஆக்ஞாபித்து கர்ணனுக்கு எதிராகவரும் பீமசேனரின் ரூபம் ப்ரளயகாலத்தில் உலகத்தை நாசம் செய்யும் எல்லா ஜகத்தையும் பக்ஷணம்செய்த ருத்திரனை விழுங்கும் நரஸிம்ஹ ரூபியான விஷ்ணுவின் ரூபத்திற்கு ஸமமாக இருந்தது. பீமசேனரின் வேகத்தால் எல்லா பூமிகளும் நடுங்கின. எல்லா சத்ரு சைனியமும் ஓடியது. கர்ணனால் பாண சமூகங்களால் அடிவிழுந்த பீமசேனர் வஜ்ஜிராயுதத்திற்கு ஸமமான பாணத்தை கர்ணனிடம் ப்ரயோகம் செய்தார். அந்த பாணத்தால் அடிவிழுந்த கர்ணன் பிணம்போல் கீழேவிழுந்தான். பீமசேனர் கத்தியை எடுத்துக்கொண்டார். கால்நடையாய் கர்ணனிடம் வந்தார். எந்த புருஷன் தூரயிருந்து விஷ்ணு நிந்தையைச் செய்கிறானோ அவனைப்பிடித்து நாக்கு இல்லாமல் செய்கிறேன் என்று பீமசேனர் எப்பொழுதும் சபதம் செய்திருக்கிறார். ஆகையால் கர்ணனுடைய நாக்கை அறுப்பதற்காக பீமசேனர் வந்து சேர்ந்தார். சமீபத்தில் வந்த பீமசேனரைப்பார்த்து சல்யராஜன்



காரணங்களைச்சொல்லி அப்படிச்செய்ய வேண்டாமென்று தடுத்தார். ஹே பீமசேனா! அர்ஜுனனின் சபதத்தை நீ அஸத்யமாக்குவது உனக்கு சரியல்ல. ஆதலால் ஸூதகுமாரனான கர்ணனின் நாக்கை சேதிக்கவேண்டாம். என்றிவ்வாறுசொல்லி சல்யன் பீமசேனரின் சமீபம் விட்டு எல்லா ஜனங்களும் பார்க்கும்பொழுது கர்ணனை ரதத்தால் தூரக்கொண்டுபோனார்.

இவ்வாறு பீமசேனர் கர்ணனை ஜயித்து அசவத்தாமாசாரியார் துரியோதனன் இவர்களுடன் கூடிய எல்லா கௌரவ ஸைனியத்தையும் ஓட்டினார். அச்சமயம் பீமசேனரால் ஓர் க்ஷணத்தில் மூன்று அக்ஷௌஹிணி ஸைனியம் நாசம் செய்யப்பட்டது. அப்பொழுது அசுவத்தாமாசாரியார் பாண்டவ ஸைனியத்திற்கு சென்றார். எல்லா ஸைனியத்தையும் மர்த்தனம்செய்து தர்மபுத்திரரை ரதமில்லாமற்செய்து த்ருஷ்டத்யும்னன் நகுலன் ஸகதேவன் ஸாத்யகி திரௌபதி குமாரர்கள் இவர்களை ஒரு க்ஷணத்தில் ரதமில்லாமற்செய்தார். அகங்காரய் போய் யுத்தத்தினின்றும் திரும்பிய தர்மபுத்திரர் முதலானவர்களை விரட்டிக்கொண்டு ஆகாயத்தை பாணங்களால் மறைத்துக்கொண்டு அசுவத்தாமா வந்தார். அப்பொழுது தர்மபுத்திரர் அசுவத்தாமாவைப் பார்த்து இவ்வாறு சொன்னார். ஹே அசுவத்தாமா! எங்களுடைய சொந்த தர்மத்திலிருந்துவரும் எங்களை ஏன் கொல்கிறாய். நீ ப்ராம்மணனாயிருந்து க்ஷத்திரியனுடைய தர்மத்தை ஆசிரயம் செய்துகொண்டு க்ஷத்திரியர்களைக்கொல்லாதே. என்றிவ்வாறு சொல்லப்பட்ட அசுவத்தாமா சிரித்துக்கொண்டு தர்மபுத்திரர் முதலானவர்களைவிட்டு கிருஷ்ணார்ஜுனர்கள் இருக்குமிடத்திற்கு போனார். அவர் பாணங்களுடன் கூடிய ஆதிசேஷனுக்கு சமமான புஜத்தை தூக்கிக்கொண்டு ஸம்ஸப்தகர்களுடன் யுத்தம் செய்யும் மிகவும் சூரனான அர்ஜுனனை யுத்தத்திற்கு அழைத்தான். யுத்தத்தை விரும்புகிறவர்களான ஸம்ஸப்தகர்களுடன் சேர்ந்திருக்கும் அர்ஜுனன் அசுவத்தாமாவால் அழைக்கப்பட்டவனாய் ஸ்ரீகிருஷ்ணனை நான் யாருடன் யுத்தம் செய்யவேண்டுமென்று கேட்டான். அதற்கு ஸ்ரீகிருஷ்ணர் நான்கு குதிரைகளையும் அசுவத்தாமாவின் ரதத்தின் சமீபம் விட்டார்.

அஸ்திரம் அறிந்தவர்களில் ஸ்ரேஷ்டர்களாயும் மகா பலசாலிகளாயும் யுத்தத்தில் கர்வங்கொண்டவர்களாயும் உள்ள அசுவத்தாமாசாரியார் அர்ஜுனன் இவர்கள் பாணங்களால் எல்லா திக்கு விதிக்குகளையும் இருளும்படியாய்ச் செய்தார். அப்பொழுது அசுவத்தாமா அர்ஜுனனுடைய ரதக்குதிரைகளின் மயிர்கண்கள் அவனுடைய மயிர்கண்கள் த்வஜம் தனுஸ்ஸு இவைகளில் அமோகமான பாணங்களை நிறுத்தவில்லாமல் தொடர்ந்து விருஷ்டி செய்து பாணக்கூண்டால் அர்ஜுனனைக்கட்டினான். அர்ஜுனன் இவ்வாறு சரபஞ்ஜரத்தால் கட்டுப்படவும் அப்ரமேயனான ஸ்ரீ கிருஷ்ணர் அவனை ஆலிங்கனம் செய்து அவனை மூர்ச்சையில்லாமற் செய்தார். அவனுக்கு பலத்தைத் தந்தார். அர்ஜுனன் எழுந்து மகாஅஸ்திரங்களை ப்ரயோகம் செய்தான். அசுவத்தாமா உத்தமமான அஸ்திரங்களால் அர்ஜுனனுடைய அஸ்திரங்களைத்தடுத்து காண்டீவ தனுஸ்ஸின் நாண்கயிற்றை சேதித்தார். அர்ஜுனனை பாணங்களால் வர்ஷித்தார். பிறகு அர்ஜுனன் காண்டீவ தனுஸ்ஸுக்கு மற்றொரு நாணைக் கட்டினான். பிறகு அர்ஜுனன் கோபங்கொண்டு க்ரூரமான பாணத்தால் அசுவத்தாமாவின் ஸாரதியின் சிரத்தை சேதித்தான். அசுவத்தாமா சுயம் ஸாரத்யத்தையும் செய்தார். பாணப்ரயோகம் செய்துகொண்டும் ஸாரத்யத்தையும் செய்துகொண்டும் பிராம்மணராய் இருந்தவரும் அசுவத்தாமாசாரியாரால் அர்ஜுனன் மறுபடியும் பாணபஞ்ஜரத்தால் கட்டப்பட்டான். ஸ்ரீ கிருஷ்ணர் மறுபடியும் அர்ஜுனனை ஆலிங்கனம் செய்து அர்ஜுனனிடம் சத்ருவைக்கொல்லும் பலத்தை ஸ்தாபனம் செய்தார். பிறகு அர்ஜுனன் தனுர்பாணதாரியாய் எழுந்தான். சத்ருநாசம் செய்யும் அர்ஜுனன் மறுபடியும் அசுவத்தாமாவிடம் பாணவிருஷ்டியைச்செய்தான். அசுவத்தாமா மறுபடியும் அர்ஜுனனுடைய தனுஸ்ஸின் நாண் கயிற்றை அறுத்தான். அர்ஜுனன் மறுபடியும் வேறொரு நாணைக்கட்டிக்கொண்டு அசுவத்தாமாவின் குதிரை லகான்களை பாணங்களால் சேதித்தான். அந்த குதிரைகள் லகான் இல்லாதவைகளாய் அர்ஜுனனுடைய பாணங்களால் அடிபட்டவைகளாய் அசுவத்தாமாவை அர்ஜுனனிடமிருந்து



தூக்கிக்கொண்டு போயிற்று. அசுவத்தாமா அந்த குதிரைகளை நிறுத்தி மறுபடியும் இவ்வாறு ஆலோசித்தார். அர்ஜுனனின் விஷயத்தில் இப்பொழுது எடுத்த பிரயாசை விட அதிகமாய் செய்வது சாத்யமன்று. ப்ரம்மா ருத்திரன் இவர்களின் நியாமகனான ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஸாரதியாய் இருக்கிறான். ஹனுமார் த்வஜத்தில் இருக்கிறார். தனுஸ் காண்டீவமாய் இருக்கிறது. அம்பறாத்தூணிகள் அக்ஷயமான பாணங்களுடன் இருக்கின்றன. குதிரைகள் கொல்லமுடியாதவைகளாய் இருக்கின்றன. ரதமும் பிளக்கமுடியாதது. நான் யுத்தம் செய்ய சமர்த்தனாகிலும் இந்த காரணங்களால் இப்பொழுது அர்ஜுனனிடம் நான் போவதில்லை. இவ்வாறு அசுவத்தாமா அறிந்து பாண்டவ ஸேனையில் பிரவேசித்தார். பிறகு பாண்டிய தேசாதிபதியான மலயத்வஜராஜன் அசுவத்தாமாவிடம் எதிர்கொண்டு வந்தான். க்ரூரமான பாண சமூகத்தை வர்ஷிக்கும் அவ்விருவர்களுக்கும் அற்புதமான யுத்தம் நடந்தது. எந்த மலயத்வஜபாண்டியனுடைய பாணங்களை எண்ணூத்தி எட்டு வண்டிகள் கொண்டுவந்தனவோ அவ்வளவு பாணங்களையும் மூன்றே முக்கால் நாழிகைக்குள் அசுவத்தாமா அந்த யுத்தத்தில் சேதித்தார். பிறகு பாண்டியராஜனை ரதமில்லாமற் செய்து அவனுடைய தனுஸ்ஸை யுத்தத்தில் சேதித்து குண்டலங்கள் கிரீடம் இவைகளுடன் பிரகாசிக்கும் அந்த மலயத்வஜனின் சிரஸ்ஸை அசுவத்தாமா சேதித்தார். பிறகு அவர் பாணங்களால் பாண்டவர்களின் ஸேனையை ஓட்டினார். அப்பொழுது அர்ஜுனன் தண்டதாரன் என்னும் மகததேசத்து அரசனை ஸம்ஹரித்தார். அசுவத்தாமா ஓட்டும் தன் ஸேனையைப்பார்த்து த்ருஷ்டத்யும்னன் அவசரமாய் வந்தான். குருஹத்யை செய்த மகாபாபியான உன்னை இந்த யுத்தத்தில் கொல்கிறேனென்று த்ருஷ்டத்யும்னனைப்பார்த்து பேசினார் 'இவ்வாறு சொல்லப்பட்ட த்ருஷ்டத்யும்னன் அசுவத்தாமாவுக்கு உத்தமமான கத்தியைக் காண்பித்தான். உன் தந்தையைக் கொன்ற கத்தி உனக்கு பதில் சொல்கிறதென்று சொல்லி, தனுஸ்ஸை எடுத்து அநேக பாணங்களை வர்ஷம் செய்தான். த்ருஷ்டத்யும்னன் அசுவத்தாமா இவர்களுக்குள் ஆச்சரியமாயும் மயிர்கூச்சலிடும்படியாயுமுள்ள யுத்தம் நடந்தது. அந்த

யுத்தத்தில் அசுவத்தாமா ஓர் க்ஷணத்தில் த்ருஷ்டத்யும்னனை ரதம் ஆயுதம் இவைகளில்லாமற்செய்து அவன் இறந்துபோக க்ரூரமான பாணங்களைப்போட்டார். அந்த பாணங்கள் த்ருஷ்டத்யும்னனின் மேல்தோலையும் சேதிக்கவில்லை. அப்பொழுது அசுவத்தாமா கையில் கத்தி பிடித்தவராய் த்ருஷ்டத்யும்னனுக்கு எதிராக வந்தார். அப்பொழுது அசுவத்தாமா கத்தியாலும் அஸ்திர சஸ்த்ரங்களாலும் பேதிக்கப்படாத மேல்தோல்கொண்ட த்ருஷ்டத்யும்னனை கிழே தள்ளி தனுஸ்ஸின் கயிற்றால் கழுத்தைக்கட்டினார். அசுவத்தாமாவால் பூமியில் இழுக்கப்படும் பிருஷதராஜனின் பேரனை த்ருஷ்டத்யும்னனைப்பார்த்து ஸ்ரீகிருஷ்ணரால் தூண்டப்பட்ட பீமார்ஜுனர்கள் இருபக்கத்திலும் வந்து பாணங்களால் அசுவத்தாமாவை அடித்தார்கள். பீமார்ஜுனர்களின் வஜ்ஜிராயுதத்திற்கு ஸமமான பாணங்களால் அதிகமாய் அடிக்கப்பட்ட அசுவத்தாமா த்ருஷ்டத்யும்னனைவிட்டு தன் ரதத்தில் மறுபடியும் ஏறினார். வேறே இடத்திற்கு சென்றார். த்ருஷ்டத்யும்னன் மற்றொரு ரதத்திலேறிக்கொண்டு தனுர்தாரியாய் கிருதவர்மாவிடம் சென்றான்.

(தொடரும்.)

# சங்கர லீலா விலாசம்.

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ்M. A. எழுதுவதாவது:—

(முன் 82ம் பக்கம் தொடர்ச்சி.)

## ஏகாதசி சிராத்தம்.

மாத்வர்கள் தங்கள் பித்ருசிராத்தம் ஏகாதசியில் சம்பவித்தால் அதை செய்யாமல் விட்டு விட்டு மறுநாள் செய்கின்றனர். ஆகவே அவர்கள் தான் வேதத்தை விட்டவர்கள். இப்படியிருக்க எங்களை அவைதிகர்கள் என்று சொல்வது தகாது என்று சாம்பசாஸ்திரிகள் சொல்கிறார். இது ஓர் முக்யமான விஷயமாதலால் முக்ய தஸ்தாவேஜுகளைக்கொண்டு இதற்கு பதில் சொல்கிறேன்.



சாஸ்திரிகள் சொல்வது ஒருவிதத்தில் சரிதான். எப்படியெனில் சாஸ்திரிகளுக்கு ஏதாவது ஆசௌசம் ஏற்பட்டு அச்சமயம் சிராத்தம் செய்யவேண்டியிருந்தால் அன்று அதைச்செய்யாமல் நிறுத்தி, அவருடைய பித்ருக்களுக்கு இவ்வாறு விக்ஞாபனம் செய்துகொள்வார். பித்ருஜனங்களே! நான் என்னசெய்வேன். வீட்டில் என் தாயார் இறந்துபோயிருக்கிறாள். எனக்கே சோத்துக்கு வழியில்லை. அப்படியிருக்க நான் உங்களுக்கு எப்படி பிண்டம்பிடித்துக்கொடுப்பேன். நீங்கள் சற்று பொறுங்கள். இந்த பத்துநாள் கழிந்தபின்பு சிராத்தம்செய்து உங்கள் பசியை தீர்க்கிறேன் என்று சொல்வார். சாஸ்திரிகளுடைய பித்ருக்களும் அதற்கு ஒப்புக்கொண்டு, குழந்தாய்! அதற்கென்ன, அப்படியே செய். ஒரு சில நாள் நாம் காத்திருக்கிறோம். வீட்டில் மரணமேற்பட்டுவிட்டால் நீ என்னசெய்வாய்! என்று சொல்வார்கள். ஹாதீ ஆசாரியரே! உங்கள் மாத்வர்களுக்கு ஏகாதசியன்று என்ன உபாதி வந்துவிட்டது. அன்று அவர்களுக்கு ஏதாவது ஆசௌசம் ஏற்பட்டு விட்டதா? அப்படி அசுத்தம் ஏற்பட்டிருந்தால் நான் ஒப்புக்கொள்கிறேன். ஒன்றுமில்லாதிருக்கையில் வீட்டுக்குவந்த தன்னைப்பெற்றபித்ருக்களுக்கு நான்கைந்து பிண்டங்களைப் போடுவது என்ன சிரமம், என்று சாஸ்திரிகள் கேட்கிறார். ஹாதீ ஆசாரியார் இதற்குஒன்றும் பதில் கூறமாட்டார். இது பெரியபாயிண்டல்லவா. இதற்கு நான்பதில்கூறுகிறேன். உண்மையாதெனில், ஹாதீ ஆசாரியார் முதலான மாத்வர்கள், சாஸ்திரிகள் சொன்னமாதிரி பித்ருத்ரோஹிகள், மாத்ருத்ரோஹிகள். எல்லோருடைய துரோஹம்செய்து ஸ்ரீகிருஷ்ணரின் காலை கெட்டியாய் பிடித்துக்கொண்டவர்கள். அவர்களுக்கு சாஸ்திரிகள் சொல்லும் வேதவாக்யம் வேண்டாம், ஸ்மிருதிவேண்டாம், புராணம் வேண்டாம். இப்பேர்ப்பட்ட மாத்வர்களுக்காகத்தான் ஸ்ரீ கிருஷ்ணர் ''ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ'' என்று சொல்லியிருக்கிறார். எங்கள் தாய், தந்தை எங்களுக்கு செய்வது என்ன தான் உண்டு, என்றுசொல்லி, இவர்கள் ஸ்ரீ கிருஷ்ணன் பில்லாங்குழல் ஊதும்பொழுது அங்கேயே இருந்து மூன்று நான்கு நாட்கள் ஸந்தியாவந்தனம் கூட செய்யாமல் ஜாதிகெட்டு நின்றிருந்தனர். இப்பேர்ப்பட்ட பித்ருத்ரோஹிகளான மாத்வர்களுக்கு, யோகக்ஷேமம் வஹாம்யஹம் என்று சொன்ன ஸ்ரீகிருஷ்ணர் தான் ஸம்ரக்ஷகர், யஜமானன், குரு, எல்லாம் அவரே.

அதனால்தான் நந்தகோபன் த்வாதசியன்று காலையில் காக்காய் கர் என்று கத்துவதற்கு முன்எழுந்து ஸந்தியாவந்தனம் முதலியவைகளுக்கு கூட குல்லாய் போட்டு, வயிற்று பாடு பார்த்துகொள்ளவேண்டுமென்று

விரும்பி, இரவு இரண்டு மணிக்கே எழுந்து, ஸ்நானம்செய்ய யமுனைக்கு சென்றான். வருணனுடைய சேவகனான ஒர் ராக்ஷஸன், அவன் ராக்ஷஸனாயிருப்பதன் நிமித்தம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு த்வேஷம் செய்ய, நந்தகோபனை விழுங்கினான். ஸ்வாமி பூஜையை சங்க்ரஹமாகச்செய்து த்வாதசியன்று விடியற்காலையில் போஜனம் செய்வது ஸ்ரீகிருஷ்ணருக்கு சம்மதமாதலால்தான், ஸ்ரீகிருஷ்ணர் வருணலோகம்சென்று, வருணன் தன் சேவகனுக்கு சிக்ஷை செய்யாதிருந்ததால் வருணனுக்கே இரண்டு உதை கொடுத்து, நந்தகோபனை மீட்டுக்கொண்டு அழைத்துவந்தார். அம்பரீஷ சக்ரவர்த்தியும்கூட மகானுபாவராயுள்ள துர்வாஸரையும் கூடவிட்டுவிட்டு ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞை என்று, விடியற்காலை தான் பிராம்மணபோஜனம்செய்வித்து, தானும்தீர்த்தப்ராசனம் செய்துவிட்டார். ருக்மாங்கதன் ஏகாதசி உபவாஸம் செய்தவன். அம்பரீஷன் ஏகாதசி உபவாஸம் செய்தவன். ஸ்ரீகிருஷ்ணரின் தந்தையான நந்தகோபனும் அவனுடைய ஊரிலிருப்பவர்களெல்லோரும், ஏகாதச்யாம் நிராஹார: என்று பாகவதத்தில் ஸ்பஷ்டமாய் சொன்னபடி ஏகாதசி உபவாசம் செய்தவர்கள் தான். இவர்கள் தாங்கள் உபவாசம் செய்ததுமன்றி தேவர்களுக்காகட்டும் பித்ருஜனங்களுக்காகட்டும் ஒரு சறங்கை ஜலத்தையோ, ஒரு பருக்கை சாதத்தையோ, அவர்கள் என்ன கதறினாலும் கொடுக்கமாட்டார்கள். இதன் மர்மம் யாதெனில், எல்லா தேவர்களும் விஷ்ணுவை ஆச்ரயித்து அவர் சொல்படி ஏகாதசியன்று உபவாசம்செய்து அந்த புண்ய ப்ரபாவத்தால் எல்லா அஸுரர்களையும் நிக்ரஹம் செய்ததால் இனி நாம் ஏகாதசி தினத்தன்று விஷ்ணுவின் தியானத்தில் ஈடுபட்டவர்களாகி மகத்தான புண்யத்தை சம்பாதிப்போம், அன்று எங்கள் கோர்ட்டுவாசல் மூடியிருக்கும், எங்களிடம் ஒருவரும் பிறுது கொடுக்கக்கூடாது. நாங்கள் எதையும் செவிகொடுத்து கேட்கமாட்டோம் என்று சொல்லிவிட்டனர். அப்பொழுது பித்ருதேவதைகளும் கூட நாம் காக்கையைப்போல் ஏகாதசியன்று ஒவ்வொரு வீட்டுக்கும் அலைவதில்லை. நாமும் அன்று உபவாஸம் தான் செய்வோம். ஸ்ரீகிருஷ்ணரை ஸம்பூர்ணமாய் தியானம் செய்வோம். நாங்கள் ராக்ஷஸர்கள் அன்று என்று சொன்னார்கள். மாத்வர்கள் கூட நாம் ஏகாதசியன்று ஆகாரமில்லாமல் இருந்து விஷ்ணுவின் தியானம் செய்கிறோம். நாங்கள் தேவர்களின் கக்ஷியைச் சேர்ந்தவர்களென்று சபதம் செய்தார்கள். அப்பொழுது மகாவிஷ்ணுவும் நீங்கள் அவ்வாறே செய்யுங்கள். த்வாதசியன்று சூரியோதய காலத்தில் போஜனம் செய்யுங்கள். ஏகாதசியன்று சிரார்த்தம் செய்வதில்லையாதலாலும்



எங்கள் கச்சேரி சேவகர்களுக்கும் அன்று லீவ் நாளாய் இருப்பதாலும் நீங்கள் ஏகாதசி சிராத்தம் செய்யவேண்டாம் என்று ஆக்ஞையிட்டார். இதை எல்லா தேவர்களும் பித்ருக்களும் ஒபபுக்கொண்டனர். இவ்வாறு ஒப்பந்தம் எல்லாம் ஸ்ரீகிருஷ்ணரை பின்பற்றும் வைஷ்ணவர்களாயிருப்பவர்களில்தான் ஏற்பட்டிருக்கிறது. இதரர்களுக்கு இந்த கட்டுப்பாடில்லை. ஸ்ரீகிருஷ்ணரை அனுஸரிக்காதவர்களுக்கு இந்த நிர்பந்தமென்? ஸி. ஆர். தாஸ் இறந்துபோனதற்கு காந்தியும் காங்கிரஸ் கட்சி நண்பர்களும் தான் அனுதாபப்பட்டு ஹார்டால் உபவாஸம் செய்தார்கள். பிரிட்டிஷார் ஏன் செய்வார்கள். அவ்வாறு இவ்வுலகத்திலுள்ள அவைஷ்ணவர்கள் சேர்ந்து இந்த ஏகாதசி வ்ரதம் எங்களுக்காக சொல்லப்பட்டதன்று, சிவராத்திரி முதலான வ்ரதங்கள்தான் எங்கள் ஜுரிஸ்டிக்ஷனுக்கு சேர்ந்தவை என்று நிச்சயித்தனர். அதனால் ஏகாதசியன்று சிராத்தத்தை நாம்செய்துதான் தீருவோம். நாம் மிகவும் அசுத்தமான விஷ்ணு நைவேத்யத்தை அன்று சாப்பிடுகிறவர்கள் அல்ல. எங்கள் பித்ருக்கள்தேவர்களின் கக்ஷியைச்சேர்ந்தவர்களல்லவாதலால் அவர்கள் ஏகாதசிஉபவாஸத்தை செய்பவர்களன்று, நாங்கள்கொடுக்கும் பிண்டங்களை எங்கள்பித்ருஜனங்களுக்கு கொண்டுபோய் கொடுப்பதற்கு தேவர்கள் வராதிருந்தால் பாதகமில்லை. அன்று எமது குலவிருத்தர்களான விப்ரசித்தி, காலநேமி, மதுகைடபர்கள், பாணாஸுரன் ஹிடிம்பாஸுரன் முதலானவர்களைப்ரார்த்திக்கிறோம். எங்கள் சமூகத்தாரின் நடுவில் அந்த வைஷ்ணவ சம்பிரதாயத்தை அனுஸரிக்கும் துரோஹிகள் சிலரிருக்கின்றனர். அவர்கள் எங்கள் சத்ருக்கள். புத்தியில்லாதவர்கள். அப்படி ஒவ்வொரு Black sheep இருப்பதால் எங்கள் குலம் கெட்டுப்போகுமா? என்று சொன்னார்கள். ஆகவே நாம் இப்படி நிர்ணயம் செய்திருக்கிறோம். விஷ்ணுவின் ராஜாங்கத்திற்கு சேர்ந்த தேவர்கள் பித்ருக்கள் மனுஷ்யர்கள் எல்லோரும் ஏகாதசியன்று ஆகாரமின்றி ச்ராத்தத்தை மறுநாள் வைத்துக்கொண்டு விஷ்ணுவின் தியானத்தில் ஈடுபடவேண்டும். ஏகாதசியன்று அன்னத்தை போஜனம் செய்தால், அந்தஅன்னம் ததன்னம் மலசதிருசம் என்ற பிரமாணத்தின்படி அந்த ஏகாதசியன்று அன்னம் அமேத்யத்திற்கு சமானம் என்று இருப்பதால் வைஷ்ணவப்ராம்மணர்களும் கூட போஜனத்திற்கும் நிமந்த்ரணத்திற்கும் வரமாட்டார்கள். வரவும் கூடாது. இதர சம்பிரதாயத்தை அனுஷ்டிக்கும் விஷ்ணுவின் கக்ஷியைச்சேர்ந்தவர்களல்லாதவர்கள் எல்லோருக்கும் ஏகாதசி சிராத்தம் அவசியம். அவர்களுக்கு ஏகாதசி போஜனம் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுவின் விரதம் அவர்களுக்கு அமங்களம். இதுதான் நாம்செய்யும் தீர்மானம். இப்படியே பின்வருமாறு பிரமாணங்களும் காணப்படுகின்றன.

(தொடரும்.)

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

---

### ஒன்பதாவது ஸர்க்கம்

(முன் 113ம் பக்கம் தொடர்ச்சி.)

### ஸ்ரீ கிருஷ்ணரை பிரதிஷ்டை செய்தது.

39. ஸ்ரீமத்வாசாரியார் தத்வக்ஞானத்திற்கு அருகமான பொதுஜனங்களுக்கு, இயற்கையாய் பாபிகளுக்கு பயங்கரமான உருவங்கொண்டதாயும் க்ருரமான பாபஸமூகங்களை நிவிர்த்திப்பதாயுமுள்ள தன்னுடைய மத்வ சாஸ்திரத்தை ஹிருதயத்திலும், நெருப்பில் காய்ந்த சுதர்சன சக்ர முத்திரையை பூஜ்யமான சங்க முத்திரையோடு கூடி அவர்களின் புஜங்களிலும், வழங்கினார். 40, ஸ்ரீமத்வாசாரியார் உடுபியில் இருந்துவரும்பொழுது தன்னை தவிர வேறு சரணமில்லை என்று அவருடைய மகாத்மியமறிந்து அவரை சரணமடைந்திருக்கும் முக்தியோக்யர்களான ஸாதுஜனங்களிடம் நிர்வியாஜமான கருணையடைந்து அவர்களின் முக்திக்கு ப்ரதிபந்தகமாயுள்ள அக்ஞானாதி தோஷங்களுக்கு மருந்தாயுள்ளதை ஏற்படுத்திதர விரும்பினார். 41. ஒரு சமயம் ஸ்ரீமத்வாசாரியார் ஸ்நானத்திற்காக உடுபியில் ஸமுத்திரத்திற்கு சென்றிருக்கும் ஸமயம் கடல் கொந்தளித்து ஓர் வியாபாரக்கப்பல் அபாய நிலையில் இருந்து அதன் அதிகாரி ஸ்ரீமத்வாசாரியாரை மனதால் சரணமடையவும், அவர் தன் காவிவஸ்திரத்தை வீசி கடல் நிம்மதியடையச்செய்து கப்பலை பத்திரமாய் கரை வந்துசேரச்செய்யவும், அந்த வியாபாரியின் பிரார்த்தனையின் பேரில் அந்தக்கப்பலில் இருந்த கோபி சந்தனக்கட்டியிலுள்ள கோபிமார்களின் நண்பரான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் சிலா ரூபமான விக்ரஹத்தை மூன்று நான்கு சிஷ்யர்களைக்கொண்டு தீர்த்த ஜலத்தால் அலம்பி ஸ்ரீமத்வ ஸரோரவத்தில் சுயம் அபிஷேகம் செய்தார். 42. மகா மகிமையுடைய அவருடைய பரிசுத்தமான ஹஸ்தத்தின் ஸ்பரிசத்தால் ஸ்ரீகிருஷ்ணருடைய ஸன்னிதானமடைந்ததாயும், பிரயத்தனத்துடன் கூடிய முப்பது ஆள்க்ளால் தூக்கமுடியாததாயுமுள்ள



அந்த ஸ்ரீகிருஷ்ண விக்ரஹத்தை ஸ்ரீமத்வாசாரியார் ஒருவராகவே தன் கையால் விளையாட்டாய் தூக்கி தன் இடத்திற்கு கொண்டு போனார். 43. புன்சிரிப்பால் கோமலமாய் அழகான முகத்துடனிருப்பவரும் ப்ராகிருத இந்திரியங்களுக்கெட்டாதசொரூபமுள்ளவரும் மனதைக்கவரும் ரூபமுடையவரும் எல்லோராலும் வணங்கப்படுகிறவருமான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை அந்த சுந்தர விக்ரகத்தில் சாஸ்திரத்தில் சொல்லியபடி விதான பூர்வகமாய் ப்ரதிஷ்டாபனம் செய்து மகாஸன்னிதானமிருக்கும்படி செய்தார்.

### யக்ஞத்தை நடத்திவைத்தது.

44—47. எந்த நீசன் தெய்வத்தின் உபாஸனையால் ஏற்பட்ட தன்னுடைய புத்தி நுட்பத்தால் பண்டிதர்கள் என்று அகங்காரம் கொண்ட பிரபலர்களையும் வென்று அவர்களை தனக்கு வசமாகச் செய்துகொண்டவனோ, தனக்குத்தான் நன்கு யக்ஞம் செய்யும் யோக்யதை இருப்பதாய் எண்ணியவனோ, ஜராகடிதன் என்ற பெயருள்ளவனாய் சொல்லப்படுகிறானோ, அந்த பாபிஷ்டன், தனக்கு பால்யம் முதல் மிக்க நண்பனான தன் உபாத்தியாயரின் குமாரரான வாசுதேவரென்பவர் செய்யும் யக்ஞத்தை செய்யவொட்டாமற் செய்வதைப்பார்த்து, அவ்வூர் அரசன் என்ன, ஸமர்த்தனென்பவன் என்ன, மற்றும் அவ்வூர் எல்லா ஜனங்கள் என்ன இவர்களின் எதிரில் அந்த பாபிஷ்டனையும் அவனைச் சேர்ந்த வேறொரு சத்ருவையும், தான் செய்விக்கும் பிஷ்டபசு யக்ஞம் தான் சாஸ்திர சம்மதமாய் கலியுகத்துக்கு ஏற்றதென்று பிரமாண பூர்வகமாய் நிரூபித்தும், அவர்களின் வாதத்தை கண்டித்தும் அவர்களை வென்று தன் சாமர்த்தியத்தால் எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தவராயும் எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதமுள்ளவராயும் எல்லா திசையிலும் உள்ள பண்டிதர்களை வென்று விசித்ரமாய் புகழப்படும் கீர்த்தியுடையவராயும் தினந்தோறும் தன்னைச் சேர்ந்தவர்களை சந்தோஷப்படுத்திக்கொண்டு வாஸுதேவரான ஸ்ரீகிருஷ்ணரின் ப்ரியருமான ஸ்ரீமத்வாசாரியார், உடுபியில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ப்ரதிஷ்டை செய்த பின் தன் நண்பனை குருபுத்ரன் வாஸுதேவ பிராம்மணருக்கு எப்படி முன்பு அவர் பீமசேனராய் இருந்த சமயம் நீசனை

எந்த ஜராஸந்தன் ருத்ராதிகளின் வரத்தால் ஏற்பட்ட க்ஞானத்தால் ப்ரபலர்களுமான அரசர்களை சுவாதீனம் செய்துகொண்டானோ தனக்குத்தான் நன்கு யாகம் செய்யும் யோக்யதை இருப்பதாய் எண்ணியவனோ ஜராஸந்தன் என்று பெயருள்ளவனாய் சொல்லப்பட்டானோ, அந்தபாபிஷ்டன் தனக்கு மிகவும் பிரியரான தர்மபுத்திரரின் ராஜஸூயயாகத்திற்கு விக்னம் செய்வதைப் பார்த்து அவனைக்கொன்று பிறகு இதர ராஜ சிரேஷ்டர்கள் முதலான வேறுசத்ருவையும் கொன்று எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த ஆச்சரியத்தை விளைவிப்பவராயும், எல்லோராலும் நமஸ்கரிக்கப்பட்ட பாதமுள்ளவராயும், எல்லா திசைகளிலுமுள்ள அரசர்களை வென்று விசித்ரமாய் புகழப்படும் கீர்த்தியுடையவராயும், தினமும் தன் ப்ரஜைகளை சந்தோஷப்படுத்திக்கொண்டு வாஸுதேவனை ஸ்ரீகிருஷ்ணருக்கு பிரியராயிருந்து மகா தர்மிஷ்டனை தர்மபுத்திரருக்கு ராஜஸூய யாகத்தை நடத்திவைத்தாரோ, அப்படி பிஷ்டபசு யக்ஞத்தை செய்வித்தார். 48. இந்த யக்ஞத்தில் எல்லா யக்ஞ விதிகளையுமறிந்த ஸ்ரீமத்வாசாரியாரின் தம்பி ஹோதா வென்னும் ரித்விக்காய் இருந்துகொண்டு, அந்த ஸ்தானத்திற்கு அனுவாகமென்பதுடன் கூடிய யாஜ்யமென்னும் வாக்யத்தாலும், ப்ரவர்க்யம் என்னும் வார்த்தையால் இடைவிடாது சொல்லப்படும் பலவகை ரிக்குகளாலும் கூடிய மந்திர ஸ்தோத்திரங்களால் தேவ ஸமூகங்களை சந்தோஷம் செய்வித்தார். 49. தீக்ஷணமான புத்தியுள்ள அந்த மத்வானுஜர் வீரியமுள்ள எல்லா தேவர்களின் சம்பந்தமாய் யக்ஞத்தில் சொல்லப்படும் ரிக்கு மந்திரங்களாகிய உத்தம ஆயுத ஸமூகங்களை ப்ரயோகம் செய்து ராக்ஷஸர்கள் அசுரர்கள் இவர்களைத் தடுத்து தேவர்களுக்கு ஹவிர்பாகத்தை, எப்படி ஓர் உத்தம வீரன் ஆயுத சமூகங்களை ப்ரயோகம் செய்து அநியாயமாய் தமக்கு பங்கு வீதத்தை விரும்பும் துஷ்டர்களை நிக்ரஹம் செய்து, நியாய வழியிலுள்ளவர்களுக்கு அவர்களின் பாகத்தை சேர்ப்பிப்பானோ, அம்மாதிரி சேர்ப்பித்தார். 50. முன்பு ஒரு சமயம் தேவர்களில் முன்னே ஸோமரஸத்தைக் குடிப்பவன், தான் தான் என்று ஒருவருக்கொருவர் விவாதம் செய்ய எல்லா தேவர்களையும் ஜயிப்பவன்தான் முதலில்



ஸோமத்தை பானம் செய்யவேண்டுமென்று தீர்மானம் ஏற்பட்டு, அவ்வாறே சமஸ்த தேவர்களையும் ஜயித்தவராயும், வேகமுள்ளவராயும், மூன்றுதடவை முதலில் ஸோமபானம் செய்தவருமான வாயுபகவானால் எந்த யக்ஞம் விதிப்படி எல்லாம்பூர்ணமாய் நடந்ததாயிருக்க நேரில் ப்ரத்யக்ஷமாயிருந்து விரும்பப்பட்டதோ, அப்பேர்பட்டதான இந்த மகா யக்ஞத்தை யார்தான் வர்ணிக்க முடியும் 51. பரமாத்மத்தை அறிய ஆவலுள்ள சித்தம் கொண்டவர்களுக்கு ச்ரவணமனனாதிகள் க்ஞான சாதனம் எப்படி ஆகின்றனவோ அப்படி ஸ்வர்க்காதி பலன்களில் விருப்பமன்னியில் கேவலம் ஸ்ரீவிஷ்ணுவின் ப்ரீதியின் பொருட்டு. செய்யும் யக்ஞாதி கர்மாவும் பிரம்மக்ஞானத்திற்கு ஸாதனமாகும் என்று அதிகாரிகளுக்கு உபதேசம் செய்துகொண்டு, ஸ்ரீமத்வாசாரியார் சுயம் பரதத்வமாகிய பரமாத்மாவை அறிவிக்கும் க்ஞான மார்க்கத்தில் ப்ரவிருத்திக்தவராயிருந்தும், பகவத் விஷயமான யக்ஞாதி கர்மமும், செய்யத்தக்கதான நிஜகர்மமென்று நிச்சயித்து இந்த யக்ஞத்தை நடத்திவைத்தார். 52. பூர்ண ப்ரக்ஞரான ஸ்ரீமத்வாசாரியாரின் எந்தெந்த சரிதங்களோ, எந்தெந்த வார்த்தைகளோ அந்தந்த சரிதைகளும், வார்த்தைகளும் மனோஹரமாய் இருந்ததுமன்றி எல்லோரும் ஆச்சரியப்படும்படியாய் விளங்கின.

## இரண்டாம் முறை பதரிகாசிரமம் சென்றது.

53. மகத்தான ப்ரக்ஞையுள்ள ஸ்ரீமத்வாசாரியார் பிராணிகள் ஸ்நானம், பானம்செய்வதால் அவர்களின் சரீரநிலையைத் தருவதாயுள்ள கிருஷ்ணை, கோதாவரி முதலான அநேக மகா நதிகளைத் தாண்டி ஸஹ்யகிரி விந்தியபர்வதம் முதலிய பல மலைகளைத் தாண்டியவராய் ஸ்ரீகிருஷ்ணராகிய வேதவியாஸருக்கு பிரியமானதாயுள்ள உத்தமமான பெரியபதரிகாசிரமத்தை, எப்படி ஜனங்களுக்கு ஸ்வர்க்காதிகள் அளிப்பதாய்ச் சொல்லி ஜ்யோதிஷ்டோமம் முதலான யக்ஞத்தைச் செய்யும்படி பிரவிருத்தி உண்டுபண்ணும் வேத வாக்கியங்களை விஷ்ணு விஷயமாய் ஸமர்த்தனம் செய்து மோக்ஷபரமாய்ச் சொல்லியும், தன் குலாசாரத்தை விதியில்

சொன்னபடி விட்டொழித்தும், ஸ்ரீ கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமான உத்தமமான நான்காவது ஆசிரமத்தை அடைந்தாரோ அப்படி பிரம்ம ஸூத்திர பாஷியம் இயற்றுவதற்கு முன்பு சென்றபடி கிரமமன்னியில் இரண்டாம் முறை போய்ச் சேர்ந்தார். 54 ஸ்ரீ வேதவியாஸர் முன்பு ஸ்ரீ ராமாவதாரம் செய்தபொழுது தன் அபீஷ்டத்தை பூர்த்திசெய்த ஹநுமார் ரூபத்துடன் இருந்த இந்த மத்வாசாரியாருக்கு இதரர்களால் அடைய முடியாததான ஸஹஜ ரூபமெனப்படும் பிரம்ம பதவியைக்கொடுத்திருந்தார். ஆகவே இப்பொழுது தன் ஆக்ஞைப்படி பிரம்ம ஸூத்திர பாஷியத்தை இயற்றி தன் விருப்பத்தை பூர்த்திசெய்த மத்வாசாரியாருக்குக் கொடுக்க வேறு எந்த வஸ்துவும் இல்லாமலிருப்பதைப் பார்த்து முன் தந்திருந்த ஸஹஜ போகத்தையே அதிகபோகமுள்ளதாய்ச்செய்தார். 55 எல்லோராலும் பூஜிக்கத்தகுந்த மகாத்மியத்திற்கு ஸமுத்ரம் போன்றவராயும், மிகவும் மேற்பட்டதாய் எல்லா விஷயங்களிலுமுள்ள புத்தியுள்ளவருமான ஸ்ரீமத்வாசாரியார் உலகத்துக்கு நன்மையை செய்பவரான அந்த ஸ்ரீ வேதவியாஸரின் யோக்யமான ஆக்ஞையின்பேரில் தன் குருவான அந்த வேதவியாஸரை நமஸ்கரித்து பதரிகாசிரமத்தினின்றும் வெளிவந்து சிஷ்யர்களுடன் உடுபி வந்துசேர்ந்து அங்குள்ள தன் பக்த ஜனங்களால் எதிர்கொண்டு அழைக்கப்பட்டவராய் உடுபியில் திருக்கோயில் கொண்டிருக்கும் அநந்தேசுவரரான ஸ்ரீ நாராயணனை நமஸ்கரித்தார்.

ஸ்ரீ கவிகுலதிலகரான ஸ்ரீ த்ரிவிக்கிரமபண்டிதாசாரியாரின் குமாரர்
ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய ஸ்ரீமத்வ
விஜயத்தில் ஒன்பதாவது ஸர்க்கம்ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# ஆசாரமாலை

(முன் 109ம் பக்கம் தொடர்ச்சி)

1 சித்ரம் தேவானாம் உதகாதனீகம் சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்னே:| ஆப்ராத்யாவா பிருதிவீ அந்தரிக்ஷம் ஸூர்ய ஆத்மா ஜகத: தஸ்துஷஸ்ச||



தேவானாம் பிரம்மாதி தேவர்களின் அனீகம் கடமட்டத்தை கடத்துகிறவரான சித்ரம் பலவகை பரமாத்ம ஸ்வரூபம் அல்லது ஸூரிய தேஜஸ் உதகாத் ஆவிர்பவித்தது. அது எப்பேர்ப்பட்டதெனில் மித்ரஸ்ய வருணஸ்ய அக்னே: மித்ரா வருணன் அக்னி முதலான எல்லா தேவர்களுக்கும் சக்ஷு: க்ஞானத்தைத்தருவது அல்லது இந்திரியாதிகளை ப்ரேரிப்பது. த்யாவாபிருதிவீ அந்தரிக்ஷம் த்யோலோகம் பூலோகம் அந்தரிக்ஷலோகம் இவைகளிலுள்ள ஸர்வ ஜனங்களை தன்னுடைய க்ஞானத்தால் அல்லது தேஜஸ்ஸால் ஆப்ரா: சுற்றிலும் ஸம்பூர்ணமாய் பூரணம் செய்தது இவர் யாரெனில் ஸூர்ய: ஸூர்யனின் அந்தர்யாமியாயுள்ள பரமாத்மா ஜகத: ஜங்கமசேதன உலகத்துக்கும் தஸ்துஷ: ஸ்தாவர உலகத்துக்கும் ஆத்மா அந்தர்யாமி அல்லது யஜமானர்.

2 ஸூர்யோ தேவீ முஷஸம் ரோசமானாம் மர்யோநயோஷாமப்யேதி பஸ்சாத்| யத்ரா நரோ தேவயந்தோ யுகானி விதன்வதே ப்ரதிபத்ராய பத்ரம்||

ரோசமானாம் பிரகாசிப்பவளான உஷஸம் தமஸ்ஸை நிவாரணம் செய்வதால் உஷஸ் எனச் சொல்லப்படும் தேவீம் க்ரீடாதி குணங்கள் கூடிய அசுவினி தேவர்களின் பாரியாளான உஷா தேவியை அல்லது மகாலெட்சுமியை அல்லது பக்தியை பஸ்சாத் தொடர்ந்து பின்னடி ஸூர்ய: ஸூர்யன் அல்லது பரமாத்மா அப்யேதி ஆவிர்பவிக்கிறார். எப்படியெனில் மர்யோ-ந யோஷாம் ஓர் மனுஷ்யன் அழகான அவயவத்துடன் நடந்து போகும் ஓர் யுவதி ஸ்திரீயை பின் தொடர்ந்து போகிறானோ அம்மாதிரி. யத்ர எந்த உஷ: காலம் சம்பவித்தவுடன் நர: யக்ஞத்தைச் செய்பவர்கள் அல்லது சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லி பரமாத்மாவை அறிவிப்பவர்கள் தேவயந்த: க்ரீடாதி குண விசிஷ்டனான பகவானின் பூஜையை அபேக்ஷிப்பவர்களாய் யுகானி அந்தந்த சமயத்திற்கு ஏற்றதான கர்மங்களை விதன்வதே விஸ்தாரப்படுத்துகின்றனர். இப்பேர்ப்பட்ட பத்ரம் மங்களகரமான ஸூர்யனை ஸ்தோத்திரம் செய்யும் ப்ரதிபத்ராய கல்யாண ரூபியான எனக்கு அந்த கர்ம பலன் இருக்கட்டும்.

3 பத்ரா அச்வா ஹரித: ஸூர்யஸ்ய சித்ரா ஏதக்வா அனுமாத்யாஸ:| நமஸ்யந்தோ திவ ஆபிருஷ்டமஸ்து பரித்யாவா பிருதிவீ யந்தி ஸத்ய:||

பத்ரா மங்களகரமானவர்களும் சித்ரா: பல வகை ரூபங்களுள்ளவர்களும் அச்வா: சீக்கிறம் செல்லுகிறவர்களும் ஹரித: சிரமத்தைப் போக்குகிறவர்களும் அனுமாந்யாஸ: கிரமப்படி ஸ்தோத்திரம் செய்யத் தகுந்தவர்களுமான ஸுர்யஸ்ய ஏதந்வா அச்வா: சூரியனுடைய இப்பேர்ப்பட்ட குதிரைகள் அல்லது பகவானுடைய இப்பேர்ப்பட்ட பக்தர்கள் நமஸ்யந்த: எங்களால் நமஸ்காரம் செய்யப்பட்டவர்களாய் திவ: அந்தரிக்ஷ லோகத்தின் பிருஷ்டம் மேல் பாகத்தில் அல்லது வைகுண்டத்தில் ஆ நன்கு ஸ்து: இருக்கின்றனர். அங்கிருந்து ஸத்ய: அப்பொழுது த்யாவாப்ருதிவீம் த்யோ லோகம் பூலோகம் இவைகளை சூரியனுடைய குதிரைகள் பரியந்தி சுற்றிப்போகின்றன அல்லது இப்பேர்ப்பட்ட பகவத் பக்தர்கள் ஞானோபதேசம் செய்கின்றனர்.

4 தத் சூர்யஸ்ய தேவத்வம் தன் மஹித்வம் மத்யாகர்த்தோ விததம் ஸஞ்ஜபார। யதேத யுக்த: ஹரித: ஸதஸ்தா தாதாத்ராத்ரீ வாஸ: தனுதே ஸிமஸ்மை ||

ஸூர்யஸ்ய எல்லோரையும் பிரேரிப்பவரான ஆதித்யனுடைய தத் தேவத்வம் க்ரீடாதி குணங்கள் கூடியிருப்பதும் மஹித்வம் ஸர்வோத்ம தன்மையும் தத் ஏவ அதுதான். யத் எதெனில் கர்த்தோ: வைதிக கர்மாவினுடைய மத்யா நடுவில் அதாவது துடங்கிய வைதிக கர்மா முடிவடையாமலிருக்கும்பொழுது விததம் விஸ்தாரமான தன்னுடைய ஜோதிஸ்ஸை ஸம் ஜபார இந்த லோகத்தினின்றும் தன்னிடம் இழுத்து அடக்கிவிடுகிறார். கர்மாக்களைச் செய்தவர்கள் சூரியன் அஸ்தமனமடைந்தவுடன் தங்கள் கர்மாக்களை விட்டுவிட நேரிடுகிறதேயன்றி சூரியன் இதற்காக தாமதிப்பதில்லை. ஆகவே சூரியன் அல்லது பகவான் தன்னிஷ்டப்படி தன்னை பிரகாசப்படுத்திக்கொள்கிறார் யதேத் மேலும் எந்தக்காலத்தில் ஹரித: காமாதி தோஷங்களைப் போக்கும் குணமுடைய குதிரைகளை அல்லது பக்தர்களை ஸதஸ்தாத் ஸஹஸ்தானமாயுள்ள இந்த பூமியினின்றும் எடுத்து வேறு லோகத்தில் அயுக்த சேர்த்துவைத்ததாய் ஆகிறதோ அந் பிறகுதான் ராத்ரீ ராத்ரி காலமானது வாஸ: மறைக்கும் இருளை அல்லது அக்ஞானத்தை ஸிமஸ்மை எல்லோரிடத்தில் தனுதே விஸ்தாரப்படுத்துகிறார்.

6 தன் மித்ரஸ்ய வருணஸ்யா பிசக்ஷே சூர்யோ ரூபம் கிருணுதேத்யோ ருபஸ்தே। அநந்தமன்யத்ருசதஸ்ய பாஜ: கிருஷ்ணமன்யத் ஹரித: ஸம்பரந்தி ||



தந் அந்த ஆவிர்பாவ சமயத்தில் மித்ரஸ்ய வருணஸ்ய மித்ரா வருணாள் முதலான எல்லா ஜகத்தின் அபிசக்ஷே அபிமுகமாய்ப் பார்ப்பதற்காக த்யோ: ஆகாயத்தின் உபஸ்தே நடுவில் ஸூர்ய: ஸர்வ பிரேரகரான பகவான் அல்லது சூரியன் ரூபம் எல்லாவற்றையும் பிரகாசிக்கும் தேஜஸ்ஸை அல்லது அவதார ரூபத்தை க்ருணோதி வெளியாக்குகிறார். மேலும் அஸ்ய இந்த சூர்யனுடைய அல்லது பகவானுடைய ஹரித: தோஷங்களைப் போக்கும் குணமுள்ள குதிரைகள் அல்லது பக்தர்கள் அநந்தம் தேசத்தாலும் காலத்தாலும் அந்தமில்லாததாய் எல்லா ஜகத்தையும் வியாபிக்கும் ருசத் பிரகாசிக்கும் வெள்ளை வர்ணமுள்ள பாஜ: மிகவும் பலிஷ்டமான இராத்ரி இருளையும் போக்கும் சாமர்த்தியம் கொண்டதான அன்யத் தமஸ் அல்லாத தேஜஸ்ஸை அல்லது க்ஞானத்தை ஸம்பரந்தி தன்வரவால் உண்டாக்குகின்றன. அப்படியே கிருஷ்ணம் கருப்பு வர்ணமான அன்யத் இருளை அல்லது அக்ஞானத்தை போக்குகின்றன என்று சொல்வானேன்.

6 அத்ய தேவா உதிதா சூர்யஸ்ய நிரம்ஹஸ: பிபிருதா நிரவத்யாத்। தன்னோ மித்ரோ வருணோ மாமஹந்தாமிதிதி: ஸிந்து: பிருதிவீ உ.தத்யௌ: ||

தேவா: தேவர்களே அல்லது சூரிய கிரணங்களே அத்ய இச்சமம் ஸூர்யஸ்ய சூரியனுடைய உதிதா உதய காலத்தில் இங்குமங்கும் பரவும் நீங்கள் அவத்யாத் நிந்திக்கத் தகுந்ததான அம்ஹஸ: பாபங்களை நி: பிபிருதா பீடனம் செய்து ஸம்ரக்ஷியுங்கள். நாங்கள் சொன்ன ந: எங்களுடைய கர்மங்கள் எதுவுண்டோ தந் அதை மித்ர: பகலுக்கு அபிமானி தேவதையும் வருண: ராத்ரிக்கு அபிமானி தேவதையும் அதிதி: தேவமாதாவும் ஸிந்து: உதகத்தின் அபிமானி தேவதையும் பிருதிவீ பூமி அபிமானி தேவதையும் உத த்யௌ: த்யோலோகத்து அபிமானி தேவதையும் ஆகிய ஆறு தேவதைகள் மாமஹந்தாம் ஸம்ரக்ஷிக்கட்டும்.

(தொடரும்)

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

## அணு பாஷியம்.

4வது அத்யாயம்.

(முன் 128ம் பக்கம் தொடர்ச்சி.)

8 பூர்ண ப்ரக்ஞேன முனிஞ ஸர்வ சாதிரார்த்த ஸங்கிரஹ।
கிருதோயம் ப்ரீயதாம் தேன பரமாத்மா ரமாபதி:||

பூர்ணப்ரக்ஞராகிய ஆனந்ததீர்த்த முனிவரால் வேதங்கள் புராணங்கள் முதலான ஸமஸ்த சாஸ்திரங்களின் அர்த்த சங்கிரஹ ரூபமான ப்ரம்மஸூத்திரங்களின் அர்த்த சங்கிரஹமாகிய இந்த நூல்இயற்றப்பட்டது. இந்த காரியத்தால் க்ஷராக்ஷர புருஷோத்தமனான லக்ஷ்மீபதி நாராயணன் சந்தோஷமடையட்டும்.

9 நமோ நமோ அசேஷ தோஷ தூர பூர்ண குணாத்மனே|
விரிஞ்ச சர்வ பூர்வேட்ய வந்த்யாய ஸ்ரீ வராயதே||

அஸ்வதந்திரம் முதலான ஸமஸ்த தோஷங்களுமில்லாதவனே! ப்ரம்மருத்ராதி ஸமஸ்த தேவர்களாலும் துதிக்கப்படுகிறவனே! ஞானந்தாதி குணங்களை ஸ்வரூபமாகக் கொண்டவனே! எல்லோராலும் வணங்கத்தகுந்தவராய் மகாலக்ஷ்மிக்கும் உத்தமரான பகவன்! உமக்கு நமஸ்காரம் நமஸ்காரம்.

ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் இயற்றிய
அணுபாஷ்யத்தில் நான்காவது அத்தியாயம் ஸம்பூர்ணம்
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# விஷ்ணு மாயை.

---

## II சண்டியம்மன் சரிதை.

**மார்க்கண்டேய புராணத்தில் சொல்லப்படுவதாவது:—**

முன்பு அண்ணன் தம்பிகளான சும்பன் நிசும்பன் என்ற இரண்டு அஸுரர்கள் சிறு வயதிலேயே புஷ்கர க்ஷேத்திரத்தில் பதினாயிரம் வருஷம் பிரம்மாவைக் குறித்து கடுந்தவம் புரிந்து உத்தமமான வரன்களைப்பெற்று இந்திராதிகளிடமிருந்து த்ரைலோக்ய ராஜ்யத்தையும் பிடுங்கி யக்ஞாதிகளில் கொடுக்கும் ஹவிர்பாகாதிகளும் தங்களுக்கே வந்து சேரும்படி செய்துகொண்டார். தேவர்கள் ஆபத்து நேரிடுங்காலத்தில் தன்னை ஸ்மரித்தால் அவர்களின் சங்கடத்தைப் போக்குவதாய் அபயப்ரதானம் செய்திருந்த விஷ்ணு மாயையைக் குறித்து ஹிமவத்கிரியின் அபிமானி தேவதையை தலைவராகக் கொண்டு "ஹே விஷ்ணு மாயையே!



உனக்குத்தான் மகாதேவி, சிவா, ப்ரகிருதி, பத்ரா, ரௌத்ர கௌரீ, தாத்ரீ, ஜ்யோத்ஸ்னா, விருத்தி, சித்தா, நிருதி, துர்க்கா, தாம்ரா என்று அநேக நாமங்கள் இருக்கின்றன. ஸ்தாவர ஜங்கமாத்மகமான எல்லா உலகத்தையும் நீ வியாபித்திருக்கிறாய். எல்லா பிராணிகளிலேயும் சைதன்ய ரூபியாயும், புத்தி, சக்தி, காந்தி, ஐசுவரியம், தைரியம், நீதி, ஆசை, பொறுமை, வெட்கம், சமாதானம், ஞாபகசக்தி, கருணை, சந்தோஷம், பசி தாகம், நித்திரை, பிரமம், பிரமயிக்கும் தன்மை, இந்திரியங்களில் வியாபித்திருக்கும் தன்மை முதலான பலவகை ரூபங்கொண்டிருக்கிறாய். முன்பு எங்களுக்கு நேர்ந்த சங்கடங்களை நிவர்த்தி செய்த நீ, இப்போது சும்ப நிசும்பர்களால் ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை பரிகாரம் செய்வாய்" என்று விசித்திரமாக ஸ்தோத்திரம் செய்தனர். அப்போது கங்கையில் ஸ்நானம் செய்ய வந்திருந்த பார்வதியின் சரீர கோசத்தினின்றும் விஷ்ணு மாயை ஸ்திரீ ரூபத்துடன் வெளியானாள். கோசத்தினின்றும் வெளியானதால் அவள் கௌசிகீ எனப்பெயர் பெற்றாள். எல்லோர் மனதைக்கவரும் மிக்க அழகுவாய்ந்த மற்றொரு ஸ்திரீ ரூபமும் அப்பொழுது ப்ராதுர்பவித்தது. அந்த தேவிக்கு இணையான ஸ்திரீயை இதுவரை யாரும் கண்டதில்லை. ஹிமவத்கிரியின் சுவர்ண சிகரத்தில் ஸிம்ஹ வாஹனத்துடன் அவள் வீற்றிருந்தாள். அவளுடைய ரூபத்தைக்கண்டு மயங்கி சும்ப நிசும்பர்களின் ஆட்களான சண்டன் முண்டன் என்பவர்கள் ஸ்திரீ ரத்னமாகிய அவளை விவாகம் செய்துகொள்வது அவர்கள் அடைந்திருக்கும் த்ரைலோக்ய ஐசுவரியத்திற்கும் சரியான பொருத்தமென்று அவளுடைய அழகை வெகுவாய் வர்ணித்து சும்ப நிசும்பர்களிடம் அறிவிக்க, அவர்களும் காம மோகங்கொண்டு ஸுக்ரீவன் என்ற அஸுரனை தங்கள் ஐசுவரியத்தையும், அவளை மணக்க தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் விருப்பத்தையும் அவளிடம் அறிவித்து அவர்களிருவர்களில் யாரை வேண்டுமானாலும் அவள் மணக்கலாமென்றும் சொல்லி சமாதான பூர்வமாய் அவளை அழைத்துவர அனுப்பித்தார்கள். அவ்வாறே அந்த தூதன் தேவியிடம் அறிவிக்க தேவி சிரித்துக்கொண்டு தன்னை யுத்தத்தில் ஜெயிப்பவரை தான் மணப்

பதாய் சபதம் செய்திருப்பதால் தன்னுடன் அவர்கள் யுத்தத்திற்கு வரும்படி செய்தி சொல்லி அனுப்பினாள். இதைக்கேட்டு சும்பன் அவளை பலாத்காரமாய் இழுத்துவர தூம்ராக்ஷாஸுரனை அனுப்ப. அவன் அறுபதினாயிரம் அஸுரர்களுடன் தேவியிடம் சும்பனின் அபிப்பிராயத்தை அறிவிக்க, தேவி ஹுங்காரம் செய்து அவனை பஸ்மமாக்கினாள். தேவியின் வாஹனமான ஸிம்ஹம் அவனுடன் வந்த எல்லா அசுரர்களையும் சின்னபின்னமாய் செய்துவிட்டது.

## சாமுண்டீஸ்வரியின் வரலாறு.

பிறகு சும்பன் தேவியின் தலை மயிரைப் பிடித்து இழுத்துவர மிகுந்த பராக்கிரமசாலிகளான சண்டன் முண்டன் என்பவர்களை அனுப்ப அவர்கள் எண்ணிறந்த ரதங்கள், கஜங்கள், குதிரைகள் காலாட் படைகள் கூடி சதுரங்க சைனியங்களுடன் வந்து சேர்ந்தார்கள். தேவி இந்தக் கூட்டத்தைப் பார்த்து புருவங்களை நெறித்து மகா கோபங்கொண்டாள், கோபத்தால் அவளுடைய முகம் கறுத்து, அச்சமயம் அவளுடைய சரீரத்தினின்றும் மசியைப்போல் கருத்த திருமேனியுள்ள ஒரு ஸ்திரீ வெளியானாள். அவள்தான் மகாகாளி. உலகத்தையே விழுங்கும் வண்ணம் பிரம்மாண்டமாய் திறந்த அவளுடைய பயங்கரமான வாய், அதில் ஜொலிக்கும் நெருப்புக் தணல்போன்ற நாக்கு, பர்வத சிகரம் போன்ற பற்கள் கழுத்தில் போட்டுக்கொண்ட பிணங்களின் கோரமான மண்டை மாலை, கையில் பிடித்த கடூரமான கத்தி, பாசக்கயிறு முதலிய ஆயுதங்கள், அசையும் விழிகளுள்ள சிவந்த கண்கள் போர்த்திருக்கும் பதினாறு அடி வேங்கையின் ஈரத்தோல் முதலியவை சத்ருக்களை நடுங்கும்படி செய்தது. அவள் அடிக்கடி பத்து திக்குகளும் பிரதித்வனி கொடுக்கும்படி வீறிட்டாள். இதைக்கேட்டு எல்லோரின் கண்களும் மூடின. ஒரு க்ஷணத்தில் அவள் வேகமாய் தாவி வந்து யானைகளென்றும் தேர்களென்றும் பாராமல் எல்லா அஸுர சைனியங்களையும் இரு கைகளால் வாறி வாறி தன் வாயில் போட்டுக்கொண்டு பற்களால் கடித்து சாப்பிட்டு வந்தாள். சில அசுரர்களை தலை மயிரைப்



பிடித்து இழுத்தும், சிலரை காலால் தேய்த்தும், சிலரை கழுத்தை முறித்தும், சிலரை மார்பில் பிளந்தும் அவர்கள் போடும் அஸ்திரங்களை தாவி வாயால் தாங்கி விழுங்கியும் அசுர சைனியத்தை நாசம் செய்தாள். இதைக்கண்டு கோபங்கொண்ட முண்டன் மகா யுத்தம் செய்து ஆயிரக்கணக்கான சக்ராயுத [illegible] களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக [illegible] போய்க்கொண்டிருந்தன. மகாகாளி பயங்கர [illegible] செய்து அவனுடைய தலைமயிரை தாவிப் பிடித்து அவனுடைய கழுத்தை கத்தியால் வெட்டித் தள்ளினாள். பிறகு யுத்தத்திற்கு வந்த அவனுடைய அண்ணனான சண்டனையும் [illegible] காலால் அழுத்திக்கொன்றாள். முண்டனுடைய தலையையும் சண்டனுடைய சவத்தையும் இழுத்துக்கொண்டு [illegible] கொண்டு வேடிக்கை பார்த்திருந்த தேவியிடம் வந்து காண்பிக்க, தேவி சிரித்துக்கொண்டு நீ இந்த சண்டன் முண்டன் இவ்விருவர்களையும் கொன்று விட்டதால் உனக்கு சாமுண்டி என்னும் பெயர் பிரசித்தமாகட்டும் என்று மகா காளிக்கு அநுக்ரஹம் செய்தாள்.

சண்ட முண்டர்களும் கொல்லப்பட்டபின் சும்பன் தேவியுடன் மகாயுத்தம் செய்ய நிச்சயித்து நூற்று எழுபது சங்கு (ஒரு சங்கு என்றால் பத்துலக்ஷகோடி) ஆயுதபாணி அசுரர்களுடனும் ஐம்பதுகோடி வீரர்களுடனும் தௌம்ரர்களென்னும் நூறு கூட்டத்தார்களுடனும் காலகர்கள் தௌஹிருதர்கள் மௌர்யர்கள் காலகேயர்கள் என்னும் எண்ணிறைந்த அசுரவகையார்களுடனும் கூடி மகாஸைனியத்துடன் வந்துசேர்ந்தான். இந்த பிரம்மாண்டமான அசுரசைனியத்தைப்பார்த்து தேவி தனுஸ்ஸை டங்காரம் செய்தாள். ஸிம்ஹம் கர்ஜித்தது. தேவியின் பிரம்மாண்டமான மணி சப்தித்தது. மகாகாளி வீறிட்டு அட்டகாசம் செய்தாள். இந்த சப்தங்களைக்கேட்டு அசுரசைனியம் கலங்கவும், எல்லோரும் பார்க்கையில், தேவியின் சரீரத்தினின்றும் பலதேவர்களின் சக்திகள் அந்தந்த தேவர்களின் ரூபங்களைப்போல் ஸ்திரீரூபங்கொண்டு வெளிவந்தன. கையில் ஜபமாலையையும் கமண்டலுவையும் பிடித்து ஹம்சங்கள்கட்டிய விமானத்திலேறிக்கொண்டு பிரம்மசக்தியாகிய

ப்ரம்மாணியும், த்ரிநேத்ரதாரியாய் பாம்புகளை ஆபரணமாய்க்
கொண்டும் சந்திர ரேகையை தலையில் தரித்தும் த்ரிசூலத்தை
கையில் பிடித்தும் விருஷபத்தின் மீதேறி ருத்திர சக்தியாகிய
மாகேசுவரியும், சங்க சக்ரம் கதை சாரங்கம் கத்தி இவைகளை
தரித்து கருடன் மீதேறி வைஷ்ணவியும், கையில் வேல் தரித்து
மயில் மீதேறி சுப்ரமணியருடைய சக்தியாகிய கௌமாரியும்,
யக்ஞவராக மூர்த்திபோல் மூக்கில் பூகோளத்தை தரித்து சக்ரா
யுதபாணியாய் வராகரின் சக்தியாகிய வாராஹியும், நரஸிம்ஹ
மூர்த்திபோல் கழுத்து பிடரி மயிரால் நக்ஷத்திரங்களை உதிர்த்துக்
கொண்டு சக்ரம் பிடித்து நரஸிம்ஹரின் சக்தியாகிய நாரஸிம்ஹி
யும், ஆயிரம் கண்களுடன்கூடி கையில் வஜ்ஜிராயுதம் தரித்து
ஐராவதத்தின் மீதேறி இந்திரனின் சக்தியாகிய இந்திரியும், இவ்
வாறு மாத்ரு கணங்கள் ஆவிர்பவித்தார்கள். இவர்களுடன் கூடி
பரமசிவன் தேவியை அசுர சமூகங்களைக்கொல்லும்படி கேட்டுக்
கொள்ள, அந்த சண்டி தேவியின் சரீரத்தினின்றும் உடனே அந்த
சண்டிகாசக்தி ஸிம்ஹத்தின் மீதேறி வெளிவந்து சிவனைப்பார்த்து
நீர் என் தூதராய் சும்பநிசும்பர்களிடம் சென்று அவர்கள் உயிர்
தப்ப அப்பிராயமிருந்தால் த்ரைலோக்ய ராஜ்யத்தையும் இந்திர
னுக்கு கொடுத்து பாதாளலோகம் செல்லலாமென்றும், அப்படிக்
கில்லாவிடில் யுத்தத்தில் அவர்கள் எல்லோரையும் நான் கொல்லப்
போவது நிச்சயமென்றும் அறிவித்து வரவேண்டுமென்றுசொல்ல,
சிவன் அவ்வாறே அந்த தேவிக்கு தூது சென்றார். அதனால்
அந்த ரூபம் சிவதூதி என்று பிரசித்தமாயிற்று. சிவனுடைய
வாக்யத்தைக்கேட்டு சும்பன் ஹாஸ்யம் செய்து அஸுர சைனி
யத்தை யுத்தம் செய்ய ஆக்ஞையிட, அவர்களுடன் மாத்ரு
கணங்களாகிய மேற்சொன்ன சக்திகள் விசித்திர யுத்தம் செய்
தார்கள். மகாகாளி எல்லோருக்கும் முன்பு நின்று வாயைப்
பிளந்துகொண்டு சத்ரு சைனியத்தையும் அவர்கள் பிரயோகம்
செய்யும் ஆயுதங்கள் அஸ்திரங்கள் இவைகளை பக்ஷித்து வந்தாள்.
பிரம்மாணி தன் கமண்டலுவிலுள்ள ஜலத்தை தெளித்து சத்ருக்
களை தேஜஸ் சக்தி வீரியம் பராக்கிரமம் இல்லாதவர்களாய்
செய்து வந்தாள். மாகேசுவரீ திரிசூலத்தாலும் வைஷ்ணவீ



சக்ராயுதத்தாலும், கௌமாரீ வேலாயுதத்தாலும், இந்திரீ வஜ்ஜி
ராயுதத்தாலும், வாராஹி முகம், கடவாய் பற்கள் இவைகளினா
லும், நாரஸிம்ஹி பிடரிமயிர் கை நகங்கள் கடைவாய்ப்பற்கள்
சக்ரம் இவைகளினாலும் சிவதூதி பயங்கரமான அட்டகாசத்தா
லும், தேவிசண்டியம்மன் பாண வர்ஷங்களாலும் அசுர சைனி
யங்களை நாசம் செய்தார்கள். அச்சமயம் ரக்தபீஜன் என்னும்
அபூர்வ அஸுரன் யுத்தத்திற்கு வந்தான். யுத்த பூமியில் அவன்
சரீரத்தினின்றும் ஒரு துளி ரத்தம் வந்து அது கீழே விழும்
பக்ஷத்தில் ரத்தம் விழுந்த இடத்தினின்றும் ஆயுதபாணியாய்
அவனைப்போல் பெருத்த ஒரு அஸுரன் கிளம்புவான். இதை
அறியாமல் மாத்ரு கணங்கள் இவனை வளைத்து தத்தம் ஆயுதங்
களால் அவனுடைய சரீரத்தை சேதிக்கவும் அவனுடைய ரக்தம்
ஆறுகப்பெருகி அவனைப்போலொத்த கோடிக்கணக்கான அஸு
ரர்கள் ஆயுதபாணிகளாய் யுத்த பூமியினின்றும் வெளிக்கிளம்பி
பத்து திக்குகளையும் வியாபித்தனர். இந்த ரக்தாசுரர்கள் எல்
லோரும் மகா யுத்தம் செய்தார்கள். இதைக்கண்டு எல்லா
தேவர்களும் நடுங்கினர். தேவி சண்டியம்மன் இதைக்கண்டு
ஆச்சரியமடைந்து, தேவர்களுக்கு அபயமளித்து, அந்த ரக்த
பீஜனுடைய சரீரத்தினின்றும் ஒரு துளி ரக்தம் கீழே விழாமல்
அதை பானம்செய்யும்படி சாமுண்டியான காளியை நியமித்து
விட்டு பெரிய யுத்தம் செய்து கடைசியில் சூலாயுதத்தால் அவனை
குத்திக்கொன்றாள். முன்னமே உற்பவித்திருந்த ரக்தாசுரர்கள்
எல்லோரையும் மகாகாளி வாயைப்பிளந்து பக்ஷணம் செய்து
நாசமாக்கினாள். ரக்தபீஜனும் கொல்லப்பட்டபின் நிசும்பாஸு
ரன் யுத்தத்திற்கு வந்து பலவகை ஆயுதங்களாலும் அஸ்திரங்
களாலும் மாத்ரு கணங்களையும் தேவியையும் பிரஹாரம் செய்து
விசித்திர யுத்தம் செய்ய தேவி பல தடவை பாணங்களாலும்
ஆயுதங்களாலும் அவனைக்கொன்றும் அவனுடைய பிராணன்
போகாமல் அவன் அடிக்கடி உயிருடன் எழுந்து யுத்தம் செய்து
வரவும் தேவி கடைசியில் அவனுடைய மார்பைத் தரிந்து சூலா
யுதத்தால் மார்பைப் பிளந்து அவனைக்கொன்றாள். தம்பியான
நிசும்பன் இறந்த பிறகு சும்பன் மகா கோபங்கொண்டு தேவியை

ப்பார்த்து "துர்க்கையே! உன்பலாபலத்தை பரிக்ஷிக்க இந்த யுத்தம் துவக்கப்பட்டது. அப்படியிருக்க நீ பல ஸ்திரீகளை சேர்த்து வைத்து அவர்களின் பலத்தைக்கொண்டு என்னை ஜயிக்க வருகிறாயே அன்றி நீ மட்டில் ஜயித்து வருவதாய் கர்வங்கொள்ளாதே" என்று சொன்னாள். இதைக்கேட்டு தேவி சிரித்துக்கொண்டு "சும்பா! நான் ஒருவளே இவ்வளவு ஸ்திரீ ரூபங்களாய் இருந்து வருகிறேன். என்னைத்தவிர வேறு யாருமில்லை. இவர்கள் என்னுடைய விபூதி ரூபங்கள். உனக்குச் சந்தேகமிருந்தால் பார்" என்று சொல்லவும் ப்ராம்மாணீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ நாரஸிம்ஹி, இந்திரீ, சாமுண்டி என்னும் மகாகாளி சிவதூதி முதலிய எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக தம் தம் வாஹனங்களுடன் துர்க்கா தேவியின் ஸ்தனங்களில் புகுந்து மறைந்து துர்க்கை ஒருவளே ஸிம்ஹத்தின் மீது ஏறியவளாய் யுத்த பூமியில் நின்றாள். சும்பனுக்கும் தேவிக்கும் கோரமான யுத்தம் வெகு நேரம் நடந்தது. சூலாயுதத்தால் அவனைக்குத்தி ஆகாயத்தினின்றும் தள்ளி ஸம்ஹாரம் செய்தாள். சும்ப ஸம்ஹாரமானவுடன் உலகத்திலுள்ள எல்லோர் மனமும் குளிர்ந்தது. ஆகாயம் நிர்மல மாயிற்று. நதிகள் தெளிந்து முன்போல் ப்ரவஹித்தன. ரிஷி கணங்கள் மனச்சமாதானமடைந்து யக்ஞாதிகளை நடத்தினர். முப்பத்து முக்கோடி தேவர்களும் தேவியைச் சூழ்ந்து "தேவி ப்ர பன்னார்த்திஹரே ப்ரஸீத ப்ரஸீத மாதர் ஜகதோ கிலஸ்ய| ப்ரஸீத விசுவேச்வரி பாஹி விச்வம் த்வமீச்வரி தேவி சராசரஸ்யா|| ஃ ஸர்வமங்கள மங்கல்யே கிலே ஸர்வார்த்த ஸாதிகே|| சரண்யே த்ரயம்பிகே தேவி நாராயணி நமோஸ்துதே| ஸர்வஸ்ய புத்தி ரூபேண ஜனஸ்யஹ்ருதி ஸம்ஸ்திதே| ஸ்வர்க்காபவர்க்கதே தேவி நாராயணி நமோஸ்துதே|| கலாகாஷ்டாதி ரூபேண பரிணாம ப்ரதாயினீ| விச்வஸ்யோ பரதே சக்தே நாராயணி நமோஸ்துதே| சரணாகத தீனார்த்த பரித்ராண பராயணே| ஸர்வஸ்யார்த்திஹரே தேவி நாராயணி நமோஸ்துதே ஃ ஃ என்று அதியற்புதமாக ஸ்தோத்திரம் செய்தனர். துர்க்காதேவி மகிழ்ந்து என்ன வரம் வேண்டுமென்று தேவர்களைக்கேட்க த்ரைலோக்யத்திற்கும் எந்த பாதையும் இருக்காதிருக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அதற்கு தேவி இவ்வாறு சொன்னாள். "வைவஸ்வத



மன்வந்தரத்தில் இருபத்தி எட்டாவது யுகத்தில் இந்த சும்ப நிசும்பர்களே மறுபடியும் பூமியில் பிறக்கப் போகின்றனர். நான் நந்தகோபனின் பாரியாளாகிய யசோதையின் வயிற்றில் பிறந்து விந்திய பர்வதத்தில் வாசம் செய்பவளாய் அவர்களைக் கொல்லப் போகிறேன். மறுபடியும் பயங்கரமான ரூபத்துடன் அவதரித்து விப்ரசித்தியைச் சேர்ந்த தானவர்களை பற்களால் கடித்து ஸம்ஹாரம் செய்யும்போது அவர்களின் ரக்தம் பட்டு என் பற்களெல்லாம் மிகவும் சிவந்து நான் ரக்ததந்தா என்று எங்கும் பிரஸித்தியடையப் போகிறேன். நூறு வருஷங்கள் பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள் கஷ்டப்படும் சமயம், மஹரிஷிகள் என்னை ஸ்தோத்திரம் செய்து நான் ஆவிர்பவித்து நூறு கண்களை தரித்து நான் கடாக்ஷிப்பதால் அந்த பஞ்சம் நிவர்த்தியாகிறது. அதனால் எனக்கு சதாக்ஷீ என்று பெயர் ஏற்படப்போகிறது. அச்சமயம் மழைபெய்து உலகம் ஸுபிக்ஷமாகும்வரையில் நான் பலவகைகாய் கறிகளாய் பூமியில்முளைத்து ஜனங்களை ஸம்ரக்ஷிக்கிறேன். அதனால் நான் சாகம்பரி என்று பெயர் அடைகிறேன். துர்க்கம என்னும் அஸுரனை நான் கொல்வதால் துர்க்கை என்று எனக்குப்பெயர் ப்ரஸித்தமாகிறது. ஹிமய மலையில் பயங்கரமான ரூபத்தை எடுத்து மஹரிஷிகளை ரக்ஷிப்பதால் நான் பீமா என்று மஹரிஷிகளால் அழைக்கப்படுகிறேன். அருணனென்னும் அஸுரன் மூவுலகத்தையும் ஹிம்ஸிக்கும்பொழுது கணக்கில்லாத வண்டு ரூபந்தரித்து அவனைக் கொல்கிறேனாதலால் எனக்கு ப்ராமரீ என்று பெயர் உண்டாகிறது. இவ்வாறு அஸுரர்களின் ஹிம்ஸை ஏற்படும் காலத்திலெல்லாம் நான் அவதரித்து உலக ரக்ஷணம் செய்கிறேன்" என்று சொல்லி "தேவர்கள் செய்த இந்த ஸ்தோத்திரத்தையும் நான் செய்த மதுகைடபர்களின் வதம், மஹிஷாஸுர மர்த்தனம் சும்ப நிசும்பர்களின் ஸம்ஹாரம் ஆகிய இந்த மகாத்மியத்தையும் அஷ்டமி, நவமி சதுர்த்தசியன்று படித்து என்னை ஸ்மரிக்கின்றவரோ அவர்களுக்கு ஆபத்துக்கள் நிவர்த்தியாகும். தாரித்ரியம் ஏற்படாது. அரிஷ்டங்கள் விலகும். சத்ரு பாதை, திருட்டு பாதை, ஆயுதங்களின் வெட்டு, நெருப்பு வ்ரணம் முதலியவை ஏற்படமாட்டாது பெரிய அம்மை முதலிய மகா வியாதிகள் அணுகாது. என் மகாத்மியம் தாபத்ரயங்களையும் சமனம் செய்யும். இந்த சரிதைகள் சொல்லப்படும் இடத்தில் என் சன்னிதானம் இருக்கும்" என்று பலவகை வரங்களைக் கொடுத்து எல்லா தேவர்களும் பார்க்கும்பொழுது விஷ்ணு மாயையாய் ஆகாயத்தில் மறைந்தாள்.

### சண்டாளர்களின்

# அனந்தசயனம் ஆலயப்பிரவேசம்.

பாரத பாகவதாதிகளில் ஸ்யாநந்தூர க்ஷேத்திரமென்று புகழப்
பட்டு வரும் அனந்தசயனம் ராஜாங்கத்திலுள்ள பிரதான கோயில்க
ளிலும் ஸ்ரீ அனந்தபத்மநாப ஸ்வாமி கோயிலிலும் அந்த தேசத்து ஜனங்
களால் தீண்டாதவர்களென்று விலக்கப்பட்டவர்கள் பிரவேசிக்க அந்த
தேசத்து ராஜங்கத்தாரால் அனுமதியளிக்கப்பட்டு அவர்கள் தேவாலய
ப்ரவேசம் செய்து வருவதை அறிய நாம் மிகவும் விசனிக்கிறோம். இதர
ராஜ்யங்களுக்கு வழி காட்டியாய் பல ப்ராசீன தர்மங்கள் நடத்தப்பட்டு
தர்ம ராஜ்யமென்று பிரசித்தியடைந்த அனந்சதயன ராஜ்யத்திலேயே
ஸநாதன தர்மங்களை அழித்துப்போடும் இவ்வதிக்கிரமச்செயல் பகி
ரங்கமாய் ராஜ சகாயத்துடன் நடத்தப்பட்டு வருகிறதென்றால் கோர
மான இந்த கலியுகத்தின் வீரியத்தை என்னவென்று சொல்வது.
பிரம்மோபதேசம் பெற்ற த்ரைவர்ணிகளுக்கே சண்டாளர்களின் சம்
பர்க்கம் மகாபாதகமென்று எண்ணிறைந்த மகரிஷிகளின் வாக்யங்களால்
இம்மித்திரனில் காட்டப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க ஆலயவிதி
களுக்குட்பட்டு ஆகமசாஸ்திரத்தில் சொன்னபடி பிரம்மாதிதேவர்களால்
பிரதிஷ்டையடைந்த வெகு புனிதமான ஸ்ரீ அனந்தபத்மநாப விக்ரஹத்
திற்கு சண்டாளர்களின் திருஷ்டி ஸம்பர்க்கம் முதலியவை முற்றிலும்
சாஸ்திர விரோதம் என்று சொல்லத்தேவையில்லை. பொதுவாய் ஸநா
தன தர்மத்தை பின்பற்றும் எல்லாமதத்தினரும் ஜாதியாரும் இந்த
அகாரியத்தைத் தடுக்க முன்வரவேண்டியது அவசியமாயிருப்பதுடன்
விசேஷமாய் மாத்வ வகுப்பார்கள் இதைத்தடுக்க பலமான கிளர்ச்சி
செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீ நரஸிம்ஹர், ஸ்ரீ வெங்கடாம
ணன், ஸ்ரீ பாண்டுரங்கன், ஸ்ரீராமன் முதலிய தெய்வங்கள்போல் ஸ்ரீ
அனந்தபத்மநாபனும் மாத்வர்களில் பல குடும்பத்தார்களுக்கு குலதெய்வ
மாகயிருந்து அவர்களால் விசேஷமாய் ஆராதிக்கப்பட்டு வருகிறார்.
மேலும் வயது வந்த மாத்வர்கள் ஒவ்வொருவரும் தம்தம் தர்மபத்தினி
யுடன் சேர்ந்து ஔபாஸனாதிகளை நடத்துவதுபோல் பாத்ரபத சுத்த
சதுர்தசியன்று அநந்தவிரதத்தைமிக்கபக்தியுடன்கைக்கொண்டு அதைதம்
களில் வேரூன்றியிருக்கிறது. அந்த அனந்ததோரம் கைதவறிவிட்டால்



அதற்கு பிராயச்சித்தம் செய்துகொண்டு அதை புதுப்பித்துக் கொள்ள
வேண்டும் என்ற தர்மசாஸ்திர விதியும் ஸ்பஷ்டமாய் காணப்படுகிறது.
இவ்வாறு மாத்வ ஸமூகத்தாரின் இஷ்ட தெய்வமாகவும் குலதெய்வமாக
வும் வழங்கிவரும் ஸ்ரீ அநந்த பத்மநாப மூர்த்தியின் மூலஸ்தலம் சண்
டாளர்கள் பிரவேசம் செய்வதால் அசுத்தமாய்போய் பகவான் அந்த
ஸ்தலத்தில் சன்னிதானம் கொள்ளமுடியாமல் அந்தர்தானமடையும்படி
நேரிட்டிருப்பதைக்கண்டு துக்கப்படாமலும், கண்டிக்காமலும், தடுக்க
சரியான எத்தனங்கொள்ளாமலும் மாத்வர்கள் உதாசீனமாயிருப்பது
அவர்கள் தம் தெய்வத்திற்கு செய்யும் பெரும் துரோகமாகும். பெரும்
பாபமும் தொடருமென்பதில் ஆக்ஷேபணையில்லை. பகிரங்கமான தர்மத்
திற்கு விரோதம் நடந்து அது கண்டிக்கப்படாமலும் தடுக்கப்படாமலு
மிருந்தால் 'அர்த்தம் ஹரதிவைச்ரேஷ்ட: பாதோ பவதி கர்த்ருஷு ||
பாதஸ்சைவ ஸபாஸத்ஸு யே ந நிந்தந்தி நிந்திதம்'' அதை தடுக்க சக்தி
யிருந்து தடுக்காமலிருப்பவனுக்கு அந்த அதர்மத்தின் பாபபலனில் பாதி
பாகம் போய்சேருமென்றும் உதாசீனமாயிருக்கும் பொதுஜனங்களுக்கு
கால்பாகம் போய் சேருமென்றும் மீதியுள்ள கால்பாகம்தான் கர்த்த
வுக்குப் போய்சேருமென்றும் கஸ்யபர் அறிவித்திருக்கிறார். அதர்மம்
எங்கும் எப்பவும்நடக்கலாகாதென்று எமது ஆசாரியரான பீமசேனர் எப்
பாடுபட்டிருக்கிறார் என்று மகாபாரத தாத்பர்யநிர்ணயம் நன்கு விளக்கு
கிறது. இந்த அதர்மம் எவ்வகை மேலான நோக்கத்துடன் செய்திருப்
பினும் இத்தீண்டாதார்கள் எவ்வகையார்களாவது இருப்பினும் இதை
அனுமதித்தவர் அவ்வூர் மகாராஜாவாயிருப்பினும் ''சுருதிஸ்மிருதீ மமோ
ராக்ஞே''என்று சாமானியமாய் எல்லா விஷ்ணு தேவாலயங்களின்
சொத்து ஸ்வதந்திரம்பாத்தியங்கொண்ட விஷ்ணுவிட்ட கட்டளையாகிய
சுருதி ஸ்மிருதிகளுக்கு நேர் விரோதமான காரியங்களை அவருடைய
தேவாலயங்களிலேயே நடத்த யாருக்கும் எப்பவும் பாத்தியமில்லை.
அனந்தசயன ராஜ்யமே ஸ்ரீ அனந்தபதமநாப மூர்த்திக்குச் சேர்ந்த
தென்றும் அந்நாட்டு மன்னன் ஸ்ரீபத்மநாபதாஸ் என்ற பட்டப்பெயர்
பெற்று அவருடைய ஆக்ஞைக்கு கீழ்படிந்து ராஜ்யபாரம் செய்கிறவர்
என்றும் தொன்றுதொட்டு பிரசித்தமாயிருக்க, ஸ்ரீ அனந்தபத்மநாபனை
விஷ்ணுவின் சட்டதிட்டங்களை அவர் மீறியது அவர் தன் கடமையை
செய்யத்தவறியவர் ஆவார். விதவா விவாகம் ருதுமதீ விவாகம் சமுத்ர
யானம் முதலிய தற்காலத்திய சமூக சீர்திருத்த பிரசினைகளுக்கு மேற்
பார்வைக்கு பிரமாணங்களாய் ஒரு சில வாக்யங்கள் எமது சாஸ்திரங்
களில் காணப்படுவது போல இந்த சண்டான ஸம்பர்கத்திற்கு பிர

மாணங்கள் மோஜித்ததாயில்லை. மகரிஷிகள் எல்லோருமே ஏகோபித்து கண்டித்திருக்கின்றனர். ஆகவே எமது மாத்வசமூகத்தார் யாவரும் இச் சமயம் முன்வந்து ஆங்காங்கு மகாசபைகளைக்கூட்டி தம் இஷ்டதெய்வம் குலதெய்வமுமான ஸ்ரீ அனந்தபத்மநாப மூர்த்தியின் விக்ரஹத்திற்கு நேரிட்டிருக்கும் ஆசுத்தத்தைப்பற்றி கண்டன தீர்மானங்களை மிக்க பணிவுடன்செய்து அதை மரியாதையுடன் திருவனந்தபுரம் மகாராஜாவுக்கு பத்திரிகை மூலமாகவும் கடித மூலமாகவும் அனுப்புப்படிக்கும், இந்த அதர்மத்தைதர்மிஷ்டர்களான மைசூர் மகாராஜா கொச்சி மகாராஜா முதலியவர்களிறந்த திருவனந்தபுரம் மகாராஜாவுக்கு தங்கள் யோசனை சொல்லும்படி தீர்மானங்கள் செய்து அவர்களுக்கும் அனுப்பும் படிக்கும் நாம் வற்புறுத்துகிறோம். இவ்வாறு நம் மாத்வசமூகத்தார் இதர சநாதனிகளுடன் சேர்ந்து தங்கள் மனத்தாங்கலை அறிவித்தால் மனுநீதி தவறாது நடத்திவந்த விசாகாதி மகாராஜர்களின் சந்ததியாராகிய இம்மகாராஜாவின் மனமும் ஸ்ரீ அனந்தபத்மநாபனின் திருவருளால் திரும்பக்கூடும். "கலௌகலு பவிஷ்யந்தி நாராயண பராயணா:| க்வசித் க்வசித் மகாராஜத்ராவிடேஷு ச பூரிச:| தாம்ரபர்ணீ நதீயத்ர க்ருதமாலா பயஸ்வினீ:| காவேரீ ச மகாபுண்யா ப்ரதீசீ ச மகாநதீ:||" என்று கலியுகத்தில் விசேஷமாய் தமிழ்நாட்டிலும் அதிலும் தாம்பரபர்ணி க்ருதமாலா பயஸ்வினி காவேரி நதிகளின் பிராந்தியத்திலும் பகவத் பக்தர்கள் இருந்து கால்பாகம் தர்மம் எப்பொழுதும் ஓங்கியிருக்குமென்று சுகாசாரியார்பாகவதத்தில் கூறிய உறுதி நிலைநிற்கும். சிர்குலைந்திருக்கும் மாத்வ ஸமூகம் ஸ்ரீ அனந்தபத்மநாபனின் பிரஸாதமடைந்து ஐஹிகா மூஷ்மிக ஸகலசம்பத்துக்களையும் பெறுவார்களாக.

---

## விசேஷ தினங்கள்.

### மார்கசீர்ஷ மாஸம்.

| | | |
|---|---|---|
| 15—12—36 | மங்களவாரம் | தனுர்மாஸம் முதற்பூஜை |
| 18—12—36 | சுக்ரவாரம் | சிரவண உப. இல்லை, விஷ்ணு ப. உப, [இல்லை |
| 21—12—36 | சோமவாரம் | தனுர்வியதிபாதம் |
| 24—12—36 | குருவாரம் | ஏகாதசி உப. |
| 25—12—36 | சுக்ரவாரம் | முக்கோடி த்வாதசி |
| 28—12—36 | சோமவாரம் | பௌர்ணமி, ஆருத்ரா தர்சனம், விஷ்ணு [ப. உப. |
| 8—1—37 | சுக்ரவாரம் | ஏகாதசி உப. |
| 12—1—37 | மங்களவாரம் | தர்சம், ஹனுமத் ஜயந்தி, விஷ்ணு ப. உப. |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்**—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்**:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி**:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**த்வைதமத விளக்கம்**:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்**:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி ப 6.

**துருவசரித்திர நாடகம்**:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்**:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதாங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனாமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1–8–0 தபாற்கூலி 0–6–0.

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.**

வருட சந்தா ரூ. 3 Regd. No. M 24


# டி. எஸ். ஆர். அண்டு கம்பெனி, கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவிய சாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் [தைலம் |
| அம்பர், அரகஜா | பற்பொடி |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,


அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam

Regd. No. M 2419.



# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 8.<br>புஸ்தகம் 8 | யுவ ஸம்வத்ஸரம்,<br>மாக மாஸம்,<br>(7—2—'36 சுக்ரவாரம்.) | No. 8.<br>நெ. 8. |
|---|---|---|

| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | பிரம்ம ஸூத்திரம். | 217 |
| 2. | ஆசாரமாலை. | 220 |
| 3. | ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 224 |
| 4. | ஸ்திரீ தர்மம். | 228 |
| 5. | ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 232 |
| 6. | ஜார்ஜ் சக்ரவர்த்தியின் மரணம். | 238 |
| 7. | செய்தித்திரட்டு. | 240 |
| 8. | ஸ்ரீகிருஷ்ணரின் ராதை யார்? | 245 |
| 9. | விசேஷ தினங்கள். | 248 |

ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

6-MAR 19 MADRAS

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலும் இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் கண்டோர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதாங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतःभेद
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## பிரம்ம ஸூத்திரம்.

(முன் 214ம் பக்கம் தொடர்ச்சி,)

ஸ்ரீமான் M. ராமராவ் எழுதுவதாவது:—

ஓம் அதாதோ பிரம்மஜிக்ஞாஸா ஓம்

இது முதல் ஸூத்திரம். இந்த ஒரு ஸூத்திரமே ஓர் அதிகரணமாகும். ஜிக்ஞாஸாதிகரணமென்று இந்த முதல் அதிகரணத்திற்கு பெயர். ஜிக்ஞாஸை என்றால் விஷ்ணுவைப்பற்றி சிரவணம், மனனம், நிதித்யாஸனம் ஆகிய விசாரம். இதைப்பற்றி இந்த அதிகரணம் அறிவிப்பதாலிதற்கு ஜிக்ஞாஸாதிகரணம் எனப்படுகிறது. தைத்திரீய சுருதியில் தத் விஜிக்ஞாஸஸ்வ தத் ப்ரம்ம என்று இருப்பதைக் கொண்டு இந்த வாக்யத்தை நிர்ணயித்துக்கொடுக்க இந்த ஸூத்ரம் எழுந்ததாகும். அதனால் இந்த வாக்யம் விஷய வாக்யமென்று சொல்லப்படும். பிரம்ம ஜிக்ஞாஸை என்பது விஷயமாகும். பிரம்ம ஜிக்ஞாஸை செய்யத்தகுந்ததா அல்லவா என்று சந்தேகம். நாம் உலகில் செய்யத்தகுந்த காரியங்களையும், செய்யத்தகாதவைகளான காரியங்களையும் காண்பதே சந்தேகத்திற்கு காரணம். பிரம்ம ஜிக்ஞாஸை செய்யத் தகுந்ததல்ல என்று பூர்வபக்ஷம். இந்த பூர்வ பக்ஷத்தின் பிரயோஜனம் இந்த பிரம்மஸூத்திரமாகிய பிரம்ம மீமாம்ஸா சாஸ்திரம் சிரவணபடனாதிகளைச் செய்ய ஆரம்பிக்கத் தகுந்ததல்லவென்பது. பிரம்மஜிக்ஞாஸை செய்யத்தகுந்ததே என்

பது இந்த அதிகாணத்தின் ஸித்தாந்தம். இதன் பிரயோஜனம் இந்த பிரம்மமீமாம்ஸா சாஸ்திரம் சிரவணபடனாதிகளைச் செய்ய ஆரம்பிக்கத்தகுந்ததென்பதே. இந்த சூத்திரத்தின் அர்த்தமாவது:— ஓம், அத, அத:, பிரம்ம, ஜிக்ஞாஸா. அத பிறகு அதாவது பாகவத தந்திரமென்னும் நூலில் விவரித்தபடி அத்யயனம், சமம், தமம் முதலான ஸம்பத்து இத்யாதி யோக்யதையைப் பெற்ற பிறகு, அத: (1) ஜிக்ஞாஸையால் ஏற்படும் பகவத் அனுக்ரஹம் பகவத் தரிசினம், பரம பக்தி பரமானுக்ரஹம் இவைகள் மூலமாய் மோக்ஷமென்னும் மகா பலன் இருப்பதாலும் (2) எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஸம்ஸாரபந்தம் ஸத்யமானதாலும் (3) வேதம் ஸித்தஸ்வரூபமான வஸ்துவைக் கூறுவதாலும் (4) வேதம் பிரமாணமாகிறபடியாலும் (5) வேதம் அன்விதத்தையே கூறுவதாலும் (6) அனைவரின் மனோ விருத்தி ப்ரோகனான பகவானுடைய அனுக்ரஹத்தாலும் ஓம் குணபூர்ணனான பிரம்மஜிக்ஞாஸா பிரம்ம விஷ்ணுவைப்பற்றியுள்ள ஜிக்ஞாஸா—சிரவணம், மனனம், நிதித்யாஸனமாகிய ஜிக்ஞாஸை கர்த்தவ்யா செய்யத்தகுந்தது.

ஒவ்வொரு ஸூத்ரத்தின் முதலிலும், கடைசியிலும் ஓங்காரத்தைச் சேர்த்தே உச்சரிக்கவேண்டும். அப்படி உச்சரிக்காவிட்டால் அது நிஷ்பலமாய் போவதுடன் அநர்த்தத்தையும் விளைவிக்கும். இந்த ஓங்காரம் மீதி எல்லா சூத்திரங்களுக்கு ஆரம்பத்திலும் உச்சரிக்கப்படவேண்டியதென்று தெரிவிக்கவேதான் ஓமதாதோ என்று சேர்த்துச் சொல்லாமல் ஓம் அதாதோ என்று பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு ஓம் என்பது அவாந்தியான்தல்ல. ஓம் என்பது இந்த முதல் சூத்திரத்தின் அவயவமென்றும், சூத்திரத்திலுள்ள பிரம்ம சப்தத்திற்கு விசேஷணமென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதைப்போல் பின்னடியுள்ள ஓம் ஆகாது. ஸூத்ரத்தில் கர்த்தவ்யா என்ற பதமில்லாமலிருப்பினும், பிருஹத் ஸம்ஹிதையில் விவரித்திருப்பதை அனுஸரித்து இந்த பதம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டியது அவசியமாக இருக்கிறது.

ஓம் அதாதோ என்னும் சப்தங்களின் வீரியம் இப்பேர்ப்பட்டதென்று கருட புராணத்தில் பிரம்ம நாரத ஸம்வாதத்தில்



விவரமாய் கூறப்பட்டிருக்கிறபடியால் பெரும்பாலும் தர்ம சூத்திரம் யோக சூத்திரம், காம சூத்திரம் முதலான எல்லா சூத்திரங்களிலுமே ஆரம்பத்தில் ஓம் அதாதோ என்ற சப்தங்களால் துவக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீபகவத் கீதை 18 அத்யாயத்திற்கு, முதல் அத்யாயம் பூராவும், இரண்டாவது அத்யாயத்தில் 10 சுலோகங்களும் எவ்வாறு முன்னுரையாக இருக்கின்றனவோ அதுபோல இந்த பிரம்ம ஸூத்திரத்திற்கு முதல் ஐந்து அதிகாணங்கள் பூர்வ பீடிகையாகின்றன.

## 2-வது அதிகரணம்.

இரண்டாவது அதிகரணம் ஜன்மாதிகாணமாகும். இந்த அதிகாணத்தில் வேதத்தில் கூறப்பட்ட பிரம்மம் விஷ்ணுவென்று நிரூபிக்கப்படுகிறது. அவர் ஜன்மாதிகளுக்கு கர்த்தாவென்று நிரூபிக்கப்படுவதால் ஜன்மாதி காணம் என்று இந்த அதிகாணத்திற்கு பெயர் ஏற்பட்டது. இதற்கு முந்தின முதல் சூத்திரத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரம்மம் என்பது ஜீவனைத்தான் குறிக்கிறது. என்றால் ஜீவனைப்பற்றி ஜிக்ஞாஸை செய்யவேண்டிய அவசியமில்லை என்றும் சங்கை ஏற்பட்டால் அந்த ப்ரம்மம் இன்னார் என்று அவருடைய லக்ஷணம் இந்த ஸூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. தைத்திரீய சுருதியிலுள்ள யதோ வா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவந்தி யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி தத் விஜிக்ஞாஸஸ்வ தத் ப்ரம்ம என்னும் வாக்யம் இதற்கு விஷயவாக்யம். விஷயம் ப்ரம்மம், ப்ரம்ம என்னும் பதத்தால் குறிக்கப்படுகிறவன் ஜீவனா அல்லது விஷ்ணுவா என்று சந்தேகம். பிரம்மம் என்னும் பதத்தால் குறிக்கப்படுகிறவன் ஜீவன்தான், என்று பூர்வபக்ஷம், சித்தாந்தம் விஷ்ணு என்றே.

### ஓம் ஜன்மாத்யஸ்ய யத: ஓம்

ஸூத்திரார்த்தமாவது:— ஜன்மாதி, அஸ்ய, யத:, அஸ்ய இந்த உலகத்துக்கு ஜன்மாதி ஸிருஷ்டி பாலனம், ஸம்ஹாரம், நியமனம், ஞானம், அக்ஞானம், பந்தம், மோக்ஷம் என்றவெட்டும் அந்தந்த வஸ்துக்களுக்கேற்ப) யத: யாரிடமிருந்து உண்டாகிற

தோ அதுதான் பரபிரம்மம் என்று சுருதியில் கூறப்பட்டிருக்கிறது. இதனால் சிருஷ்டிப்பது பிரம்மம், பரிபாலிப்பது பிரம்மம் என்று பிரம்மத்திற்கு எட்டு லக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பகவான் அனந்த குணமுள்ளவராதலால் லக்ஷணமும் அனந்தமானதாகையால் லக்ஷணங்கள் எட்டு என்பது உபலக்ஷணையாகும். ஓர் லக்ஷணத்தைச் சொல்லியே உபலக்ஷணை சொல்லமுடியும்பொழுது எட்டு லக்ஷணங்கள் ஏன் சொல்லப்பட்டதென்றால் இவ்வெட்டு லக்ஷணங்களையும் ஒவ்வொருவரும் அவசியம் அறியவேண்டுமென்று "சிருஷ்டி ரக்ஷா ஸம்ஹ்ருதிக்ஞான நியத்யக்ஞான பந்தனன்| மோக்ஷம் ச விஷ்ணுதஸ்சைவ க்ஞாத்வா முச்யேத் நசான்யதா" இத்யாதி வசனங்களால் கூறப்பட்டிருக்கிறது. மேற்கண்ட லக்ஷணங்கள் விஷ்ணுவுக்கு பொருத்தமானதே ஒழிய ஜீவனுக்கு பொருத்தமல்லவாகையால் ப்ரம்மம் விஷ்ணுவே தவிர ஜீவனாகமாட்டார் என்றும் அந்த ப்ரம்மமாகிய விஷ்ணுவே ஜிக்ஞாஸை செய்யத்தக்கவரென்றும் ஏற்படுகிறது. (தொடரும்).

---

# ஆசாரமாலை.

## காயத்ரீ விஷயம்.

(முன் 205-ம் பக்கம் தொடர்ச்சி)

3 வி வசிஷ்டர் அல்லது கந்தர்வன் ரிஷி, அனுஷ்டுப் சந்தஸ், சிவன் அல்லது சூரியன் அல்லது சந்திரன் தேவதை, நித்யா சக்தி அல்லது சமனீ சக்தி, தேஜஸ் தத்வம், இந்திர நீலவர்ணம் அல்லது வித்கும வர்ணம், அனுதாத்தஸ்வரம், ரம் பீஜம், மகாபாதக நாசம் பலம் அல்லது இதில் வினியோகம், ஜங்கையில் நியாஸம், விதத முத்திரை.

4 து: சுகர் ரிஷி அல்லது உபமன்யு ரிஷி, ப்ருஹதீ சந்தஸ், விஷ்ணு அல்லது பரமேசுவரன் தேவதை, விச்வ பத்ரா அல்லது விச்வம் பரா சக்தி, வாயு தத்வம், இந்திர நீலவர்ணம் அல்லது ஸ்படிக வர்ணம், உதாத்தஸ்வரம்; உம் பீஜம், மகாரோக



விநாசம் பலம் அல்லது ப்ரம்மஹத்யா பாபநாசம் பலம், முழங்காலில் நியாஸம், விஸ்திருத முத்திரை.

5 வ கண்வர் அல்லது கசியபர் ரிஷி, பங்க்தி சந்தஸ், சூரியன் அல்லது யமன் தேவதை, விலாஸினீ சக்தி, ஆகாசம் தத்வம், பத்ம வர்ணம் அல்லது அக்னிவர்ணம், உதாத்தஸ்வரம், யம் பீஜம், ப்ருணஹத்யை நாசம் பலம் அல்லது ஸ்வர்ணஸ்தேயம் பாப நாசம் பலம், இதில் விநியோகம் செய்யலாம், தொடைகளில் நியாஸம் த்விமுகம் முத்திரை.

6 ரே பாராசரர் ரிஷி, த்ரிஷ்டுப் சந்தஸ், வருணன் அல்லது சந்திரன் தேவதை, ப்ரபாவதீ சக்தி, கந்தம் தத்வம், ஸ்படிக வர்ணம் அல்லது தருணாதித்ய வர்ணம், அனுதாத்தஸ்வரம், ரூம் பீஜம், குருபத்னீ கமனம் பாபம் நாசம் அல்லது அகம்யாகமண பாபம் நாசம் பலம், இதில் விநியோகம் குஹ்யத்தில் நியாஸம், த்ரிமுக முத்திரை.

7 ணி அத்ரி அல்லது விச்வாமித்திரர் ரிஷி, ஜகதீ சந்தஸ், அக்னி அல்லது பித்ருக்கள் அல்லது ப்ருஹஸ்பதி தேவதை, ஜயா அல்லது தயாசக்தி, ரஸ தத்வம், வித்யுத்வர்ணம் அல்லது சங்க வர்ணம், அனுதாத்தஸ்வரம், கம் பீஜம், அபக்ஷ்ய பக்ஷணம் பாப நாசம் பலம் அல்லது விநியோகம் விருஷண ப்ரதேசத்தில் நியாஸம், சதுர்முக முத்திரை.

8 யம் கபிலர் ரிஷி, அதிஜகதீ சந்தஸ், வாயு தேவதை அல்லது பர்ஜன்யர் அல்லது பர்கர் தேவதை, காந்தா சக்தி, ரூபம் தத்வம் சுக்ல வர்ணம் அல்லது தாரக வர்ணம். உதாத்தஸ்வரம். க (2)ம் பீஜம், ஸ்திரீ ஹத்தி பாப நாசம் பலம் இதில் விநியோகம் இடுப்பில் நியாஸம், பஞ்ச முகமுத்திரை,

9 பர் சௌனகர் ரிஷி, சக்வரீ சந்தஸ், யமன் தேவதை அல்லது அர்யமா அல்லது இந்திரன் தேவதை, சாந்தா சக்தி, ஸ்பர்சம் தத்வம், ரக்த வர்ணம் அல்லது இந்து வர்ணம், உதாத்த ஸ்வரம், ஹம் பீஜம், புருஷ ஹத்தி பாப நாசம் பலம் அல்லது இதில் விநியோகம், நாபியில் நியாஸம், ஷண்முக முத்திரையைக் காட்டவேண்டும்.

10 கோ யாக்ஞவல்க்யர் ரிஷி, அதிசக்வரீ அல்லது பிஷ்டார பங்க்தி சந்தஸ், ப்ரஜாபதி தேவதை அல்லது ஆதித்யன் தேவதை, துர்க்காசக்தி, சப்தம் தத்வம், ரக்தவர்ணம் அல்லது ப்ரவால

வர்ணம், ஸ்வரிதஸ்வரம், க (GH 4)ம் பீஜம் பிரம்மஹத்யா பாப நாசம் பலம் அல்லது இதில் விநியோகம், வயிற்றில் நியாஸம், அதோமுக முத்திரையைக் காட்டவேண்டும்.

11 தே பரத்வாஜர் ரிஷி அல்லது உசனஸ் ரிஷி, விராட் சந்தஸ் அல்லது யுஷ்டிச் சந்தஸ், வருணன் தேவதை அல்லது பூஷா தேவதை, ஸரஸ்வதீ சக்தி, வாக் தத்வம், மரகத வர்ணம் அல்லது பத்மபத்ர வர்ணம். அனுதாத்தஸ்வரம் நம் பீஜம், குருஹத்தி பாப நாசம் பலம் இதில் விநியோகம், ஸ்தன ப்ரதேசத்தில் நியாஸம், அஞ்சலி முத்திரை.

12 வ ஜமதக்னி ரிஷி, விஷ்டாரபங்க்தி சந்தஸ், பூஷா அல்லது பிருதிவீ தேவதை, வித்ருமா சக்தி. பாணி தத்வம், ஜாதி புஷ்ப வர்ணம்,அல்லது புஷ்பராக வர்ணம், உதாத்தஸ்வரம், வம் பீஜம், கோஹத்தி பாப விநாசம், அல்லது இதில் விநியோகம், ஹிருதயத்தில் நியாஸம், சகட முத்திரையைக் காட்டவேண்டும்.

13. ஸ்ய கௌதமர் ரிஷி, பங்க்த்தி சந்தஸ். திர்ருதீ தேவதை அல்லது இந்திராக்னீ தேவதை, விசாலா சக்தி. பாத தத்வம் ஸ்வர்ண வர்ணம், அல்லது இந்திர நீல வர்ணம், ஸ்வரிதஸ்வரம், ச (2)ம் பீஜம், மித்திர வஞ்சனை பாபத்தின் விநாசம் பலம் இதில் வினியோகம், கண்டத்தில் நியாஸம் யமபாச முத்திரையைக் காட்டவேண்டும்.

14 தீ முத்கலர் ரிஷி, காத்யாயனீ சந்தஸ், ஈசானர் அல்லது வாயு தேவதை, ஈசானீ சக்தி, வாயு தத்வம், குந்த வர்ணம், அல்லது மௌக்திக வர்ணம், ப்ரசயஸ்வரம், ஜம் பீஜம் மானஸ பாபநாசம் பலம் அல்லது இதில் விநியோகம், வதனத்தில் நியாஸம், க்ரதித முத்திரை

15 ம வேதவியாஸர் ரிஷி, ஜோதிஷ்மதீ சந்தஸ், வாமதேவர் தேவதை அல்லது குபேரன் தேவதை, வ்யாபினீ சக்தி உபஸ்தம் தத்வம். பத்மராக வர்ணம் அல்லது குங்கும வர்ணம் ப்ரசயஸ்வரம், ஐ (2)ம் பீஜம், நூறு ஜன்மங்களிலேயும் செய்தபாபங்களின் விநாசம், பலம் அதில் விநியோகம், உன் வாயில் நியாஸம் ஸம்முக முத்திரை

16 ஹி லோமசர் ரிஷி, அனுஷ்டுப் சந்தஸ், மித்ரா வருணர்கள் தேவதை அல்லது கணபதி தேவதை, விமலா சக்தி.



சம்ராத்ரம் தத்வம், சங்க வர்ணம், அல்லது அஞ்சன வர்ணம் ப்ரசயஸ்வரம், ஞம் பீஜம், ஸ்தாவரஜங்கம. பதார்த்தங்களை நாசத்தின் பாப நிவிருத்தி, பலம் இதில் விநியோகம், நாஸிகைகளில் நியாஸம், உன்முக முத்திரை அல்லது ப்ரலம்ப முத்திரையைக்காட்ட வேண்டும்

17 தி அகஸ்தியர் ரிஷி, ஜகதி சந்தஸ், ப்ராத்ருவ்யர் தேவதை, அல்லது ருத்திரன் தேவதை, தமோக்னீ சக்தி, த்வக்தத்வம், பாண்டுர வர்ணம் அல்லது காங்கேய வர்ணம், உதாத்தஸ்வரம், ஷம் பீஜம், ஸமஸ்த பாப விநாசம் பலம், இதில் விநியோகம், கண்களில் நியாஸம், முஷ்டி முத்திரை.

18 யோ கௌசிகர் ரிஷி அல்லது புஷ்கலர் ரிஷி, சர்வச்சந்தஸ், விச்வே தேவதைகள், தேவதை அல்லது வருணன் தேவதை, ஸூக்ஷ்மா சக்தி, சக்ஷுஸ்தத்வம், இந்திர கோப வர்ணம் அல்லது வைடூர்ய வர்ணம், அனுதாத்தஸ்வரம், ஸம்பீஜம், ஸர்வப்ராணிகளின் ஸம்ஹார பாபத்தின் நாசம் பலம் இதில் வினியோகம் புருவங்களின் நடுவில் நியாஸம், மத்ஸ்ய முத்திரை காட்டப்படவேண்டும்.

19 யோ வத்ஸர் ரிஷி, மஹாச்சந்தஸ், விஷ்ணு தேவதை அல்லது மித்ரன் தேவதை, விச்வயோனி சக்தி, ஜிஹ்வாதத்வம், க்ஷௌத்ர வர்ணம், உதாத்தஸ்வரம், ப (BH-4)ம் பீஜம் அகநாசம் பலம் அதில் விநியோகம், நெற்றியில் நியாஸம், கூர்ம முத்திரை.

20 ந: புலஸ்த்யர் ரிஷி, பூ: சந்தஸ், ஸாக்கள் தேவதை அல்லது இந்திரன் தேவதை, ஜயா சக்தி, க்ராணம் தத்வம், ஆதித்ய வர்ணம் அல்லது ஹரித்ரா வர்ணம், ஸ்வரிதஸ்வரம், லம் பீஜம், ச்ரேய: ப்ராப்தி பலம் இதில் விநியோகம், பூர்வ முகத்தில் நியாஸம், வராஹ முத்திரை.

21 ப்ர மங்கணர் ரிஷி, புவ: சந்தஸ், ருத்திரன் தேவதை அல்லது அஹிர்புத்னர் தேவதை, பத்மாலயா சக்தி, புத்தி தத்வம், நீலோத்பல வர்ணம் அல்லது கிருஷ்ண வர்ணம், ப்ரசயஸ்வரம் ட (DDH-4) ம் பீஜம், ஐசுவரிய பலம், இதில் விநியோகம், தக்ஷிண முகத்தில் நியாஸம் செய்யப்படவேண்டும் ஸிம்ஹாக்ராந்த முத்திரை காட்டப்படவேண்டும்

22 சோ தூர்வாஸர் ரிஷி, ஸ்வ: சந்தஸ், குபேரன் தேவதை அல்லது வஸுக்கள் தேவதை, பரா சக்தி, அஹங்கார தத்வம், கோரோசனை வர்ணம் அல்லது கோக்ஷீர வர்ணம், அனுதாத்தஸ்வரம், வம் பீஜம் விஷ்ணு பதப்ராப்தி பலம் உத்தர முகத்தில் ந்யாஸம் மகாக்ராந்த முத்திரை.

23 த நாரதர் ரிஷி பூர்புவ: ஸ்வ: சந்தஸ் அச்வினி தேவர்கள் அல்லது ஆரிய காந்த வர்ணம் உதாத்தஸ்வரம் ஜம் பீஜம் ஸத்ய லோக பிராப்தி பலம் இதில் வினியோகம் சிரஸில் ந்யாஸம் முத்கா முத்திரையை காட்டவேண்டும்.

24 யாத் காச்யபர் ரிஸ் காயத்ரீ சந்தஸ் ப்ரம்மா தேவதை அல்லது ஸோமன் தேவதை பத்ரா சக்தி பரமாத்மா தத்வம் ஸ்படிக வர்ணம் அல்லது சுகபிஞ்ச வர்ணம் ஸ்வரிதஸ்வரம் ஸம் பீஜம் ப்ரம்மக்ஞான ப்ராப்தி பலம் இதில் வினியோகம் உச்சித்தலையில் ந்யாஸம் செய்யப்படவேண்டும் பல்லவ முத்திரை காட்டவேண்டும்.

ஓம் தத்ஸவிதுர் வரேணியம் என்னும் காயத்ரியின் முதல் பாதத்திற்கு விச்வாமித்திரர் ரிஷி காயத்ரி சந்தஸ் ப்ரம்மா தேவதை பர்கோதேவஸ்ய தீமஹி என்னும் இரண்டாவது பாதத்திற்கு கௌதம ரிஷி காயத்ரி சந்தஸ் விஷ்ணு தேவதை தியோயோன: ப்ரசோதயாத் என்னும் மூன்றும் பாதத்திற்கு வசிஷ்டர் ரிஷி காயத்ரி சந்தஸ் ருத்திரன் தேவதை;

பூர்புவ: ஸ்வ: மஹ: ஜன: தப: ஸத்யம் என்னும் ஏழு வ்யாஹ்ருதிகளுக்கு ஜமதக்னி பரத்வாஜர் பிருகு கௌதமர் காசியபர் விச்வாமித்திரர் வசிஷ்டர் இவர்கள் ரிஷிகள் ஆவார்கள் முறையே அக்னி வாயு சூர்யன் பிருஹஸ்பதி வருணன் இந்திரன் விச்வே தேவர்கள் தேவதைகள் காயத்ரி சந்தஸ்:

(தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

## ஸ்ரீ மத்வ விஜயம்.

ஏழாவது ஸர்க்கம்.

(முன் 202-ம் பக்கம் தொடர்ச்சி)

**41.** கமலம் போல் விசாலமான கண்களுள்ள இந்த வேதவியாஸரின் உலகத்தை எல்லாம் ஆனந்தப்படுத்தும் புன் சிரிப்ப



டன் கூடிய என்னைப்பார்க்கும் இந்தப்பார்வை, ஆதரித்துக் கொண்டு என்னிடம் வந்து என்னைத் தழுவி என் யோசனைகள் எல்லாம் நிறைவேறியதாகச் செய்கிறது. **42.** இந்த வேதவியாஸரின் காதில் பிரகாசிக்கும் துளசி, பகவானால் மிக்க அன்புடன் காதில் தரிக்கப்பட்டிருப்பதை பார்த்தால் என் பர்த்தாவான நாராயணா! என் ஸ்தானமாயுள்ள இந்த தங்கள் காது ஸ்தானத்தை தாமரை மல்லிகை முதலிய இதர புஷ்பங்கள் அபகாரம் செய்து விடலாகாது, அவைகளைத் தாங்கள் காதில் தரிக்கலாகாது என்று வேதவியாஸரிடம் காதில் ரகசியம் பேசுகிறதோவென்று தோன்றுகிறது. **43.** ஜகந்நாதனான இந்த வேதவியாஸருடைய புருவங்களின் சிறிது அசைப்பால் பிரம்ம ருத்திராதிகளை ஸ்வாமியாகக் கொண்ட ஜகத்திற்கு சம்பத்து, ஸம்ஹாரம் சிருஷ்டி முதலியவை சிரமமின்றி ஏற்படுகிறது. **44.** மூவுலகுக்கும் அலங்காரமாயுள்ள இந்த வேதவியாஸரின் நெற்றியின் மத்தியில் சிவந்த ஸ்ரீகந்தாதிகளால் போட்டுக்கொள்ளப்பட்டிருக்கும் ஊர்த்வ புண்டம், அக்ஷதைப் பொட்டு முதலான திலகம் அலாதியான சோபையை அடைந்திருக்கிறது. இந்திர நீல மாணிக்கமயமான பர்வத சிரேஷ்டத்தின் சிகரத்தில் பிரகாசிக்கும் சிவந்த பத்மராக மாணிக்கங்களின் வரிசைக்கு ஸமானமாய் இந்த திலகம் விளங்குகிறது. **45.** உத்தம மின்னல் கொடிகளைக் கொண்ட, ஜாதமான நீருண்ட மேகத்தை அனுகரணம் செய்வதாயுள்ள இந்த வேதவியாஸரின் நீலகாந்தியுள்ள சரீரம் மிகவும் பிரகாசிக்கும் ஜடாமண்டலமே ஆபரணமாகக் கொண்டதைப் பார்த்து நான் என் காரியம் நிறைவேற்றிக் கொண்டவளாய் எண்ணுகிறேன். **46.** இந்த வேதவியாஸரின் கால் விரல்களில் பிரகாசிக்கும் நகங்களின் கிரணங்களால் விளங்கும் அநந்தமான ஸத்குணங்களை மகாலட்சுமி இண்டவிடாது கணக்கிட்டு எண்ணினாலும் ஸம்பூர்ணமாய் எண்ணிமாள மாட்டாள். அப்படியிருக்க வேறொரு புருஷன் இவருடைய மேலான குணங்களை பூராவாய் எப்படிச் சொல்லமுடியும். **47.** இது வீடு என்று ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், அகங்காரம், மஹத் தத்வம், ரஜஸ் தமஸ் ஆகிய ஒன்பது ஆபரணங்களோடு கூடிய பிரம்மாண்டத்தை ஆச்சரியமில்லாமல் பார்க்கும் எனக்கு சத்குருவான

வேதவியாஸரின் சரீரத்தைப் பார்த்து ஆச்சரியமேற்படுவது ஆச்சரியமன்று. ஏனெனில் பகவானுடைய சரீரம் ஒவ்வொரு க்ஷணமும் புதிதுபுதிதாய் காணப்படுமல்லவா? 48. இப்படியெல்லாம் தியானம் செய்துகொண்டு பதரிகாசிரமத்தின் வெளிப்புறத்தைத் தாண்டி ஆசிரமத்திநுள்ளே வரும் மத்வாசாரியார் மனதாலும் கண்களாலும் முன்னுடியே வேதவியாஸரை அடைந்தவராயிருந்தாலும் சரீரத்தாலும் அவர் சமீபம் வந்து சேர்ந்தார். 49. வேதவியாஸர்தான் குருவென்று மகத்தான பக்தி பாரத்தால் வணங்கிய சரீரமுள்ளவராய் ஓர் க்ஷண காலம் கண்களை மூடியவராய் பக்தி பூர்வமாய் அஞ்சலி பந்தம் செய்து கொண்டு மத்வாசாரியார் வேதவியாஸரை விசேஷமாய் ஸ்தோத்திரம் செய்தார். 50. வினயமாகிய நகையால் அலங்கரிக்கப்பட்டவராயும் மகாபாக்யசாலியாயும் ஐசுவரியாதி ஷட்குணங்களுள்ளவருமான மத்வாசாரியார் மார்பு, தலை, கண், மனம், வாக்யம், கால், கை முழங்கால் இந்த எட்டு அங்கங்களின் உத்தம சேஷ்டைகளிருக்கும்படி நமஸ்காரங்களை வேதவியாஸரின் பாத கமலங்களில் எல்லா மஹரிஷிகளும் பார்த்திருக்கையில் ஸமர்ப்பித்தார். 51. வேதவியாஸர் தனக்கு நமஸ்காரம் செய்திருப்பவரும், க்ஞான பக்தி வைராக்யாதி ஸமஸ்த ஸத் குணங்களிருப்பதின் நிமித்தம் தனக்கு மிகப்பிரியராயிருப்பவருமான அந்த மத்வாசாரியாரைப் பார்த்து அக்ஷணமே கீழே தணிந்துபோன மிருதுவான தன் இரு கைகளால் அவரை எழுப்பினர். 52. அன்பாகிய அமிருதம் நிறைந்தமனமுள்ளவராய் சிரித்த வதனமுள்ளவராய் மலர்ந்த கண்களுள்ளவராய் வேதநாயகனை வேதவியாஸர் மத்வாசாரியாரை சீக்கிரமே எழுப்பி அணைத்துக்கொண்டார். 53. யம பகவானின் தங்கையான யமுனையின் ஜலப்பிரவாகம் தங்கமயமான நதியுடன் சேரும் பக்ஷத்தில் அது, தங்கம்போல் திருமேனியுள்ள மத்வாசாரியாருடன் சேர்ந்த நீருண்ட மேகம் போல் நீல காந்தியுள்ள வேதவியாஸருக்கு ஒப்பிடப்படலாம். 54. பிராம்மணோத்தமான மத்யகேஹபட்டருடையவும் பாராசருடையவும் வம்சத்தில் பிறந்தவர்களான வாயுவும் ஹரியுமான இந்த மத்வரும் வேதவியாஸரும் ராஜ பூஷணங்களான கிரீட குண்டலாதிகளை தரித்திருக்கும் பக்ஷத்தில் ராஜவம்சமான குரு வம்சத்திலும் யது வம்சத்திலும் பிறந்திருந்த இவர்களின் ஸ்வரூபங்களான பீமசேனரும் கிருஷ்ணமூர்த்தியும் ஒருவருக்கொருவர் ஆலிங்கனம் செய்ததற்கு ஸமானமாய் இருக்கும். 55. பாக்யசாலியான இந்த புருஷர் எவ்வகை ஆதரணையைப் பெற்றிருக்கிறரோ அப்பேர்ப்பட்டதை ஜகந்நாதனாயுள்ள தந்தையான வேதவியாஸரிடமிருந்து அவருடைய பிள்ளையான சுகாசாரியாரும் ஸம்பூர்ணமாய் அடைந்ததில்லையே என்று மஹரிஷிகள் மிக்க ஆச்சரியமடைந்தனர். 56. குருவான ஸ்ரீ வேதவியாஸரின் அபிப்பிராயமறிந்த சதுரர்களான அவருடைய சிஷ்யர்களான மகரிஷிகள், விஷ்ணு பக்தர்கள் சதுர்முகனுக்கு ஆஸனமளிப்பதுபோல் மத்வாசாரியாருக்கு வினயத்துடன் அவரிடம் காட்டிய விசுவாசத்திற்கேற்றபடிக்குள்ள உத்தமமான ஆஸனத்தை தந்தனர். 57. குசலப்ரச்னம் செய்யும் அழகிய வார்த்தையோடு கூடிய ஸத்யவதி குமாரரான வேதவியாஸர் மத்வாசாரியாரே! உட்காரும் என்று சொல்லி தன் ஆஸனத்தில் உட்காரவும் மத்வாசாரியார் தன் புன் சிரிப்புடன் உள்ள பார்வையால் அங்குள்ள முனிச் சிரேஷ்டர்களை மரியாதை செய்து ஆஸனத்தில் அமர்ந்தார். 58. மஹரிஷிக் கூட்டங்கள் ஸர்வோத்தமான ஸ்ரீ வேதவியாஸரிடமிருந்து அங்கு வந்த மத்வாசாரியார் வாயு பகவானின் அவதாரமென்பதை அறிந்து பூஜா விதானங்களை அறிந்தவர்களாய் விதியில் சொல்லப்பட்டிருக்கிறபடி மத்வாசாரியாருக்கு அர்க்ய பாத்யாதி பூஜைகளைச் செய்தனர். ஞானிச் சிரேஷ்டர்களான மத்வாசாரியார் வேதவியாஸர் இவர்களுடைய காதுக்கினிமையான இஷ்ட ஸம்பாஷணைகளைக் கேட்டு சந்தோஷமடைந்தனர். 59. ஞானானந்த ஸ்வரூபிகளாகிய ஸாதுக்களுக்கு தத்துவ ஞானத்தை அளிப்பதற்காக பூமியில் அவதாரம் செய்திருக்கும் வேதவியாஸர் ஆனந்த தீர்த்தாசாரியார் என்று பெயருள்ள விஷ்ணுவும் வாயு பகவானும் அந்த பதரிகாசிரமத்தில் அச்சமயம் விசேஷமாய் ஒருங்கேவிளங்கினர்கள்.

ஸ்ரீ கவிகுலதிலகரான ஸ்ரீ த்ரிவிக்ரம பண்டிதாசாரியாரின் குமாரர் ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றியதாயும் மகா காவ்யமாயும் ஒவ்வொரு ஸர்க்கத்தின் கடைசி சுலோகத்திலும்

ஆனந்தம் என்னும் பதத்தைக் கொண்டதாயுமுள்ள மத்வ விஜயத்தில் மத்வாசாரியார் பதரிகாசிரமத்திற்கு வந்த சரிதையை நிருபிப்பதாயுள்ள ஏழாவது ஸர்க்கம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# ஸ்திரீ தர்மம்.

(முன் 211-ம் பக்கம் தொடர்ச்சி)

த்ரேதாயுகம் முதல் ஸ்திரீ ஜனங்கள் ரஜஸ்வலையாகிறது ஏற்பட்டிருக்கிறது. அச்சமயம் மூன்று நாட்கள் வீட்டைவிட்டு விலகியிருக்கவேண்டும். முதல் நாள் சண்டாள ஸ்திரீயைப் போலும் இரண்டாம் நாள் பிரம்மஹத்தியை செய்தவள் போலும் மூன்றாம் நாள் வண்ணாத்தியைப் போலும் இருந்து நான்காம் நாள் பரிசுத்தமாகிறாள். அச்சமயம உடம்பு குளித்தல் மிருத்திகா சௌசம் பாட்டுசிரிப்பு அழுதல் அலங்காரம் செய்துகொள்ளுதல் மை தீட்டிக் கொள்ளுதல் வண்டி முதலான வாஹனமேறிச் செல்லுதல் ஸ்திரீ ஜனங்களுடன் சொக்கட்டாணுடுதல் சந்தனம் பூசிக்கொள்ளுதல் பகலில் தூங்குதல் பல்லை தேய்த்துக் கொள்ளுதல் மனதால் கூட புணர்ச்சியைக் எண்ணுதல் வாயாலும் கூட தேவா காமங்களைச் சொல்லுதல் தேவர்களைப்பார்த்து வணங்குதல் இவைகளை விலக்கவேண்டும். ரஜஸ்வலையாயிருக்கும் மூன்று நாள் முழுமையும் தன் முகத்தை வெளியே காட்டலாகாது. தன் குரல்கூட இதரர்கள் காதில் விழச்செய்யலாகாது. அன்ய புருஷர்களை கண்ணெடுத்தும் பார்க்கலாகாது. ஸ்நானமானவுடன் தனக்கு சுத்தி ஏற்பட பஞ்சகவ்யத்தையோ பசும் பாலையோ சாப்பிட்டு சூரியனை தரிசிக்கவேண்டும். கர்ப்பிணிஸ்திரீ எப்பொழுதும் தன் தேகத்தை அலங்காரம் செய்துகொண்டவளாயும் இந்திரிய நிக்ரஹமுள்ளவளாயும் பர்த்தாவுக்குப் பிரியமானவளாயுமிருக்கவேண்டும். சிரித்த முகமுள்ளவளாயும் எப்பொழுதும் சுத்தமாயும், சரீரத்தில் நகை தரித்தவளாயும் வீட்டு வாசற்படியை சுத்தமாய் வைத்துக் கொள்பவளாயு மிருக்கவேண்டும். வியபசாரிகளுடன் பேசலாகாது, முறத்தை புடைக்கும்பொழுது முறத்தின் காற்று



சரீரத்தில் படலாகாது; கன்று இறந்த பசுவைத் தொடலாகாது, இதரர்களின் வீட்டு போஜனத்தை அபேக்ஷிக்கலாகாது, பயங்கரமான ரூபத்தை பார்க்கலாகாது, திகிலடையக்கூடிய கதைகளைக் கேட்கலாகாது, சூடான ஆகாரம் காரமான ஆகாரம் பளுவான ஆகாரம் இத்யாதிகளை புசித்து அஜீர்ணம் செய்து கொள்ளலாகாது, இந்த நியமங்களுடனிருந்தால் ஸத் புத்திரன் பிறப்பான். பொதுவாய் பதிவ்ரதா ஸ்திரீகள் ஊரைச் சுற்ற தனியாய் போகலாகாது. இஷ்டப்படி பர புருஷர்களுடன் பேசலாகாது, ஜாடைகளுடன் பர்த்தாவின் முகத்தை மட்டில் பார்க்கவேண்டும், கணவன் எதாவது சமாசாரத்தைச் சொன்னால் அன்புடன் கவனம் வைத்து அதைக் கேட்கவேண்டும், கணவன் தன்னுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அதைவிட்டு இதரர்களுடன் பேசலாகாது, கணவன் வார்த்தையை இதரரிடம் சொல்லி பரிகாசம் செய்யலாகாது, கணவன் கூப்பிட்டவுடன் அவஸரமாய்ப் போகவேண்டும், அவன் பாடினால் அதை அன்புடன் கேட்கவேண்டும். அதைப்பார்த்து ஆனந்தப்படவேண்டும், கணவனுடைய சமீபத்தில் மனது சஞ்சலப்பட்டுக்கொண்டு துக்கத்துடன் நின்றிருக்கலாகாது. சமீபத்தில் நின்று சண்டை போடலாகாது. ஸ்திரீகளுக்கு இயற்கையாகவே சண்டை போட ஆசை உண்டு. கணவன் திட்டினாலும் அதட்டினாலும் அடித்தாலும் ஹிம்ஸித்தாலும் பதிவ்ரதைகள் சிறிதும் கோபமடையாமல் பர்த்தாவை ஆலிங்கனம் செய்து கொள்வார்கள். ஒப்பாரி வைக்கலாகாது, கணவனைப் பார்த்து உரக்கக் கத்தக்கூடாது, வீட்டைவிட்டு ஸ்திரீ ஜனங்கள் வெளியே ஓடலாகாது, கலியாணம் முதலான சடங்குகளுக்கு பந்துக்களின் வீட்டுக்குச் சென்றால் பர்த்தாவின் அனுமதியின்பேரில்தான் சரியான சகாயத்துடன் செல்லவேண்டும், அங்கு வெகு நாள் தங்காமல் சீக்கிரமே வீட்டிற்கு திரும்பிவிடவேண்டும், பதி வீட்டைவிட்டு வெளியே புறப்படும்பொழுது நல்ல வார்த்தையைப் பேசவேண்டும், போகலாகாதென்று தடுக்கலாகாது, அழுதல் கூடாது. கணவன் ஊரிலில்லாதிருக்கையில் உடம்பை தேய்த்து குளிக்கக்கூடாது தன் வயிற்றுக்கு வேண்டிய காரியங்களை மட்டில் செய்யவேண்டும். தினம் பதியின் சமாசாரத்தை அறிந்து கொள்ளவேண்டும். பதி சீக்கிரம் திரும்பிவர பகவானை ப்ரார்த்திக்கவேண்டும். உரக்கச் சிரித்து பேசுவது, அன்ய புருஷர்களின் இரகசியச் செயல்களையும் பிரசித்த காரியங்களைப்பற்றியும் பேசுவது, இஷ்டப்படி வெளியே போவது பர புருஷர்களின் உடம்பை பிடிப்பது, ஒத்தை வஸ்திரத்துடன் நடமாடுவது, வெட்கமில்லாமல் நிமிர்ந்து நடப்பது முதலான தோஷங்கள்

ஸ்திரீ ஜனங்களுக்கு எப்பொழுதுமே துக்கத்தை தருபவைகள். வீட்டு காரியங்களை சுயம் தான் பார்க்கவேண்டும். ஸ்நான காலத்தில் மஞ்சள் பூசிக் கொள்ளவேண்டும், சுத்தமான ஜலத்தில் உடம்பை குளித்து அலங்காரம் செய்து கொள்ளவேண்டும், சிரித்த முகத்துடன்தான் கணவனின் சமீபத்தில் செல்லவேண்டும், கணவன் கூப்பிட்டால் வீட்டுக்காரியத்தை விட்டு விட்டு உடனே போய்ச் சமாசாரத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும், வீட்டு வாசலில் அதிக நேரம் இருக்கலாகாது. கணவன் கொடுத்த ஆசைப் பொருளை அன்னியர்களுக்கு கொடுத்துவிடக்கூடாது, கணவன் சாப்பிட்டு மீர்ந்த எச்சில் அன்னத்தையும் பழங்கள் முதலியவைகளையும் மகாப்ரஸாத மென்றெண்ணி சந்தோஷமாய் புசிக்கவேண்டும். கணவன் சுகமாய்ப் படுத்திருக்கும்பொழுதும் சுகமாய் உட்கார்ந்திருக்கும்பொழுதும் இஷ்டப்படி விளையாட்டில் ஈடுபட்டிருக்கும்பொழுதும் காரியம் எவ்வளவு அவசரமாயிருந்த போதிலும் அவரை அவருடைய பத்னி எழுப்பக்கூடாது. ஸ்திரீ தனியாய் செல்லலாகாது, நிர்வாணமாய் ஸ்நாநம் செய்யலாகாது, பதியை த்வேஷிக்கும் ஸ்திரீயுடன் எப்பொழுதுமே சகவாஸம் செய்யலாகாது, உரல் உலக்கை இயந்திரம் அம்மி இவைகளுடன் வீட்டு வாசற்படி பக்கத்திலோ அல்லது கொல்லை வாசற்படி பக்கத்திலோ வெளிப்புறத்திண்ணையிலோ உட்காரலாகாது. தீர்த்த ஸ்நானம் செய்ய விருப்பமுள்ள ஸ்திரீ பதி காலலம்பிய ஜலத்தை ஸ்நானம் செய்தால் போதுமானது. ஸ்திரீக்கு அவளுடைய பதி விஷ்ணு, பரமசிவன் இவர்களைவிட உத்தமமானவன், விரதம் உபவாஸம் நியமம் இவைகளை தன் கணவனை மீறி செய்யலாகாது, அப்படிச் செய்யும் பக்ஷத்தில் அதனால் பர்த்தாவின் வயது குறையும், அவளுக்கு சீக்கிரமே வைதவ்யம் வந்து சேரும் இறந்தபின் நரகம் வந்துசேரும். கணவன் சொல்லுக்கு கோபமாய்பதில் சொல்லும் பக்ஷத்தில் அவள் அடுத்த ஜன்மத்தில் நாயாகவோ நரியாகவோ பிறப்பாள். கணவனின் காலை பூஜித்து போஜனம் செய்வதுதான் ஸ்திரீகளுக்கு அதி அவசியமான விரதமாகும். கணவனுக்கு தெரியாமலும் அவனுக்கு கொடுக்காமலும் இஷ்டப்படி தின்பண்டங்களை புஜிப்பவள் அடுத்த ஜன்மத்தில் ஆந்தையாகப் பிறப்பாள், கணவனுக்கு தெரியாமல் ஊரில் ஒளிந்து சஞ்சரிப்பவள் அடுத்த ஜன்மத்தில் பன்றியாகவோ நாய் மாமிசம் தின்னும் சண்டாள ஸ்திரீயாகவோ பிறப்பாள். கணவனைப் பார்த்து ஹூங்காரம் செய்து அபிரியம் பேசுபவள் ஊமைக் கோட்டானாகப் பிறப்பாள், தன் சக்களத்தியைப் பார்த்து பொச்சரிப்பு அடைபவள் தௌர்ப்பாக்கியசாலியாய் பிறப்பாள். கணவனை க்ரூரமாய்ப் பார்



த்துவிட்டு இதராளிடம் சௌம்ய திருஷ்டியுடனிருப்பவள் குரூபியாயும் குருடு செவிடு முதலான தோஷங்கள் உள்ளவளாயுமிருப்பாள். வெளியே இருந்து சிரமத்துடன் வந்த பர்த்தாவைப் பார்த்து அவசரமாய் காலலம்ப ஜலம் உட்கார ஆஸனம் போட்டுக்கொள்ள தாம்பூலம் விசிறி முதலியவைகளைக் கொடுத்து கைகால்களைப் பிடித்து சிரமத்தைப் போக்கி மிக்க இனிமையாய்ப் பேசும் ஸ்திரீயே பதிவ்ரதா சிரோமணியாவாள். ஜீவனில்லாதிருந்தால் சரீரம் எப்படி அசுத்தமோ அதுபோல் கணவன் இல்லாதிருந்தால் அந்த ஸ்திரீ அடிக்கடி முழுகிக் கொண்டிருந்தாலும் அசுத்தமுள்ளவளே யாவாள், மிகவும் அமங்களமாவாள், அமங்கலீ என்றே பகிரங்கமாய் அழைக்கப்படுவாள், அமங்களமான உலகிலுள்ள எல்லா காரியங்களையும்விட எவ்வளவோ மடங்கு அதிகமான அமங்களமுள்ளவளாவாள், இந்த அமங்கலீ கண்ணுக்கு தென்பட்டால்கூட எந்தக் காரியமும் ஒருக்காலும் சித்திக்காது, அமங்கலீயாய்ப் போன தன் சொந்த தாயாரைத் தவிர வேறு எந்த அமங்கலி ஸ்திரீயிடமிருந்தும் புத்திசாலியாயிருப்பவன் ஆசீர்வாதம் பெறலாகாது, அந்த ஆசீர்வாதம் விஷமுள்ள பாம்பைப் போலவே சங்கடத்திற்குத்தான் காரணமாகும். கலியாண காலத்தில் பர்த்தாவுயிருடன் இருக்கும்பொழுதும் இறந்தபின்பும் அவனுக்கு அநுசரணையாகவே இருக்கும்படி பிராஹ்மணர்களால் ஆசிர்வதிக்கப்படுவதால் பர்த்தாவின் சரீரத்தின் நிழலைப்போல் பத்னி எப்பொழுமே அவனைத் தொடர்ந்திருக்கவேண்டும், இப்பேர்ப்பட்ட பதிவ்ரதையைப் பார்த்து யம தூதர்களே அஞ்சி ஓடுவார்கள். கணவன் எப்பேர்ப்பட்ட பாபியாயிருந்தாலும் பதிதனாயிருந்தாலும் அவனையும் யம தூதர்கள் அணுகமாட்டார்கள். ஸ்திரீகள் இவ்வாறு பதிவ்ரதைகளாக இருந்துவிட்டால் அவர்களுடைய சரீரத்தில் எவ்வளவு மயிர்க்கண்கள் உண்டோ அவ்வளவு கோடி வருஷங்கள் பர்த்தாவுடன் உத்தமலோகத்திலிருப்பார்கள். ஸ்திரீகளின் தலை முடிச்சு பர்த்தாவை கட்டுப்படுத்த ஏற்பட்டதால் பர்த்தா இறந்தபின் தலையை மொட்டையடித்துக் கொள்ள வேண்டியதவசியம். பர்த்தா இறந்தபின் ஒருவேளைதான் ஆகாரமே ஒழிய இரண்டா வேளை ஆகாரங்கூடாது. விதவை கட்டிலின்மீது படுத்தால் அவளுடைய பர்த்தா எந்த உத்தம லோகத்திலிருந்தாலும் நரகத்தில் தள்ளி விடப்படுகிறான். ஆகையால் பர்த்தா சுகமாயிருக்க எண்ணுபவள் தரையின்மீதுதான் படுக்கவேண்டும். விதவைகள் உடலை தேய்த்து குளித்தல் தாம்பூலம் போட்டுக் கொள்ளுதல் சந்தனம் பூசிக்

கொள்ளுதல் கூடாது. வெளுப்பு வஸ்திரத்தை எப்பொழுதும் உபயோகிக்கவேண்டும். ஆகவே ஸ்திரீ ஜனங்களுக்கு பர்த்தாவுக்கு ஸமான தெய்வம் இல்லை, தீர்த்த க்ஷேத்திரம் குரு வ்ரதம் நியமம் எதுவுமே இல்லை. ஆகவே பர்த்தா சந்தோஷமடைந்தால் எல்லா சௌபாக்கியங்களும ஸ்திரீகளுக்கு உண்டாகும்.

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

# மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

## இருபத்தி நான்காவது அத்தியாயம்.

(ஸ்ரீம வே பாகவத ரங்காதாசாரியாரின் மொழி பெயர்ப்பு).

(முன் 129ம் பக்கம் தொடர்ச்சி)

இந்த இருபத்திநான்காவது அத்யாயத்தில் மகாபாரதம் உத்யோகபர்வத்தின் கதை கூறப்படுகிறது.

பிறகு துருபத ராஜன் ஆலோசித்து ஸ்ரீ கிருஷ்ணரின் அனுமதியின்பேரில் ஸமாதானத்திற்காக திருதராஷ்டிர ராஜனிடம் தன் புரோகிதரை அனுப்பினார். புரோகிதர் பீஷ்மர் துரோணர் கர்ணன் முதலானவர்களுடன் கூடியிருந்த திருதராஷ்டிரனிடம் வந்து இவ்வாறு சொன்னார். ஹே திருதராஷ்டிரராஜனே! நீர் தர்மபுத்திருடன் விரோதத்தை செய்யத்தகுந்ததல்ல. தர்ம புத்திரிடம் பீமார்ஜுனர்கள் யுத்தம் செய்பவர்கள் இருக்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணர் ப்ரேரிப்பவராய் இருக்கிறார். ஜராஸந்தன் முதலான எல்லா அரசர்களும் பீமசேனரால் கொல்லப்பட்டனர் என்று நீ கேட்டிருக்கிறாய். பரமசிவனின் வரத்தால் ஒருவராலும் கொல்லப்படாதவர்களாய் தீர்த்தஸ்நானத்திற்கு விக்னம் செய்துகொண்டு தீர்த்தங்களின் சுற்றிலும் காவலர்களாயிருந்த மகா வீரியவான்களான மூன்று கோடி ராக்ஷஸ சிரேஷ்டர்கள் சகோதரர்களுக்கும், பிராம்மணர்களுக்கும், ஜனங்களுக்கும் ஹிதத்தைச் செய்யவிரும்பி பீமசேனரால் சிரமமன்னியில் கொல்



லப்பட்டனர். அதனால்தான் பூமியிலுள்ள எல்லா தீர்த்தங்களும், மனுஷ்யர்கள் போகக்கூடியதாயிற்று என்றும் நீ கேட்டிருக்கிறாய். மேலும் பார்வதி தேவியின் வரத்தின் பலத்தால் யாராலும் கொல்லப்படாதவனும் பாபியுமான ஜடாஸுரன் பிராம்மண ரூபத்துடன் பாண்டவர்களை வஞ்சித்துக்கொண்டு கூடவே வந்தான். பீமசேனர் அவனை அஸுரனென்று அறிந்திருந்தபோதிலும், பிராம்மண ரூபமுள்ளவனை கொல்வது உசிதமல்லவென்று அவனைக் கொல்லவில்லை. பீமசேனர் பதரிகாசிரமத்தில் வேட்டையாட வனத்திற்கு சென்றிருக்கையில் நகுல சகதேவர்களையும், தர்ம புத்திரரையும், துரௌபதியையும் தூக்கிக்கொண்டு ஓடினான். அப்பொழுது அவன் பீமசேனர் கண்ணில் தென்பட்டான். அப்பொழுது அந்த ஜடாசுரன் தர்மபுத்திராதிகளை கீழே இறக்கிவிட்டு பீமசேனருடன் யுத்தத்திற்கு நின்றான். அப்பொழுது பீமசேனர் அவனை பூமியில் தள்ளி தன் காலால் அவனுடைய தலையை பொடியாக்கினார். அவன் தமஸ்ஸை அடைந்தான். அப்படியிருக்க உன் பிள்ளைகள் பீமசேனரால் கொல்லப்பட முடியுமென்று சொல்லவும் வேண்டுமோ. அர்ஜுனனால் நிவாத கவசர்கள் கொல்லப்பட்டார்கள் என்று நீ கேட்டிருக்கிறாய். பிரம்மா, ருத்திரன், இந்திரன் முதலானவர்கள் கூடிய இந்த சேதனா சேதனாத்மக உலகம் ஸ்ரீகிருஷ்ணரின் வசமுள்ளது என்று ஸ்ரீகிருஷ்ணரின் சக்தியை நீ அறிந்திருக்கிறாய். ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணர் பீமசேனர் அர்ஜுனன் இவர்களால் ஸம்ரக்ஷிக்கப் பட்டவரான தர்மபுத்திரரின் சொந்த திரவியத்தைக்கொடு. என்றிவ்வாறு துருபதராஜனின் புரோஹிதர் சொல்லியும் திருதராஷ்டிரர் அவ்வாறு செய்யவில்லை.

உத்தராதேவியின் விவாகத்திற்கு வந்த ஸ்ரீகிருஷ்ணர் யாதவர்களுடன் சேர்ந்து த்வாரகாபுரத்திற்கு போனபிறகு, துரியோதனனும், அர்ஜுனனும் தமக்கு யுத்த ஸஹாயம் ஸ்ரீ கிருஷ்ணர் செய்ய விரும்பி அவரைக் கேட்டுக்கொள்ள ஒரே ஸமயம் தம்தம் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டனர். அவ்வாறு புறப்பட்டு போகும்பொழுது துரியோதனன் அர்ஜுனனை வேகத்தில் ஜயித்தான். தான் ராஜாதிராஜனாதலால் கிருஷ்ணரின் காலடியிலுட்

காமாட்டேன் என்று அகங்கார மடைந்து துரியோதனன் அச்சமயம் படுத்திருந்த ஸ்ரீகிருஷ்ணரின் தலைமாட்டில் வந்து உட்கார்ந்தான். பிரபுவான ஸ்ரீகிருஷ்ணர் துரியோதனனும், அர்ஜுனனும் தன்னிடம் வருவதை முன்னாடியே அறிந்து கொண்டு நித்திரை இல்லாதவராயினும், நித்திரையுள்ளவன்போல் படுத்தார். துரியோதனன் வந்தபின் அர்ஜுனன் வந்து ஸ்ரீ கிருஷ்ணரின் பாதத்தில் நமஸ்கரித்து மிகுந்த பக்தியால் கை கூப்பிக்கொண்டு தலை வணங்கியவனாய் காலடியில் வந்து உட்கார்ந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் துரியோதனன் முன்னாடியே வந்திருப்பதை அறிந்திருந்தும் அர்ஜுனனை முதலில் கண்டார். ஹே அர்ஜுனா! நீ வந்தது உத்தமம் என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னவுடன், துரியோதனன் நான்தான் முதலில் வந்தவன் என்று சொல்லிக்கொண்டான். துரியோதனனையும் ஸ்ரீ கிருஷ்ணர் நீ வந்ததும் உத்தமம் என்று சொல்லி மரியாதை செய்தார். துஷ்ட ஜனங்களைக் கொல்பவரான ஸ்ரீ கிருஷ்ணர் துர்யோதனனும் அர்ஜுனனும் வந்ததின் காரணத்தைக்கேட்டு பிறகு இவ்வாறு சொன்னார். உங்களிருவரில் முதலில் வந்தவன் துரியோதனன், முதலில் காணப்பட்டவன் அர்ஜுனன், ஆதலால் உங்கள் இருவருக்கும் ஸமானமாய் ஸகாயம் செய்கிறேன், ஓர் பக்கத்தில் ஆயுதம் தரிக்காமல் நான் ஒருவனே நிற்கிறேன், மற்றொரு பக்கத்தில் சூரர்களாயும் காலாட் படைகளாயுமுள்ள என் பத்து லட்சம் பிள்ளைகளைக் கொடுக்கிறேன் என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லவும், அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பக்தியுள்ளவனாதலால் ஸ்ரீ கிருஷ்ணரே தனக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். துரியோதனன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் த்வேஷமுள்ளவனாதலால் யுத்தம் செய்யக்கூடியவர்களான ஸ்ரீ கிருஷ்ணருடைய பிள்ளைகளான நாராயணுள் என்னும் அந்த கோபால கூட்டத்தாரை ஏற்றுக் கொண்டான். ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களுக்கு ஸஹாயம் செய்பவராய் துரியோதனனுடைய அபக்தியை அறிவிக்கவேண்டி, அவர் ஈசுவரனாயினும் அந்த கோபால கூட்டத்திற்கு ஸமானமானவர் போல காட்டிக் கொடுத்து, காரியம் செய்தார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுடன் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார்.



துரியோதனன் பலராமரிடம் வந்தான். பலராமர் துரியோதனனிடம் அன்பு கொண்டார். ஸ்ரீ கிருஷ்ணரின் பயத்தால் நான் உனக்கு சகாயம் செய்யப் போவதில்லை என்றார். உபப்லாவ்ய பட்டணத்தின் ஸபையில் பலராமர் துரியோதனனிடம் பக்ஷபாதம் கொண்டு துரியோதனனிடம் குற்றமில்லை என்று சொன்னார். அப்பொழுது ஸாத்யகி ஸ்ரீ கிருஷ்ணரின் எதிரில் பலராமரை திட்டினான், ஆகையால் பலராமர் துரியோதனனிடம் வரவில்லை. துரியோதனன் கிருதவர்மாவுடன் ஹஸ்தினாபுரம் பிரயாணமானான்.

துரியோதனனுக்கு பலவகை தேசத்திய அரசர்களுடன் சேர்ந்த பதினொன்று அக்ஷௌஹிணி சைன்னியங்கள் சேர்ந்தன. பாண்டவர்களுக்கு விராட ராஜன், துருபத ராஜன், கைகேய ராஜர்கள், திருஷ்டகேது ராஜன், ஜராஸந்தனின் பிள்ளை ஸகதேவன், காசி ராஜன் இவர்களுடன் சேர்ந்த ஏழு அக்ஷௌஹிணி சைனியங்கள் சேர்ந்தன. புருஜித் ராஜன், குந்தி போஜ ராஜன், சேகிதான ராஜன், ஸாத்யகி இவ்வாறு தேவ கக்ஷியை சேர்ந்தவர்களான ராஜாக்கள் பாண்டவர்களிடம் சேனைகளுடன் கூடி வந்தார்கள். அவந்தி தேசாதிபதிகளான விந்தாநுவிந்தர்கள், ஜயத்ஸேன ராஜன், தைத்யக்ஷிக்காரர்களான கைகேய ராஜர்கள், க்ஷேமதூர்த்தி ராஜன், தண்டதார ராஜன், கலிங்க ராஜன், அம்பஷ்ட ராஜன், சுருதாயு ராஜன், அச்யுதாயு ராஜன் ப்ருஹத்பல ராஜன் ஸுதக்ஷிண ராஜன், சுருதாயுத ராஜன், ஜயத்ரதன், அலம்புஷா என்ற ராக்ஷஸன், அலாயுதன் அலம்பலன் என்ற ராக்ஷஸர்கள், இவர்களைச் சேர்ந்த ராக்ஷஸர்கள் துரியோதனனிடம் வந்து சேர்ந்தனர். துரியோதனன் பகதத்தனிடம் சென்று தனக்கு ஸகாயம் செய்யும்படி கேட்டுக் கொண்டதால் அவன், தேவாம்சனாயினும் துரியோதனனிடம் போய்ச் சேர்ந்தான். பிள்ளை போப்பிள்ளைகளுடன் கூடிய பால்ஹீக ராஜனும், பீஷ்மர், துரோணர் கிருபாசாரியார்களும் திருதராஷ்டிர ராஜனிடம் ப்ரீதியின் பேரில் அவருடைய பிள்ளைக்கு ஸகாயமானார்கள். பாண்டிய தேசாதிபதியான வீரசேன ராஜன் பாண்டவர்களையே ஆச்ரயித்தான். சல்ய ராஜன் பாண்டவர்க

ளிடம் செல்கிறான் என்று துரியோதனன் அறிந்துகொண்டு சல்ய ராஜனின் உபசாரத்திற்காக ஸமஸ்த போகங்களுடன் கூடிய திவ்விய சபைகளை துரியோதனன் வழியில் ஏற்படுத்தினான். அந்த சபைகள் தர்மபுத்திரர் செய்தது என்று நினைத்துக்கொண்டு சல்ய ராஜன் ஓர் சபையில் இவ்வாறு பேசினான். "யார் இந்த சபைகளையெல்லாம் எனக்காக ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவருடைய இஷ்டத்தை பூர்த்தி செய்விக்கிறேன்" என்றிவ்வாறு சொல்ல அந்த ஸபைக்குள் மறைந்திருந்த துரியோதனன் அதைக்கேட்டுவிட்டு "இந்த வார்த்தையை நீ உண்மையாக்கு, எனக்கு நீ யுத்தசகாயம் செய்ய நான்தான் இந்த ஸபைகளை ஏற்பாடு செய்தவன்" என்று சொன்னான். சல்ய ராஜன் தான் ஸத்யவாதி என்ற கீர்த்தியை விரும்பியவனாய் தன் வாக்யத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக உனக்கு ஸகாயம் செய்கிறேன்" என்று துரியோதனனிடம் ஒப்புக்கொண்டான். பிறகு சல்ய ராஜன் பாண்டவர்களிடம்வந்து துரியோதனனுக்கு ஸகாயம்செய்வதில் பாண்டவர்களிடமிருந்து ஸம்மதியைப்பெற்று, அர்ஜுனனுக்கு ஜயம் கொடுக்க கர்ணனுக்கு தேஜோபங்கம் செய்யும்படி தர்மபுத்திரரால் பிரார்த்திக்கப்பட்டான். கர்ணனுக்கு ஸாரதியாய் இருந்து அவனுடைய தேஜோபங்கம் செய்வதாய் தர்மபுத்திரரிடம் சொல்லி கௌரவர்களிடம் சென்றான்.

பிறகு திருதராஷ்டிரன் ராஜ்யத்தைக் கொடாமலேயே ஸமாதானம் செய்ய ஸஞ்ஜயனை பாண்டவர்களிடம் அனுப்பித்தான். ஸஞ்ஜயன் பாண்டவர்களிடம் வந்து யுத்தம் செய்வது அதர்மம் என்று நிரூபித்தான். ஹடவாதத்தில் பீமசேனரும் துரௌபதியும் எதை தர்ம ஸாதனமென்று சொல்லியிருந்தார்களோ அதையே தர்மபுத்திரர் சொல்லி சஞ்ஜயனை பதில் சொல்லாமல் செய்தார். தர்மபுத்திரர் சொன்ன தர்மம் பிரமாணமென்று ஸ்ரீ கிருஷ்ணர் நிரூபணம் செய்தார். சஞ்ஜயன் அதற்கு பதில் சொல்ல முடியாமல் ஸ்ரீ கிருஷ்ணரையும் பாண்டவர்களையும் நமஸ்காரம் செய்து திருதராஷ்டிரனிடம் போனான். திருதராஷ்டிரனை நீ தான் மகா பாபத்திற்கு காரணம் என்று நிந்தித்து தன் வீடு போய்ச் சேர்ந்தான். சஞ்ஜயனால் நிந்திக்கப்பட்ட திருதராஷ்டிரன்



இராத்திரி காலத்தில் விதுரனை அழைத்து தர்மத்தை பிரசினம் செய்தான். அதற்கு விதுரன், பாண்டவர்களுக்கு ராஜ்யத்தை தரச் செய்வது தோஷமற்ற தர்மம். இகலோக ஸுகத்திற்கு காரணம், ராஜ்யத்தைத்தரச் செய்யாமல் போனால் உன் பிள்ளைகள் எல்லோருக்கும் நாசம் ஏற்படப் போகிறது, தர்மம் மீறியதாகிறது என்று சொன்னான். திருதராஷ்டிரன் பாண்டவர்களுக்கு ராஜ்யம் கொடுக்கும் விஷயத்தில் புத்தியை வைக்காமல் ஞானத்தால் பாப நிவிருத்தி ஆகவேண்டுமென்று விரும்பியவனாய் விஷ்ணு ஸ்வரூபத்தைச் சொல்லும்படி பிரசினம் செய்தான். அதற்கு விதுரன் தான் சூத்திர ஜாதியானதால் வேதார்த்தத்தை சொல்ல புராதனரான ஸநத்ஸுஜாதரை ஸ்மரித்தான். அந்த ஸநத்ஸுஜாதர் பாதி ராத்ரி வேளையில் திருதராஷ்டிர ராஜனின் அந்தப்புரம் வந்து விஷ்ணு ஸ்வரூபத்தையும், கபடமுள்ளவனுக்கு நற்கதி இல்லை என்பதையும் சொன்னார். மறு நாள் காலை பொழுது விடிந்ததும் உபப்லாவ்ய பட்டணத்திலிருந்து திரும்பி வந்த ஸஞ்ஜயன் பாண்டவர்கள் சொன்ன வார்த்தையை ஹஸ்தினாநகர் சபையில் கௌரவர்களின் எதிரில் திருதராஷ்டிரனிடம் சொன்னான். திருதராஷ்டிரன் ஸஞ்ஜயன் சொன்ன பாண்டவர்களின் வார்த்தையைக் கேட்டு பயந்த போதிலும் புத்ர ஸ்நேகத்திற்கு வசனாய் பாண்டவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கவில்லை. தர்மபுத்திரர் தன் தந்தையான திருதராஷ்டிரன் எங்களுக்கு ராஜ்யத்தைத்தர விரும்பினால் அந்த சங்கதியைச் சொல்ல நீ வா அல்லது விதுரன் வரட்டும். அப்படி ராஜ்யம் கொடுக்கவில்லையானால் நீங்கள் இருவரும் வரவேண்டாமென்று முன்னாடியே சஞ்ஜயனிடம் சொல்லியிருந்தார். அவ்வாறு விதுரரும் ஸஞ்ஜயனும் வாராமலிருந்ததைக்கண்ட தர்மபுத்திரர் ஸ்ரீ கிருஷ்ணருடன் இனி என்ன செய்வதென்று யோசனைசெய்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சொன்னார். ஹே தர்மபுத்திரா! நான் உங்களுக்கு தூதனாய் ஹஸ்தினாபுரம் செல்கிறேன். சபையில் ரிஷிகளின் எதிரில் ஹிதமானதாயும், சாஸ்திர சம்மதமானதாயுமுள்ள வார்த்தைகளைச் சொல்லுகிறேன். துரியோதனன் அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாமல் எல்லா ஜனங்களுக்கும் அவன் கொல்லத்தகுந்தவ

னாகிறான், எல்லா தர்மங்களையும் கெடுத்தவனாகிறான். என்றிவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணரால் சொல்லப்பட்ட பீமசேனர் தன் நிமித்தமாய் உண்டாயிருக்கிறதென்ற அவப்பெயரிலிருந்து ஜனங்களிடமிருந்து தப்பித்துக்கொள்பவராய் ஜனங்களின் விசுவாசம் பெறுவதற்காக இவ்வாறு பேசினார். ஹே கிருஷ்ணா! எங்கள் நிமித்தமாய் இந்த குலம் நாசமடைய வேண்டாம். குலரக்ஷணைக்காக நாம் துரியோதனனுக்கு ஸேவகர்களாய் இருக்கிறோம். என்றிவ்வாறு எல்லா திருதராஷ்டிர புத்திரர்களையும் கொல்ல இச்சையுள்ள திட புத்தியுள்ள பீமசேனர் லோக சங்கிரஹார்த்தமாய் சொல்லவும் துரியோதனாதிகளைக் கொல்வதே தர்மம் என்று உலகில் அறியப்படுத்துவதற்காக ஸ்ரீ கிருஷ்ணர் பீமசேனரை அதட்டி திட்டுவது போல் யுத்தம் செய்ய திடமாய் பிரேரணை செய்தார். பிறகு பீமசேனர் ஸ்ரீ கிருஷ்ணரின் அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு அரசர்களின் நடுவில் தன் பலத்தைச் சொல்லிக்கொண்டார். ஸ்ரீ கிருஷ்ணர் அரசர்களின் நடுவில் கௌரவர்களைக் கொல்வது உத்தமமான தர்மஸாதனமென்றும் பீமசேனரின் குணம் அநந்தமானதென்றும் வெளியாக்கிக் கொண்டு உண்மையானதும் தோஷமற்றதுமான வார்த்தைகளால் பீமசேனரின் பலத்தை அதிகமாய்ச் சிலாகித்தார். ஸ்ரீ கிருஷ்ணரும் பீமசேனரும் எப்பொழுதும் ஒரே மனதுள்ளவர்களாயினும் ஜனங்களின் ஸம்மதத்திற்காக ஒருவருக்கொருவர் ஆக்ஷேப ஸமாதானங்களை செய்து கொண்டனர்.

(தொடரும்)

# ஜார்ஜ் சக்கரவர்த்தியின் மரணம்.

நமது சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் பூபதி இந்த 1936-ம் வருஷம் ஜனவரி மாதம் 20 தேதியன்று ஸண்ட்ரிங்ஹாம் என்னுமிடத்தில் அவ்வூர் மணியின்படி இரவு 11-55-க்கு மரணமடைந்தார். அச்சமயம் அவருடைய பக்கத்தில் சக்கரவர்த்தினி மேரியம்மாளும், அவருடைய பிள்ளைகளும் பல பிரபுக்களும் இருந்தனர். மனுமாந்தாதாதி புண்ணிய புருஷர்களால் அரசாளப்



பட்டு வந்த புண்ணிய ஸாதன பூமியான இப்பரதகண்டத்திலுள்ள பிரஜைகளை மிக்க அன்புடனும் காருண்யத்துடனும் சென்ற இருபத்தைந்து வருஷ காலமாய் பரிபாலித்து வந்த மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி மரணமடைந்ததைக் குறித்து மிகவும் விசனிக்கிறோம். நமது பாரத மக்களிடம் அவர் கொண்டிருந்த அளவிலா அன்பை 1930ம் வருஷத்தில் லண்டனில் கூடியிருந்த வட்ட மேஜை கான்பரென்ஸில் அவர் பேசிய பேச்சிலிருந்து யாவரும் நன்கு அறிந்திருக்கின்றனர். சட்டப்படி இவருக்குள்ள அதிகாரம் யாவற்றையும் தமது பிரஜைகளின் சௌகரியத்திற்கு அனுகூலமாய்த்தான் இவர் உபயோகித்து வந்திருக்கிறாராதலால் பிரஜைகளுக்கு இவர்மீது அளவிலா அன்பு இருந்து வந்தது. 1914ம் வருஷத்தில் நடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தில் தம் பிரஜைகளின் நடுவில் இவர் சாக்ஷாத்காய் செய்த பிரசார காலத்திலும், சென்ற வருஷம் நடந்த இவருடைய வெள்ளித் திருவிழாக்காலத்திலும் பிரஜைகளுக்குள்ள அன்பின் ஆதிக்கம் நன்கு வெளியாயிற்று. எழுபத்தியொன்றாவது வயதில் இவர் ஸாமானியமாக சக்தி குறைந்து குறிப்பான எந்த உபாதியாலும் சிரமப்படாமல் காலகதியடைந்திருப்பினும், இந்த இருபத்தைந்து வருஷ காலமாய் ப்ரீதிபூர்வமாய்ப் பரிபாலிக்கப்பட்டு வந்த இவருடைய கோடிக்கணக்கான பிரஜைகளுக்கு இவர் இன்னமும் சிறிது காலமிருந்து இந்திய மக்கள் சம்பூர்ண சுயராஜ்யம் அனுபவிப்பதைப் பார்த்து ஆனந்தப்படாமல் போக நேரிட்டதே என்ற வருத்தமிருந்துவருகிறது. ஈசுவர பக்தியும், பிரஜா விசுவாசமும், காருண்ய புத்தியும் தாராள நோக்கமும் குடிகொண்டிருந்த நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியின் ஆத்மா ஸுகமடையவும், தற்போது நமது சக்கரவர்த்தி பதவியை ஏற்றுக்கொண்ட அவருடைய ஜேஷ்ட குமாரரான, 41 வயதுள்ள எட்வர்ட் ஆல்பர்ட் என்னும் எட்டாவது எட்வர்ட் மன்னர் அவருடைய தந்தை, பாட்டன், முப்பாட்டியான விக்டோரியா மகா ராணியார் இவர்களுடைய தர்ம மார்க்கத்தை பின்பற்றி நமது மதாசார அனுஷ்டானங்களை நன்கு நடைபெறச்செய்து நம்மை பரிபாலிக்கும் படியும் லோகநாதனை விஷ்ணுவைப் பிரார்த்திக்கிறோம்.

# செய்தித்திரட்டு.

28—1—36ல் நமது சக்கரவர்த்தி ஜார்ஜ் பூபதியின் சாமக்கிரியைகள் நடந்ததாகவும் சுமார் ஐந்து லக்ஷம் ஜனங்கள் அதைப்பார்க்கக் கூடியிருந்ததாகவும், அவருடைய சரீரத்திற்கு அலங்காரம் செய்ய உலகின் பல பாகங்களினின்றும் பிரதான அரசர்களிடமிருந்து அநேக மாலைகள் வந்திருந்ததாயும், வின்ஸ்டர் பிஷப் சடங்கை ஆரம்பிக்க, காண்டர்பரி ஆர்ச் பிஷப் மந்திரங்களை ஜெபிக்க, ஸெயின் ஜார்ஜ் ஆலயத்தில் அவர் சரீரம் புதைக்கப்பட்டதென்றும், ஸர் ஜான் சைமன் ஒலி பரப்பும் கருவி மூலம் அவருடைய குணாதிசயங்களைப்பற்றி பிரதான குருவான காண்டர்பரி ஆர்ச் பிஷப் பேசி அவருடைய ஆத்மா சாந்தியடைய தெய்வப் பிரார்த்தனை செய்தாரென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜார்ஜ் சக்கரவர்த்தியின் பாரியாளான மேரி ராணியார் தமது குடிகளுக்கு விடுத்த செய்தியில், "எனக்கேற்பட்டிருக்கும் இந்த துக்கத்தில் நீங்களும் துக்கப்பட்டீர்கள். என் கணவன் மரணத்தை சொந்த துக்கமாக நீங்கள் கொண்டாடினீர்கள். இவை எனக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுக்கின்றன. 25 வருஷம் அவர் ஆண்டதற்கு உங்களுடைய இராஜ விசுவாசத்தையும் அன்பையும் அறிந்திருந்தார். அவர் என் அருகிலிருந்து மறைந்து விட்டார். அதனால் ஏற்பட்ட கஷ்டத்தை நான் வர்ணிக்க முடியாது. நாங்கள் இருவரும் சேர்ந்து செய்த தேச சேவையை இன்னமும் கொஞ்ச காலம் நான் செய்யக் கடவுள் எனக்கு துணை புரிவார் என்று நம்புகிறேன். என் குமாரன் ராஜ்ய பாரத்தை ஏற்கிறான். என் கணவனிடம் காட்டிய அன்பையும் ராஜ விசுவாசத்தையும் என் குமாரனிடமும் காண்பிக்கும்படி உங்களை கேட்டுக் கொள்கிறேன். எனக்கு ஆறுதல் அளித்த உங்களைக் கடவுள் காப்பாருக," என்றிவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

மதுரை பிரம்ம வித்யாசிரம ஸபையாரின் ஆதரவில் 11—1—36ல் பாரிஸ்டர் ஸ்ரீமான் K. L. வெங்கட்டராம் அவர்களின் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீமான் C. R. ராமய்யர் அவர்களால் அத்வைத மதம் ஸர்வ மதங்களை ஸமரஸமாக்காது என்பதைப்பற்றியும் 25—1—36ல் ஸ்ரீ மத்வ நவமிக் கொண்டாட்டம் சுமார் 1000 பேர்களுக்கு போஜனத்துடனும்



காலையில் தேவதார்ச்சனையும் மாலையில் ஸ்ரீ பகவத் பாதாளின் ஸர்வ மூல கிரந்தகளின் பெருமை, ஸ்ரீ உத்தராதி ஸ்வாமிகளின் ஸிவில் ஸூட் 3வது இஷ்யூ ஜீவப்ரம்மவேதத்தின் விமரிசை மாத்வ மித்திரன் பத்திரிகைக்கு ஒவ்வொரு மாத்வராலும் அளிக்கப்படவேண்டிய அவசியம் முதலியவைகளைப்பற்றி சபையின் காரியதரிசி ஸ்ரீமான் கிருஷ்ணாசாரியாரால் இனிய உபன்யாஸங்களுடனும் நடைபெற்றதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ முஷ்ணம் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ மத்வாசாரியாரால் நிர்மாணம் செய்யப்பட்டதாயுள்ள தண்ட தீர்த்தக்கரையில் 1—2—36 அன்று ஸ்ரீ மத்வ நவமி புண்ய தினம் கொண்டாடப்பட்டதென்றும் காலையில் பஜனை கோஷ்டியுடன் ஸ்ரீ மத்வாசாரியாரின் திருவுருவப்படம் அங்கு ஊர்வலமாய் கொண்டு போகப்பட்டு விசேஷ ஆராதனையுடன்சுமார் 150 பேர்களுக்கு பிராம்மண போஜனமும் நடத்தப்பட்டதென்றும் ஸ்ரீமான் A. ரகூத்தமராவ் தெரிவிக்கிறார்.

திருச்சினாப்பள்ளி ஸ்ரீமன் மத்வஸித்தாந்த சபையின் 15-வது ஆண்டின் திருவிழா கொண்டாடப்பட்டதென்றும் ஸ்ரீ மத்வ நவமி புண்ணிய தினத்தன்று பகலில் ஸ்ரீ மத்வ விஜய பாராயணத்துடனும் அலங்கார பந்தி போஜனத்துடனும், விசேஷ பிராம்மண போஜனம் நடத்தப்பட்டதென்றும் மாலையில் ஸ்ரீமான் பெங்களூர் R. S. சேஷகிரி ராவ் அவர்களால் ஸ்ரீ மத்வாசாரியாரின் ஜீவிய சரித்திரமும் உபதேசமும் என்பதைப்பற்றி உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும், மறுநாள் 2—2—36௳ யன்று திருச்சினாப்பள்ளி ஜில்லா ஸெஷன்ஸ் ஜட்ஜான ஸ்ரீமான் C. R. கிருஷ்ண ராவ் B. A., B. L., அவர்களால் மத்வ ஸித்தாந்தம் என்பதைப்பற்றி மிக்க இனிதான உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் ஜனங்கள் ஏராளமாய் கூடியிருந்தனரென்றும் அச்சபை காரியதரிசி C. R. ஸ்ரீனிவாஸ ராவ் அறிவிக்கிறார்.

கோயம்புத்தூர் ஸ்ரீ மத்வ ஸித்தாந்த புபுத்ஸு சபையின் ஆதரவில் ஸ்ரீ மத்வ நவமி புண்ணிய தினக்கொண்டாட்டத்தை முன்னிட்டு ஸ்ரீமான் தெக்கலூர் கிருஷ்ணாசாரியாரால் 31—1—36௳ யன்று ஸ்ரீ மத்வாசாரியாரின் ஸர்வ மூல கிரந்தங்கள் விஷயமாயும், 1—2—36௳ யன்று ஸ்ரீமான் மந்திராலயம் கிருஷ்ணாசாரியாரால் ஸ்ரீமத்வரின் அவதாரத்தைப்பற்றியும் 2—2—36௳ யன்று ஸ்ரீமான் அவலக்கி ஸ்ரீனிவாஸா

சாரியாரால் ஸ்ரீமத்வாசாரியாரின் சரித்திரத்தைப்பற்றியும் மூன்று நாட்கள் தொடர்ந்து உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் அச்சபையின் காரியதரிசி ஸ்ரீமான் C. R. ராமராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்த சபையின் ஆதரவில் ஸ்ரீமான் யதுநாதாசாரியார் அவர்களால் வழக்கப்படிக்குள்ள மத்வ விஜய உபன்யாஸத்துடன் 13—10—35ல் கோயம்புத்தூர் ஸ்ரீமான் ராகவேந்திராசாரியாரால் ஸ்ரீமத்வாவதாரம், 16—11—35ல் ஸ்ரீமான் மஞ்சக்குப்பம் ரங்காசாரியாரால் இதிகாஸ புராணாதிகளின் தத்வம், 14—12—35ல் ஸ்ரீமான் மைசூர் வாவாணி விடலமூர்த்தி ஆசாரியாரால் சுந்திரகாண்டம், 23—12—35ல் ஸ்ரீமான் திருப்பதி ஸ்ரீநிவாஸ தாஸரால் ஸ்ரீ பாகவத மகாத்மியம், 3—1—36ல் ஸ்ரீமான் பெங்களூர் சேஷகிரிராவால் விஷ்ணு ஸர்வோத்தமத்வம், 16—1—36ல் ஸ்ரீமான் கும்பகோணம் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியாரால் வியாஸாவதாரம், 17—1—36ல் ஸ்ரீமான் மதரூஸ் கௌலகி யதுநாதாசாரியாரால் ஜகத்ஸத்யத்வம் 18—1—36ல் ஸ்ரீமான் பாளேகட்டே மத்வாசாரியாரால் துருவ சரித்திரம், 19—1—36ல் ஸ்ரீமான் மன்னார்குடி ராமாசாரியாரால் மத்வ ஸித்தாந்தம், 20—1—36ல் ஸ்ரீமான் சத்யமங்கலம் வெங்கடராமணாசாரியாரால் ருக்மாங்கத சரித்திரம் உபன்யாஸங்கள் செய்யப்பட்டனவென்றும் 31௳ முதல் மூன்று நாட்கள் இச்சபையின் மூன்றாவது ஸம்வத்ஸரோத்ஸவமும் மத்வ நவமி கொண்டாட்டமும் நடைபெற்றதென்றும், அச்சான இச்சபையின் வருஷாந்தர ரிப்போர்டிலிருந்து 1935-ஹூத்தில் மொத்த வரவு ரூ. 141—5—5 என்றும் செலவு ரூ. 120—14—11 என்றும் கை இருப்பு ரூ. 20-6-6என்றும் 11 அமாவாசை பஜனைகளும் ஒரு ஹரிகதா காலக்ஷேபமும் 58 உபான்யாஸங்களும் நடைபெற்றிருப்பதாயும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மதராஸைச் சேர்ந்த மேல மாம்பலத்திலுள்ள மகா ஜனங்களால் ஸ்ரீமான் C. V. ரங்காராவ் கிருஹத்தில் ஸ்ரீ மத்வ நவமி இனிது கொண்டாடப்பட்டதென்றும் 31—1—36, 1—2—36௳களில் ஸ்ரீமான் ரங்கை ராகவாசாரியாரால் ஸ்ரீ மத்வ விஜயம் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் 2௳ யன்று காலையில் வேத பாராயணத்துடனும் ஸ்ரீ மத்வ விஜய பாராயணத்துடனும், பஜனை கோஷ்டியுடனும் ஸ்ரீ மத்வாசாரியாரின் திருவுருப்படம் ஊர்வலமாய் முக்கிய வீதிகளின் வழியாய் கொண்டு போகப்பட்டதென்றும் மத்யானம் பிராம்மண போஜனமும்



மாலையில் ஸ்ரீமான் வையூர் ஸ்ரீனிவாஸாசாரியாரால் ஜீவத்ரைவித்யத்தைப்பற்றியும், மத்வாசாரியார்தான் ஜகத்குருவாயிருக்க ஏற்றவரென்பதைப்பற்றியும் வெகு அழகாய் உபன்யாஸிக்கப்பட்டதென்றும் பிறகு மங்கள ஹாரத்தியுடனும் பிரஸாத விநியோகங்களுடனும் கொண்டாட்டம் முடிவு பெற்றதென்றும் ஸ்ரீமான் A. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

கும்பகோணம் மாத்வ கலைஞான சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமத்வ நவமியை முன்னிட்டு 1—2—36௳ யன்று ஸ்ரீமான் பாளேகட்டே மத்வாசாரியார் அவர்களால் ஸ்ரீ ஆஞ்சநேயரின் விஜயமான லக்ஷ்மண சக்தி என்னும் ஆநந்த ராமாயண கதையைப்பற்றி உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும், அச்சமயம் ஸ்ரீமான்களான இம்மாத்வ மித்திரன் பத்திராபர் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், வட்டங்காடு கோபாலசாரியார், N. சஞ்சீவி ராவ் M. A. L. T. M., ராமராவ் இவர்கள் ஸ்ரீ பகவத்பாதாளின் மகிமையைப்பற்றி பேசினார்கள் என்றும் ஜனங்கள் அதிகமாய் கூடியிருந்தனரென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீமத்வ நவமியை அனுஸரித்து 4-2-36௳யன்று ஸ்ரீஸத்யஞான தீர்த்தஸ்வாமிகளின் புண்ய தினக்கொண்டாட்டம் கும்பகோணம் ரெட்டிராயர் அக்கிரகாரத்திலுள்ள இராத்திரி சத்திரத்தில் நடைபெற்றதென்றும் காலையில் அலங்கார பந்தியுடன் பிராம்மணபோஜனமும் மாலையில் ஸ்ரீபகவத்பாதாளின் சுந்தர விக்ரஹத்திற்கு ஸ்ரீசக்ரபாணிஸ்வாமியின் நான்கு வீதிகளின் வழியாய் புறப்பாடும் பிறகு ஸ்ரீமான் கா பே ராமச்சந்திராசாரியாரால் வாயுஸ்துதியைப்பற்றி உபன்யாஸமும் இரவில் ஸ்ரீமான் பாளேகட்டே மத்வாசாரியாரால் (பிரஹ்லாத சரித்திரம்) ஹரிகதையும் நடைபெற்றன.

திருநெல்வேலி மாத்வ அசோஸியேஷனின் ஆதரவில் 20-12-35ல் ஸ்ரீமான் மன்கலா வெங்கோபாசாரியாரால் பக்தித்வேஷ விபாகம் என்பதைப்பற்றியும் 21-12-35ல் வைஷ்ணவதீக்ஷை என்பதைப்பற்றியும் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் 21-1-36ல் திருநெல்வேலிடவுனில் உத்திராதி மடத்தில் வந்து இறங்கியிருக்கும் ஸ்ரீஸுப்ரமண்யமடத்து ஸ்வாமிகள் 1-2-36௳யன்று வீரராகவபுரத்திற்கு அழைத்து வரப்பட்டு மேல்மந்தை ஜமீன்தாரர் வீட்டில் ஸ்ரீமத்வ நவமிக் கொண்டாட்டம் பொது ஜனங்களால் வெகு சிறப்பாய் நடத்தப்பட்டதென்றும் சுமார் 400 பேர்களுக்கு பிராம்மண போஜனமும் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீபக

வத் பாதாளின் திருவுருவப்படத்துடன் ஸ்ரீஸ்வாமிகளுக்கு ஊர்வலமும் இரவில் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியாசாரியரால் குருபக்தி என்பதைப் பற்றி உபன்யாஸமும் தொட்டில் பூஜைக்கு பின் அதன் மகாத்மியத்தைப்பற்றி ஸ்ரீஸ்வாமிகளால் உபன்யாஸமும் நடைபெற்றதென்றும், அச்சமயம் இந்நகர் முக்கியஸ்தர்கள் ஸ்ரீமான்களான வக்கீல் ஜகந்நாத ராவ் B. A. B. L, புதூர் ஜமீன்தார், ஸ்ரீனிவாஸராவ் B. A., B. L., வக்கீல் ராமச்சந்திரராவ், டிஸ்டிரிக்ட் முனிசிப் கணபதி அய்யர் முதலியோர் வந்திருந்தனரென்றும் இச்சபை காரியதரிசி ஸ்ரீமான் வக்கீல் V. R. நரசிம்ம ராவ் அறிவிக்கிறார்.

கோயம்புத்தூருக்கடுத்த தாராபுரம் ஸ்ரீஸமீரலிங்க ஸபையின் முதலாவது ஸம்வத்ஸரோஸ்தவம் 13-1-35உ யன்று சிவகங்கை ஸப் ஜட்ஜ் ஸ்ரீமான் D. S. ராஜாராவ் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றதென்றும், அச்சமயம் காரியதரிசி வருஷாந்தர ரிபோர்ட் வாசித்து மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டதென்றும். அக்கிராசனர் பேசியதில் நம் ஸமூகத்தார்கள் தாய் பாஷையை கற்கவேண்டிய அவசியத்தைப்பற்றி வற்புறுத்தப்பட்டதென்றும், பிறகு சபையின் நிர்வாகக்கமிட்டியைப்பற்றி தேர்தல்கள் நடந்ததாகவும் 24-1-34உ யன்று ஸ்ரீ புரந்தரதாஸர் அவர்களின் புண்ணிய தினம் கொண்டாடப்பட்டதென்றும் காலையில் ஆஞ்சநேயருக்கு அபிஷேகமும் பிறகு பிராம்மண ஸந்தர்ப்பணையும், மாலையில் ஸ்ரீகோபால கிருஷ்ண ராவ் அவர்களால் தாஸர் சரித்திரம் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் அச்சபையின் காரியதரிசி ஸ்ரீமான் D. V. சுப்புராவ் அறிவிக்கிறார்.

தஞ்சாவூரில் 2--2--36உ யன்று ஸ்ரீ மத்வ நவமி புண்ணிய தினக் கொண்டாட்டம் பகலில் அலங்கார பந்தி போஜனத்துடனும், சுமார் 400 பேர்களுக்கு போஜனத்துடனும் இரவில் கும்பகோணம் ஸ்ரீமான் பூவராகாசாரியாரவர்களால் ஸ்ரீ மத்வ விஜயத்தைப்பற்றி! உபன்யாஸத்துடனும் இனிது நடைபெற்றதென்றும், ஸ்ரீமான் V. ஸ்ரீனிவாஸாசாரியார் B. A. அறிவிக்கிறார்.

சேலம் ஜில்லா ஆத்தூரில் அவ்வூர் மாத்வ சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமத்வ நவமி மகோற்சவம் மூன்று நாட்கள் கொண்டாடப்பட்டதென்றும், பிரதிதினமும் இரண்டு ஆஞ்சநேயர் கோவில்களில் பஞ்சாமிருத அபிஷேகம் முதலியவை நடத்தப்பட்டதென்றும் 1-2-3



அன்று அக்கிரகாரத்து பிராம்மணச் சிறுமிகளால் ஸ்ரீமத்வா சாரியாரின் சரித்திரம் நாடக ரூபமாய் நடத்திக் காண்பிக்கப்பட்டதென்றும், 2-2-36உயன்று பிராம்மண சந்தர்ப்பணையும், பகவத் பாதாளின் படத்திற்கு ஊர்வலமும் நடத்தப்பட்டதென்றும் அச்சபை பிரஸிடெண்டு ஸ்ரீமான் வக்கீல் S. பூவராக மூர்த்தி ராயரும், காரியதரிசி ஸ்ரீமான் S. சுப்பு ராயரும் அறிவிக்கின்றனர்.

ஸ்ரீரங்கம் தெற்கு சித்திரை வீதியிலுள்ள முலுபாகலு மடம் ஸ்ரீ ஸ்வர்ணவர்ண தீர்த்த ஸ்வாமிகளின் சன்னதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவிஜயீந்திர ஸ்வாமிகளால் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள ஸ்ரீபூ ஸமேதரான ஸ்ரீவரதாஜப் பெருமாளுக்கு வழக்கப்படி கும்பகோணம் காபே ஹயக்ரீவாசாரியாரின் பெரு முயற்சியின் பேரில் ஸ்ரீமத்வ நவமியை முன்னிட்டு 2-2-36உ பானுவாரத்தன்று ஸ்ரீரங்க நாதனுடைய கோயில் யானை வாத்ய ஸமூகங்களுடன் சித்திரை வீதி வழியாய் ஊர்வலமும் அச்சமயம் ஸ்ரீரங்கம் Young Meus' Association, மத்வ ஸித்தாந்த சபை இவர்களின் ஒத்துழைப்பும், பஜனை முதலியவைகளின் கைங்கரியமும் கை கூடியதென்றும் அவ்வூர் முக்கியஸ்தர்கள் ஸ்ரீமான்களான மைசூர் ரிடையர்ட் அஸிஸ்டெண்டு கமிஷனர் ஹயக்ரீவ ராவ், ஆடிடர் T. C. ரெங்கநாத ராவ், ரிடையர்டு இஞ்சினீயர் ஸ்ரீனிவாஸ ராவ், அத்தாணி கிருஷ்ணஸ்வாமி ராவ், S. வியாஸ ராவ் குமாரர் V. கிருஷ்ண ராவ் முதலியோர் கூட வந்தனரென்றும் ஸ்ரீ பகவத் பாதாளின் மகத்வம் இனிது பிரகாசித்ததென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## ஸ்ரீ கிருஷ்ணரின் ராதை யார் ?

ராதா கிருஷ்ணன் என்ற பெயர் ஸ்மார்த்த பிராம்மணர்களில் காணப்படுகிறது. ராதா கல்யாணம் என்று ஆங்காங்கு பரம பக்தியுடன் நடத்தப்பட்டு, ஜயதேவர் செய்த அஷ்டபதிகள் நியமத்துடன் பாடப்பட்டு உற்சவாதிகள் நடத்தப்பட்டு வருகிறது. ஸ்ரீ பாகவத பாரதாதிகளில் ஸ்ரீ கிருஷ்ணருக்கு பிரியமாயுள்ள கோபிகைகளில், ராதை என்பவளின் பெயர் குறிப்பிடப்படவில்லை. நிர்ணயா சாரியாளான எமது ஸ்ரீ பகவத் பாதாளும்

ளங்கும் ராதையைப்பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. ராதா ஜாரா நவநீத சோரா என்று கிருஷ்ணரை துதிக்கப்பட்டு வருவதால் அவள் ஒருவனுடைய பாரியாளாக இருந்திருக்கவேண்டும் என்றும், மற்ற கோபியர்களைப் போல் அவளும் ஸ்ரீ கிருஷ்ணரை நேசித்திருக்க வேண்டுமென்றும் நிச்சயிக்கலாம். இது சம்பந்தமாய் விமரிசை செய்ததில் ராதையின் விஷயம் அடியிற்கண்டவாறு பிரம்மவைவர்த்திக புராணம் கிருஷ்ண ஜன்ம கண்டத்தினின்றும் வெளியாகிறது.

முன்பு ஒரு சமயம் கோலோகத்தில் ராஸ மண்டலத்திலுள்ள பிருந்தாவனப் பிரதேசத்தில் இரத்தினமயமான ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்த ஜகத்பதியான மஹா விஷ்ணுவுக்கு ஸ்வேச்சா மயஸ்ச பகவான் பபூவ ரமணோத்ஸுக: ஸ்திரீ விஹாரம் செய்ய அபிப்பிராயம் ஏற்பட்டது. ஏதஸ்மின்னந்தரே துர்கேத்விதா ரூபா பபூவஸ: । தக்ஷிணாங்கஸ்ச ஸ்ரீ கிருஷ்ண: வாமார்த்தாங்கா ச ராதிகா உடனே அவருடைய சரீரம் இரண்டு பாகமாய்ப் பிரிந்து இடது பாகம் ஸ்ரீ கிருஷ்ணராகவும் வலது பாகம் ராதையாகவும் மாறிற்று. ராதை மகா ரூபலாவண்யம் படைத்தவளாயும் அமூல்ய ஆபரணங்களால் பூஷிதையாகவும் இருக்க ஸ்ரீ கிருஷ்ணர் அவளுடன் கோலோகத்தில் வெகு காலம் க்ரீடித்திருந்தார். அவள் கோலோகத்திற்கு ஈச்வரியாகவும் இருந்தாள். இவளுக்கு பிருந்தை, பிருந்தாவனி சந்திராவலி முதலான வேறு 16 பெயர்களும் உண்டு. ராதை மகா லட்சுமி என்றே கருதப்படுகிறாள். ராதா வாமாங்க பாகேன மகாலக்ஷ்மீர் பபூவஹா என்று அறிவிக்கப்படுகிறது. ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணர் அந்த கோலோகத்தில் ராதைக்கு ஸமானமாய் அபிமானமாயுள்ள விரஜா என்னும் கோபிகையுடன் அவளுடைய வீட்டில் க்ரீடித்திருந்ததாயும், இதைக் கேட்ட ராதை கோபித்துக்கொண்டு விரஜாவின் வீட்டிற்கு நேரில் வந்துசேர, விரஜா பயந்துபோய் யோகாப்யாஸத்தால் தன் சரீரத்தை விட்டு இறந்தாள். ஸ்ரீ கிருஷ்ணரும் கண்ணில் படாமல் போகவும், இவ்விருவர்களையும் காணாமல் ராதை கோபத்துடன் வீடு போய்ச் சேர்ந்தாள். அச்சமயம்தான் அந்த விரஜா என்பவள் நதியாக



பெருகவே, ஸ்ரீகிருஷ்ணர் அதைக்கண்டு வருத்தப்படவும், அவள் மீண்டும் கன்னிகையாக ரூபமெடுத்து ஸ்ரீ கிருஷ்ணருடன் வெகு காலம் ரமித்திருந்தாள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணருக்கு விரஜாவிடம் ஏழு பிள்ளைகள் பிறந்தனர். ஒரு சமயம் ஸ்ரீ கிருஷ்ணரும் விரஜாவும் க்ரீடித்திருக்கையில் ஏழாவது குமாரன் தன் அண்ணன்மார்களிடம் பயந்து தன் தாயின் மடியின்மீது உட்காரவும், விரஜா அந்த குழந்தையை ஸமாதானம் செய்து சீராட்டிக்கொண்டிருக்கையில், ஸ்ரீ கிருஷ்ணர் விரஜா தன்னை அலக்ஷியம் செய்து, குழந்தையை பெரிதாக நினைத்துக் கொண்டாளென்று கோபித்து மறைந்து சென்றார். விரஜா ஸ்ரீ கிருஷ்ணரைக்காணாமல் துக்கமடைந்து இந்த கிருஷ்ண வியோகத்திற்கு காரணம் தன் ஏழாவது குமாரன்தானென்று, அவனை ஜடமான உப்பு ஸமுத்திரமாக பிறக்கும்படிக்கும், அவனுடைய அண்ணன்மார்கள் ஆறு பேர்களையும் ஆறு ஸமுத்திரங்களாய் பிறக்கும் படிக்கும் சபித்தாள். இந்த இணையற்ற பக்தியைக் கண்டு மெச்சி ஸ்ரீ கிருஷ்ணர் அவளுடைய கண்ணுக்கு தென்பட்டு அந்த விரஜா நதியின் பக்கத்தில் தான் ஸன்னிதானம் பெற்றிருக்கப் போவதாயும், அவளுடைய பிள்ளைகள் எல்லோரையும் அவள் எப்பொழுதும் பார்க்கலாமென்றும், அவர்கள் தங்கள் பத்தினிமார்களான நதிகளுடன் சுகித்திருப்பார்களென்றும், வரன் கொடுத்தார். இந்த விருத்தாந்தம் ராதைக்கு தெரிந்து அவள் கோப கிருகத்தில் படுத்துவிடவும், அவளை சமாதானம் செய்ய ஸ்ரீ கிருஷ்ணர் நேரில் போகவும் ராதை, "ஹே கிருஷ்ணா! நீ கேவலம் கல்லாயிருந்து விரஜா நதியின் சமீபத்தில் இரு என்னிடம் நில்லாதே" என்று கடிந்து பேசினாள். அவளுடைய தாதிகளும் கிருஷ்ணரை கடிந்து பேசவும், கிருஷ்ண பக்தனாய் ராதையின் அந்தப்புரத்துக் காவலாளியான ஸ்ரீதாமா என்பவன் தீரவிசாரியாமல் கிருஷ்ணரை கோபிப்பது நியாயமல்லவென்று சொல்லவும் ராதை ஸ்ரீதாமாவை சங்கசூடாசுரனாக பிறக்கும்படி சபித்தாள். ஸ்ரீதாமா அதற்கு பதிலாக ராதையை பூலோகத்தில் விருஷபானு என்னும் கோபாலகனால் கலாவதி என்னும் பித்ரு கன்னிகையிடத்தில், ராதை என்னும் பெயருடனேயே பிறந்து ராயணன்

என்னும் கோபாலகனுடைய பத்தினியாய் பிறக்கும்படிக்கும் நூறு வருஷம் ஸ்ரீ கிருஷ்ணருடைய வியோகம் ஏற்படும்படிக்கும் சாபம் கொடுத்தான். அதன்படியே ராதை பூலோகத்தில் பிறந்தாள். ஸ்ரீ கிருஷ்ணர் பூலோகத்தில் பிறந்து பிருந்தாவனத்தில் வாசம் செய்யும்பொழுது ஒரு சமயம் நந்தகோபன் குழந்தையான கிருஷ்ணனை தோளில் தூக்கிக்கொண்டு பசுக்களை மேய்ச்சலுக்கு விட்டு இருக்கையில் மேகங்கள் ஆகாயத்தில் குவிந்து இருண்ட இருள் சூழவும் இந்த ராயண கோபாலகனுடைய பாரியாளான ராதை குழந்தையை தன்னிடம் கொடுத்தால் யசோதையிடம் சேர்த்து விடுதாக நந்தகோபனிடம் சொல்லவும் நந்தகோபனுக்கு ஏற்கனவே கர்காசாரியார் சொன்ன வார்த்தை ஞாபகத்திற்கு வந்து அவள் கோலோகத்தின் ஈசுவரி என்றும் கிருஷ்ணரின் அங்க ஸங்கத்திற்காக பிறந்தவளென்றும் தெரிந்துகொண்டு ராதையிடம் கிருஷ்ணனை ஒப்புவிக்க, பகவானான ஸ்ரீ கிருஷ்ணர் யமுனா தீரத்தில் புஷ்ப சயனத்தில் யௌவன புருஷராய் மாறி அவளுடன் அங்கசங்கம் செய்து விட்டு பிறகு குழந்தையாக மாறி ராதையால் யசோதையிடம் தோளில் தூக்கிக்கொண்டு போய் விடப்பட்டார் என்றும் ஸவிஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருப்பதால் ராதை இதர கோபியர்களைப்போல் ஸ்ரீ கிருஷ்ணரின் பேரன்பைக் கொண்டவளென்றும் தெரியவருகிறது.

---

## விசேஷ தினங்கள்.

### பால்குண மாஸம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 3 | 36 | மங்களவாரம் | தசமி, இரவு மணி 10—36க்குள் இராத்திரி போஜனம் செய்யவேண்டும். |
| 4 | 3 | 36 | புதவாரம் | ஏகாதசி. |
| 7 | 3 | 36 | சனிவாரம் | போளிப்பண்டிகை, மன்மத தகனம். |
| 8 | 3 | 36 | பானுவாரம் | பௌர்ணமி, விஷ்ணுப, உப. இல்லை. |
| 9 | 3 | 36 | சோமவாரம் | வஸந்தாரம்பம், அப்யங்கம் மாம்பூ [பக்ஷணம் |
| 11 | 3 | 36 | புதவாரம் | ஸ்ரீவாதிராஜ ஸ்வாமி புண்ய தினம். |
| 12 | 3 | 36 | குருவாரம் | ஸ்ரீவியாஸராஜ ஸ்வாமி புண்ய தினம் |
| 19 | 3 | 36 | குருவாரம் | ஏகாதசி உப. |
| 22 | 3 | 36 | பானுவாரம் | திலதர்ப்பணம். |
| 23 | 3 | 36 | சோமவாரம் | அமாவாசை அசுவத்த பிரதக்ஷிணம். விஷ்ணு. ப. உப. |

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதில்றிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்**

**வெகு சொற்பம்தானிருக்கின்றன.**

**உடனே அவைகளைப்பெற**

**முந்துங்கள்.**

கூட சந்தா ரூ. 3 Regd. No. M 24

# டி. எஸ். ஆர்.
## அண்டு
# கம்பெனி
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணும்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல்
பற்பொடி [தைலம்
ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.



சந்தா ரூ. 3 Regd. No. M 2419.




# மாத்வ மித்திரன்.
# THE MADWAMITRAN.


EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONA.


பௌர்ணமிதோறும் வெளிவரும்.


| Vol. 8. புஸ்தகம் 8 | யுவ ஸம்வத்ஸரம், பால்குண மாஸம், (8—3—36 பானுவாஸ.) | No. 9. நெ. 9. |
|---|---|---|


| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 248 |
| 2. | ஆசாரமாலை. | 257 |
| 3. | அப்பைய தீக்ஷிதரின் கண்டனம். | 260 |
| 4. | சங்கரலீலா விலாஸம். | 264 |
| 5. | ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 26[illegible] |
| 6. | விதவா விவாக கண்டனம். | [illegible]4 |
| 7. | பிரம்ம ஸூத்திரம். | 277 |
| 8. | விரஜா நதி விஷயம். | 278 |
| 9. | மாத்வமித்திரன் ஷீட் காலண்டர். | 280 |
| 10. | விசேஷ தினங்கள். | |


ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்காநாதா[illegible] கும்பகோணம்.

# மாத்மித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகஸியங்கள் ஸம்பிரதாயங்கள் மாமாகாத்மியங்கள் புராணசரிதைகள் தத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சை தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபா தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வால்யங்கள் விக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பெர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

---

**மாத்வமித்திரன் பழைய வால்யங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.**

ஸ்ரீ லக்ஷ்மீ நாஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பரிய நிர்ணயம்.

இருபத்தி நான்காவது அத்தியாயம்.

ஸ்ரீ ம வே பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெர்ப்பு

(முன் 238-ம் பக்கம் தொடர்ச்சி)

### ஸ்ரீ கிருஷ்ணர் தூது சென்றது.

பிறகு லோகநாதனான ஸ்ரீ கிருஷ்ணர் கருணையடைந்தவனும் ஸமாதானத்தில் விருப்பங் கொண்டவனுமான அர்ஜுனனை யுத்தத்திற்கு காரணமாயுள்ள, தோஷமற்ற வாக்யங்களால் ஸமாதானம் செய்துவிட்டு அதிகமாய் நீதியை அறிந்து கொண்டவன் போல் தன்னை நினைத்துக் கொண்டிருக்கும் நகுலனால் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு மனுஷ்யர் என்று எண்ணப்பட்டு பேசப்பட்டார். தங்கள் சௌரியத்தைக்காட்ட ஸகதேவன் ஸாத்யகி இவ்விருவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரை யுத்தத்திற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டனர். அச்சமயம் துரௌபதி திருடர்களை சிக்ஷிப்பது க்ஷத்திரியர்களுக்கு முக்யமான தர்மமாதலால் ராஜ்யத்தைத் திருடியவர்களான துரியோதனாதிகளுடன் ஸமாதானம் வேண்டாமென்று ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்து சொன்னாள். ஸ்ரீ கிருஷ்ணர் நான் சமாதானம் செய்வதில்லை என்று துரௌபதியிடம் சொல்லி ஹஸ்திநாபுரம் புறப்பட்டார்.

ஸ்ரீ கிருஷ்ணர் ஸாத்யகியுடன் சேர்ந்து மேலான ரதத்தில் உட்கார்ந்து கொண்டு பாண்டவர்களாலும் அநேக ராஜாக்களாலும் வெகு தூரம் பின்தொடரப்பட்டவராய் பாண்டவாதிகளை தன் வார்த்தையால் நிறுத்தி விட்டு பிராம்மண சிரேஷ்டர்களுடன் கூடி குரு க்ஷேத்திரத்திற்கு பிரயாணம் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணர் ஒருவரே பரசுராமராகவும் வியாஸராகவும் இருந்தாலும் அவ்விரு ரிஷி சிரேஷ்டர்களாலும் பின் தொடரப்பட்டவராய் பிரயாணம் செய்தார். அந்த கிருஷ்ணனின் வாக்யங்களின் குணங்களை அறிய பிரபுவான விஷ்ணுவைத்தவிர வேறு யாரும் ஸமர்த்தராகமாட்டார். அந்த காரணத்தால்தான் அவர் ஸ்ரீவியாஸர் பரசுராமர் இந்த ரூபங்களுடன் சேர்ந்து சபைக்கு வந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் வரும் வழியில் சகல தேச ஜனங்களாலும் வணங்கப்பட்டவராய் பிரம்மாதி தேவர்களால் புஷ்ப விருஷ்டி செய்து கொள்ளப்பட்டவராயும், துதிக்கப்பட்டவராயும், நமஸ்காரம் செய்யப்பட்டவராயும் ஹஸ்தினாபுரம் வந்து சேர்ந்தார். உத்தமனும் அப்ரமேயனுமான கிருஷ்ணர் பீஷ்மாதிகளால் ஸ்நேகத்துடன் எதிர்கொண்டு வந்து அழைத்துப் போகப்பட்டவராய் அவர்களுடன் சேர்ந்து ஹஸ்தினாபுரத்து ராஜ மார்க்கத்தில் புறப்பட்டார். உலகில் முக்ய ஸௌந்தரனும் குணங்களுக்கு கடலாயுமுள்ள கிருஷ்ணரை காண விரும்பியவர்களாய் எல்லா ஜனங்களும் ராஜ மார்க்கத்தில் வந்து சேர்ந்தனர். அந்த ஜனங்களால் மிக்க ஆதரவுடன் மரியாதை செய்யப்பட்ட கிருஷ்ணர் திருதராஷ்டிர ராஜனின் வீட்டிற்குள் நுழைந்தார். திருதராஷ்டிர ராஜன் பீஷ்மாதிகளை முன்னிட்டுக்கொண்டு கிருஷ்ணரை பூஜித்தார். கிருஷ்ணர் தங்கமயமான சிம்மாஸனத்தில் உட்கார்ந்து கொண்டு தன் சரீர காந்தியால் திக்குகளை ப்ரகாசப்படுத்திக் கொண்டு சுயம் விளங்கி வந்தார். கிருஷ்ணரும் பீஷ்மாதிகளை அவரவர்கள் யோக்யதைப்படி மரியாதை செய்து துரியோதனின் வீட்டுக்கு வந்து துரியோதனால் மரியாதை செய்து கொள்ளப்பட்டார். குணவான்களான [illegible]ண்டவர்களுக்கு துரியோதனன் த்வேஷி என்று சொல்லி அ[illegible] செய்த மரியாதையை கிருஷ்ணர் ஏற்றுக்கொள்ளவில்லை. வி து[illegible]ர் வீட்டிற்கு வந்தார். பீஷ்மத்துரோணாதிகள் தம்தம்



வீட்டிற்கு வரவேண்டுமென்று பிரார்த்தித்த போதிலும் ஆதிதேவனான கிருஷ்ணர் இவர்கள் த்ரௌபதியை அவளுடைய வஸ்திரத்தை அபகாரம் செய்த காலத்தில் உபேக்ஷை செய்தார்கள் என்று எண்ணங்கொண்டு அந்த பீஷ்மாதிகளின் வீட்டிற்கு செல்லவில்லை. சீக்கிரமே அப்ரமேயனான கிருஷ்ணன் விதுரனுடைய வீட்டிற்கு சென்றார். அந்த விதுரன் கிருஷ்ணரை எதிர்கொண்டு வரவும் அவர் விதுரனிடம் மகிழ்ந்து அவனுடைய வீட்டிற்குள் பிரவேசித்தார். பக்தி பூர்ணனும் உத்சாகமுள்ளவனுமான விதுரனால் எல்லாவற்றையும் ஸமர்ப்பணம் செய்தல் முதலியவைகளால் ஸமஸ்தத்திற்கும் அதிபதியான கிருஷ்ணர் பூஜிக்கப்பட்டார். மறு நாள் துரியோதனனால் மரியாதை செய்து கொள்ளப்பட்டவராய் மாணிக்கம் தங்கம் இவைகளால் நிர்மாணம் செய்யப்பட்டதான அழகிய சிம்ஹாஸனத்தில் விஷ்ணுக்ஞானிகளான ரிஷி சிரேஷ்டர்களுடன் சேர்ந்து கௌரவர்களின் சபையின் நடுவில் உட்கார்ந்தார். பீஷ்மாசாரியார் முதலான எல்லா ஜனங்களாலும் பூஜிககப்பட்ட கமலக்கண்ணரான கிருஷ்ணர் ஸபையின் நடுவில் பிரகாசித்தார். கலியின் தோஷத்தை போக்கடிப்பவரான கிருஷ்ணர் அந்த சபையின் இடம் நேரம் இவைகளுக்கு உசிதமான வார்த்தைகளைப் பேசிவிட்டு சரியான சந்தர்ப்பத்தில் பிருகிருத விஷயத்தை அடியிற்கண்டவாறு பேசினார். ஹே திருதராஷ்டிரனே ! உன் குலம் விருத்தியடைவதற்காக உனக்கு ஸத்புத்ரனுள்ள தர்மபுத்திரருக்கு ராஜ்பத்தை கொடு. அப்பொழுது நீ கீர்த்தியையும் தர்மத்தையும் என் உத்தமமான அனுக்ரஹத்தையும் அடைவாய். இவ்வாறு நீ ராஜ்பத்தைக் கொடுக்காமற் போனால் கீர்த்தியும் தர்மமும் இல்லாமல் போய் என் விரோதத்தை அடைவாய், என்றிவ்வாறு கிருஷ்ணரால் சொல்லப்பட்ட திருதராஷ்டிரன் என்னை மீறி நடக்கும் என் பிள்ளையான துரியோதனனை, ஹே கிருஷ்ணா ! நீயே போதிப்பாய் என்று சொன்னார். பாப புத்தியுள்ள அந்த துரியோதனன் கிருஷ்ணரால் போதிக்கப்படினும் அந்த சபையினின்றும் எழுந்து கர்ணனைகளோடும் மந்திரிகளோடும் சேர்ந்து பகவானை துரியோ கயிறுகளால் கட்டுவதற்காக குச்சிதமான எண்ண[illegible]

தனன் நிச்சயம் செய்தான். அச்சமயம் யார் யார் கிருஷ்ணரைக் கட்ட யோசித்தனரோ அவர்கள் எல்லோரும் அஸுரர்களாதலால் அவ்வாறு யோசித்த விகர்ணன் முதலியோர் கொல்லத்தகுந்தவராயினர். நற்கதியை அடையவில்லை. கர்ணன் சூரியனுடைய அம்சம் பெற்றவனாயினும் துரியோதனனின் சந்தோஷத்திற்காக தைத்யனின் ஆவேசத்தால் கிருஷ்ணரைக் கட்டுவதற்காக ஆலோசித்தான். ஆனால் அவன் இயற்கையாய் தோஷங் கொண்டவனன்று. அந்த காரணத்தால்தான் கர்ணனுக்கு பரம மங்களமான மோக்ஷமாகிய ஸத்கதி வந்தது. இச்சமயம் கிருஷ்ணருக்கு யார் அனுகூலமாயிருந்தார்களோ அவர்கள் எல்லோரும் தேவாம்சர்கள், நாரதர் கண்வர் முதலான ரிஷிகளாலும் அமிதமான சக்தியுள்ள கிருஷ்ணரின் ஸ்வரூபமாயுள்ள பரசுராமர் வேதவியாஸர் ஆகிய மூன்று ரூபங்களுள்ள விஷ்ணுவாலும், தாய் தந்தையர்களாலும், பீஷ்மத் துரோணாதிகளாலும் ராஜ்யத்தைக் கொடுக்கும்படி கற்பிக்கப்படினும் துஷ்ட புத்தியுள்ள துரியோதனன் ஸம்ஸார பந்தத்தை விடுவிக்கும் கிருஷ்ணரைக் கட்டவேதான் யோசித்தான். இந்த ஆலோசனையை ஸாத்யகி கிருதவர்மன் இவ்விருவர்களும் நன்கு காதால் கேட்டனர். ஸாத்யகி இதை ரகசியமாய்ச் சொல்லி கிருதவர்மாவை காவலாய் வைத்துவிட்டு கிருஷ்ணரின் ஸமீபம் வந்து துரியோதனன் கட்ட நிச்சயித்திருப்பதை கிருஷ்ணரிடம் சொன்னான். கிருஷ்ணர் ஸர்வக்ஞராயினும் ஸாத்யகியின் வாயினின்றும் இந்த சமாசாரத்தைக் கேட்டு ஸமஸ்தத்திலும் வியாபித்திருக்கும் என்னைப் பார் என்று திருதராஷ்டிர ராஜனிடம் சொன்னார். பிறகு மந்திரிமார்களுடன் கூடிய துரியோதனனை திருதராஷ்டிர ராஜன் ஸபைக்கு வரவழைக்கவும் புருஷோத்தமனான கிருஷ்ணர் ப்ரளய காலத்திய ஸூரியனை விட அமிதமான காந்தியுள்ளதும் எல்லா [illegible]லகத்தையும் தரித்திருப்பதும் நித்யமானதும் அளக்க முடியாத ஸம்பூர்ணமான ஷட் குணங்கள் பூர்ணமானதும் ஸர்வத்தி [illegible]யாபதமானதுமான தன் ஸ்வரூபத்தை காண்பித்தார். [illegible]வ ரூபத்தைப் பார்த்து துரியோதனாதிகள் அதன் காந்[illegible] பட்டதான தங்கள் கண்களை மூடிக்கொண்டனர்.



கிருஷ்ணர் மறுபடியும் விச்வரூபத்தை மறைத்துவிட்டு திருதராஷ்டிர ராஜனால் பிரார்த்திக்கப்பட்டவராய் அவனுக்கு தன் விச்வ ரூபத்தை பார்க்கக் கொடுத்திருந்த பார்வையைப்போக்கி மீண்டும் அவனை முன்போல் குருடனாக்கி துரியோதனனை மகா பாபி என்று பகிரங்கம் செய்து ஊருக்கு திரும்பினார். அநந்த சக்தியும் புருஷோத்தமனுமான கிருஷ்ணர் துரியோதனன் மனதை நிக்ரஹம் செய்ய சக்தியுள்ளவராயினும் அவனை அந்தம் தமஸ்ஸில் வீழ்த்துவதற்காக அவனை தன் வார்த்தையின்படி நடந்தவனாய் அநந்தஞான கிருஷ்ணர் செய்யவில்லை. கிருஷ்ணர் ஊருக்குப் போகும்பொழுது மறுபடியும் குந்தியின் வீட்டிற்கு வந்து குந்தி தர்மபுத்திரருக்கு சொல்லி அனுப்பிய யுத்த முயற்சியாகிய விதுளா புத்திரானுசாசன கதையைக் கேட்டு கர்ணனை தன் ரதத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டு சிறிது தூரம் சென்றார். கர்ணனிடம் அவனுடைய உற்பத்தியைச் சொல்லி உன் தம்பிகளான பாண்டவர்களிடம் வந்து சேர் என்று சொன்னார். அதற்கு கர்ணன் நான் துரியோதனாதிகளால் ஆதரிக்கப்படுகிறேன் என்று சொல்லி கிருஷ்ணரின் வார்த்தையை நடத்தவில்லை. பிறகு பகவான் கர்ணனை தன் ரதத்தினின்றும் இறக்கி அசுவத்தாமாசாரியாரை தன் ரதத்தில் உட்கார்த்திவைத்து நீ பாண்டவர்களுக்கு பாலிய ஸிநேகிதன்தானே, ஆகையால் அவர்களுக்கு நீ ஸஹாயம் செய் என்று ஏகாந்தமாய் அவரிடம் சொன்னார். அதற்கு அசுவத்தாமா என் தந்தையான துரோணாசாரியார் சாகுமளவும் நான் பாண்டவர்களிடம் சிநேகமாய் இருக்கிறேன் என்று சொன்னார். பிறகு கிருஷ்ணர் அசுவத்தாமாவை ரதத்திலிருந்து இறக்கிவிட்டு கர்ணனுடன் பேசியதற்கு முன்பே கௌரவர்களை விட்டு பாண்டவர்களின் ஸமீபம் வந்து சேர்ந்தார். பிறகு கர்ணன் குந்தி தேவியால் நீ என்னுடைய பிள்ளை, பாண்டவர்களுடன் ஸம்பந்தம் செய்துகொள் என்று பிரார்த்திக்கப்பட்டான். அதற்கு கர்ணன் அம்மா! அர்ஜுனனைத்தவிர மற்ற உன் பிள்ளைகள் என் கைக்கு அகப்பட்ட போதிலும் அவர்களை நான் கொல்வதில்லை என்று குந்தியைப் பார்த்து பதில் சொன்னான். கிருஷ்ணர் ஹஸ்தினா நகரிலிருந்து உபப்லாவ்ய

மென்னும் நகரத்திற்கு வந்தபின் கௌரவர்களும் கிருஷ்ணருடன் சேர்ந்த பாண்டவர்களும் யுத்தத்தில் ஆசையுள்ளவர்களாய் குரு க்ஷேத்திரத்திற்கு பிரயாணம் செய்தனர்.

இவர்கள் எல்லோரும் அந்த குரு க்ஷேத்திரத்தில் கூடாரம் போட்டனர். பாண்டவர்கள் கிருஷ்ணன் கற்பித்த புத்தியைக் கொண்டு ஜயத்தை அளிக்கக்கூடிய இடத்தில் கூடாரத்தை நிர்மாணம் செய்தனர்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத் பாதாளியற்றிய
ஸ்ரீ மகா பாரத தாத்பரிய நிர்ணயத்தில்
இருபத்தி நான்காவது அத்யாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து

## இருபத்தி ஐந்தாவது அத்தியாயம்

இந்த அத்தியாயத்தில் பீஷ்ம பர்வ கதை நிரூபிக்கப்படுகிறது—யுத்தத்தின் ஆரம்பமுள்ளதும் ஸமுத்திரத்திற்கு ஸமானமாயுள்ளதும் பீமசேனரையும் பீஷ்மாசாரியாரையும் முன் பாகத்தில் கொண்டதும் குருக்ஷேத்திற்கு வந்து சேர்ந்ததுமான பாண்டவ சைனியம் கௌரவ சைனியம் இவைகளை அர்ஜுனன் பார்த்துவிட்டு நாசமில்லாதவனான கிருஷ்ணா! இந்த இரு சைன்னியங்களின் நடுவில் என் ரதத்தை நிறுத்து என்று கிருஷ்ணரைப்பார்த்து சொன்னான். இவ்வாறு அர்ஜுனனால் சொல்லப்பட்ட கிருஷ்ணர் அர்ஜுனனுடைய ரதத்தை இரண்டு சைனியங்களின் நடுவில் நிறுத்தினார். அர்ஜுனன் இரண்டு சைனியங்களிலும் தன் பந்துக்களை பார்த்தான். இந்த பந்துக்களைக் கொன்றால் தனக்கு பாபம் வந்து சேருமென்று சந்தேகமுள்ளவனாய் தான் யுத்தம் செய்ய முடியாதென்று சொல்லி ரதத்தில் தனுஸ்ஸை வைத்தான். அப்பொழுது கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு பகவத் கீதையை உபதேசம் செய்தார், அதன் சாராம்சமாவது:—



தர்மக்ஞானத்தை ரக்ஷிப்பதற்கு ஸாதனமாயுள்ள துஷ்ட ஸம்ஹாரமென்பது க்ஷத்திரியர்களுக்கு விசேஷமான தர்மம். அந்த துஷ்ட ஸம்ஹாரம் செய்வதை க்ஷத்திரியன் கைவிட்டானென்றால் நிந்தைக்கு ஆளாவான், நிச்சயமாய் அதோகதியடைவான். யாரால் எல்லா பிராணிகளுக்கும் காரியங்கள் நடக்கின்றனவோ யாரால் இந்த உலகம் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அந்த விஷ்ணுவை மனுஷ்யன் தன் வர்ணத்திற்கும் ஆசிரமத்திற்கும் உசிதமாயுள்ள கர்மாவால் ஆராதித்தால் மோக்ஷத்தை அடைகிறான். பந்துக்கள் இறப்பதற்கு நான் விரும்புகிறேன் என்று துக்கப்படாதே, யுத்தம் இல்லாமலிருந்தாலும் இந்த சரீரம் போய்விடுகிறது. ஆனால் உள்ளேயிருக்கும் ஜீவன் எப்பொழுதும் நாசமடைகிறதில்லை. பிரகிருதி சம்பந்தமடைந்த சரீரமுள்ள பிரம்மருத்திராதி க்ஷர சேதனர்களுக்கும் அபிராகிருத சரீரமுள்ள அக்ஷர சேதனமான மகா லெட்சுமிக்கும் சிருஷ்டி, ஸம்ரக்ஷணை, பிரளயம், அக்ஞானம், ஸம்ஸாரம், பந்தம், மோக்ஷம், சேஷ்டை, க்ஞானம், ப்ரேரணை இவைகள் என்னால்தான் உண்டாகின்றன. மற்றெவராலும் ஏற்படுவதில்லை, அதற்கு காரணம் நான் ஸ்வதந்திரன், அதற்கு ஹேது குண பூரணத்வம், ஆனதால் எனக்கு ஸமமானவர்களும் அதிகமானவர்களும் இல்லாமலிருப்பதால் எல்லாமே ஆதீனமாயிருக்கிறது. இந்த பந்துக்களின் மரணாதிகள் என் ஆதீனம் என்று தெரிந்து கொண்டும் ஜீவர்களும் ஜடர்களும் அஸ்வதந்திரமானவைகள் என்று தெரிந்து கொண்டும் யுத்தத்தினின்று நீ திரும்பவும் ஸ்வதந்திரனல்ல என்று தெரிந்துகொண்டும் யுத்தம் செய், இது நீ எனக்கு செய்யும் பூஜை என்று எண்ணிக்கொள். எந்த ஜனங்கள் நான் உத்தமனென்று தெரிந்து கொண்டு எல்லா கர்ம பலன்களையும் என்னிடம் ஸமர்ப்பணம் செய்து அஸாதாரணமான பக்தி ரூப உபாயத்தால் என்னை தியானம் செய்து கொண்டு என்னை ஆராதிக்கின்றனரோ ஹே அர்ஜுனா! அவ்வாறு என்னிடம் மனம் வைத்த அந்த ஜனங்களை மிருத்யு ரூபமான ஸம்ஸார ஸமுத்திரத்தினின்றும் நான் சீக்கிரமே உத்தாரம் செய்கிறேன். கண்ணிற்படாத ரூபமுள்ள என்னால் எல்லா உலகும் வியாபிக்கப்பட்டிருக்கிறது, எல்லா

ஜகத்தும் என்னிடம் அடங்கியிருக்கிறது, ஆனால் நான் அந்த பிராணிகளிடம் அவர்களின் அதீனமாய் இல்லை. நான் எப்பொழுதும் மிகவும் பூர்ணமாயும் தோஷமில்லாததாயுமுள்ள ஸமஸ்த குணங்களுள்ள சரீரமுள்ளவன், ஸமர்த்தனானவன், ஸமஸ்த தோஷங்களின் ஸம்பந்தமில்லாததாயும், ஒரே வகையாயும் நித்யமாயுமுள்ள மங்களமான சரீரமுள்ளவன், குறைவில்லாதவன், என்றிவ்வாறு சொல்லப்பட்டவனுயுள்ள இந்திர புத்திரனான அர்ஜுனன், ஹே கிருஷ்ண! உன் வியாப்தியை எனக்கு காண்பிப்பாய் என்று பிரார்த்தித்தான். பிறகு பகவான் கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு திவ்ய பார்வையைக் கொடுத்து அவனுக்கு எவ்வளவு யோக்யதை உண்டோ அதற்குத் தகுந்தபடி வியாப்தமானதாயும் இடத்தாலும் காலத்தாலும் எல்லா குணங்களாலும் எப்பொழுதும் அபரிச்சின்னமாயுள்ள தன் ரூபத்தை அர்ஜுனனுக்கு காண்பித்தார், கிருஷ்ணர் அர்ஜுனனால் பிரார்த்திக்கப்பட்டவராய் அவ்வாறு வியாப்தமான ரூபத்தை அக்காலத்திய மனுஷ்யர்களின் அளவுப்படி முன்போல் அர்ஜுனனுக்கு காண்பித்தார். விச்வ ரூபம் காட்டியபின் மீண்டும் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தார். ஞானத்திற்கு ஸாதனம் க்ஞேயமான (அறியத்தகுந்த) பரதத்வம் பிரகிருத்யாதி ஸ்வரூபம் இவைகளை கிருஷ்ணர் உபதேசிக்கவும், இவ்வாறு கிருஷ்ணரால் உபதேசிக்கப்பட்ட அர்ஜுனன் பாணத்துடன் கூடிய தனுஸ்ஸை எடுத்துக்கொண்டான்.

பிறகு இரு ஸைன்யங்களும் வ்யூஹம் கூட்டிக்கொண்டு நிற்கவும் பீமஸேனர் கர்ஜித்துக்கொண்டு துரியோதனாதிகளின் ஸமூகத்திற்கு வந்து சேர்ந்தார். திருதராஷ்டிரரின் குமாரர்கள் எல்லோரும் பீமஸேனரைத் தடுத்தனர். பீமஸேனரின் சிரஸ்ஸின்மீது பாணவர்ஷம் செய்தனர், க்ஞாதி ஜனங்கள் அடித்தனர். சீக்கிரம் அவர்களை தான் அடிக்கலாகாது என்று எண்ணத்துடன் பீமஸேனர் அவர்களை அடிக்காமலேயே சத்ருக்களால் பாணப்ரஹாரங்கள் அடைந்து வரவும் பாண்டவர்களின் குமாரர்களான அபிமன்யு முதலான வீரர்கள் துரியோதனாதிகளிடம் பொறுக்கமாளததான பாண விருஷ்டிகளைச் செய்தனர்.

(தொடரும்)

# ஆசாரமாலை

(முன் 224-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் தம் பாஷியங்களில் ஆங்காங்கு காயத்ரியால் சொல்லப்படும் பகவத் ரூபங்கள் என்று எவைகளைச் சொல்லியிருக்கிறாரோ அவைகளை எல்லாம் ஸங்கிரஹித்து நமது மித்திரன் வாசகர்களுக்காக அறிவிக்கப்படுகிறது:

1 பூரா ஓங்காரத்தாலும் சொல்லப்படும் பகவத் ரூபம் எங்கும் வியாப்தமாயுள்ள வாஸுதேவனும் நாராயணனுமாவார்கள்.

2 ப்ரணவமாகிய ஓம்காரத்திலுள்ள அஷ்டாக்ஷரங்களாவன:—

அ என்னும் எழுத்தால் ப்ரதி பாதிக்கப்படும் ரூபங்களாவன:

i விச்வம் ii பிரம்மாவின் அந்தர்க்கதராயுள்ள பிரம்மாவெனப்படும் பத்மநாபன் iii கிருஷ்ணன்

உ என்னும் எழுத்தால் ப்ரதி பாதிக்கப்படும் ரூபங்களாவன:

i தைஜஸன் ii வைகுண்ட லோகத்திலுள்ள வைகுண்டர் என்னும் பெயருள்ள வைகுண்டர் iii வாமனன்

ம என்னும் எழுத்தால் நிரூக்கப்படும் பகவத் ரூபங்களாவன·

i ப்ராக்ஞன் ii ருத்திரனிடம் அந்தர்க்கதராயுள்ள நரஸிம்மனும் iii ருத்திரன் என்று சொல்லப்படும் நரஸிம்மனும்

பிந்து வால் சொல்லப்படும் பகவத் ரூபங்களாவன;

i துரீயன் ii அநிருத்தன் iii வராஹன்

நாதம் இதனால் அறிவிக்கப்படும் பகவத் ரூபங்கள்:

i ஆத்மா ii ப்ரத்யும்னன் iii விஷ்ணு

கோஷம் இதனால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்கள்:

i அந்தராத்மா ii ஸங்கர்ஷணன் iii பரஞ்ஜோதி

சாந்தம் இதனால் ப்ரதி பாதிக்கப்படும் பகவத் ரூபங்களாவன;

i பரமாத்மா ii வாஸுதேவன் iii பரப்பிரம்மம்

அதி சாந்தம் இதனால் ப்ரதி பாதிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:

i க்ஞானாத்மா ii நாராயணன் iii வாஸுதேவன்

3 வ்யாஹிருதிகளாகிய:—

பூ: என்னும் எழுத்தால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:

i அநிருத்தன் ii வாஸுதேவன் iii வாராஹன் iv பிருதிவீயிலுள்ள பிருதிவீ எனப்பெயர் கொண்ட வாஸுதேவன்: v அக்னியிலுள்ள அக்னி எனப்பெயர் கொண்ட ஸங்கர்ஷண வாஸுதேவர் vi ரிக்வேதத்திலுள்ள ரிக்வேதம் எனப்பெயர் கொண்ட ப்ரத்யும்ன வாஸுதேவர் vii ப்ராணத்திலுள்ள ப்ராணர் எனப்பெயர் கொண்ட ஸங்கர்ஷண வாஸுதேவர்.

புவ: என்பதால் ப்ரதி பாதிக்கப்படும் ரூபங்களாவன:

i ப்ரத்யும்னன் ii ஸங்கர்ஷணர் iii நரஸிம்ஹன் iv அந்தரிக்ஷத்திலுள்ள அந்தரிக்ஷர் என்று பெயருள்ள வாஸுதேவ ஸங்கர்ஷணர் v வாயுவிடமுள்ள வாயு எனப்பெயர் கொண்ட ஸங்கர்ஷண ஸங்கர்ஷணர் vi ஸாம வேதத்திலுள்ள ஸாமர் என்று பெயர் கொண்ட ப்ரத்யும்ன ஸங்கர்ஷணர் vii அபானரிடமுள்ள அபானரென்று பெயர் கொண்ட அநிருத்த ஸங்கர்ஷணர்.

ஸுவ. என்பதால் ப்ரதி பாதிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:

i ஸங்கர்ஷணர் ii ப்ரத்யும்னர் iii கபிலர் iv ஸ்வர்க்கத்திலுள்ள ஸ்வர்க்கரென பெயர் கொண்ட வாஸுதேவ ப்ரத்யும்னர் v ஆதித்யனிடமுள்ள ஆதித்யரெனப் பெயர் கொண்ட ஸங்கர்ஷண ப்ரத்யும்னர் vi யஜுர் வேதத்தால் நிரூபிக்கப்படும் யஜுஸ் என்று பெயருள்ள ப்ரத்யும்ன ப்ரத்யும்னர் vii வ்யான வாயுவிடமுள்ள வ்யானரெனப் பெயர் கொண்ட அநிருத்த ப்ரத்யும்னர்

மஹ: என்பதால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:

i வாஸுதேவர் ii அநிருத்தர் iii ஹயக்ரீவன் iv ஆதித்யனிடமுள்ள ஆதித்யரெனப்பெயருள்ள வாஸுதேவ அநிருத்தன் v சந்திரனிடமுள்ள சந்திரனெனப் பெயர் கொண்ட ஸங்கர்ஷண அநிருத்தன் vi ஸர்வ தேவதைகளிடமுள்ள ப்ரம்ம சப்தத்தால் சொல்லப்படும் ப்ரத்யும்ன அநிருத்தன் vii அன்னத்திலுள்ள அன்னம் எனப்பெயர் கொண்ட அநிருத்தன்

இந்த எல்லா வ்யாஹ்ருதிகளால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபம் வாஸுதேவ அநிருத்தன்.

காயத்ரியின் இருபத்தி நான்கு அக்ஷரங்களால் சொல்லப்படும் பகவத் ரூபங்கள்:—1 கேசவன் 2 நாராயணன் 3 மாதவன் 4 கோவிந்தன் 5 விஷ்ணு 6 மதுஸூதனன் 7 திரிவிக்ரமன் 8 வாமனன் 9 ஸ்ரீதரன் 10 ஹ்ருஷீகேசன் 11 பத்மநாபன் 12 தாமோதரன் 13 ஸங்கர்ஷணன் 14 வாஸுதேவன் 15 ப்ரத்யும்



னன் 16 அநிருத்தன் 17 புருஷோத்தமன் 18 அதோக்ஷஜன் 19 நரஸிம்மன் 20 அச்யுதன் 21 ஜநார்த்தனன் 22 உபேந்திரன் 23 ஹரி 21 கிருஷ்ணன்

இந்த இருபத்தி நான்கு பகவத் ரூபங்களின் சரீர வண்ணம் அவர்கள் கையில் தரித்திருக்கும் ஆயுதங்கள் முதலியவைகளின் விபரம் மற்றொரு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் காணவும்.

காயத்ரியிலுள்ள 1 தத் 2 ஸவிது: 3 வரேண்யம் 4 பர்க: 5 தேவஸ்ய 6 தீமஹி 7 திய: 8 ய: 9 ந: 10 ப்ரசோதயாத் என்னும் பத்து பதங்களால் i விச்வன் ii தைஜஸன் iii ப்ராக்ஞன் vi துர்யன் v அநிருத்தன் vi ப்ரத்யும்னன் vii ஸங்கர்ஷணர் viii வாஸுதேவன் ix புருஷோத்தமன் x நாராயணன் இவர்கள் முறையே நிரூபிக்கப்படுகின்றனர்.

காயத்ரியின் முதல் பாதத்தால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:

i அநிருத்தன் ii சுவேதத்வீபத்திலுள்ள நாராயணன் iii சரீரத்திலுள்ளே அந்தர்க்கதராயும் வெளியே வியாபித்திருப்பவராயுமுள்ள பரப்ரம்மரெனப் பெயர் கொண்ட வாஸுதேவன் iv மூன்று உலகத்தையும் வியாபித்திருக்கும் அநிருத்தன் v ரிக் வேதத்தால் சொல்லப்படும் சிகப்பு நிறமுள்ள சூரியனின் முன் புறத்திலுள்ள கிரணங்களிலுள்ள சிகப்பு நிறமுள்ள வாஸுதேவன்.

காயத்திரியின் இரண்டாம் பாதத்தால் நிரூபிக்கப்படும் ரூபங்களாவன:— i ப்ரத்யும்னன் ii அநந்தாஸநத்திலுள்ள வாஸுதேவன் iii பிரும்ம ஹிருதயமென்று பெயருள்ள ஆகாசமெனப் பெயருள்ள வாஸுதேவன் iv வேதத்தால் சொல்லப்படும் பிரம்மாண்ட வியாபியான ப்ரத்யும்னன் v யஜுர் வேதத்தால் சொல்லப்படும் வெளுப்பு வர்ணமுள்ள சூரியன் இடது கிரணங்களிலுள்ள வெள்ளையான ஸங்கர்ஷணன்.

காயத்திரியின் மூன்றாவது பாதத்தால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:— i ஸங்கர்ஷணன் ii வைகுண்ட லோகத்திலுள்ள வைகுண்டன் iii ஜீவர்களின் உள்ளே வியாபித்திருக்கும் ஆகாசமெனப் பெயர்கொண்ட வாஸுதேவன் iv ஸமஸ்த சேதனர்களையும் வியாபிக்கும் ஒன்பது ஆவரணங்களுள்ள பிரம்மாண்டத்தை வியாபிக்கும் முக்ய ப்ராணனின் அந்தர்கதரான ஸங்கர்ஷணர். iv ஸாம வேதத்தால் நிரூபிக்கப்படும் ச்யாம வர்ணமுள்ள சூரியனின் மேற்புறத்து கிரணங்களிலுள்ள ச்யாம வர்ண ப்ரத்யும்னர்.

காயத்திரியின் நான்காவது பாதத்தால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:— i வாஸுதேவன் ii ஜீவ ஸ்வரூபமாகிய ஹிருதயத்திற்கு நியாமகனுயுள்ள ஆகாசன் எனப்பெயர்கொண்ட வாஸுதேவன் iv ஸமஸ்த ஜீவன்களுக்கும் அந்தர்யாமியாயுள்ள அநந்த பரிமாணங்களுடன் கூடிய வாஸுதேவன் v அதர்வண வேதத்தால் சொல்லப்படும் நீல வர்ணமுள்ள அநிருத்தன்.

பூரா காயத்ரியால் சொல்லப்படுகிறவர் i ஸவித்ரு எனப்பெயர் ii கொண்ட நாராயணர் ஸூர்யனின் அந்தர்க்கதராயுள்ள அநிருத்தர்

காயத்ரியின் ஆறு அம்சங்களால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்களாவன.—

I முதல் அம்சத்தால் காயத்ரியிலுள்ள காயத்ரி என்று பெயருள்ள சூரியனின் காந்தியுள்ள ஸ்திரீ ரூபம் நிரூபிக்கப்படுகிறது.

II இரண்டாவது அம்சத்தால் பூதசப்தத்தால் சொல்லப்படுகிறவரான மத்ஸ்யாதி ரூபங்களும் எல்லோருடைய உள்ளே இருக்கும் ரூபங்களும் நிரூபிக்கப்படுகின்றன.

III மூன்றாவது அம்சத்தால் வாக்கிலுள்ள வாக் எனப்பெயர் கொண்ட ஹயக்ரீவரெனப்படும் ஸ்திரீ ரூபம் நிரூபிக்கப்படுகிறார்.

IV நான்காவது அம்சத்தால் பிருதிவியிலுள்ள ப்ருதிவீ எனப் பெயர் கொண்ட மஞ்சள் வர்ணமுள்ள ஹயக்ரீவன் எனப் பெயர் கொண்ட ஸ்திரீ ரூபம் அறிவிக்கப்படுகிறார்.

V ஐந்தாவது அம்சத்தால் ஜீவர்களுக்குள்ளே வியாபித்திருக்கும் சரீரமெனும் பெயர் கொண்ட சபல வர்ணமுள்ளவன் நிரூபிக்கப்படுகிறான்;

VI ஆறாவது அம்சத்தால் ஹிருதயத்திலுள்ள ஹிருதயன் எனப் பெயர் கொண்ட ச்யாமள வர்ணமுள்ள ஸ்திரீ ரூபம் சொல்லப்படுகிறார்.

(தொடரும்)

## அப்பைய்ய தீக்ஷதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம்.

(முன் 208ம் பக்கம் தொடர்ச்சி)

கஸ்த்வம்லோஹிதலோசஸ்யசாண: ஹம்ஸ: குதோ மானஸாத், கிம் தத்ராஸ்தி ஸுவர்ண பங்கஜவனன்யம்ப: ஸுதாஸன்



னிபம் பூமி:. காஞ்சன பத்மராககசிதா: வைடூர்ய ரோஹா: க்வசித் சம்பூகா: கிமு ஸந்தி நேதி ச பகை: ஆகர்ண்ய ஹீஹீகிருதம் ॥

ஒரு ஸமயம் ஓர் குளக்கரைக்கு ஹம்ஸ பக்ஷி ஒன்று பறந்து வந்து சேர அங்கிருந்த கொக்குகள் ஒன்று கூடி அந்த ஹம்ஸத்தின் ஸமீபம் வந்துசேர்ந்து, கண்களும் மூக்கும் கால்களும் மட்டில் சிவந்து, சரீரமெல்லாம் எங்களைப்போல் வெண்மையாயுள்ள அபூர்வ பக்ஷி நீ யார் என்று கேட்டன. அதற்கு அந்த ஹம்ஸம் அஹம் ஹம்ஸ: நான் ஹம்ஸப் பக்ஷி என்று சொல்லிக்கொண்டது. அதன்மேல் அந்த கொக்குகள் அப்படியா நீ எங்கிருந்து வருகிறாய் என்று கேட்க நான் ஹிமவத்கிரிக்கு அப்பாலுள்ள சதுர்முக ப்ரம்மாவின் மானஸஸரோவரத்தினின்றும் வருகிறேன். நான் அங்கிருப்பவன் என்று சொல்லிக்கொண்டது. அதற்கு கொக்குகள் ஹம்ஸமே! நீ உன்னிருப்பிடமாகிய மானஸஸரோவரத்தை பிரமாதமாக சொல்லிக்கொள்ளுகிறாயே! அப்படி அதில் என்ன விசேஷம் சொல் பார்ப்போம் என்று கேட்டன. அதற்கு ஹம்ஸம் கொக்குகளே! எங்கள் மானஸஸரோவரத்தில் இந்த உங்கள் குளத்தில் உண்டாவதுபோல் சாதாரணமான தாமரைகள் உண்டாவதில்லை. எல்லாம் ஸ்வர்ணமயமான தாமரைகள் நல்ல வாசனையுள்ளவைகள் உண்டாகின்றன. அங்கு எங்கள் மானஸஸரோவரத்திலிருக்கும் ஜலம் அமிருதம்போல் அவ்வளவு ருசியாயிருக்கும். குளத்தின் சுற்றிலுமுள்ள தரை எல்லாம் தங்கத்தில் பத்மராக மாணிக்கம் இழைத்ததாக இருக்கும் என்று அதிகமாய் வர்ணிக்கத்தொடங்கியது. அப்போழுது கொக்குகள் குறுக்கிட்டு அந்த வர்ணனையை அடக்கிக்கொண்டு அதெல்லாம் இருக்கட்டும். சம்பூகங்களெனப்படும் நத்தைக் கூடுகள் அந்த குளத் தங்கரையில் கிடைக்கின்றனவா என்று கேட்க அவைகள் உண்டாவதில்லை என்று ஹம்ஸம் சொல்லிற்று. அதற்கு எல்லா கொக்குகளும் சீ, இவ்வளவுதானோ! பிரயோஜனமில்லை. என்று பரிகாசம் செய்தன. என இவ்வாறு சொல்லப்படுவதுண்டு. மானஸஸரோவரத்திலிருந்துகொண்டு அங்குள்ள பழக்க வழக்கங்களைக்கொண்ட உத்தம ஜாதியான ஹம்ஸத்தைப் பார்த்து சில விஷயங்களில் மட்டில் அதனுடன் ஸாம்யமடைந்த கொக்குகள்

அதமமான விஷயத்தைக்கொண்டு அதை குறை கூறி பரிகாசம் செய்த கதையைப்போலத்தான் வெகு ஸ்வல்ப விஷயங்களை அறிந்துகொண்ட அப்பைய்யதீக்ஷிதர் உத்தம ஹம்ஸராய் அநேக அபூர்வ கிரந்தங்களை ஆராய்ச்சி செய்தவரான ஸர்வக்ஞாசாரியாளை, அதமமான யுக்தியாதிகளைக்கொண்டு பரிகாசம் செய்து குறைகூறியிருக்கிறார் என்று இந்த நிரூபத்தால் வாசகர்களுக்கு நன்கு விளங்கும். விஷயங்களை த்வேஷ புத்தியில்லாமல் ஸாவதானமாய் விமரிசைசெய்து நன்றாய் மனதிற்கொண்டுவந்தால் தான் அதன் குண தோஷங்கள் புலப்படும். பிறகு குணங்களை ஆமோதிப்பதற்கோ தோஷங்களை எடுத்துக் கண்டிக்கவோ முன்வந்தால் அந்த வாதம் திடமாயும் அழகாயும் இருக்கும். அதில்லாமல் ஸ்ரீ மத்வாசாரியார் தன் அத்வைத மதத்திற்கு காலாக்னியாயிருக்கிறார் என்றும் அத்வைத மதம் அழிந்து எவ்வகை பிரமாணத்தாலும் நிலை நிற்க இடமில்லாமல் எல்லா மதத்தினர்களாலும் பரிகாசம் செய்ய நேரிட்டது என்றும் எண்ணி எண்ணி துக்கமடைந்து மனம் சோர்ந்து புத்தி கலங்கி தமக்கு பரம சத்ருவான இம்மத்வாசாரியாரை எல்லா விதத்திலும் குறை கூறி அனைவரும் அவமதிக்கச் செய்கிறேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டார். அதனால் ஸ்ரீ மத்வாசாரியாருடைய குணங்களெல்லாம் தோஷியான இவருக்கு தோஷங்களாகவே தோன்றின. அதனால் அவைகளைப்பற்றி பூரா விமரிசை செய்யவும் இவருடைய மனம் இடம் கொடுக்கவில்லை. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்ற கதை அப்பையதீக்ஷிதருக்கு சரியானபடி ஒத்திருக்கிறது. இவர் இந்த தூஷணைகளை வாய்விட்டு வெளியில் சொன்ன க்ஷணமே பளீரென்று ஒருவர் கொடுத்தார் இவருடைய கன்னத்தில் ஓர் அறையை. இது உண்மை. அப்பைய்யகபோல சபேடிகா என்று அந்த நூலுக்கு பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு கன்னத்திலறைந்தவர் அதாவது கபோல சபேடிகாவை இயற்றியவர் அந்த தீக்ஷிதர்வாளின் நண்பரே. அவர் ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் பரம குருவான ஸ்ரீ விஜேந்திரஸ்வாமிகள்தான். அப்பைய்யதீக்ஷிதர் இவ்வாறு தூஷணைகளை எடுத்துச் சொன்ன தம் மத்வமுகமர்த்தனமென்



னும் நூலை ஸ்ரீ விஜயீந்திரரிடம் கொடுத்து, பார்த்தீரா? இந்த நூலை! இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்? என்று கேட்டார். ஸ்ரீ விஜயீந்திரர் அந்த கிரந்தாரம்பத்திலுள்ள "ததாபி ஆனந்ததீர்த்ய மதமக்ராஹ்யமேவ ந: । யத்ர வைதிகமர்யாதா பூயஸ்யாகுலதாம் கதா ॥" என்று சுலோகத்தைப் பார்த்துவிட்டு "தீக்ஷிதர்வாள் மிகவும் சந்தோஷம். இந்த நூலை கண்டிக்கும் சிரமமே நமக்கு நீர் கொடுக்கவில்லை" என்று புஸ்தகத்தை கீழே வைத்துவிட்டார். அப்பைய்யதீக்ஷிதர் அதை விளக்கச்சொல்ல வேண்டுமென்று சொல்ல, ப்ரயத்னப்பட்டாலும் எங்கள் ஆசாரியாணியாயிருக்கும் பாரதி தேவியின் ப்ரேரணையால் உங்கள் மதத்தைதான் நீர் அவைதிகமென்று கிரந்தத்தின் துவக்கத்திலேயே ஒப்புக்கொண்டிருக்கிறீர். எவ்வளவு மறைந்தாலும் உண்மைதானே வெளிவரும் என்று சொல்ல, அந்த சுலோகத்திற்கு விஜயீந்திரரின் அர்த்தமென்னவென்று தீக்ஷிதர் கேட்டார். விஜயீந்திரர் சொன்னதாவது "ஹே! ஆனந்ததீர்த்திய! ஆனந்ததீர்த்தரின் மதத்தை அவலம்பித்திருக்கும் ஹே விஜயீந்திரயதே! அல்லது ஹே மாத்வனே! நான் சொல்வதைக்கேள். உண்மையை சொல்லிவிடுகிறேன். ந: மதம் அக்ராஹ்யமேவ எங்கள் மதம் என்கிற அத்வைத மதம் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததேயல்ல. இதில் சந்தேகமில்லை, ஏனெனில் யத்ர வைதிக மர்யாதா பூயஸீ ஆகுலதாம்கதா இந்த அத்வைத மதத்தில் வைதிக மரியாதை அதிகமாய் நாசமடைந்திருக்கிறது என்றும் அர்த்தம் செய்யலாமல்லவா என்று சொன்னார். உடனே தீக்ஷிதர் தன் தவறுதலை ஒப்புக்கொண்டு ஆனந்த தீர்த்தியமத மக்ராஹ்யமேவ ந: என்பதை ஆனந்ததீர்த்தியம் மதம க்ராஹ்யமேவ ந: என்று மாற்றிக்கொண்டார். அவ்வாறு விஜயீந்திரர் தன் நண்பரான அப்பைய்யதீக்ஷிதரை கிரந்தாரம்பத்திலேயே தன் தவறுதலை ஒப்புக்கொண்டு கிரந்தத்தை திருத்தச் செய்தார் என்பது பிரஸித்தமான விஷயம். அதுமட்டுமல்ல. ப்ரதமகபளே மக்ஷிகாபாத: என்று ஒருவன் இலையில் சாப்பிட உட்கார்ந்து முதல் கவளத்தை வாயில் வைத்துக்கொள்ளும்பொழுதே அதில் ஈ விழுந்து அவனுடைய தொண்டையை [illegible] செய்து [illegible] போஜனம் செய்யமுடியாமற் போய்விட்டது என்று சொல்வ

துண்டு, அதுபோல் எமது ஆசாரியாளை விஷ்ணு ஸர்வோத்மத்வத்தை ஸ்தாபித்த உத்தம புருஷரை உலகம் போற்றிடும். ஆயிரக்கணக்கான பிரமாணங்களை பரிசீலனை செய்த மகானை துவேஷித்து தூஷணை செய்ய வாயெடுக்கும்பொழுதே முதல் வார்த்தையே அபத்தமாக வெளிவந்திருக்கிறது, எமது ஆசாரியாள் சதுர, கமடமாடரம் முதலான சுருதிகள் என்று அபிரஸித்தமானவைகளை உபயோகப்படுத்தியிருக்கிறாரென்று ஆரம்பத்தில் தூஷணை செய்திருக்கிறார். இந்த விஷயம் எமது ஆசாரியாளின் பாஷியம் அனுவ்யாக்யாநிகளில் காணப்படலாம் என்றும் அறிவித்துள்ளார். இந்த ஓர் விஷயமே தீக்ஷிதர்வாளின் முட்டாள்தனத்தை விளக்கப்போதுமானது. எமது ஆசாரியாள் எங்குமே சதுர சுருதி என்று பிரமாணத்தை பிரயோகம் செய்யவில்லை, அபத்தக்களஞ்சியமான இவருடைய ஆசாரியாளான சங்கராசாரியாரின் ஒரு லக்ஷத்து இருபத்தையாயிரம் கிரந்தங்களைக்கொண்ட நூல்களைப் போல் எமது ஆசாரியாளின் நூல்கள் அவ்வளவு அதிகமானதல்ல. தாத்பரியம் மகா கம்பீரமேயன்றி அளவு அதிகமில்லை. சுலபமாய் யாரும் அந்த ஸர்வ மூல கிரந்தங்களை பிறட்டிப் பார்த்து இம்மாதிரி பிரயோகமில்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அப்பைய்யதீக்ஷிதர் துவேஷ புத்தியைக்கொண்டே ஆசாரியாளின் நூல்களை பிறட்டிப் பார்த்ததால் புத்தித்தடுமாறி ஸ்பஷ்டமாயுள்ளதும் விபரீதமாகவே கண்ணுக்கு தென்பட்டது, ஸர்வக்ஞசாரியாரான ஸ்ரீ பகவத்பாதாளைவிட தான் மகா பண்டிதரென்று அவருக்கு மமதை பிடித்து அகம்பாவம் மூளைக்கு ஏறியிருந்ததால் அதை விமரிசை செய்யவும் முடியாமற்போய்விட்டது. எல்லோரும் நகைக்கும்படியான பரிதாப நிலைமை அடைந்தார்.

(தொடரும்)

# சங்கரலீலா விலாஸம்.

(முன் 146-ம் பக்கம் தொடர்ச்சி)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் M சுப்புராவ் M. A., எழுதுவதாமது:—

மாத்வர்கள் ஆதியில் ஸ்மார்த்தர்களாயிருந்து தம் குலத்தை விட்டவர்கள் ஆதலால் மாத்வர்கள் அன்ய ரேதஸ்களென்றும் பித்ரு த்ரோஹிகளென்றும் ஜாராஜர்களென்றும் சாம்ப சாஸ்திரிகள் கூறிய தோஷத்திற்கு பதில் சொல்லுகிறேன்:—



அனுக்ரஹத்தால் தர்போதா சிரவணம் செய்யும் எல்லா ரஹஸ்யத்தையும் தன் புத்தியின் தோற்றத்தின் சக்தியாலேயே நன்றாய் அறிந்தவருமான அந்த மத்வாசாரியாரின் ஏற்கனவே இருந்துவரும் புத்தியை சேஷசாயி பகவானாகிற வேதவியாஸர் இன்னமும் விசேஷமாய் விளங்கச்செய்தார். 6 பகவான் வேதவியாஸரிடமிருந்து சாஸ்திர சிரவணம் செய்தபின் பூர்ண மனதுடன் கூடிய மத்வாசாரியார் ஸ்ரீ வேதவியாஸரின் ஸகாய பாக்யத்துடன் அந்த பதரிகாசிரமத்திலேயே மற்றொரு இடத்தில் விளங்கி வரும் நாராயணரெனப்படும் ஹரியின் மற்றொரு ரூபத்தை நமஸ்கரிக்கச் சென்றார். 7 அந்த சிரேஷ்டமான ஆசிரமத்தில் புகையில்லாமல் ஜ்வலிக்கும் அக்னியைப் போல பிரகாசிப்பவராயும் உத்தமமான மரவுரியைக் கௌபீனமாகவும் மௌஞ்சி எனப்படும் தர்ப்பக்கயிற்றை அரிஞாணமாகவும் நன்றாய் தரித்துக்கொண்டு பிரம்மசாரியின் நியமத்தோடிருப்பவரும் தலையில் விளங்கும் ஜடா மண்டலத்துடனிருப்பவரும் 8 மிகவும் ஜயிக்கமுடியாத மனம் நாக்கு முதலிய இந்திரியங்களின் ஜயத்தை சுவபாவமாகவே கைகொண்டு குளிர் மழை முதலியவைகளைப் பொருத்து உபவாஸங்களைச் செய்தல் தரையிலேயே படுத்தல் முதலான விரதங்களால் தபஸ் செய்து கொண்டு கஷ்டப்படுகிறவர் போல் ஸாமானியர்களுக்கு காட்டிக் கொடுத்து வனத்தில் வஸிப்பவரும் உண்மையில் எப்பொழுதும் இடைவிடாது தன் ஸ்வரூப பூதமாக இருந்து வருவதும் விஷயங்களில் விருப்பமில்லாமல் துக்க ஸம்பந்தம் முதலான தோஷங்களில்லாது பரமசுத்தமாய் இருந்து வருவதுமான ஸம்பூர்ணமாயுள்ள தன் ஆனந்தத்தில் அனுபவங் கொண்டவருமான புராண புருஷராயுள்ள நாராயணனைக் கண்டார். 9 பூர்ண மனதுள்ள மத்வாசாரியார் பாபத்தால் அடைய முடியாதவராயுள்ள தர்மபுத்திரரான அந்த நாராயணரை ஆச்சரியத்தால் அகன்று பிரகாசிப்பதாயுள்ள செந்தாமரையின் காந்தியைப் பறிப்பதாயுள்ள காந்தியுடன் கூடிய இரு கண்களால் கண்டு அடியில் கண்டபடி தியானம் செய்தார். 10 மகா லட்சுமியுடன் கூடி எப்பொழுதும் விளங்கும் ஸர்வோத்தமராயுள்ள புராண புருஷரான அந்த ஹரி சதுர்முகன் முத

லான தேவர்களுடன் கூடிய பதினான்கு லோகங்களுக்கும் ப்ரளயம் தருகிறாரோ அவர் தான் இந்த நாராயண ரிஷி என்று யமதர்மனின் புத்திரராய் அவதரித்திருக்கிறார். 11 உலகத்திற்கு ஸம்ஹாரம் மட்டில் இவர் செய்பவரன்று, உலக சிருஷ்டியையும் இவர் செய்கிறார். இந்த பகவான் ஸத்வம் ரஜஸ் தமஸ் ஆகிய மூன்று குணங்களை ஸ்வரூபமாகக் கொண்ட ஜடப்பிருகிருதியிடமிருந்து மஹத் தத்வத்திற்கு அபிமானியான பிரம்மாவை இவர் சிருஷ்டித்தார். அந்த மஹத் தத்வாபிமானி பிரம்மாவிடமிருந்து வைகாரிகம் தைஜஸம் தாமஸம் என்று மூன்று வகையான அஹங்கார தத்வத்தின் அபிமானியாயுள்ள ருத்திரனை சிருஷ்டித்தார். அந்த மூவகை அஹங்காரங்களில் வைகாரிகாஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்களின் அபிமானிகளான தேவர்களையும் தைஜஸாஹங்காரத்திலிருந்து பத்து இந்திரியங்களையும் தாமஸாஹங்காரத்திலிருந்து பிருதிவி அப்பு வாயு ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்களையும் அவைகளின் குணங்களையும் சிருஷ்டித்தார். இவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட தத்வங்களினின்றும் பிரம்மாண்ட மண்டலத்தை சிருஷ்டித்தார். இந்த பிரம்மாண்டத்தில் பதினான்கு லோகங்களையும் சிருஷ்டித்தார். 12 இவர் தான் பிரம்மா வாயு கருடன் சிவன் இந்திரன் இவர்களை அதிபதிகளாகக் கொண்ட தேவர்கள் கந்தர்வர்கள் மனுஷ்யர்கள் அஸுரர்கள் முதலானவர்களை விளையாட்டாய் இடைவிடாது சிருஷ்டிக்கிறார், ஸம்ரக்ஷிக்கிறார், ஸம்ஹாரம் செய்கிறார், அவரவர்களுக்கு தகுந்த ஸ்தானத்தை தருகிறார். 13 எண்ண முடியாததான தோஷங்களற்ற கல்யாண குணங்களுள்ளவரும் தோஷமில்லாதவருமான இந்த நாராயணர் பிரதானமாய் தன் ஸாமர்த்தியத்தாலேயே தன் அதீனமாக்கிக் கொண்டு எல்லா ஜகத்துள்ளவராயினும் தன் பக்த ஜனங்கள் தன் எல்லா அவதார காரியங்களையும் ஸ்மரித்தல் கீர்த்தனம் செய்தல் நமஸ்கரித்தல் இவைகளால் மோக்ஷமடையவேண்டுமென்று பலவகை ரூபங்களைக் கொண்ட அவதாரங்களைச் செய்துள்ளார். 14 இந்த நாராயணர், முதலில் இமையில்லாததாயுள்ள மத்ஸ்யம் போல் அவதாரமெடுத்து குதிரை முகத்துடன் வளர்ந்து விருத்தியடைந்தவனும்



வேதங்களை களவாடியவனுமான ஆதிதைத்யனும் ஸாதுக்களான தேவர்களுக்கு சத்ருவுமான ஹயக்ரீவாஸுரனை ஸம்ஹரித்து நான்கு வேதங்களைக் கொணர்ந்து நான்முகனை பிரம்மாவிற்கு தந்தார். (இந்த சுலோகத்தின் மற்றொரு அர்த்தமாவது— இமை கொட்டாதவர்களாயுள்ள தேவர்களுக்கு ஸ்வாமியான இந்த நாராயணர் குதிரை முகமுள்ள ஹயக்ரீவரின் அவதாரத்தால் வேதங்களை அபகாரம் செய்தவனும் கர்விஷ்டனும் ப்ராசீனனும் தேவ சத்ருவுமான மது என்னும் தைத்யனை ஸம்ஹரித்து நான்கு வேதங்களை பிரம்மாவுக்குக் கொடுத்து உபதேசம் செய்தார். 15 அமிர்த மதன காலத்தில் ஸமுத்திரத்தைக் கடையும்பொழுது மத்தாயிருந்து வந்த மந்தர பர்வதம் மூழ்கிப் போனபொழுது வரர்களாகிய உத்தமர்களான பிரம்மாதி தேவர்களால் ஆஹவமாகிய அழைத்தலை போஷித்த அதற்கு இணங்கியவரும் சரணாகதர்களை ரக்ஷிப்பவருமான இந்த நாராயணர் அலைகளுடன் கூடி விஸ்தாரமாயுள்ள க்ஷீர ஸமுத்திரத்தில் கச்சபம் எனப்படும் கூர்ம சரீரத்துடன் அவதரித்து தேவ சிரேஷ்டர்கள் சத்ருக்களான அஸுரர்களின் புஜதண்ட ஸமூகங்களால் கடைபட்டு அசுரனால் ஸமுத்திர ஜலத்தில் மூழ்கும் மந்தர பர்வதத்தை உயரத் தூக்கினார். அப்படியே பாவம் ஜன்மம் விருத்தி பரிணாமம் க்ஷயம் விநாசம் ஆகிய ஆறு அலைகளைக் கொண்டதும் ஸம்ஸார ஸமுத்திரத்தின் கச்சபமாகிய எல்லையான மோக்ஷத்திற்கு அதிபதியாயிருந்து மோக்ஷத்தை தருவதால் சரண பக்தர்களை ஸ்மரணாதிகளால் பரிபாலிக்கும் இந்த நாராயணரால் வராஹ ரூபத்தால் தேவ சிரேஷ்டர்களுக்கு சத்ருவான ஹிரண்யாக்ஷனுடைய புஜ தண்டத்தின் மண்டலத்தால் இழுக்கப்படுவதால் ஜலத்தினுள்ளே மூழ்கிப்போன பூமியை ஜலத்தின்மீது ஸ்தாபனம் செய்தார். 16 தன் பக்த ஜனங்களின் பயத்தைப் போக்கும் இந்த நாராயணரே வீரியமுள்ளவராய் நரஸிம்ம சரீரம் கொண்டு கோபம் வந்த ஸமயம் தன் நக ஸமூகத்தின் திறமையால் தன் பக்தனாய் தன்னைச் சேர்ந்தவனான பிரஹ்லாதனுடைய சத்ருவும் மகா குரூரனும் அதிகபலங்கொண்டவனும் பிரகாசிக்கும் சரீரமுள்ளவனுமான ஹிரண்யகசிபுவை ஒரு நொடியில் பிளந்தார்

அப்படியே தன் பக்த ஜனங்களின் பயத்தைப்போக்கும் புருஷ ஸ்ரேஷ்டனை இந்த நாராயணர் தாபஸர் என்று அவதாரம் கொண்டு தன்னைச் சேர்ந்த பக்தனை கஜேந்திரனுக்கு சத்ருவும் க்ரூரமானதும் பிரகாசிக்கும் சரீரமுள்ளதுமான பெருத்த சரீரங்கொண்ட ஜலஜந்துவான முதலையை குளத்திலிருந்து வெளியே இழுத்து கோபத்தால் தன் கையிலுள்ள க்ரூரமான சக்ராயுதத்தின் சக்தியைக் கொண்டு ஒரு நொடியில் பிளந்தார். 17 இந்த நாராயணர் அழகான பால்ய வயதுடையவராய் குள்ளமான வாமனவதாரம் கொண்டிருப்பினும் தன் புத்தி ஸாமர்த்தியத்தால் பலிச்சக்கரவர்த்திக்கும் அவனுடைய பரிவார ஜனங்களான எல்லா தைத்யர்களுக்கும் ஆச்சரியத்தை விளைவித்து தனக்கு தன் காலடியால் மூன்று அடி பூமிதான் வேண்டுமென்று கபடம் செய்து அதனால் இந்திர சத்ருவான பலிச் சக்கரவர்த்தியை ரஸாதள லோகத்திலிருக்கும்படி செய்து தன்னைச்சேர்ந்தவனாய் தன் தமயனான மகேந்திரனுக்கு தான் உத்தமமான ஸ்வர்க்க லோகத்தின் ஆதிபத்யத்தைத் தந்தார். அப்படியே இந்த லோகத்தில் நாராயணர் (2) குள்ளமான பாலரூபமுடையவராய் தான் ஜினன் என்பவனின் பிள்ளை என்று காட்டி புத்தாவதாரமெடுத்து அந்த ஜினன் முதலானவர்களால் கொண்டாடப்பட்ட பால்ய வயதுடையவராய் தன் புத்தி ஸாமர்த்தியத்தால் ஜினாதி தைத்ரியர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்துக் கொண்டு இந்த உலகம் அஸத்யம் க்ஷணிகம் விக்ஞானம் சூன்யம் முதலான பௌத்தமதக் கொள்கைகளைக் கொண்ட வார்த்தைகளைச் சொல்லி பெருத்த மோசத்தால் ஜினாதிகளை மோஹித்து அதனால் பலிஷ்டர்களான தைத்யர்களான ஜினாதிகளை அந்தம் தமஸ்ஸில் வீழ்த்தி தன்னை குணபூர்ணத்வாதி குணங்களால் உபாஸிக்கும் தன் பக்த ஜனங்களுக்கு மட்டில் தன் முக்தி பதமாகிய வைகுண்டத்தைத் தந்தார்.

(தொடரும்)



இந்த மதஸ்தாபகரான ஸ்ரீ மத்வாசாரியார் காலத்திலேயே இவ்வாறு நடந்தது: ஐக்யவாதிகளெல்லோரும் சேர்ந்து தங்களைச் சேர்ந்த ஒரு அத்வைத பண்டிதரை (அக்ரூரனை க்ருஷ்ணரிடத்தில் கம்ஸன் அனுப்பியதுபோல்) மத்வாசாரியாரிடம் அனுப்பினர். பூலோகம் பாதாளம் இவைகளிலுள்ள அவைஷ்ணவர்களெல்லாம் இதைக்கண்டு சந்தோஷப்பட்டு எழுந்து உட்கார்ந்தனர். இனி க்ருஷ்ணரின் ஸர்வோத்தம தன்மை உலகிலிருந்து வெளியாகுமென்றும், இனி எங்கள் சிவன் அத்வைதாங்கத்தை தருவாரென்றும் நிச்சயம் செய்து கொண்டு சந்தோஷமாயிருந்தனர். ஆனால் என்ன? ஐயோ பாவம்! இவர்கள் மனோரதம் எல்லாம் வீணாய் போயிற்று. வாதத்தில் மத்வாசாரியாரை ஜயித்து வருவதாய்ப் போன அந்த அத்வைதி பண்டிதருக்கு வாதத்தில் மத்வாசாரியாராலேயே ஏதோ புத்தி மயக்கம் ஏற்பட்டு விட்டது. மம மாயா துரத்யயா என்று சொல்லப்பட்டிருக்கிறபடி க்ருஷ்ணரின் மாயைதான் இதற்கு காரணம் என்று சொல்லவேண்டும். அவைஷ்ணவர்களால் அத்வைதிகளின் சார்பினராக வந்திருந்த அத்வைத மகா பண்டிதரான அந்தத் த்ரிவிக்ரம பண்டிதரே மத்வாசாரியாரால் வாதத்தில் நன்கு பராஜயமடைந்தவராய் போனதுமன்றி அவர் சுயம் ஸ்மார்த்த மதத்தை விட்டு ஸ்மார்த்த வேஷத்தை தொலைத்து தன் சரீரத்தை சக்ர சங்காதி வைஷ்ணவ ஆயுதங்களால் கொளுத்திக் கொண்டு மத்வாசாரியாரிடமிருந்து தப்த முத்திரையைப் பெற்று மத்வாசாரியாரின் வாதத்தையே ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு தங்கள் சொந்த ஸ்மார்த்த வகுப்பார்களின் பேரிலேயே வைஷ்ணவனான விபீஷணன் தன் ராக்ஷஸ சைன்னியத்தின்மீது பாய்ந்தது போல் பெரும் பாய்ச்சலாகப் பாய்ந்தார். ஜாதி கெட்டு மதம் கெட்டு பதிதனாய் ப்ரஷ்டனாய்ப் போன அந்த அத்வைதி பண்டிதரைப் பார்த்து விட்டு ஆசையாயிருந்த அத்வைதி கூட்டங்களெல்லாம் கண்ணை மூடிக்கொண்டார்கள். அந்த கோபத்தில் அவர்கள் இன்னது செய்வதென்று தோன்றாமல் சமீபத்திலுள்ள கம்பங்களில் முட்டிக்கொண்டார்கள். சண்டாளா! இப்படி கெட்டுப்போனாயா என்று கூக்குரல் போட்டனர். எவன் தன் தந்தையை த்வேஷிக்கிறானோ அவன் ஜார புருஷனால் உண்டானவன் என்று ஆகமாட்டானா? ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் விந்தியாத் அன்யரேதஸம் என்று பிரமாணமில்லையா? முதலில் ஸ்மார்த்தராயிருந்து பிறகு வைஷ்ணவராய் மாறிய மத்வாசாரியாருக்கு இந்த தோஷமில்லையா? என்று கேட்டனர். அப்பொழுது த்ரிவிக்ரம பண்டிதாசாரியார் அந்த சபையின் நடுவில் இவ்வாறு பேசினார். பித்ரு த்வேஷி

ஜாரஜன் என்பதில் சந்தேகமில்லை, பிரஷ்டன்தான் சண்டாளன்தான் ஸ்வர்க்க லோகத்திலும் அவனை நிந்திப்பார்கள்தான், நாய்களுங்கூட அவனுடைய மாமிசத்தை புசிக்காதுதான், அவன் அக்னியால் கொளுத்தப்படவும் அருகனாகமாட்டான்தான், ஆகையால் ஹே! அத்வைதி பிராம்மணர்களே நீங்கள் எல்லோரும் ஜகத்திற்கே பிதாவாயுள்ள எங்கள் நாராயணனை த்வேஷம் செய்யாதேயுங்கள் நாராயணன் மித்யை பொய் என்றும் அவன் முன்னடி இருந்திருக்கவில்லை, இப்போதில்லை, இனியும் இருக்கப் போவதில்லை என்றும் சொல்லாதேயுங்கள். நான் கையெடுத்து கூப்புகிறேன், நீங்கள் உத்கிருஷ்டமான பிராம்மண பரம்பரையில் வந்த பிராம்மணயோனியில் பிறந்திருக்கிறீர்கள். ஷோடச ஸம்ஸ்காரத்தால் பவித்ரமாயுள்ள சரீரங்கொண்ட வைதிகர்கள் நிர்குண உபாஸனையாலும் நாராயாணனுடைய துவேஷத்தாலும் உங்கள் இப்பேர்ப்பட்ட பிராம்மண்யம் நாசமாவதுடன் ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் விந்த்யாத் அன்ய ரேதஸம் என்னும் உங்கள் பிரமாணத்தின்படியே பித்ருத்ரோகம் ஜாரஜத்வம் முதலான தோஷங்கள் உங்களுக்கு ஸம்பவிக்கின்றன. நாராயணன் மித்யை என்பது ப்ரபலமான நாராயண த்வேஷமாகும் ஸ்ரீ கிருஷ்ணர் எங்கள் எல்லோருக்கும் தந்தை அவர் சொல்வதாவது:—

1 பிதாஹமஸ்ய ஜகத: என்றும் 2 ஸர்வயோனிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்பவந்தியா: என்றும் புராண கிரந்தங்களில் 3 த்வமேவ மாதா ச பிதாத்வமேவ என்றும் 4 யோ அன்யதைவ ஸ்திதம் விஷ்ணும் அன்யதா ப்ரதிபத்யதே | கிம் தேன க்ருதம் பாபம் சோரேண ப்ரம்ம ஹாரிணா || என்றுமிவ்வாறெல்லாம் அநேக பிரமாணங்களால் நாராயணன் ஜகத் காரணன் என்று ஏற்படுகிறது. மேலும் நாராயணரை வேறு விதமாய்ச் சொல்லுகிறவன் நாராயணத்வேஷி என்றும் எல்லா பாபங்களையும் செய்தவனாய் ஆகிறானென்றும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. [குறிப்பு:— தர்ம ஸங்கட காலத்தில் பித்ரு பிதாமஹாதிகளாய் இருக்கும்படியான பீஷ்மாதிகளை எப்படிக் கொல்வதென்று அர்ஜுனன் துக்கப்படவும் தம் தம் வர்ணாசிரமத்திற்கு உசிதமான தர்மமாகிற யுத்தத்தில் தர்மத்திற்கு விரோதமாய் வந்த பித்ருக்களையும் கூட கொல்லலாமென்று ஸ்ரீ கிருஷ்ணர் அபிப்ராயப்படவும் அதையனுசரித்து அர்ஜுனன் நாராயண த்வேஷிகளான எல்லோரையும் ஸம்ஹாரம் செய்திருக்கிறான். ஸ்ரீ கிருஷ்ணரை மித்யை என்று சொல்லும் சாம்ப சாஸ்திரிகள் துரியோதனனுடைய சேனையில் இருந்திருக்கும் பக்ஷத்தில் அர்ஜுனன் என்ன செய்திருப்பானென்பதை வாச



கர்களே நிச்சயிக்கலாம். சாம்ப சாஸ்திரிகள் பிதாவின் ஸ்தானத்தில் இருந்திருந்த போதிலும் 'ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் விந்த்யாத் அன்ய ரேதஸம் என்று உபதேசம் செய்திருந்த போதிலும் தத்வ ஞானியான கிருஷ்ணர் அவரைக் கொல்லும்படிக்கே உபதேசம் செய்திருக்க முடியும். ஞானியாயும் க்ஷத்திரிய சிரேஷ்டனாயுமுள்ள அர்ஜுனனும் சம்ஹாரம் செய்தே இருப்பான். அர்ஜுனன் க்ஷத்திரியன் ஆகையால் அவன் ஆயுத யுத்தத்தில் பிரவிருத்தி அடைந்தான். த்ரிவிக்ரம பண்டிதர் பிராம்மணர், அவர் வாக் யுத்தத்தில் பிரவிருத்தித்தார் ஞான கலகத்தில் பிரதிவாதியால் சொல்லப்பட்ட தத்வத்தை ஹேயமென்று நிரூபிக்கப்படுவதுதான் ஸம்ஹாரமாகும். ஸம்பிரதிபன்னமான பிரமாணங்களின் உபன்யாஸங்கள் இல்லாமல் கேவலம் வறட்டு யுக்திகளை சொல்வது அதர்மமாகும். ஆகையால் உத்தம தர்மத்திற்கு விரோதமில்லாமலிருக்கும் சந்தர்ப்பத்தில் தன்ய: புன: பிதாம் த்வேஷ்டி என்னும் நியாயம் பிரவிருத்திக்கும்]

(தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மத்வ விஜயம்.

---

## எட்டாவது ஸர்க்கம்.

(முன் 228ம் பக்கம் தொடர்ச்சி)

## மத்வாசாரியாரின் பதரி வாஸம்.

1 ஸ்ரீமத்வாசாரியார் பதரிகாசிரமம் பிரவேசம் செய்த பின்பு தன்னுடைய புத்திஸ்பூர்த்தி என்ன, பிரம்மவர்ச்சஸ் என்ன முதலான உத்தம குணங்களால் அங்குள்ள மகரிஷிகளின், மனதிற்கு மிக்க ஆச்சரியத்தை விளைவித்துக் கொண்டிருந்து ஒரு ஸமயம் ஏகாந்தத்தில் வேதநாயகரான ஸ்ரீவேதவியாஸரை கேட்கத்தகுந்த பிரமேயங்களைக் கேட்பதற்காக அணுகினார், 2 அழகான ரஹஸ்யங்களை ஸம்பூர்ணமாய் அறிந்து மீர்ந்ததை எல்லாம் பாக்கி இல்லாமல் ஸ்ரீவேதவியாஸரால் உபதேசம் செய்யப்பட்டதை அறிந்து பூர்ணசித்தரான மத்வா

சாரியாருக்கு ஸ்ரீவேத வியாஸரின் சிஷ்யராய் இருப்பது பொருந்தும். ஜகத்பதியான வேதவியாஸருக்கும் மத்வாசாரியாருக்கு குருவாய் இருப்பது பொருந்தும், பகவான் பிரம்மாதி ஸமஸ்த தேவர்களுக்கும் தத்வோபதேசம் செய்தபோதிலும் ஸம்பூர்ண யோக்யதையுள்ள பிரம்ம வாயுகளுக்கு எவ்வளவு பூர்ணமாய் உபதேசம் செய்கிறாரோ அவ்வளவு ப்ரமேயங்களை அவர்களுக்கு குறைந்த யோக்யதையுள்ள ருத்ராதிகளுக்கு உபதேசம் செய்வதில்லையாதலால் ப்ரமேயங்களை பூர்ணமாய் உபதேசம் செய்வதை எல்லாம் ஸம்பூர்ணமாய் அறிபவரான வாயு பகவானின் அவதாரமான மத்வாசாரியாருக்கும் அவ்வாறு ஸம்பூர்ணமாய் உபதேசம் செய்யும் பகவானான வேதவியாஸருக்கும் குரு சிஷ்யபாவம் முற்றிலும் பொருந்தும் என்று தேவர்கள் கொண்டாடினார்கள். 3 கிருஷ்ணரெனப்படும் ஸ்ரீ வேதவியாஸர் அவருடைய முன் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணராய் இருந்தபொழுது எல்லா வஸ்துக்களும் சம்பூர்ணமாய்க் கைக்கொண்டதான தன் வாசஸ்தலமாயுள்ள துவாரகாபுரியை நரகாஸுரன் முதலானவர்களை ஜயித்து அவர்களிடமிருந்து அபஹாரம் செய்யப்பட்ட ஏராளமான நவரத்னாதி உத்தம வஸ்துக்களால் மீண்டும் நிரப்பியதும் அவைகளை எல்லாவற்றையுமே அந்நகர் உட்கொண்டதும் ஆச்சரியமாய் இருந்ததுபோல் முன்னமேயே தத்வக்ஞானம் ஸம்பூர்ணமாய் நிறைந்ததாயும் தாராளமாயுமுள்ள மத்வசாரியாரின் ஹிருதயம் கிருஷ்ணரான வேதவியாஸரால் மீண்டும் தத்வஞானம் உபதேசிக்கப்பட்டு அதனால் நிரப்பப்பட்டதும் அது கைக்கொண்டதும் மிக்க ஆச்சரியமாயிருந்தது. 4. மகாபாரதம் மூலராமாயணமாகிய இதிஹாஸங்களென்ன ஸாத்விகமான பாகவதாதி புராணங்களென்ன பிரம்ம ஸூத்ரங்களென்ன விஷ்ணு பக்தர்களுக்கு பிரியமான பாஞ்சராத்திரகமென்ன இவைகளுக்கு அவருடைய அபிப்பிராயம் இன்னதென்பதை சேர்த்து கணக்கற்றதான வேதங்களின் உத்தமமான அர்த்தத்தை அபரிமித ஞானமுள்ள மத்வாசாரியார் பகவான் வேதவியாஸரிடமிருந்து சிரவணம் செய்தார். 5 ருஜூகணத்தாரில் சிரேஷ்டராயும் எல்லா காலத்திலும் தான் செய்தமேலான



# விதவா விவாக கண்டனம்.

(முன் 172ம் பக்கம் தொடர்ச்சி)

ஜீவதிச்ருயமாணேது புருஷன் உயிருடனிருப்பதாக தெரிய வந்தால் மேற்கண்ட நியமங்கள் இறட்டிப்பாகும் என்று ஸ்பஷ்டமாய்ச் சொன்னதைக்கொண்டே பர்த்தா இறந்துபோன ஸ்திரீயைப்பற்றிய மட்டில் இந்த பிரமாணம் சொல்ல வந்ததாய்த் தெரியவில்லை. தேசாந்திரம் சென்று இறந்துபோன புருஷனுடைய ஸ்திரீயைப்பற்றித்தான் இந்த சுலோகங்கள் விவஸ்தை செய்ய வெளிவந்ததாய் கக்ஷிக்காக ஒப்புக்கொள்வோம். அப்படியேயானாலும் அந்த ஸ்திரீ அன்னியனை விவாகம் செய்து கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறதா என்பதை நேயர்களே மற்றொரு முறை இந்த சுலோகங்களை படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். அன்யம் ஸமாச்ரயேத் என்றால் பிறரை ஆசிரயிக்கலாமென்று பொருள் ஏற்படுகிறது. ஸமாச்ரயேத் என்பதற்கு விவாகயேத் என்று எப்படி இச்சபையாருக்கு அர்த்தமாயிற்றோ தெரியவில்லை. ஓரிடத்திலாவது இந்த சுலோகங்களில் வியக்தமாக விவாகம் செய்து கொள்ளலாமென்று காட்டத்தகும் பதம் இல்லை. அந்தவிதமான பதங்களை போடமுடியவில்லை என்றோ நாம் எண்ணுவது விவாகயேத் என்ற பதப்பிரயோகம், செய்தாலும் சந்தேகா பங்கம் கூட ஏற்படுவதில்லை. ஆதலால் இந்த வாக்யங்களின் அர்த்தம் என்ன ஏற்படுகிறது என்றால் ஒருவளுடைய புருஷன் தேசாந்திரம் சென்று அவனுடைய விருத்தாந்தம் தெரியாமலிருந்தால் அவள் பிராம்மண ஸ்திரீயாயிருந்தால் எட்டு வருஷம் காத்திருந்து வேறொரு பந்துவிடம் சென்று அவனுடைய பாதுகாப்பிலிருக்க வேண்டும். பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவனே விருத்தஸ்து தவிரே பாவே ந ஸ்திரீ ஸவாதந்தரியமர்ஹதி கௌமார தசையில் ஸ்திரீயை தந்தை ஸம்ரக்ஷிக்கிறான் யௌவனத்தில் பர்த்தா காக்கிறான் விருத்தாப்பியத்தில்புத்திரன் காக்கிறான் ஆதலால் ஸ்திரீ எப்போதும் சுதந்திரமாக இருக்கத்தகுந்தவளல்லவென்று மனு விதித்திருக்கிறார். அதன்படி விவாகம் செய்து கொண்ட ஸ்திரீயை பாதுகாக்க கடமைப்பட்ட புருஷன் தேசாந்திரம் சென்றபின் அன்யனுடைய ரக்ஷணையை இவள் எப்போது அடைகிறதென்னும் பிரசினையை தீர்க்க பிராம்மண ஸ்திரீக்கு எட்டு வருஷமென்றும் க்ஷத்திரிய ஸ்திரீக்கு ஆறு வருஷமென்றும் வைசிய ஸதிரீக்கு

நான்கு வருஷமென்றும் இந்த ஸ்மிருதி வாக்யங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சூத்ர ஜாதி என்பது த்விஜர்கள் எனப்படும் மூன்று வர்ணத்தாருக்கு தொண்டு புரியக்கூடியதானதாலும் அதனால் அந்த ஜாதியார் மற்றமூன்று ஜாதியாரிடம் எப்பவும் ரக்ஷிக்கத்தகுந்தவரானதாலும் அந்த சூத்ர ஜாதி ஸ்திரீ தன்னைக் காத்துவந்த புருஷன் தேசாந்திரம் சென்றவுடனே உத்தம ஜாதியார்களான மற்ற மூன்று ஜாதியாரின் சம்ரக்ஷணையிலாவது அல்லது சுய ஜாதியாரின் சம்ரக்ஷணையிலாவது இருக்கலாமென்று இந்த வாக்யங்களால் நன்கு விளங்குகிறது. மேலும் அந்த பிரம்ம க்ஷத்திரிய வைசிய ஸ்திரீகள் பிரஸவித்தவர்களாய் இருந்தால் இந்த காலளவுக்கு பாதி வருஷங்கள் தான் காத்திருக்கவேண்டும். புருஷன் தேசாந்திரத்தில் பிழைத்திருக்கிறானென்று மட்டில் தெரியவந்து நிர்ப்பந்தத்தாலோ இச்சையில்லாமலோ அல்லது வேறு எவ்வகையாகவோ அவன் இவளிடம் வராமலிருந்தால் மேற் சொன்ன காலங்களுக்கு இரண்டு மடங்கு காலம் காத்திருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. இச்சபையார் அர்த்தம் செய்தபடி அந்த ஸ்திரீ புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்று ஏற்பட்டால் பல குழந்தைகளைப் பெற்றிருந்த கிழவியாகிய ஓர் பிராம்மணஸ்திரீ எட்டு வருஷங்கழித்து வேறொருவனை விவாகம் செய்து கொள்ளலாமென்று ஏற்படுகிறது அப்பொழுது இந்த பிந்திய புருஷனுடன் இந்த பிராம்மண ஸ்திரீ கிருஹஸ்தாசிரம தர்மத்தை நடத்திக் கொண்டிருக்கும்பொழுது தேசாந்திரம் சென்றிருந்த மூத்த புருஷன் வந்தால் இவள் மூத்த புருஷனுடனிருப்பதா அந்தக்குழந்தைகள் யாரைச் சேர்ந்தவர்கள்? வைதிக கர்மங்களை யார் எப்படி நடத்துவது? சொத்துக்களின் பாத்தியதை யாருக்கு எப்படி உண்டு? முதலான பிரசினைகளை இச்சபையார்தான் நிர்த்தாரணம் செய்யவேண்டுமே யல்லாது வேறு எந்த கர்த்தாவாவது ரிஷியாவது விவஸ்தை செய்யவில்லை. ஒரு கக்ஷிக்காக புதிதாய் ஒரு அர்த்தம் சொல்லப்போய் என்ன விபரீதமாய் முடிகிறதென்பதை இச்சபையார் யோசிக்க வேண்டியது அவசியம்.

(தொடரும்)

# பிரம்ம ஸூத்திரம்

(முன் 220-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமான் M ராமராவ் எழுதுவதாவது:—

## 3-வது அதிகரணம்

இந்த மூன்றாவது அதிகரணத்திற்கு சாஸ்திர யோனித்வ அதிகரணம் என்று பெயர். இந்த அதிகரணத்தில் முன் அதி



கரணத்தில் கூறப்பட்ட பிரம்மத்தின் லக்ஷணம் விஷ்ணுவுக்கு மட்டில் இல்லாமல் பரமசிவன் முதலியோரிடம் இருந்து இந்த லக்ஷணம் அதிவியாப்தமாகிறதில்லை என்பதற்கு தகுந்த பிரமாணங்கள் கூறப்படுகின்றன. பரமசிவன் முதலியோர் ஜகத்துக்கு காரணமாவார்கள். ஏனெனில் அவர்கள் ஸர்வக்ஞர்கள் என்று அனுமானம் சொல்லி, ஜகத்காரணத்வம் பரமசிவன் முதலியோரிடமும் இருந்துவருகிறதென்றும் விஷ்ணுவிடம்தான் இருந்துவருகிறதென்பதையும் நிரூபிக்க முடியாதென்று சொல்லவந்தால் இந்த அனுமானத்தைக் கொண்டு அவர்கள் ஜகத் காரணமாகமாட்டார்களென்றும் ஜகத்காரணத்வம் என்பது அனுமானத்திற்கு விஷயமாகாதென்றும் சாஸ்திரத்தினாலேயே அறியத்தகுந்ததென்றும் இந்த அதிகரணத்தில் நிரூபிக்கப்படுவதால் இதற்கு சாஸ்திரயோனித்வ அதிகரணமென்று பெயர் வந்தது. ஜகத்தின் ஜன்மாதிகளுக்கு காரணத்வமென்பது இவ்வதிகரணத்தின் விஷயமாகும். இந்த ஜகத் ஜன்மாதிகாரணத்வம் விஷ்ணுவுக்குமாத்திரம் உண்டா அல்லது இதரருக்கும் உண்டா என்பது சந்தேகம். விஷ்ணுவைத்தவிர பரமசிவன் முதலியோருக்கும் உண்டு என்று பூர்வ பக்ஷம் விஷ்ணுவுக்குத்தான் இந்த ஜகத் ஜன்மாதி காரணத்வம் உண்டு என்று சித்தாந்தம் செய்யப்படுகிறது.

### ஓம் சாஸ்திர யோனித்வாத் ஓம்

இதன் அர்த்தமாவது:—இந்த ஜகத் ஜன்மாதி காரணத்வம் என்னும் பிரம்ம லக்ஷணம் விஷ்ணுவைத்தவிர இதராளிடம் அதிவ்யாப்தமானதல்ல. ஏனெனில் சாஸ்திர யோனித்வாத் சாஸ்திர—வேதங்களென்ன அவைகளை அனுஸரித்த மகா பாரதம் பாஞ்சராத்திரம் முதலான பௌருஷேய கிரந்தங்களென்ன இவைகளை எல்லாம் யோனித்வாத்—பிரமாணமாகக் கொண்டிருப்பதால் இந்த அர்த்தம் நாவேதவின் மனுதே தம் பிருஹந்தம் ஸர்வானுபூம் ஆத்மானம் ஸாம்பராயே, பூர்ணனும் ஸர்வகர்த்தாவும் அதனால் ஸர்வக்ஞனும் ஸர்வ ஸ்வாமியுமான முன்னடி கூறப்பட்டிருக்கும் அந்த பிரம்மத்தை நன்கு அடைதலாகிய மோக்ஷத்தை. அடைய வேதங்களின் அர்த்தத்தை அறியாதவன் அறியமாட்டான், வேதா

ர்த்தங்களைத் தெரிந்தவன் தான் அறிவாளியென்று தைத்ரீய பிராம்மணத்திலும் இன்னும் இதரசுருதிகளும் சொல்லப்பட்டிருக்கிறது இந்த ஸூத்திரத்தில் சூத்திர கர்த்தா 'வேத யோனித்வாத்' என்று வேதங்களை மட்டில் குறிக்காமல் 'சாஸ்திர யோனித்வாத்' என்று சாஸ்திரமென்னும் பதத்தை உபயோகித்ததற்கு ரிக் யஜுஸ் ஸாம அதர்வாஸ்ச பாரதம் பஞ்ச ராத்திரகம் மூல ராமாயணஞ்சைவ சாஸ்திர மித்யபிதீயதே ரிக் வேதம் யஜுர் வேதம் ஸாம வேதம் அதர்வண வேதம் மகா பாரதம் பாஞ்ச ராத்திரம் மூல ராமாயணம் இந்த ஏழு நூல்களும் சாஸ்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன என்று ஸ்காந்த புராண வசனமிருப்பதால் அந்த பிரமாணத்தை குறிப்பதுடன் பாரதம் முதலான பௌருஷேய கிரந்தங்களும் வேதங்கள் போலவே சாஸ்திரங்கள் என்றறிவிப்பதற்காகவே என்று சொல்லப்படலாயிற்று.

## 4-வது அதிகரணம்.

இதற்கு ஸமன்வயாதிகரணமென்று பெயர். பிந்திய மூன்றாவதான அதிகரணத்தின் விஷயந்தான் இங்கு மீண்டும் விவரமாய் சொல்லப்படுவதால் இந்த அதிகரணத்தின் விஷயம் ஸம்சயம் முதலியவை பிந்திய அதிகரணத்தின் விஷயம் சம்சயம் போலவேதான்.

## ஓம் தத்து ஸமன்வயாத் ஓம்

இதன் பொருளாவது:—ஸமன்வயாத்— நன்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஏழு வகையான தாத்பரிய லிங்கங்களால் வேதாதி சாஸ்திரங்களில் இந்த ஜகத்திற்கு காரணமென்று ஸம் சாஸ்திர யோனி வேதாதி எல்லா சாஸ்திரங்களால் அறியப்படுகிறவரும், பரம முக்ய விருத்தியால் ஸமஸ்த குணங்களுள்ளவரென்று ஸமஸ்த சாஸ்திரங்களால் சொல்லப்படுகிறவரும் தத் து அந்த பிரம்மமாகிய விஷ்ணுதான்.

ஏழு வகையான தாத்பரிய லிங்கங்கள் யாதெனில் உபக்ரமம் உபஸம்ஹாரம் அப்யாஸம் அபூர்வதை பலம் அர்த்தவாதம் உபபத்தி. ஓர் ப்ரகரணத்தின் ஆரம்பத்தில் கூறப்படும் விஷயம் உபக்ரமமாகும், முடிவில் கூறப்படுவது உபஸம்ஹாரம்.



அடிக்கடி மற்றும் [illegible] விஷயம் அப்யாஸம். இதர பிரமாணங்களால் அறியப்படாமலிருப்பது [illegible] விஷயம் அபூர்வதை. இதற்கு இன்னபலனுண்டென்று கூறப்படுவது பலம். [illegible] அல்லது [illegible] கூறுதல், ஒருவாறேனும் அல்லது பலவாறேனும் செய்யப்பட்ட உபாக்யானம் முதலியவை அர்த்தவாதமாகும். உபபத்தி என்றால் யுக்தி. ஆக இந்த ஏழு லிங்கங்களைக் கொண்டு தான் ஓர் வாக்யத்திற்கு இன்னதுதான் தாத்பரியம் என்று நிச்சயிக்க வேண்டும். இவ்வேழு வகையுள்ள தாத்பரிய லிங்கங்களுக்கு ஸமன்வயமென்று பெயர். ஸம் அன்வயம் என்றால் [illegible] நிரவகாசம் என்னும் [illegible] நிர்ணயிக்கப்பட்ட தாத்பரிய லிங்கங்கள் என்பதாகும். [illegible] அன்வயாத் என்பதில் ஸம் என்னும் பதத்தையுடன் பிந்திய ஸூத்திரத்திலுள்ள சாஸ்திர யோனி என்னும் பதத்தை எடுத்துச் சேர்த்து அர்த்தம் செய்யவேண்டியதாகும். [illegible] முந்திய அர்த்தத்தைச் சொல்ல [illegible] அக்ஷரங்களைக் கொண்ட பதங்களை [illegible] அவ்வளவு உபயோகப்படுத்தினதுதான் சூத்திரத்தின் அல்பாக்ஷரத்வம் என்னும் [illegible] ஸூத்திரத்திற்கு [illegible] பொழுது [illegible] ஸமன்வயம் என்பது ஏழு வகை தாத்பரிய லிங்கங்கள் ஆயிருக்க ஸமன்வயேப்ய: என்று பஹுவசனம் [illegible] என்று ஏக வசனம் [illegible] ஏழு வகை தாத்பரிய லிங்கங்களும் [illegible] என்று தெரிந்துகொள்ள வேண்டியதாகும்.

(தொடரும்)

---

# விரஜா நதி விஷயம்.

கருட புராணம் பிரம்ம காண்டம் 10-வது அத்யாயத்தில் சொல்லப்படுவதாவது—

பிரம்மாண்டத்தின் கடைசி ஆவரணமாகிய அவியாக்ருதா காசத்தினுள்ளே விரஜா நதி இருக்கிறது. அது ஐந்து யோசனை தூரம் விஸ்தாரமானது, பிரம்மாண்டத்திற்கு சுற்றிலும் அகிழ் போலிருக்கிறது மிக்க புண்யகரமென்று கருதப்படுகிறது. ஜனங்களின் ஸம்ஸாரத்தை நாசம் செய்யக்கூடியது. பிரளயத்திலும் விரஜா நதிக்கு அழிவில்லை, அது லக்ஷ்மி ஸ்வரூபமாகும். ஜனங்களின் லிங்க சரீரத்தை நாசம் செய்யக்கூடியது, பிரம்ம கல்பத்தின் முடிவில் பிரம்மாவோடு கூடவே தான் யார் மோக்ஷத்தை அடைகிறார்களோ அவர்கள் எல்லோரும் விரஜா நதியில் ஸ்நானம் செய்யவேண்டியதவசியம். பிறகுதான் லிங்க சரீரம் போகும். பிறகுதான் மோக்ஷம் கிடைக்கும். மோக்ஷத்திற்கு பிரம்மாவுடன் செல்பவர்கள் அபரோக்ஷ ஞானிகள். அந்த அபரோக்ஷ ஞானிகளுக்குத்தான் விரஜா நதி தரணம் உண்டு, இதரர்களுக்கில்லை. பிரம்மா வாயு முதலான அபரோக்ஷ ஞானிகளுக்கு விரஜா நதி ஸ்நானம் இல்லை.

---

## மாத்வ மித்திரன் ஷீட் காலண்டர்.

சென்ற சில வருஷங்களாய் பிரசுரித்திருந்தபடியே நாளது தாத்ரு ஸம்வத்ஸரத்திய திதி நக்ஷத்திராதிகளைக் காட்டக்கூடியதாய் மாத்வ மித்திரன் ஷீட் காலண்டர்கள் அடுத்த பௌர்ணமிக்குள் வெளியாகக்கூடும். எப்போதும்போல் இந்த காலண்டரில் அயனம் ருது மாஸம் மாஸமூர்த்தி இங்கிலீஷ் தமிழ் மாஸங்கள், இவைகளின் தேதி வாரம் சிரார்த்த திதி ஸந்தியாவந்தனாதி தேவகாரியங்களுக்குரிய திதி நக்ஷத்திரம் இவைகளின் விபரமும் உத்திராதிமடம் வியாஸராஜமடம் ராகவேந்திரஸ்வாமி மடம் இவைகளின் ஆசாரிய ஸ்வாமிகளின் புண்ய தினங்கள் பற்பல பண்டிகைகள் விரதங்கள் கல்பங்கள் ஏகாதசி உபவாஸம் சிரவண உபவாஸம் சதுர்த்தி உபவாஸம் இத்யாதிகளின் நிர்ணயங்கள் கிரஹண நிர்ணயங்கள் த்வாதசியின் ஸாதனிஹரிவாஸரம் அயன புண்ய காலாதிகளின் மணிக்கணக்கு முதலிய எண்ணிறந்த விஷயங்களின் விவரம் அடங்கியிருக்கும். பஞ்சாங்கத்தைப்பார்த்து சிராத்தாதிகளுக்குரிய திதி இன்ன தேதி என்று சொல்லக்கூடிய



வர்கள் பற்பல கிராமந்தரங்களிலும் சில அரிய ஊர்களிலும் வெகு ஸ்வல்பமே இருந்து அநேக மாத்வ ஸகோதரர்கள் சிரார்த்தம் உபவாஸாதிகளை சரிவரச்செய்ய முடியாமற் போவதை நேரில் உணர்ந்ததால் இவ்வாறு ஸாமானியர்களும் ஸ்திரீகளுங்கூட தன் மாத்ரு சிரார்த்த தினம் பாத்ரபத சுத்த சதுர்த்தி என்று ஒருவர் சொன்ன க்ஷணமே எமது மாத்வ மித்திரன் காலண்டரைப் பார்த்து சுலபமாய்ச் சொல்லக்கூடும் என்பது எல்லோரும் நன்குணர்ந்ததே. எல்லாத் துறையிலும் மாத்வர்களுக்கு அவர்களின் தர்மானுஷ்டானத்தில் உதவி புரிவது மாத்வ மித்திரனின் நோக்கமாதலால் இதை பிரசுரிப்பதில் பல வகை கஷ்டங்களிருப்பது எமது அனுபவத்திற்கு வந்தும் ஸ்ரீ பகவத் பாதாளின் சேவை என்று நாம் பொருட்படுத்தவில்லை. இப்பால் இந்த மாத்வ மித்திரன் காலண்டர் இத்தென்னாட்டில் அநேகமாய் எல்லா ஊர்களிலும் பிரமாணிக்கமுள்ள பஞ்சாங்கமாகவே எண்ணப்படுகிறது. காலண்டர் காபிகள் அச்சாகி வெளிவந்த சுவல்ப தினங்களுக்குள்ளாகவே சிலவடைந்துபோய் பிந்தி ஆர்டர் செய்கிறவர்களுக்கு அனுப்பமுடியாமற் போகிறது. எமது மித்திரனிடம் அளவிலா அன்பைக்காட்டி ஆதரித்துவரும் சந்தா நேயர்களும் பிந்தி எவ்வளவு கடிதம் எழுதினாலும் அவர்களுக்கு அனுப்ப முடியாமற் போய் சில சந்தர்ப்பங்களில் அவர்களுடைய கோபம் ஏற்படுகிறது இம்மாதிரி வியாபார தோரணையில் நாம் எழுதுவதில்லை என்பது சந்தா நேயர்கள் நன்கு அறிவார்கள் ஆதலால் எமது மித்திரன் வாசகர்கள் அவர்களுக்கு எத்தனை காலண்டர்கள் தேவையென்பதை முன்னாடியே அறிவித்து விடுவது நலம்.

### கிரய விபரம்.

வழக்கப்படி பிரதி 1-க்கு கிரயம் அணா 2 தபாற்கூலி 9 பை. 2 டஜனுக்குமேல் ஆர்டர் செய்கிறவர்களுக்கு 2 காபிகள் இனாமாய்க் கொடுக்கப்படும். V P Pகள் வாங்கப்படாமல் திருப்பப்பட்டு போஸ்டேஜ் சிலவு நஷ்டமாகிறபடியால் V P P மூலம் காலண்டர்கள் அனுப்பமாட்டா அட்வான்ஸாக கிரயத்தொகையை கீழ்க்கண்ட விலாஸத்திற்கு மணியார்டர் செய்யவேண்டியதவசியம்.

காலண்டர்கள் சாமானியமாக புக்போஸ்டில் (Book-Post) அனுப்பப்படும். அவ்வாறு அதிக காலண்டர்கள் அனுப்புவதற்கு அறிகுறியாய் Certificate of Posting வாங்கி வைத்துக்கொள்ளப்படும். ரிஜிஸ்டர் போஸ்டில் அனுப்பவேண்டுமென்ற பிரியமுள்ளவர்கள் மூன்று அணா சேர்த்து அனுப்புவது அவசியம். போஸ்டேஜ் அதிகமாகிறபடியால் டஜன் கணக்காய் பெறுகிறவர்கள் சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரை அறிவித்தால் ரயில்வே பார்ஸலில் அவைகளை பார்சல் சார்ஜ் கொடுத்து பெறும்படியாய் To Payல் அவர்களுக்கு ரசீது எமது செலவில் அனுப்பப்படும். காபிகள் தேவைக்கு தகுந்தபடி வெகு ஸ்வல்ப்பமே அச்சாகிறபடியாலும் இப்பால் டிமாண்டு அதிகமாகிறபடியாலும் வருஷாவருஷம் பிந்தி ஆர்டர் செய்கிறவர்களுக்கு கிறயத்துகை வாபீஸ் செய்யப்படுவதுமன்றி மித்திரனிலும் காலண்டர்கள் செலவடைந்து விட்டது தபால் பில்லுகளை அனுப்பவேண்டாமென்று பிரசுரமாகிறபடியாலும் உடனே ஆர்டர் செய்வது நலம்.

அட்வான்ஸ் அவசியம்
**V P P** ஆர்டர் பிரயோஜனமில்லை
2 டஜனுக்கு மேற்பட்ட
ஆர்டருக்கு 2 காபிகள் இனாம்
ரயில்வே பார்ஸல் உண்டு

மானேஜர்
மாத்வ மித்திரன்
ஸ்ரீ வியாஸ விலாஸம் கும்பகோணம்.

---

## விசேஷ தினங்கள்

தாத்ருநாம ஸம்வஸ்தரம்

### சைத்ர மாஸம்

| | | |
|---|---|---|
| 24—3—36 | மங்களவாரம் | ஸம்வத்ஸரப் பண்டிகை |
| 31—3—36 | மங்களவாரம் | ஸ்ரீராமநவமி |
| 2—4—36 | குருவாரம் | ஏகாதசி உபவாஸம் |
| 6—4—36 | சோமவாரம் | பௌர்ணமி வைகாச ஸ்நாந ஆரம்பம் விஷ்ணுப உப |
| 16—4—36 | குருவாரம் | சிரவணம் உப இல்லை |
| 18—4—36 | சனிவாரம் | ஏகாதசி உப |
| 21—4—36 | மங்களவாரம் | தர்சம் விஷ்ணுப உப |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்** —எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக ஆரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:**—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி:**—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**துவைதமத விளக்கம்:**—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்:**—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

**துருவசரித்திர நாடகம்:**— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்:**— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனாமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0.

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்துகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

சந்தா ரு. 3 Regd. No. M


# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி

## கும்பகோணம்.

ஸ்தாபிதம்
1909

தந்தி விலாஸம்
“கோகுல்”


எங்கள் வாஸனை திரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்கு தயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர். அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at Sri Venkat[illegible] Power Printing Works, a
Published by Bhagavatha Ranganathacharlar, Kumbako

ந்தா ரூ. 3. Regd. No. M. 2419.

# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.


EDITOR:

**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**


பௌர்ணமிதோறும் வெளிவரும்.


| | | |
|---|---|---|
| Vol 8. | தாத்ருநாம ஸம்வத்ஸரம். | No. 10. |
| புஸ்தகம் 8. | சைத்ர மாஸம். (15—4—36 புதவாரம்). | நெ. 10. |


பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1 | ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம். (ஸ்ரீமத்வாசாரியார்) | 281 |
| 2. | ஆசாரமாலை. | 289 |
| 3 | அப்பைய தீக்ஷிதரின் கண்டனம். | 291 |
| 4. | சங்கரலீலா விலாஸம். | 294 |
| 5. | பிரம்மஸூத்திரம். | 298 |
| 6. | மதிப்புரை, ஜீவப்ரம்மாபேத விசாரம். | 304 |
| 7. | செய்தித்திரட்டு. | 305 |
| 8. | ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) | 306 |
| 9. | ஸ்ரீவித்யாதீச ஸ்வாமிகளின் சரித்திரம். | 309 |
| 10. | மாத்வமித்திரன் காலண்டர். | 311 |
| 11. | விசேஷ தினங்கள். | 312 |



ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

# மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्त्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பரிய நிர்ணயம்.

இருபத்தி ஐந்தாவது அத்தியாயம்.

ஸ்ரீ ம வே பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு

(முன் 256-ம் பக்கம் தொடர்ச்சி)

துரியோதனன் முதலியோர் ஆயுத ஸமூகங்களால் அபிமன்யு முதலானவர்களை நாலா பக்கத்திலும் அடித்தனர். அப்பொழுது பீமசேனர் பாணஸமூகங்களை போட்டுக்கொண்டு தன் பிள்ளைகளை சம்ரக்ஷணம் செய்தார். திருதராஷ்டிரனின் குமாரர்கள் பீமசேனரின் பாணங்களால் நாலா பக்கமும் ஓட ஆரம்பித்தனர். பிறகு திவ்வியமான அஸ்திரங்களை அறிந்தவரும், கங்காபுத்திருமான பீஷ்மாசாரியார் ஓடிக்கொண்டிருந்த துரியோதனாதிகளை நிறுத்தினர். பிறகு ஜயிக்க அபேக்ஷையுள்ள இரு சேனையுள்ளவர்களுக்கு இரட்டை யுத்தம் நடந்தது. த்ரோணாசாரியாருக்கும் த்ருஷ்டத்யும்னனுக்கும், ஸாத்யகிக்கும் கிருதவர்மாவுக்கும். வீரனும், மாத்ரீ புத்ரனும், சிறியவனுமான ஸஹதேவனுக்கும், துச்சாசன்னுக்கும், நகுலனுக்கும் விகர்ணனுக்கும், த்ரௌபதி பிள்ளைகளுக்கும் துர்முகன் முதலானவர்களுக்கும் ஜோடி ஜோடியாய் யுத்தங்கள் நடந்தன. இவ்வாறு த்வந்த யுத்தம் நடக்கும்பொழுது ஸாத்யகியைத் தவிற தர்மபுத்திரரின் கக்ஷியில்

இருக்கும் எல்லா ராஜர்களும் பராஜயமடைந்தனர். ஸாத்யகி கிருதவர்மாவை ஜயித்தான். பிறகு பீஷ்ம த்ரோணாதிகள், பகதத்தன் முதலியோர் தம் சைனியத்தை விரட்டுவதைப்பார்த்து பீமசேனர் அதை ஓடாமல் நிறுத்தினார். பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமசேனர், த்ரோணாசாரியார், பகதத்தன் கிருபாசாரியார் துரியோதனன் இவர்களைத் தன் பாஹு வீர்யத்தாலேயே ஜயித்தார். சல்யராஜன் விராடராஜனின் மகனான உத்தரனை ஸம்ஹாரம் செய்து பாண்டவர்களின் சைனியத்தை ஓட்டினான். பிறகு மேலான அஸ்திரமுள்ள பீஷ்மாசாரியார் பூரிச்ரவஸ் ராஜனுடன் சேர்ந்து சைனியத்தை விரட்டுவதைப் பார்த்து அபிமன்யுவை ஸகாயமாயுள்ள அர்ஜுனன் யுத்தத்திற்கு வந்தான். கங்கா புத்திரரான பீஷ்மர் பராக்கிரமசாலியான அபிமன்யுவை அலக்ஷியம் செய்து அர்ஜுனன் பார்க்கும்பொழுதே பாஞ்சாலராஜனை விரட்டினார். தர்மபுத்திரர் பீஷ்மாசாரியாரின் பராக்கிரமத்தையும், அர்ஜுனன் அவரிடம் மரியாதையுள்ளவனாயும் இருப்பதைப் பார்த்துவிட்டு கோபங்கொண்டு தன் சைன்யங்களை தன் டேராவுக்கு அழைத்துப்போனார். அன்றிரவு தர்மபுத்திரர் கவலைப்பட்டு அர்ஜுனனை நிந்தித்தார். ஸ்ரீகிருஷ்ணர் முதலானவர்களால் ஸமாதானம் செய்யப்பட்டவராய் தர்மபுத்திரர் மறுபடியும் மறுநாள் யுத்தத்திற்குப் புறப்பட்டார்.

இவ்வாறு பீஷ்மாசாரியார் பத்து நாள் பாண்டவர்களுடன் யுத்தம் செய்து, சேனாதிபத்யம் செய்தார். தன் சேனாதிபத்யம் இருக்குமளவும், பாண்டவர்களுடன் இணையற்ற யுத்தம் செய்ய வேண்டுமென்றே கர்ணனை அர்த்தரதிகன் என்று சொல்லி யுத்தத்திலிருந்து விரட்டிவிட்டார். தாங்கள் யுத்தம் செய்யும்வரையில் நான் யுத்தம் செய்வதில்லை என்று சொல்லி கர்ணன் யுத்தம் விட்டுச் செல்லவும் அஸ்திரக்ஞர்களில் ச்ரேஷ்டரான பீஷ்மாசாரியார் பிரதிதினம் யுத்தத்திலும் பதினாயிரம் ரதிகர்களைக் கொல்கிறேனென்று ப்ரதிக்ஞை செய்தார். ப்ரதிக்ஞை செய்ததற்கு மேலாகவே ரதிகர்களை தினம் ஸம்ஹாரம் செய்தார். பீமார்ஜுனர்கள் பீஷ்மாசாரியாரைக்கொல்லவே மிக்க ஸமர்த்



தர்கள். பீஷ்மாசாரியாரிடம் சிநேகத்தால் கட்டுப்பட்டவர்களாய் அவரிடம் கௌரவத்தால் அவருக்கு அனுகூலமாய் இருந்தார்கள். அந்த பத்து நாளும் விசித்திரமான பல யுத்தங்கள் நடந்தன. அந்த யுத்தங்களை விமானத்தில் இருந்துகொண்டு பிரம்மருத்ராதி எல்லா தேவர்களும் கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுகள் அஸுரர்களும் ஆகாயத்திலிருந்து கண்டனர். மகா தனுர்தாரிகளான சத்ருக்களால் யுத்தத்தில் ஜயிக்க முடியாதவனான திருஷ்டத்யும்னன் பீஷ்மருக்கு எதிரிடையான வ்யூகம் கட்டிக்கொண்டு பல யுத்தங்களைச் செய்தான். அந்த பீஷ்மரின் மூன்றும் நாள் யுத்தத்தில் அர்ஜுனன் மிருதுவாய் யுத்தம் செய்வதைப்பார்த்து ஸ்ரீ கிருஷ்ணர் தன் சக்ராயுதம் எடுத்தார். சக்ராயுதம் எடுத்த கையை தூக்கிக்கொண்டு பீஷ்மரிடம் வந்தார். பீஷ்மரால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவராய் அர்ஜுனனால் நமஸ்காரம் செய்யப்பட்டு அவன் கையால் பிடிக்கப்பட்டவராய் அவனால் பிரார்த்திக்கப்பட்டவராய் ஆகி மறுபடியும் சாரதியாய் ஸ்ரீ கிருஷ்ணர் ரதத்தில் உட்கார்ந்துகொண்டு பாஞ்ச ஜன்ய சங்கத்தை ஊதினார்.

பிறகு பீஷ்மரும் அர்ஜுனனும் ஒருவருக்கொருவர் சஸ்திராஸ்திரங்களால் விருஷ்டி செய்து கொண்டனர். பீஷ்மாசாரியார் அர்ஜுனனால் சிரமமில்லாமல் ஜயிக்கப்பட்டார். யுத்தத்தில் ஏராளமான பதினாயிரம் எதிரிகளை ஸம்ஹாரம் செய்தார். பிறகு பீஷ்மாதிகள் பராஜயமடைந்தவர்களாய் ஸேனாபஹாரம் செய்தார்கள்.

ஒரு நாள் யுத்தத்தில் பீமசேனர் முன்னாடி போய் பீஷ்மாசாரியாரையும் துரோணாசாரியாரையும் ஸாரதி இல்லாதவர்களாய்ச் செய்து, அவர்களுடைய ரதத்திற்கு கட்டிய குதிரைகளை விரட்டி வ்யூகத்தையும் பேதித்து பிரவேசம் செய்தார். பலிஷ்டரான பீமசேனர் மறுபடியும் ரதத்தை நிறுத்திக்கொண்டு ப்ரயத்னம் செய்யும் மகா தனுர்தாரிகளான பீஷ்மத்துரோணர்களை ஆயாஸமன்னியில் ஜயித்து திருதராஷ்டிரன் பிள்ளைகளைக் கொன்றார். அந்த நான்காம் நாள் யுத்தத்தில் பீமசேனரால் மகா பலசாலிகளான

இருபத்தைந்து திருதராஷ்டிர குமாரர்கள் கொல்லப்பட்டார்கள். பகதத்தன், கிருபாசாரியார், அசுவத்தாமா, சல்ய ராஜன் துரியோதனன் முதலான எல்லோரும் ஜயிக்கப்பட்டார்கள், துரத்தப்பட்டார்கள், ஏராளமான ஸைனியமும் கொல்லப்பட்டது. எல்லா ராஜாக்களும் பார்க்கும் பொழுதே துரியோதனன் பீமசேனரால் ரதமில்லாமலும் ஆயுதமில்லாமலும் பலமான அடியால் மூர்ச்சை அடைந்தவனையும் செய்து கொள்ளப்பட்டான். பிறகு கௌரவர்கள் பராஜயமடைந்தவர்களாய் தம் டேராவுக்கு சைனியங்களை கொண்டு போய்விட்டார்கள். அன்று இரவே துரியோதனன் பீஷ்மாசாரியாரின் டேராவுக்கு வந்தான். பீமசேனரின் பாணத்தால் சங்கடப்பட்டுக்கொண்டு உடம்பிலிருந்து ரத்தம் பெருகவிட்டுக்கொண்டு பீஷ்மாசாரியாரை நமஸ்காரம் செய்தான். பீஷ்மாசாரியாரைப்பார்த்து நாம் பிரதிதினமும் எக்காரணம் பற்றி தோல்வியடைகிறோம். பாண்டவர்கள் தினம் ஜயம் பெற்று சந்தோஷமடைகிறார்கள். இதற்கு காரணம் யாதென்பது சொல்லுங்கள் என்று துரியோதனன் கேட்டான். அதற்கு பீஷ்மாசாரியார் துரியோதனனிடம் சொன்னதாவது:—பாண்டவர்கள் ஜயிக்க யாளாதவர்கள், அவர்கள் தேவாம்சர்கள், பூமியில் அவதாரம் எடுத்திருக்கிறார்கள், முக்யமாய் ஸ்ரீ கிருஷ்ணரால் ஸம்ரக்ஷிக்கப்படுகிறார்கள். எப்பொழுதும் கிருஷ்ணரின் ப்ரீதிக்கு விஷயமாயிருக்கிறார்கள். முற்காலத்தில் மானஸோத்தர பர்வதத்தில் பிரம்மாதி தேவதைகள் கூடினார்கள். அப்பொழுது பிரம்மா ஒருவர்தான் ஆகாயத்தில் விஷ்ணுவைக்கண்டார். பிரம்மா விஷ்ணுவை ஸ்தோத்திரம் செய்து பூஜை செய்து பூமியின் பாரத்தை நிவிருத்தி செய்யும்படி பிரார்த்தித்தார். அப்பொழுது விஷ்ணுவால் சொல்லப்பட்ட பிரம்மா விஷ்ணுவின் வார்த்தையை தேவர்களுக்குச்சொன்னார். என்னவென்றால் பூர்ணமான அநந்த குணங்களுக்கு கடலான நாராயணன் உங்களை பூமியில் பிறக்கும்படி ஆக்ஞை செய்திருக்கிறார். ஜகத்பதியான விஷ்ணு சுயம் தேவகியின் மகனாய் அவதரிக்கப்போகிறார். இவ்வாறு பிரம்மாவால் ஆக்ஞாபிக்கப்பட்டவர்களாயுள்ள தர்மன் வாயு முதலானவர்களும் இந்திரனோடும் மருத்கணங்களோடும் கூடிய எல்லா



தேவர்களும் பாண்டவர்கள் யாதவர்கள் முதலானவர்களாய் பிறந்தனர். க்ரீடாதி குணங்களுள்ள அந்த நாராயணன் தேவகியின் மகனாய் ஸ்ரீ கிருஷ்ணராய் பிறந்தார் தேவஸ்வபாவமுள்ள பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரால் ஸம்ரக்ஷிக்கப்பட்டிருப்பதின் நிமித்தம் ஜயிக்கப்படமாளமாட்டார்கள். ஹே துரியோதனா! உனக்கு பராஜயம் வேண்டாமென்று விரும்பினால் நீ இந்த காரணத்தால் பாண்டவர்களுடன் ஸமாதானத்தை விரும்பு, என்றிவ்வாறு பீஷ்மாசாரியாரால் சொல்லப்பட்ட துரியோதனன் அப்படி கிருஷ்ணர் விஷ்ணுவாயிருக்கும் பக்ஷத்தில் நான் நமஸ்காரம் செய்கிறேன் என்று டம்பமாய் கிருஷ்ணரை வார்த்தையால் நமஸ்காரம் செய்து பீஷ்மாசாரியாரின் டேராவினின்றும் தன் டேராவுக்கு போனான். துர்புத்தி பிடித்த துரியோதனன் ஐந்தாம் நாள் காலையில் யுத்தத்திற்காக தன் சைனியத்தை அனுப்பினான். பீஷ்மாசாரியாரின் திவ்யமான ஔஷதத்தால் உடம்பில் கஷ்டமில்லாமல் கவசம் போட்டுக்கொண்டு பீஷ்மாசாரியாரை முன்னிட்டுக்கொண்டு யுத்தத்திற்கு புறப்பட்டான். அந்த சமந்த பஞ்சகத்தில் பீமசேனர் பீஷ்மாசாரியார் இவர்களின் பின்னடி வந்தவர்களும் சூரர்களும் யுத்தத்தில் பின்னடி திரும்பாதவர்களுமான பாண்டவ ஸேனாதிபதிகளுக்கும் கௌரவ ஸேனாதிபதிகளுக்கும் மகா யுத்தம் நடந்தது.

ஐந்தாம் நாளில் பீமசேனரின் பின்னடிவரும் திருஷ்டத்யும்னன் துரியோதனின் தம்பிமார்களுடன் யுத்தம் செய்து விகர்ணன் முதலானவர்களை ஸம்மோஹனாஸ்திரத்தால் மூர்ச்சையடைந்தவர்களாய்ச் செய்து அவர்களுடைய சைனியத்தை ஸம்ஹாரம் செய்தான். பிறகு துரோணாசாரியார் மூர்ச்சையடைந்திருக்கும் எல்லோரையும் க்ஞானாஸ்திரத்தால் எழுப்பி த்ருஷ்டத்யும்னனிடம் யுத்தத்திற்கு வந்தார். பீமசேனர் த்ரோணாசாரியரை ஸாரதி இல்லாதவராய்ச் செய்து பாண ஸமூகங்களால் சத்ரு ஸமூகங்களை ஓட்டினார். பிறகு கிருதவர்மா ரதத்துடன் த்ருஷ்டத்யும்னனிடம் வந்தான். திருஷ்டத்யும்னன் கிருதவர்மாவுக்கு எதிர்கொண்டு வந்தான். திருஷ்டத்யும்னன் கிருதவர்மா

இவ்விருவர்களும் க்ரூரமான பாணவிருஷ்டியைச் செய்தனர். இதில் திருஷ்டத்யும்னன் கிருதவர்மாவின் ரதத்தை சேதித்தான். ரதிக வீரனுயுள்ள கிருதவர்மா தோல்வியடையவும் துரியோதனன் சுயம் திருஷ்டத்யும்னனிடம் வந்தான். பீமசேனர் துரியோதனனை ரதம் ஆயுதங்களில்லாமல் செய்து அவனுடைய கழுத்தின் ஸந்தியில் பாணங்களடித்தார். அதனுல் அவன் மூர்ச்சையடைந்தான். ரக்தப்ரவாகத்தை உரக்கக்கக்கும் அந்த துரியோதனனை கிருபாசாரியார் சீக்கிரம் தன் ரதத்தில் போட்டுக்கொண்டு ஓடினுர். பீமசேனர் பாணஸமூகங்களால் துரியோதனனின் சைனியத்தை விரட்டினுர். பிறகு இந்திர குமாரனுன அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணரால் ப்ரேரேபிக்கப்பட்ட ரதத்தில் உட்கார்ந்துகொண்டு, சத்ருக்களை ஸங்கடப்படுத்திக்கொண்டு பாண ஸமூகங்களால் யுத்தத்தில் இருபத்தி ஐயாயிரம் ரதிகர்களை யமலோகத்திற்கு அனுப்பினுர். திவ்விய தனுஸுள்ள ஸாத்யகி துரியோதனன் ஸைனியத்தை விரட்டிக்கொண்டு அர்ஜுனன் பின்னுடி வந்தான். ஸோமதத்தராஜனின் மகனுன பூரிச்ரவஸ் ராஜன் மிக்க பயங்காமான அஸ்திரமுள்ள ஸாத்யகிக்கு எதிரிடையாய் வந்தான். இவ்விருவர்களுக்கும் திவ்வியமான யுத்தம் நடந்தது. வீரனுன பூரிச்ரவஸ் ராஜன் ஸாத்யகியின் அருகிலேயே ஸாத்யகியின் பத்து பிள்ளைகளையும் சீக்கிரமே ஸம்ஹாரம் செய்து சரீரத்தை பிளக்கும்படியான பாணங்களால் ஸாத்யகியை அடித்தான். அவ்விருவர்களும் ஒருவருக்கொருவர் ரதமில்லாமல் செய்து கொண்டனர். பிறகு கத்தியை எடுத்த ஸாத்யகி, பெரும் கத்தியை கையில் கொண்டிருந்த பூரிச்சரவஸ்ஸு ராஜனுடன் யுத்தம் செய்வதைப் பார்த்து வாயு குமாரனுன பீமசேனர் தன் ரதத்தில் ஸாத்யகியை உட்கார்த்தி வைத்துக்கொண்டார். துரியோதனன் பூரிச்ரவஸ் ராஜனை தன் ரதத்தில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு பீமசேனரின் அருகிலிருந்து ஓடினுன். இந்திரனுக்குஸமானனுன அர்ஜுனன் யுத்தத்தில் சீக்கிரமே பீஷ்மரிடம் வந்தான். அஸ்திரக்ஞர்களில் சிரேஷ்டர்களாய் மகாபலசாலிகளாயுள்ள பீஷ்மரும் அர்ஜுனனும் யுத்தத்தில் கர்வங்கொண்டவர்களாய், மகா ஸர்ப்பத்திற்கு ஸமானமாயுள்ள பாணங்களால் தேவர்களின் எதிரில் ஒருவருக்



கொருவர் ப்ரஹாரம்செய்துகொண்டார்கள். உலகில் மகா தீரனுமான அர்ஜுனன் தன் பாஹு வீரியத்தால் பீஷ்மாசாரியாரை ஜயித்துவிடவும் பீஷ்மர் சைனியத்தை திருப்பிக்கொண்டு தன் கூடாரம் போய்ச்சேர்ந்தார்.

பிறகு இரவு காலம் வரவும் பாண்டவர்களும் தம் கூடாரத்துக்கு போனுர்கள். அதற்கு மறுநாள் பீஷ்மாசாரியாரை முன்னிட்டுக்கொண்டு இரு சைனியங்களும் மறுபடியும் யுத்தத்திற்கு வந்து சேர்ந்தது. அப்பொழுது பீமசேனர் பீஷ்மாசாரியாரை ஸாரதியற்றவராய்ச்செய்து சத்ருக்களிடம் யுத்தம் செய்ய வந்தார். பீமசேனரால் ரதிகர்களும் யானைகளும், குதிரைகளும் கொல்லப்பட்டார்கள். மிகுந்தவர்கள் எல்லோரும் ஓடிவிட்டார்கள். பீஷ்மர், துரோணர் அசுவத்தாமா முதலான துரியோதனுதிகள் பீமசேனரால் பராஜயமடையவும் பகதத்தன் ஸுப்ரதீகம் எனப்படும் அவனுடைய யானையின்மீது ஏறிக்கொண்டு யுத்தத்திற்கு வந்தான். வரும்பொழுதே பீமசேனரிடம் பாணங்களை விட்டான். பகதத்தனுல் பீமசேனர் மிகவும் அதிகமாய் அடிக்கப்படவும் அவருடைய குமாரனும், அதிக வீரனுமான கடோத்கசன் யுத்தம் செய்ய எத்தனைப்படும் தன் தந்தையை தடுத்து தன் மாயா வித்தையால் நான்கு யானைகளின்மீது ஏறிக்கொண்டு சீக்கிரமே பகதத்தனுக்கு எதிராக வந்து சேர்ந்தான். பகதத்தனிடம் வைஷ்ணவாஸ்திரம் இருப்பதை பீமசேனர் அறிந்து, அந்த வைஷ்ணவாஸ்திரம் வராஹ ரூபியான விஷ்ணுவின் வரத்தால் விஷ்ணுவைத் தவிர்த்துள்ள இதரஸ்தானங்களில் நிஷ்பிரயோஜனமாய் வீணுய்ப் போகக்கூடாதென்று தெரிந்துகொண்டே தன் மகனுன கடோத்கசன் யுத்தம் செய்ய வந்துசேரவும், தான் யுத்தம் செய்யப்போகவில்லை. மேலும் பகவானுடைய விசேஷமான அனுக்ரஹத்தால் பீமசேனர் தான் வைஷ்ணவாஸ்திரத்தால் கொல்லப்பட முடியாதென்று அறிந்து கொண்டிருந்தபோதிலும் விஷ்ணு பக்தி அவரிடம பலிஷ்டமாய் இருந்ததால், விஷ்ணுவான வராஹரின் வாக்யத்தை ஸத்யமாகச்செய்வதற்காக சத்ருவான பகதத்தனிடம் யுத்தத்திற்கு செல்லவில்லை. என் மகனுல் பகதத்தன் தோல்வி

யடையும் பக்ஷத்தில், அவன் என்னுலும் பராஜயமடைந்தவனுகி ருன் என்று சொல்லவும் வேண்டுமோ, என்று அச்சமயம் ஜனங்களுக்கு அறிவிப்பதற்காக பீமசேனர் யுத்தம் செய்யப் போகவில்லை. பகதத்தன் வைஷ்ணவாஸ்திர விஷயத்தில் எந்த சமயம் ஞாபக மறதியாக இருப்பானே அப்பொழுது பீமசேனர் பகதத்தனிடம் யுத்தம் செய்யப் போய்க்கொண்டிருந்தார். இவன் பீமார்ஜுனர்களைத் தவிர இதரர்களிடம் வைஷ்ணவாஸ்திரத்தை ப்ரயோகம் செய்ய மாட்டானென்று பீமசேனருக்குத் தெரியும். கடோத்கசன் மாயா வித்தையால் நான்கு யானைகளின் உருவத்தை எடுத்துக்கொண்டு அவைகளின்மீது உட்கார்ந்த ராக்ஷஸனுடைய உருவத்தையும் எடுத்துக்கொண்டு, பகதத்தனையும் அவனுடைய யானை ஸுப்ரதீகத்தையும் பலவகையான அடிகளால் ஸங்கடப்படுத்திக்கொண்டு எல்லோரும் பார்க்கும்பொழுதே அவர்களுடைய ப்ராண சந்தேகம் வரும்படி செய்தான். பீஷ்மாதிகள் ஸுப்ரதீக யானையின் தீனஸ்வரத்தைக்கேட்டு ஓடிவந்தனர். கடோத்கசனையும் அவனுக்கு பின்னுடி காவலாயிருந்த ஸ்தூல சரீரமுள்ள பயங்கரமான பீமசேனரையும் பார்த்துவிட்டு மிகவும் பயந்தார். பீஷ்மாதிகள் மிகவும் பயந்துபோய் ஸேனைகளையெல்லாம் திரும்பச்செய்து யுத்தத்தை முடித்து சீக்கிரமே டேராவுக்கு ஓடிப்போனுர்கள்.

மறு நாள் பாண்டவர்களும் கௌரவர்களும் யுத்தம் செய்ய மறுபடியும் கூடினுர்கள். அன்று யுத்தத்தில் நாக கன்னிகையான உலூபியிடம் பிறந்த அர்ஜுன புத்திரனுன இராவான் தனியாக சகுனி புத்ரர்கள் ஆறுபேர்களிடம் யுத்தத்திற்கு வந்தான். வீரனும் பலிஷ்டமான இராவான் ப்ராஸாயுதத்தை கையில் பிடித்தவர்களான சகுனியின் பிள்ளைகளால் காயப்படுத்தப்பட்டு கோபமடைந்தவனுய் துரியோதனுதிகளுக்கு க்ரூரமான பயத்தை உண்டாக்கிக்கொண்டு கத்தியால் அந்த சகுனியின் ஆறு பிள்ளைகளையும் கொன்றுன். க்ரூரனுன அந்த இராவானைப் பார்த்துவிட்டு துரியோதனன் அலம்புஸாஸுரனை அழைத்து சீக்கிரம் அர்ஜுனனின் பிள்ளையைக்கொல் என்று கட்டளையிட்டான்.

(தொடரும்)



# ஆசாரமாலை.

(முன் 260-ம் பக்கம் தொடர்ச்சி)

காயத்ரி ஷட் குக்ஷி என்று சொல்லப்படுவதற்கு விபரம் பிரம்மகைவர்த்த புராணம் தீர்த்தப்ரசம்சையிலுள்ள பஞ்சநத க்ஷேத்திர மகாத்மியத்தில் 50-வது அத்யாயத்தில் சொல்லப்படுவதாவது:—

த்ரிபதா சைவ ஸாவித்ரீ ப்ரணவாத்யை ஸ்சதுஷ்பதா | ஜபே ஸாத்ரிபதாக்ஞேயா பூஜாயாம் ஸா சதுஷ்பதா || ஓமாபோ ஜ்யோதிரித்யேதத் காயத்ர்யாச்சிர உச்யதே | ரிஷிர் ப்ரம்மாஸ்ய மன்த்ரஸ்ய சந்தோனுஷ்டுப் ப்ரகீர்த்திதம் | தேவதா பரமாத்மைவ ப்ரோக்தோ வேதார்த்த வேதிபி:| யதேஷ்ட ஸாதனே சாஸ்ய விநியோக உதாஹ்ருத: || ஸாவித்ரீ த்ரிபதாக்ஞேயா ஷட் குக்ஷி: பஞ்ச சீர்ஷகா | அக்னி வர்ண முகா சுக்ல புண்டரீக தளேக்ஷணு || ரிக்யஜுஸ் ஸாமரூபாச பாத அஸ்யா: ப்ரகீர்த்தித: || பூர்வாதிக் ப்ரதமா குக்ஷி: த்விதீயா தக்ஷிணு மதா | பஸ்சிமாது த்ரீதீயாஸ்யாத் சதுர்த்தீ சோத்தரா மதா | ஊர்த்வாது பஞ்சமீ குக்ஷி ரத:ஷஷ்டீ ப்ரகீர்த்திதா| அஷ்டாதச புராணுனி நாபிரஸ்யா முனீஸ்வரா: | ஜகத்சரீரம் ஸாவித்ர்யா: ஆகாசம் உதராந்தரம் | தனெள சந்தாம்ஸிஹ்ருதயம் தர்ம சாஸ்திர மகல்மஷம் | பாஹவோ ந்யாய சாஸ்த்ராணி கர்ணெள ஸாங்க்யத்வயம் ததா | சிக்ஷாத்யாங்காணி சீர்ஷாணி வக்த்ரம் வன் ஹிர்மகத்யுதி: | மீமாம்ஸா லக்ஷணம் தஸ்யாஸ் ஸுக்ஷ்மம் சரீரம் து சாஸ்திரம் வேதாந்த ஸம்க்ஞிதம் ||

இதன் பொருளாவது:—காயத்ரிக்கு மூன்று பாதங்கள் தான் ப்ரணவத்தைச்சேர்த்தால் நான்கு பாதமாகிறது. ஜபகாலத்தில் அவள் மூன்று பாதமுள்ளவளாகத்தான் தியானம் செய்யவேண்டும், பூஜா காலத்தில் நான்கு பாதமுள்ளவளாய் தியானிக்கவேண்டும். ஓமாபோஜ்யோதி என்பது காயத்ரியின் சிரஸ் என்று சொல்லப்படுகிறது. இந்த காயத்ரிக்கு ரிஷி பிரம்மா, அனுஷ்டுப் சந்தஸ் தேவதை. தம்தம் அபீஷ்டம் பெற அந்தந்த காரியத்தில் ப்ரயோகம் செய்யலாம். காயத்ரிக்கு மூன்று பாதங்களென்றும் ஆறு குக்ஷிகளென்றும் ஐந்து தலைகளென்றும் அக்னி வர்ணமான முகமுள்ளவளென்றும் வெள்ளை வர்ணமுள்ளவளென்றும் கமலதளம் போன்ற கண்களுள்ளவளென்றும் சொல்லப்படுகிறுள். ரிக் வேதம் யஜுர் வேதம் ஸாமவேதம் இந்த மூன்று வேதங்கள் காயத்ரிக்கு

மூன்று பாதங்களாகின்றன. ஆறு குக்ஷிகளாவது முதல் குக்ஷி பூர்வ திக்கு, இரண்டாவது குக்ஷி தக்ஷிண திக்கு, மூன்றாவது குக்ஷி பஸ்சிம திக்கு, நான்காவது குக்ஷி உத்தர திக்கு, ஐந்தாவது குக்ஷி மேல் திக்கு ஆறாவது குக்ஷி அதர லோகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பதினெட்டு புராணங்கள் இந்த காயத்ரியின் தொப்புள் ஜகத்தே சரீரம். ஆகாசம் உள் வயிறு சந்தஸ் இந்த காயத்ரியின் ஸ்தனங்கள். ஹிருதயம் நிஷ்கல்மஷமான தர்ம சாஸ்திரம் நியாய சாஸ்திரங்கள் இவளுடைய பாஹுக்கள். காதுகள் இருவகை சாங்க்ய சாஸ்திரங்கள். சிக்ஷா கல்பம் வியாகரணம் நிருத்தம் ஜோதிஷம் ஐந்து தலைகள். முகம் அக்னி மீமாம்ஸா சாஸ்திரம் காயத்ரியின் லக்ஷணம். அதர்வண வேதம் காயத்ரியின் நடவடிக்கை தலையில் பிரம்மா வீற்றிருக்கிறார் தலையில் ருத்திரன் இருக்கிறார். ஆத்மாவில் விஷ்ணு இருக்கிறார் இவ்விதமாய் காயத்ரிக்கு ஸூக்ஷ்ம சரீரமிருப்பது வேதாந்த சாஸ்திரமாகும்.

காயத்ரியின் முகத்தால் சொல்லப்படுகிறவர் அக்னியாகிய அதிஷ்டானத்திலுள்ள அக்னி எனப்பெயர் கொண்ட ஸமஸ்த தோஷங்களை ஸம்ஹாரம் செய்யும் பரசுராம ரூபம்.

காயத்ரியின் ஸம்ஹிதை பத கிரமங்கள் முதலியவைகளால் நிரூபிக்கப்படும் பகவத் ரூபங்களாவன:—

ஸம்ஹிதையால் பிருதிவீ லோகத்திலுள்ள பிருதிவீ எனப்படும் வராஹனும், பதத்தால் த்யு லோகத்திலுள்ள த்யு என்னும் சப்தத்தால் சொல்லப்படும் த்யு என்று பெயருள்ள வாமனனும், கிரமத்தால் அந்தரிக்ஷ லோகத்திலுள்ள அந்தரிக்ஷன் என்று பெயருள்ள வாயுவிடமுள்ள வாயு என்ற பெயருள்ள பகவத் ரூபமும் நிரூபிக்கப்படுகிறது.

உத்தரவர்ணத்தால் i உத்தரவர்ணம் என்று பெயருள்ள வராஹர் ii த்யுவிலுள்ள த்யு என்று பெயருள்ள வாமனர் iii த்யு லோகத்திலுள்ள த்யு சப்த வாச்யரான ஸங்கர்ஷணர் iv மனஸ்ஸிலுள்ள மனோநாமகர் v பிருஹந்நாமகரான நாராயணர் vi பதிநாமகரான ஸங்கர்ஷணர் நிரூபிக்கப்படுகிறார்.

பூர்வ வர்ணத்தால் i பூர்வாக்ஷா நாமகரான வராஹர் ii பிருதிவி லோகத்திலுள்ள பிருதிவி நாமகரான வராஹன் iii மனோநாமகர் iv பிருதிவியிலுள்ள பிருதிவி நாமகர் v வாங் நாமகர் vi ரதந்தர நாமகரான லக்ஷ்மி ரூபம் vii வாக்கிலுள்ள வாங் நாமகரான ரூபம் viii நாராயணரென்னும் ரூபம் ix ஜயா எனப்படும் ரூபம் வாஸு



தேவ ரூபம் x பிருதிவி லோகத்திலுள்ள பிருதிவி நாமகரான நாராயண வாஸு தேவர் xi அக்னியிலுள்ள அக்னி நாமகரான வாஸுதேவ வாஸுதேவர் xii ஆசாரியனிடமுள்ள ஆசாரியன் எனப்படும் வாஸு தேவர் xiii கீழ் உதடாகிய அதராஹனுவிலிருக்கும் அதராஹனு எனப்படும் அநிருத்த வாஸுதேவர் xiv மாத்ருவிடமுள்ள மாத்ரு நாமகர் சொல்லப்படுகிறார்.

ஸந்தியில் சொல்லப்படும் பகவத் ரூபங்களாவன.—

i விருஷ்டியிலுள்ள விருஷ்டி நாமகரான ப்ரத்யும்னர் ii ஆகாசத்திலுள்ள ஆகாச நாமகரான நாராயண ப்ரத்யும்னர் iii ஜலத்திலுள்ள அப்நாமக வாஸுதேவ ப்ரத்யும்னர் iv வித்யையிலுள்ள வித்யாநாமகரான ஸங்கர்ஷண ப்ரத்யும்னர்.

ஸந்தானத்தில் சொல்லப்படும் பகவத் ரூபங்களாவன:—

i பர்ஜன்யரிடமுள்ள பர்ஜன்யரெனப்படும் அநிருத்தர் ii வாயுவிடமுள்ள வாயு நாமகரான நாராயண அநிருத்தர் iii த்யுவிடமுள்ள த்யுநாமகரான வாஸுதேவ அநிருத்தர் iv ப்ரவசனத்திலுள்ள ப்ரவசனம் என்று பெயருள்ள ஸங்கர்ஷண அநிருத்தன் v ப்ரஜனத்திலுள்ள ப்ரஜனனெனப்படும் ப்ரத்யும்ன அநிருத்தன் vi ஜிஹ்வையிலுள்ள ஜிஹ்வை என்று பெயருள்ள அநிருத்த அநிருத்தன் vii ப்ரஜையிலுள்ள ப்ரஜாநாமகரான ப்ரத்யும்ன ப்ரத்யும்னர் ix வாக்கிலுள்ள வாக் நாமகரான அநிருத்த ப்ரத்யும்னர் x சிஷ்யர்களிடமுள்ள அந்தேவாஸி நாமகரான ஸங்கர்ஷண ஸங்கர்ஷணர் xi ஆதித்யனிடமுள்ள ஆதித்ய நாமக வாஸுதேவ சங்கர்ஷணர் xii சமஸ்தமான ப்ராதர் பாவரூபங்கள் xiii பித்ருக்களிட முள்ள பித்ரு நாம ஸங்கர்ஷணர் xiv மேல் உதட்டிலுள்ள உத்தரஹனு நாமக அநிருத்த ஸங்கர்ஷணர் நிரூபிக்கப்படுகிறார்.

ஆக மொத்தம் இவ்வாறு காயத்ரியால் 156 (நூற்று ஐம்பத்தாறு பகவத் ரூபங்கள் நிரூபிக்கப்படுகின்றனர்.

(தொடரும்)

## அப்பைய்ய தீக்ஷதரின் அதிக்ஷேபனைகளுக்கு கண்டனம்

(முன் 264-ம் பக்கம் தொடர்ச்சி)

உண்மை யாதெனில் ஸ்ரீமத் பகவத் பாதாள் பிரம்ம ஸூத்ர பாஷியம் 3வது அத்யாயம் 3வது பாதம் 20வது அதிகரணத்தில்

ஓம் அக்ஷர தியாம்த்வவிரோத: ஸாமான்ய தத் பாவாப்யாமேள பஸதவத் தத்துக்தம் என்னும் ஸூத்ரத்தினர்த்தத்தை சொல்லும் பொழுது உக்தம் ச தூர ச்ருதேள என்று பிரயோகம் செய்திருக்கிறார். இந்த இடத்தில் உக்தம் ச தூர சுருதேள என்று பதச்சேதம் செய்து தூரசுருதி என்று சொல்லவேண்டியதாகும். அனுவ்யாக்யானத்தில் தூரசுருதி என்று ஸ்பஷ்டமாய் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஓர் மதத்தை சிலாகிப்பதாகவோ, தூஷிப்பதாகவோ ப்ரவிருத்திக்குமுன் புத்திமானாயிருப்பவன் அந்த மதத்தின் அபிப்ராயத்தையும் ஸம்பிரதாயத்தையும் அறியவேண்டியதவசியம். கேவலம் புஸ்தகங்களை படிப்பதால் மட்டில் ஸம்பிரதாயங்கள் தெரியவாராது. ஸம்பிரதாய மவமத்ய கர்வத: ஸர்வத: ஸ்வரஸனும் நிவேசயன் கண்டகாரிதசராம சராதி நியாயத: ஸபரிஹாஸ்யதே புதை: என்றார் ஒருவர். ஸம்பிரதாயத்தை தெரிந்து கொள்ளாமல் எல்லாவற்றிலும் ஒருவன் நாவைப்போட்டானென்றால் அவன் நிச்சயம் அவமானமடைந்து பரிகாசம் செய்யப்படுவான். எப்படியெனில் காவ்ய பாடத்தால் ஸம்ஸ்கிருதமறிந்த ஒருவன் தன் தந்தை கப ரோகத்தால் கஷ்டப்படுவதைப்பார்த்து வைத்ய சாஸ்திரத்தைப்பார்த்து தானாகவே சிகித்ஸை செய்ய எண்ணி வைத்திய நூல் ஒன்றை பிரட்டிப்பார்த்தான். அதில் கண்டகாரி: கபாபஹா என்று எழுதப்பட்டிருந்தது. கபத்தை எடுக்கக்கூடியது கண்டகாரி என்று தெரிந்தவுடன், கண்டகாரி என்றால் என்னவென்பதை யோசிக்கலானான். இவன் தான் மஹா பண்டிதனென்றும் ஸம்ஸ்கிருத பாஷையில் கரை கண்டவனென்றும் சாஸ்திரத்தைப் பார்த்தால் தனக்கே சுலபமாய் அர்த்தமாகும்பொழுது இதர வைத்யர்களை கேட்டு தெரிந்து கொள்ளவேண்டியதில்லை என்றும் தீக்ஷிதர்வாளைப்போல் மமதை பிடித்து கர்வங்கொண்டிருந்ததால் வைத்திய ஸம்பிரதாயமறிந்தவர்களைக் கேட்காமல் தானே தன் வ்யுத்பத்தி பலத்தால் கண்டகாரி என்னும் சப்தத்திற்கு இவ்வாறு அர்த்தம் செய்தான். கண்டகம் என்றால் முள்ளு, அதன் ஹிம்ஸை காலுக்கு ஏற்படாமல் அதற்கு வைரியாய் இருப்பது கால் செருப்பாகுமாதலால் கண்டகாரி என்பது கால் செருப்பே ஆகும். ஆகவே பழய செருப்பை ஜலத்தில் ஊறப்போட்டு அதை கொதிக்க



வைத்து அந்த கஷாயத்தை குடிக்கக் கொடுத்தால் அது கபத்தை அறுத்துத்தள்ளி அந்த நோய் நிவர்த்தியாகலாம் என்ற முடிவுக்கு வந்தான். அவ்வாறே வயது முதிர்ந்த தன் தந்தைக்கு தன் பழய செருப்பின் ஜலத்தை குடிக்கக்கொடுத்தான். இதரர்கள் இப்படி உண்டா என்று கேட்டதற்கு இதோ பாரும் கண்டகாரி: கபாபஹா என்று வைத்ய கிரந்தத்திலேயே எழுதப்பட்டிருக்கிறதென்று சொன்னான். இவன் பண்டிதனல்லவோ இவன் சொல்வது சரியாயிருக்கலாம் என்று ஸாமானியர்கள் தீக்ஷிதர்வாளின் வார்த்தைதயக்கேட்டு நம்பி மோசம் போயிருப்பதுபோல் அவனுடைய வார்த்தையைக்கேட்டு மோசம்போய் கபத்தால் கஷ்டப்படும் தன் குரு ஜனங்களுக்கும் பாபிஷ்டமான பாதரக்ஷையின் ஜலத்தை அருந்தச்செய்து மகா நாகத்திற்கு காரணமானார்கள். பரம்பரையாய் வைத்திய முறையைக் கொண்டிருந்த அறிவாளிகள் கண்டகாரி என்றால் கண்டங்கத்திரிக்காய் என்றும் அதன் கஷாயம் முதலியது கபரோகாதிகளுக்கு ஏற்றது என்றும் நிச்சயம் செய்திருந்த இந்த பண்டிதரின் வார்த்தையைப் பரிகாசம் செய்தார்கள். இந்த நிலைமைதான் தீக்ஷிதர்வாளுக்கும் ஏற்பட்டது, பதச்சேதம் செய்யத் தெரியாதிருக்கும் இந்த தீக்ஷிதர்வாளுக்கு மற்றொரு திருஷ்டாந்தமும் பொருத்தமாக உண்டு.

ஸ்ரீமத் ராமாயணம் யுத்த காண்டத்தில் தசராம சரா: பேது: ராக்ஷஸானும் சமூ முகே என்று ஒரு சுலோகத்தின் பாதி இருந்தது. புராணம் சொல்லி பழக்கமில்லாத ஒருவருக்கு தீக்ஷிதர்வாளுக்கு ஏற்பட்டதுபோல், வாகீஸ்வரியின் கிருபா கடாக்ஷக்குறைவால் அந்த சுலோகத்திற்கு பதச்சேதம் செய்யத்தெரியாமல்போய் தசரா மசரா என்று படித்தார். தன் ஸம்ஸ்கிருத வ்யுத்பத்தி பலத்தால் தசரா என்ற பதத்திற்கும் மசரா என்ற பதத்திற்கும் அர்த்தம் செய்ய முடியாமற்போய் ராக்ஷஸானும் சமூ முகே ராக்ஷஸ ஸைனியத்தின் முன் பேது: விழுந்தனரென்றிருப்பதால் தசரா என்றால் தசரா இதி கேசன ராக்ஷஸா: என்றும் மசரா என்றால் மசரா இதி கேசன ராக்ஷஸா: என்றும் அர்த்தம் செய்து தசரா என்று பெயருள்ள ராக்ஷஸர்களும் மசரா என்று பெயருள்ள ராக்ஷ

ஸர்களும் ராக்ஷஸர்களின் போர் முனையில் இறந்து விழுந்தனர் என்று அர்த்தம் செய்துகொண்டு அவ்வாறு புராணம் சொன்னார். ஸாமானியர்கள் இவர் பண்டிதராதலால் இவர் சொல்வது சரியாயிருப்பதாய் நம்பினார்கள். பண்டிதர்கள் இவர் பதச்சேதம்கூட செய்யாமல் தவிக்கிறாரே என்று பரிகாசம் செய்யாதீர்கள். ஆகவே ஸம்பிரதாயமாய் வந்த குருவை ஸேவித்து அடையாதிருக்கும் வித்தையுள்ளவர்களுக்கு பதச்சேதம் செய்யவும் தெரியாது, பதத்திற்கு அர்த்தம் செய்வதும் கஷ்டம், வாக்யார்த்தம் அதைவிட கஷ்டம். அப்படியிருக்க தாத்பரியம் கண்டுபிடிப்பது அஸாத்யம் என்று சொல்லவேண்டியதில்லை.

(தொடரும்)

# சங்கரலீலா விலாஸம்.

(முன் 267ம் பக்கம் தொடர்ச்சி)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H சுப்புராவ் M A எழுதுவதாவது:—

தந்தை என்பார் முக்ய தந்தை என்றும் அமுக்ய தந்தை என்றும் இருவகையாவார்கள். முக்ய தந்தை ஸ்ரீமன் நாராயணன்தான். அமுக்ய தந்தை பூலோகத்திய மனுஷ்ய தந்தை. பிள்ளை என்பவன் இந்த இரு தந்தையர்களுக்கும் அவிரோதமாகவே நடக்கவேண்டும். முக்ய தந்தையையும் அதிக அன்புடன் ஸேவித்துக்கொள்ளும். அப்பேர்ப்பட்ட முக்ய தந்தையின் ஸேவைக்கு பிரயோஜனப்படும் வித்தையைக்கொடுத்த குருவையும், சக்தியாதிகளைக்கொடுத்த தேவதையையும், அவரவர்களின் யோக்யதைப்படி ஸேவிக்கவேண்டும். முக்ய தந்தைக்கும் அமுக்ய தந்தைக்கும் விரோதம் ஏற்படும் பக்ஷத்தில் பழுதாய்ப்போன ஓடத்தை விட்டு புதிய ஓடத்திலேறிக்கொண்டு நதிப்ரவாஹத்தைத்தாண்டும் ஞானவானைப்போல் அமுக்ய தந்தையை அவனுடைய காமக்ரோதாதிகளின் வசம் ஒப்புவித்துவிட்டு நிர்துஷ்டனான முக்ய தந்தையை ஆச்ரயிக்க வேண்டும். ஞானியான ப்ரஹ்லாதன் முக்ய தந்தையான நாரஸிம்ஹ



னுக்கும், அமுக்ய தந்தையான ஹிரண்யனுக்கும் விரோதம் ஏற்படவும் அமுக்ய தந்தையான ஹிரண்யனை அவனுடைய க்ரோதாதிகளுக்கு விட்டுவிட்டு முக்ய தந்தையான விஷ்ணுவை கைப்பிடித்தான். மறுபடியும் தன் முக்ய குருவான விஷ்ணு நாரதர் இவர்களுக்கும் அமுக்ய குருக்களான சண்டாமர்க்கர்களுக்கும் விரோதம் ஏற்படவும், அதாவது அவர்கள் பகவத் ப்ராப்திக்கு ஸாதனமாயில்லாததாயும் அப்ரமாணமாயுள்ள விஷ்ணு ஸர்வோத்தமத்திற்கு விரோதமாயுமுள்ள நானே ப்ரம்மமென்றதோ அல்லது சிவனே ஸர்வோத்தமனென்றதோ முதலான வாதங்களையும் உபதேசம் செய்யவும் நாய் தொட்ட பானையை எறிந்துவிட்டு கங்கோதகத்தை ஸேவிக்கும் ஞானியைப்போல் சண்டாமர்க்கர்களின் துஷ்ட உபதேசத்தைக் கேளாமல் அவர்களுடைய குருத்தன்மையை திக்காரம் செய்து தன் முக்ய குருமார்களான என்றால் விஷ்ணு ப்ராப்திக்கு ஸாதகமென்று பிரமாண ஸம்மதமான தத்வத்தை உபதேசம் செய்யும் நாரதாதிகளின் மதத்தை அவலம்பித்தான். விபீஷணனும்கூட ஜ்யேஷ்ட ப்ராதா பிதுஸ்ஸம: என்னும் நியாயமிருந்த போதிலும், தமயனான ராவணனை பரித்யாகம் செய்ததுமன்னியில் ராமருக்கு ராவணனைக்கொல்லும் உபாயத்தையும் சொல்லிக்கொடுத்து சக்தியாதி ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ஸ்வயம் தானே ராம ஸைனியத்தில் நின்று ராவண ஸைனியத்துடன் யுத்தம் செய்தான். இந்த இடத்திலும் இம்மாதிரியான விரோதம் ஏற்பட்டது. அமுக்ய அண்ணன் தந்தைக்கு ஸமானமான ராவணனுக்கும் முக்ய தந்தையான ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமான ஸ்ரீ ராகவனுக்கும் விரோதம் ஏற்பட்டது. ப்ராக்ஞனான விபீஷணன் ராகவனுக்கு சாம்ப சாஸ்திரிகள் சொன்னதுபோல் சொன்னான். ஹே ராவணா! உனக்கும் எனக்கும் எல்லோருக்குமே தந்தை ஸ்ரீ ராமன், ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் வித்யாத் அன்ய ரேதஸம் என்ற பிரமாணம் இருந்துவருகிறது, ஆதலால் எங்கள் எல்லோருக்கும் முக்ய தந்தையான ஸ்ரீ ராமனை நீ த்வேஷம் செய்யாதே என்றான். ராவணன் அதைக்கேட்கவில்லை. ஆகையால் கள் குடத்தை விட்டெறிவதுபோல் அவனை விட்டு விபீஷணன் ராம பாதத்தை பிடித்தான். தவிரவும் சாம்ப சாஸ்திரிகள் சொல்வதுபோல் பித்ரு த்வேஷத்தால் சண்டாளனுக்கு சமனாயுள்ள ராவணனையும் எதிர்த்து ஹிம்சை செய்தான்.

பகதால்ப்யர் தபஸ் செய்துகொண்டிருக்கும்பொழுது மஹேந்திரன் வந்து அவரை தன் இந்திர லோகத்திற்கு வரும்படிக்கும் விமானத்தில் ஏறும்படிக்கும் கேட்டுக்கொள்ளவும், ப்ராக்ஞரான அந்த பகதால்ப்யர்

பகவத் ப்ராப்திக்கு சாதனமானதற்கு சகாயம் செய்யாததும், மேலும் பிரதிபந்தமாயுள்ளதுமான அந்த வரத்தையும் அந்த தேவதையையும் கூட திரஸ்காரம் செய்த நித்ய பலத்தைத்தரும் நாராயணனின் பாதத்தை ஆசிரயித்தார். ஆனால் இந்த விஷயத்தில் அலாதியான ஒரு சமத்காரம் நடந்தது. பகதால்ப்யர் இந்திரனைப்பார்த்து ஹே இந்திரா! உனக்கும் எனக்கும் எல்லோருக்குமே தந்தையாயிருப்பவர் நாராயணர். நாமெல்லோரும் அவரை அடைய பிரயத்தினம் செய்யவேண்டும். அவ்வாறு எத்தனம் செய்யாமலிருப்பவனும் அல்லது அப்பேர்ப்பட்ட ப்ரயத்தனம் செய்பவரை ஆசை வார்த்தைகளைச்சொல்லி தாழ்ந்த பதவிக்கு இழுப்பவனும் பித்ருத்வேஷியே ஆவான். ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் வித்த்யாத் அன்ய ரேதஸம் என்று பிரமாணமிருக்கிறது. ஆகவே ப்ராப்திக்கு விருத்தமாயுள்ள அல்பமான ஸ்வர்க்க லோகத்திற்கு என்னை இழுக்கும் உனக்கு மகத்தான பாபமே சம்பவிக்கும் என்று உபதேசம் செய்தார். பிராக்ஞனை இந்திரன் அதை ஒப்புக்கொண்டு ஹே பகதால்ப்ய மகா முனியே! உமக்கு உம் பித்ருப்ரீதி இருக்கிறதா இல்லையா என்பதை பரிக்ஷை செய்வதற்காகத்தான் நான் இவ்வாறு உம்மை ப்ரச்னம் செய்தேன். தாம் கோபிக்கலாகாது. ஆகவே நீங்கள் வைகுண்டேசனுடைய உபாஸனையைச் செய்யுங்கள். அதனால் எனக்கும் மிக்க சந்தோஷமென்று சொல்லி மகேந்திரன் மறைந்து சென்றான்.

இப்படியேதான் ஸுகுமார பாலகனாய் உள்ள த்ருவ ராஜனும்கூட காட்டிற்கு தவத்திற்கு செல்லவும் தாயாரும் பொதுவாய் அவனைத்தடுக்கவும் த்ருவ ராஜனும் தாயாரையும் இவ்வாறுதான் போதித்தான். ஸுநீதி தேவியும் இதை ஒப்புக்கொண்டு தன் பிள்ளையை ஆசிர்வாதம் செய்து முக்ய தந்தையான நாராயணனை தரிசிக்க புறப்பட்டுப்போகும் தன் பாலகனான துருவனைக் காப்பாற்றித்தர தேவதைகளையும் பிரார்த்தித்து குழந்தையை முத்தமிட்டு யாதொரு பயமன்னியில் குழந்தையை அனுப்பித்திருக்கிறாள். இது விஷயம் ஸ்ரீமத் பாகவதத்தில் விஸ்தாரமாய் சொல்லபபட்டிருப்பதைக்காணலாம்.

ப்ரிய விரத ராஜன் தன் தந்தையான ஸ்வாயம்பு மனுவை விட்டு நாரதருடைய சமீபத்தில் பகவத் ப்ராப்திக்கு சாதனமாயுள்ள வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டான். பிறகு சுவாயம்பு மனுவும் வந்து சேர்ந்து ஹே புத்ரா! இப்பொழுது சாஸ்திரசிரவணம் செய்யாதே ஊருக்கு வந்து சேர் என்று சொல்ல பிரியவ்ரதன் தந்தையைப்பார்த்து இப்பேர்ப்பட்ட



துஷ்ட உபதேசத்தைச் செய்யும் நீர் எனக்கு தந்தையாகமாட்டீர். ஹே மனுவே! ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் வித்த்யாத் அன்ய ரேதஸம் என்று பிரமாணம் இருக்கிறது. தந்தையான நாராயணனை அடையும் சாஸ்திரத்தை நாராயண பக்தரான நாரதரால் நான் சிரவணம் செய்து கொண்டிருக்கையில் நீர் விக்னம் செய்தால் உமக்கு தந்தையான நாராயணரின் த்வேஷத்தால் உண்டாகும் அநேக தோஷங்கள் உண்டாகும் என்று சொன்னார். குருர் நஸஸ்யாத் ஸ்வஜனோ நஸஸ்யாத் பிதா நஸஸ்யாத் ஜனனீ நஸாஸ்யாத்| தைவம் நதத் ஸ்யாத் நபதிஸ்ச ஸஸ்யாத் நமோசயேத்ய: ஸமுபேத ம்ருத்யும் என்பது ரிஷப மூர்த்தியின் வாக்யம், இதன் தாத்பர்யம் ம்ருத்யு ரூபமான ஸம்சாரம் நிவ்ருத்தியாக காரணமாகாமலிருக்கும் குரு. குரு ஆகமாட்டான், பந்து, பந்து ஆகமாட்டார், தந்தை தந்தை ஆகமாட்டார், தாயார் தாயாராகமாட்டாள், தேவதை தேவதை ஆகமாட்டார், அப்பேர்ப்பட்ட பதியும் பதி ஆகமாட்டார். இந்த நியாயத்தை ஸ்வாயம்பு மனு ஒப்புக்கொண்டு பேசாமலிருந்து விட்டான். பிறகு பிரத்யக்ஷமான சதுர்முகன் ப்ரியவ்ரதருக்கு உபதேசம் செய்து ராஜ்யாதிபத்யம் செய்ய அனுப்பினார். ஆயினும் இந்த நியாயத்தை கண்டித்து அவரை ராஜ்யத்திற்கு அனுப்பவில்லை. இந்த நியாயத்திற்கு அனுசரணையாகவுள்ள மற்றொரு சூட்சுமமான தர்மத்தை அவலம்பித்தான். பிரம்மா பிரியவ்ரதனைப்பார்த்து நீ ஆதிகாரிக ஜீவன். சிறிது காலம் நீ ராஜ்ய பாரம் செய்து வனத்திற்கு போகவேண்டுமென்பது தந்தையான நாராயணனுடைய இச்சை இருந்துவருகிறது என்று சொல்லி சில தர்ம ரகஸ்யங்களை நிரூபித்துக் காட்டி அந்தர்த்தானமடைந்தார். சதுர்முகன் இந்த நியாயத்தைத் தாண்டி ப்ரியவ்ரதனுக்கு உபதேசம் செய்யவில்லை என்பதற்கு அவருடைய இந்த வாக்யத்தைப் பாருங்கள்; 'அஹம் பவோ தத வஷதே மஹரிஷி: * * * ஸர்வே வஹாமோ பலிமீச்வராய, நானும் சரியே ருத்திரனும் சரியே உன் தந்தையும் இந்த நாரத மஹரிஷியும் சரியே எல்லோரும் ஈசுவரனான நாராயணருக்கு கப்பத்தைக் கட்டும் சேவகர்கள் ஆவோம் என்று சொல்லியுள்ளார்.

ஆகவே வேத விருத்தமாயும் பிரம்ம ஸூத்திரத்திற்கு விருத்தமாயும் கீதைக்கு விருத்தமாயும் உள்ள நிர்க்குண பிரம்ம உபாஸனையானது ஜகத் பிதாவாயுள்ள நாராயணனுடைய த்வேஷ ரூபமேயாகும் என்று ஸ்ரீமத் பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் கூறியிருக்கிறார். அஸத்ய மப்ரதிஷ்டம் தே ஜகதாஹு ரனீச்வரம| ஈசவரோஹம் ஹம்

போகீ ஸித்தோஹம் பலவான் ஸுகீ தானஹம் இவிஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான் க்ஷிபாம்ய ஜஸ்ரம சுபான் ஆஸுரிஷ்வேவ யோனிஷு ஆஸுரீம் யோனிமா பன்னா: மூடாஜன்மனி ஜன்மனி மாமப்ராப்யைவ கௌந்தேய ததோயாந்த்யதமாம் கதிம்] — அசுரர்கள் ஜகத் மித்யை என்றும் க்ஞானத்தால் பாதிக்கப்படுகிறதென்றும் அது மித்யையாயிருப்பதின் நிமித்தம் ஸ்ருஷ்டி கர்த்தாவான ஈசுவரன் இல்லை என்றும் நான்தான் சுவதந்திரமான ஈசுவரனென்றும் சுவதந்திரமான போகம் பலம் முதலியவைகளைக் கொண்டவனென்றும் சொல்லுகின்றனர் இவ்வளவு க்ரூரமாயுள்ள என் த்வேஷிகளை மேன்மேல் அசுர சம்மந்தமான பிறப்புகளில் உண்டாக்குகிறேன் ஒவ்வொரு ஜன்மத்திலும் அசுர சம்மந்தமான பிறப்புகளையே அடைந்து இந்த மூட்டாள்கள் என்னை எக்காலத்திலும் அடையாமலேயே மிகவும் குறைந்ததாயுள்ள அதமமான லோகத்தையே அடைகின்றனர் பிராம்மணோத்தமர்களே! இவ்வாறு பித்ரு த்வேஷத்தால் தமஸ்ஸாகிற நித்ய நரகமாகிற பலன் ஏற்படுகிறதாய் பிரமாணங்களால் தெரிய வருவதால் நீங்கள் எல்லாரும் என்னை நிந்திப்பதை விட்டு உங்களுக்கு ஹிதமாயுள்ள என் வார்த்தையைக்கேட்டு நாராயணனுக்கு த்வேஷமாயுள்ள ஐக்யோபாஸனையையோ அல்லது நிர்குணப்ரம்மோபாஸனையையோ சிவ ஸர்வோத்தம த்வ உபாஸனையையோ செய்யாமல் நான் இப்போதும் அவலம்பித்திருக்கும் இந்த மத்வ மதத்தை உபாஸனை செய்வதால் நீங்கள் நாராயணனுடைய ப்ரீதிக்கு பாத்திரமாகி மோக்ஷமடைவீர்கள் என்பதில் சந்தேகமில்லை என்று இவ்வாறு திரிவிக்ரம பண்டிதர் உபன்யாஸம் செய்து முடித்தார்.

(தொடரும்)

# பிரம்ம ஸூத்திரம்.

(முன் 277ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீமான் M ராமராவ் எழுதுவதாவது—

## 5-வது அதிகரணம்

இந்த அதிகரணம் 5 முதல் 11 முடிய ஏழு ஸூத்திரங்கள் கொண்டது. ஓர் அதிகரணத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஸூத்திரங்களிருந்தால் அவைகளின் முதல் ஸூத்திரத்திற்கு பிரதான



ஸூத்திரம் என்றும் மற்றவைகளுக்கு குணஸூத்திரங்கள் என்றும் பெயருண்டு சென்ற அதிகரணத்தில் பிரம்மம்தான் தாத்பரிய லிங்கத்தால் சாஸ்திரத்தின் முக்ய பொருளாகவிருக்கிறது எனக் கூறப்பட்டது. அது சப்தத்தினால் வியவஹரிக்கப்பட அருகமாயிருந்தால்தான் அப்படியிருக்க முடியும். ஆகையால் இந்த அதிகரணத்தில். யதோ வாசோ நிவர்த்தந்தே என்ற சுருதியின்படி பிரம்மம் சப்தத்தால் முற்றிலும் வ்யவஹரிக்கப்பட அருகமல்லாதிருப்பினும் ஓர் விதமாவேனும் அருகமுள்ளதாகிறது என நிரூபிக்கப்படுகிறது. எப்படி எனில் பராத்பரம் புரிசயம் புருஷேம் ஈக்ஷதே ஆத்மன்யேவ ஆத்மானம் பஸ்யேத் என்று பல சுருதிகளில் பிரம்மத்தை பார்க்கவேண்டும், அறியவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் என்ற மூன்று பிரமாணங்களிடையே ஏதாவது ஒன்றினால்தான் அதை அறியமுடியும். பிரத்யக்ஷத்தாலும் அனுமானத்தாலும் பார்க்க முடியாது. ஆகவே வேதத்தால்தான் பார்க்கமுடியும், அறியமுடியும் என்று இம்மாதிரி பிரம்மம் வேதத்தால் பார்க்கத்தகுந்தது, அறியத்தகுந்தது என்பதாகிய ஈக்ஷணீயத்வமானது இந்த அதிகரணத்தில் நிரூபிக்கப்படுவதால் இந்த அதிகரணத்திற்கு ஈக்ஷத்யதிகரணம் என்று பெயர் ஏற்படுகிறது. இந்த அதிகரணத்துக்கு சாஸ்திரயோனித்வம் விஷயம். அது பிரம்மத்திற்குப் பொருத்தமானதா அல்லவா என்பது சந்தேகம். சில வாதிகள் பொருத்தமானதென்றும் சிலர் பொருத்தமானதல்லவென்றும் கூறுவதே ஸந்தேகத்தின் பீஜம், பிரம்மத்திற்கு பொருத்தமானதல்ல என்று பூர்வபக்ஷம், பிரம்மத்திற்கு பொருத்தமானதே என்று ஸித்தாந்தம்.

### 5. ஓம் ஈக்ஷதேர் நாசப்தம் ஓம்

ஸூத்திரார்த்தமாவது:— ஈக்ஷதே: ந, அசப்தம் (தத் அந்த பிரம்மம்) ஈக்ஷதே:—அறியத்தகுந்ததாயிருப்பதால் அசப்தம்—சப்தத்தால் வியவஹரிக்கத்தகுந்ததல்லவென்பது ந—அல்ல, அதாவது வியவஹரிக்கத்தகுந்ததே. 'அசப்தம்' என்பதும் 'அவாச்யம்' என்பதும் ஒன்றே ஆயினும் அவாச்யம் என்று சொல்லாமல் அசப்தம் என்று சொன்னதின் காரணம் அசப்தம் அஸ்பர்சம் அரூபம்

அவ்யயம் என்ற சுருதியை குறிக்கவே இவ்வாறு சொல்லப்பட்டது என்றும் அறியவேண்டியதாகும்.

## 6. ஓம் கௌணஸ் சேன்னாத்ம சப்தாத் ஓம்

முற்கூறப்பட்ட சுருதிகளில் பார்க்கத்தகுந்தவன் என்று சொல்லப்பட்டவன் அதாவது நிர்குணனை (குணங்களைக்கடந்த) பரமாத்மாவா அல்லது ஸத்வ ரஜஸ் தமோ குணங்களினால் கட்டுப்பட்ட ஜீவனா என்ற ஸந்தேகத்தைத் தீர்க்க இச்சூத்திரம் எழுந்திருக்கிறது. சூத்திரார்த்தமாவது—கௌண: சேத், ந, ஆத்மசப்தாத்—ஆத்மன்யேவ ஆத்மானம் பஸ்யேத் என்ற சுருதியில் கூறப்பட்டவன் கௌண: சேத் ஸத்வம் முதலிய குணங்களினால் கட்டுப்பட்ட ஜீவன் என்றால் அவ்வாறு அவன் ந இல்லை, ஏனெனில் ஆத்மசப்தாத் அச்சுருதிகளில் ஆத்மா என்ற பதம் இருப்பதால் புரிசயம் புருஷமீக்ஷதே என்ற சுருதியில் புருஷ சப்தம் இருப்பதாலும் என்னும் காரணமும் கொள்ளவேண்டும். யோகுண: ஸர்வதோ ஹீஞேயஸ்ச தோஷ விவர்ஜித: I ஹேயோபாதேய ரஹித: ஸ ஆத்மேத்ய பிதியதே II ஏதன்ஸ்வபாவோய: யோனாத்மேதி ஸதாம் மதம் I அனாத்மன்யாத்ம சப்தஸ்து ஸோபசார: ப்ரயுஜ்யதே II ஸத்வம் முதலான பிராகிருத குணங்கள் ஸர்வ பிரகாரமாய் இல்லாதவனும் தோஷமில்லாதவனும் அரிஷ்டமாயில்லாததால் வெறுக்கப்படாதவனும் பூர்ண காமனாயிருப்பதால் அபேக்ஷையில்லாதவனும் ஆத்மாவென்னும் சப்தத்தால் குறிக்கப்படுகிறான். இந்த ஸ்வபாவங்களுக்கு விருத்தமாய்க் கொண்டிருப்பவன் ஆத்மா என்னும் சப்தத்தால் சொல்லப்படுவதில்லை என்பது பெரியோர்களின் சித்தாந்தம் ஆத்ம சப்தத்தால் சொல்லப்படாத ஜீவனிடத்தில் ஆத்மாவென்னும் சப்தம் உபயோகப்படுத்துவது கேவலம் உபசாரமே. அதாவது அமுக்ய விருத்தியாலாகுமென்று வாமன புராணத்தில் கூறப்பட்டபடி ஆத்ம சப்தம் பகவானை முக்யமாகக் குறிக்கும், மற்றவர்களிடம் பிரயோகிப்பது உபசார வழக்கு. அவ்வாறு பகவானைக்குறிக்கும் ஆத்ம சப்தம் இச்சுருதியில் இருப்பதால் இங்கு குறிக்கப்படுபவன் பகவானே தவிர வேறல்ல, என்று கருத்து. இந்த சூத்திரத்தின் ஸ்வதா சூத்திரத்தில் ஆத்மசப்தம் என்று ஆகிரிணை தென்றன் பாலில் கூறப்பட்டிருக்கிற



இச்சூத்திரத்தில் அதையொட்டி கௌணம் சேத் என்று சொல்லவேண்டும், ஆயினும் ஆத்ம சப்தம் உயர்திணை ஆண்பால் ஆதலால் அதையொட்டி கௌண: என்று சொல்லப்பட்டிருக்கிறது.

## 7. ஓம் தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத் ஓம்

ஈக்ஷதி சுருதியில் பிரஸ்தாபிக்கப்பட்டவன் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களுக்குக் கட்டுப்பட்ட ஜீவனல்ல ஏனென்றால் பகவானையே குறிக்கும் ஆத்மா என்ற சப்தம் அச்சுருதியில் இருக்கிறது என்று இதற்குமுன் கூறப்பட்டது. இப்பொழுதோ ஆத்ம சப்தம் பகவானைக் குறிப்பதாக ஏன் வைத்துக்கொள்ளவேண்டும்? சேதனன் என்ற அர்த்தம் செய்யலாமே, முற்கூறப்பட்ட சுருதி ஸ்மிருதிகளில் ஆத்மா என்ற பதம் பகவானை முக்கியமாகக் குறிக்கிறதென்றும் ஜீவனை அமுக்யமாக குறிக்கிறதென்றும் கூறப்படவில்லை, என்று கேள்வி வந்தால் அதற்கு பதில் இந்த ஸூத்திரத்தில் சொல்லப்படுகிறது.

இந்த ஸூத்திரத்தின் அர்த்தமாவது—ஆத்ம சப்தம் கௌணமாக ஜீவனிடம் முக்யமென்பது ஏனெனில் தந்நிஷ்டஸ்ய அந்த ஆத்மாவை அறிந்தவனுக்கு மோக்ஷோபதேசாத் மோக்ஷத்தைச் சொல்லியிருப்பதால், எந்த இடத்தில் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறதென்றால் பிருஹதாரண்யத்தில் யஸ்யானு வித்த: ப்ரதிபுத்த ஆத்மா அஸ்மின் ஸந்தோஹே கஹனே ப்ரவிஷ்ட: ஸ விச்வகிருத் ஸஹிஸர்வஸ்ய கர்த்தா தஸ்ய லோக: ஸஉலோகஏவ எல்லாவற்றைச் சிருஷ்டிப்பவரும் வாயு பகவானை உண்டு பண்ணுகிறவரும் இயற்கையாகவே எல்லாம் அறிந்தவரும் கம்பீரமான இருதய குகையிலுள்ளவருமான விஷ்ணுவை எந்த உபாஸகன் நன்கு அறிவானோ அவனுக்கு விஷ்ணு லோகமே கிடைக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்ம சப்தத்தால் [illegible] குணபத்தனை ஜீவனாகமாட்டான். [illegible] குணங்களுக்குக் கட்டுப்பட்டவனை [illegible] ப்பதால் அக்குணங்களிலிருந்து விடுதலை அடைவதான மோக்ஷம் ஏற்படாதல்லவா!

202165

## 8. ஓம் ஹேயத்வா வசனாச்ச ஓம்

வேறொரு யுக்தியாலும் ஆத்ம சப்தம் குண பத்தனான ஜீவனைக்குறிக்காது என்று இச்சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. இதன் அர்த்தமாவது— ஆத்ம சப்தம் கௌணனான ஜீவனிடம் முக்யமன்று "ஏனெனில் தமேவைகம் ஜானத ஆத்மானம் அன்யா வாசோ விமுஞ்சத" ஹே ரிஷிகளே ! அந்த விஷ்ணுவையே ஸர்வோத்தமனாக அறியுங்கள். மற்ற ஜீவன் விஷயமான பேச்சுகளை விட்டொழியுங்கள்—என்று முண்டகோபநிஷத்தில் 'ஹேயத்வ' பகவானை விட்டொழிக்கவேண்டும் என்று 'அவசனாத்' சொல்லப்படவில்லை. 'ச' ஆதலாலும் என்றிருப்பதால் ஆத்ம சப்தம் பகவானைத்தான் குறிக்கும்.

## 9. ஓம் ஸ்வாப்யயாத் ஓம்

ஈக்ஷதேர் நாசப்தம் என்ற சூத்திரத்தில் பகவான் நம்முடைய அறிவுக்கு விஷயமாயிருப்பதால் வேத சப்தங்களால் வ்யவரிக்கத்தகுந்தவன் என்று சொல்லப்பட்டது. இந்த சூத்திரத்தில் வேறொரு யுக்தியால் பகவான் வேதத்தால் பிரதிபாதிக்கப் படுகிறவன் என்று சொல்லப்படுகிறது. இதன் அர்த்தமாவது—

"பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவ சிஷ்யதே"—பகவானின் மூல ரூபம் பூர்ணமானது அவருடைய மத்ஸ்யாதி ரூபங்களும் பூர்ணமானவைகளே. இந்த பூர்ணமான அவதார ரூபம் ஸ்ருஷ்டி காலத்தில் பூர்ணமான மூல ரூபத்திலிருந்து வெளிக்கிளம்புகிறது. பிரளய காலத்தில் மூல ரூபமானது தன் பூர்ணமான அவதார ரூபத்தை உள்ளடக்கிக்கொண்டு பூர்ணமான மூல ரூபமாகவே இருந்து வருகிறது என்று பிருஹதாரண்ய சுருதியில் 'ஸ்வ' தனக்கு 'ஸ்வ' தன்னிடமே 'அப்யயாத்' லயமுண்டு என்று சொல்லப்படுவதால் நிர்குணனை அதாவது பிராக்ருத குணங்களில்லாதவனை பகவான் வேதத்தால் பிரதிபாதிக்கப்படத்தகுந்தவனே.



## 10. ஓம் கதி ஸாமான்யாத் ஓம்

முற்கூறப்பட்ட விஷயங்கள் யாவும் பிரஸித்தமான சில வேத சாகைகளில் சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் நாம் கேள்விப் படாததால் அப்ரஸித்தமான அனந்தமாயிருக்கும் வேதங்களின் வேறு சாகைகளில் வித்யாசமாக ஏன் சொல்லப்பட்டிருக்கக் கூடாது ? என்ற சந்தேகத்திற்கு இச்சூத்திரத்தில் ஸமாதானம் கூறப்படுகிறது. இதன் அர்த்தமாவது—"ஸர்வே வேதா: யுக்தய: ஸுப்ரமாணு ப்ராப்மம் ஞானம் பரமம் த்வேகமேவ"—எல்லா வேதங்களும் வேத சாகைகளும் நல்ல பிரமாணங்களை மூலமாகக் கொண்ட யுக்திகளும் பகவத் விஷயமான 'கதிஸாமான்யாத்' ஒரே விதமான ஞானத்தை உண்டு பண்ணுவதால் மற்ற வேத சாகைகளில் முற்கூறப்பட்டதற்கு மாறாக சொல்லப்படுவதில்லை என்று அறியவேண்டும்.

## 11. ஓம் சுருதத்வாச்ச ஓம்

இந்த சூத்திரத்தில் மீண்டும் இன்னொரு யுக்தியால் நிர்குணனை பகவான் வேத சப்தங்களால் பிரதிபாதிக்கப்படுகிறவன் என்று சொல்லப்படுகிறது. அர்த்தமாவது—'சுருதத்வாத் ச'—ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட; ஸர்வ வ்யாபீ ஸர்வ பூதாந்தராத்மா | கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ சேதா கேவலா நிர்குணஸ்ச—பிரதானமாயும் பிரகாசிப்பவராயும் எல்லா பிராணிகளிடமும் மறைந்து இருப்பவரும் தேசம் காலம் குணம் இவற்றால் பரவியிருப்பவரும் எல்லாப் பிராணிகளின் உள்ளேயிருந்து நன்கு பிரேரணை செய்து தாயார்போல் இருப்பவருமான பகவான், நிர்குணன், அதாவது பிரகிருதி ஸம்பந்தமான குணங்களில்லாதவன் என்று சுவேதாசுவேதரோபநிஷத்தில் கூறப்படுகிறது ஆதலால் பகவான் சப்த வாச்யன்தான்.

இவ்வாறு ஏழு சூத்திரங்களில் பகவானின் ஸ்வரூபத்தை முற்றிலுமே வர்ணிக்க முடியாவிட்டாலும் ஓரளவேனும் வர்ணிக்க முடியும் என்று சாதிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

# மதிப்புரை.

## வாயு அவதார மான்மியச் சுருக்கம்.

இப்பெயர் கொண்ட இரண்டு சிறு புஸ்தகங்கள், இங்கிலீஷிலும் தமிழிலும் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ராய சோடியிலுள்ள போர்டு ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் K ராஜாராவ் B A L T இந்நூலின் ஆசிரியராவார். ஆங்கிலத்திலும் சரியே தமிழிலும் சரியே இந்த ஆசிரியர் ஸ்ரீ வாயு பகவானின் மூன்று அவதாரங்களையும் வெகு அழகாய் எளிய நடையில் அவருடைய மகாத்மியம் நன்கு எல்லோர் மனதிற்பதியுமாறு ஸ்ரீ மகாபாரத தாத்பரிய நிர்ணயத்தின் அபிப்பிராயத்தை அனுசரித்து எழுதியுள்ளார். இவர் பயிற்சி பெற்ற போதனாசிரியராயிருப்பதால் விஷயங்களை சங்கிரஹித்து இதாரளின் மனதிற் பதியுமாறு எழுதியிருப்பது முற்றிலும் பொருந்தும். முக்யமாய் பீமசேனரின் சரித்திரத்தைச் சொல்லும் பாகம் மிகவும் சுருக்கமாயிருப்பினும் அழுத்தமாயிருப்பது மெச்சத்தகுந்தது. ஸ்ரீ மத்வ மதத்தின் கொள்கைகளும் சுருக்கமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகங்கள் கிரயத்தொகை திருப்பதி வைகுண்ட மலையின் அடிவாரத்திலுள்ள தர்ம சத்திர அன்னதானத்திற்குச் செல்வதாய் அறிவித்திருக்கிறபடியால் ப்ராணபதியின் மகாத்மியத்தை நன்கு அறிவிக்கும் இந்நூல்களை நம்மவர்கள் பெருவாரியாய் வாங்கி அன்னதான தர்மத்திற்கும் ஸகாயம் செய்வது ஹரிக்கு ப்ரீதி ஆகும் என்பது எமது துணிபு. புஸ்தகங்கள் விலை இங்கிலீஷ் பதிப்பு 5 அணா தமிழ் பதிப்பு 4 அணா

அடியிற்கண்ட விலாஸத்தில் இந்நூல்கள் கிடைக்கும்:—

வெங்கட்டராவ், ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர்,

துளஸீமிட்டா, திருப்பதி

## ஸிவில் ஸூட் 3-வது இஷ்யூ
அல்லது
## ஜீவப்ரம்ம பேதவிசாரம்

பூலோகத்திய தர்மாதர்மங்களுக்கு விவஸ்தாபாகமாகிய யமலோகத்திய ஹைகோர்ட்டில் அங்குள்ள சீப் ஜஸ்டிஸ் தர்மராஜனின் வேதாந்த விசாரணையாகிய ஸிவில் ஸூட் என்னும் அதியற்புதமான உத்தம



நூலில் இதன் ஆசிரியர் ஸ்ரீமத் வைதிக வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபகாசாரியராய் ஸர்வதந்திர ஸ்வதந்திரரென்று அன்வர்த்தகமான உலகப் பிரசித்தி அடைந்தவராயுள்ள ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரியரான ஸ்ரீ உத்தராதி மடம் ஸமஸ்தானாதிபதி ஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்த ஸ்வாமிகள் பரப்ரம்மம் ஜீவனைவிட வேறானதா அல்லவா என்ற மிகப்ரதானமான ப்ரச்னையை மூன்றாவது இஷ்யூவாக ஏற்படுத்திக்கொண்டு வெகு விஸ்தாரமாக ஸிவில் கோர்டில் நடந்துவரும் கேஸ் விசாரணை ரீதிப்படி வாதிப்ரதிவாதிகளின் ப்ரதான விசாரணை குறுக்கு விசாரணை அவரவர்களுக்கு ஆதாரமாயுள்ள தஸ்தாவேஜுகளை தாக்கல் செய்து விமரிசை செய்தல் முதலானவைகளுடன் விசாரம் செய்திருக்கிறார்கள். இந்த இஷ்யூவின் டிக்ரி ஜட்ஜ்மெண்டு 82 பக்கங்களும் சாக்ஷி விசாரணை 320 பக்கங்களும் ஆக இந்த விஷயம் ஒன்றே 400 பக்கங்களைக்கொண்ட பெரியதொரு புஸ்தகமாக வெளியிடப்பட்டு எமது மதிப்புரைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நாம் பிரசுரித்திருந்தபடி இந்நூல் ஸ்ரீமத்வ ஸித்தாந்த அபிவிருத்திகாரிணி சபையாரால் உலகில் ஸ்ரீ மத்வ ஸித்தாந்த பிரசாரத்திற்காக பல பாஷைகளில் வெளியிடப்பட்டு ஆஸ்திகர்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படுகிறது. இந்நூலை அடைய விரும்புவோர் மதராஸ் திருவல்லிக்கேணி 10 ஹனுமந்தராயன் கோயில் தெரு ஸ்ரீமான் S கிருஷ்ணாசாரியாருக்கு (போஸ்டேஜ்) தபால் செலவுக்காக அடியிற்கண்ட தொகையை அனுப்பிப் பெறலாம்.

முதல் 2 இஷ்யூக்களுக்கு 0—1—0 மூன்றாவதற்கு 0—6—0 நான்காவதற்கு 0—3—0 ஐந்தாவதற்கு 0—3—0 ரிஜிஸ்டர் செய்யவேண்டுமானால் 0—3—0 பிரத்தியேகம்.

# செய்தித்திரட்டு.

—0—

தாராபுரம் ஸ்ரீ ஸமீர கிங்கர சபையின் ஆதரவின்கீழ் 12—3—36 அன்று ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி தேவஸ்தானத்தில் திருநெல்வேலி ஸப்ஜட்ஜ் ஸ்ரீமான் D S ராஜாராவ் அவர்களால் ஸ்ரீ வியாஸராஜ ஸ்வாமிகள் ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகள் இவர்களின் புண்ய தின மகோத்சவம் நடத்தப்பட்டதென்றும் பகலில் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் அலங்காரம் பிராம்மண சந்தர்ப்பணையும் இரவில் ஸ்ரீமான் தேவாசாரியாரால் இம்மகான்களின் திவ்விய சரித்திர உபந்யாஸமும் நடத்தப்பட்டதென்று இச்சபை காரியதரிசி ஸ்ரீமான் சப்புராவ் அறிவிக்கிறார்.

தம் பதினுயிரக்கணக்கான ரூபாய்களை பிராம்மண சந்தர்ப்பணையிலும் தான தர்மங்களிலும் செலவிட்டு தர்மசிந்தனையும் தாராள நோக்கமும் கொண்டவரென தஞ்சை தென்னார்காடு ஜில்லாக்களில் அதிகப்பிரஸித்தரும், இம்மித்திரனின் ஆசிரியர் ஸ்ரீமான் பாகவத ரங்கநாதாசாரியாரின் மாமனருமான குஞ்சும்மேடு பா. சேஷகிரி ஆசாரியார் அவர்கள் ஸெலிபரல் ஹெமரேஜ் என்னும் உபாதியால் சில நாள் வருந்தி 24-3-36 யுகாதி தினத்தன்று நாகப்பட்டணத்தில் காலகதியடைந்தார். குஞ்சுமேட்டில் பிருந்தாவனஸ்தராயிருக்கும் ஸ்ரீராகவேந்திர குரு சுவாமியின் ஆராதனையில் அதிக காலம் ஈடுபட்டிருந்து வெகு திடமான குருபக்தி ஏற்பட்டிருந்ததின் நிமித்தம் அவர் தன் நிர்யாண காலத்தை உணர்ந்து அச்சமயம் ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரத்தைச் சொல்லச் சொல்லி அதைக்கேட்டு ஆனந்தித்து உயிர் துறந்தது ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது.

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ பூவராக ஸ்வாமி மாசிமகம் பிரம்மோத்ஸவத்தின் அவபிருதத்திற்காக வழக்கப்படி ஸ்ரீமுஷ்ணத்தினின்றும் ஸமுத்திரக் கரைக்கு கிள்ளைக்கு 8—3—36ல் எழுந்தருளியபொழுது சுமார் 2000 ஜனங்களுக்குமேல் கூடியிருந்தனரென்றும் அச்சமயம், சுமார் 130 வருஷ காலமாய் நடைபெற்றுவரும் எலத்தூர் வேதகர்ப ஆசாரியாளின் மண்டகப்படியை இவ்வருஷம் அவருடைய சந்ததியாரான ஸ்ரீமான் வெங்கடராயாசாரியாரால் பலவகை அவல் தினுசுகள் பஞ்சாமிர்தம் நீர் மோர் முதலியவைகளுடன் சுமார் 11 மணிக்கு அனைவருக்கும் பலகார சந்தர்ப்பணை வெகு விமரிசையாய் அளிக்கப்பட்டதென்றும் அச்சமயம் வழக்கப்படி ஸ்ரீமான் சீர்காழி சுப்பராய முதலியாரால் 80 குடம் தயிர் உதவப்பட்டதென்றும் பிறகு மாலை 3 மணிக்கு கிள்ளைமான்யதாரரால் பிராம்மண போஜனம் நடத்தப்பட்டதென்றும் இவ்வரிய கைங்கரியங்களைச் செய்தவர்களுக்கும் இதற்கு பொருளுதவி செய்தவர்களுக்கும் ஸ்ரீ பூவராஹரின் ஸம்பூர்ண கடாக்ஷம் ஏற்படப் பிரார்த்திப்பதாயும் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீனிவாஸாசாரியார் அறிவிக்கிறார்.

### ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மத்வ விஜயம்.

---

(எட்டாவது ஸர்க்கம்.)

## ஸ்ரீமத்வாசாரியாரின் பதரிவாஸம்

(முன் 272-ம் பக்கம் தொடர்ச்சி)

18. ஸாது ஜனங்கள் இந்த நாராயணரை மகாசக்தியுள்ள ரிஷிச்ரேஷ்டரான ஜமதக்னி ரிஷியின் வம்சத்தில் பிறந்தவரும் அடுத்



தடுத்து இருபத்தி ஒரு தடவை கண்டாக்கோடாரியால் விளங்கும் பிரகாசத்தால் துஷ்ட க்ஷத்திரியர்களாகிய இருட்டைப் போக்கியவரும் தன் பக்த ஜனங்களுக்கு அடியிற்கண்ட இதர பகவத்ரூபம் போல் க்ஷேமத்தைத் தருபவருமான பரசுராமராகவும் மகா சக்தியுள்ள மகரிஷியின் குருவான சக்திரிஷியின் வம்சத்தில் பிறந்தவரும் அடுத்தடுத்து உத்தமமானவைகளும் சுபமானவைகளும் இணையற்றவைகளுமான தம் வாக்யங்களால் தேவர்கள் மனுஷ்யர்கள் இவர்களின் அக்ஞானந்தகாரத்தை நிவிருத்தி செய்தவரும் அதனால் உலகத்தாருக்கு சுகத்தைத்தருபவரும் மகா சக்தி படைத்த கசியப முனியின் வம்சத்தில் பிறந்தவனும் மேலானவைகளும் பிரகாசிப்பவைகளும் இணையற்றவைகளுமான கிரணங்களால் மனுஷ்யர்கள் தேவர்கள் இவர்களின் இருட்டைப்போக்கும் சூரியனைப்போல் உலகத்திற்கு ஹிதத்தைத்தருபவரான ஸ்ரீவேதவியாஸராகவும் சொல்லுகின்றனர். 19 கருணைக்கு உற்பத்தி ஸ்தானமாயுள்ள அந்த பகவான் நாராயணன் முன்பு த்ரேதாயுகத்தில் பூமியின் தேவதைகளாகவுள்ள பிராம்மணர்களான விச்வாமித்ராதி மகரிஷிகளுக்கு ஆனந்தத்தை அளிப்பவராய் சீதளமாயில்லாத உஷ்ணமான கிரணமுள்ள சூரியனின் வம்சத்தில் பிறந்தார். அவருக்கு பூமியில் உத்தமமான ஸம்பத்துள்ள பத்து திக்குகளையும் ஜயித்தவரும் சத்ரு ஸம்ஹாரராயுமுள்ள தசரத மகாராஜன் தந்தையாக ஆனான். அப்படியே இந்த கருணாகரரான நாராயணர் முன்பு த்வாபரயுகத்தின் முடிவில் வசுதேவருக்கு ஆனந்தத்தை அளிப்பவராயும் பூமிக்கும் தேவர்களுக்கும் ஆனந்தத்தை அளிப்பவராயும் சந்திர வம்சத்தில் பிறந்தார். அவருக்கு பத்துதிக்கை ஜயித்ததாயும் சத்ரு ஸம்ஹாரகமாயுமுள்ள மேலான ஐசுவரியத்திற்கு காரணமான ரதம் இருந்தது. 20 பதினான்கு லோகங்களுக்கும் ஈசுவரனான பகவானுக்கு நண்பரான ஆதிசேஷன் பாம்புகளுக்கு அதிபதியாயிருப்பினும் இந்த பகவானை ராமனுக்கு தம்பியாய் லக்ஷ்மணனாகப் பிறந்தார். லக்ஷ்மணன் பிறந்தபின் பூமியில் அரியாகிய ஸுதர்சனம் என்னும் சக்ராயுதத்தின் அபிமானியான மன்மதனும் பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தின் அபிமானியான அநிருத்தனும் முறையே பரதன் சத்

ருக்னன் என்று அவனுக்கு தம்பிமார்களாய்ப் பிறந்தார்கள். இந்த நால்வர்களில் லக்ஷ்மணனுக்கு முன்னாடி பிறந்தவரும் தமயனாருமான அந்த பகவானை தன் முகக்காந்தியால் சந்திரனை ஜயிக்க வரும் அழகுள்ளவருமான ஸ்ரீராமர் என்று பெயருள்ளவராய் பெரியோர்கள் சொல்லுகின்றனர். அப்படியே (ii) லோகேசனான பகவானுக்கு நண்பரான ஆதிசேஷன் பாம்புகளுக்கு அதிபதியாயிருப்பினும் கிருஷ்ணருக்கு தமயனாய் பலராமராய் பிறந்தார். இவ்வாறு ராமகிருஷ்ணர்கள் பிறந்தபின் பூமியில பகவத் த்வேஷிகளான அஸுரர்களின் மனதில் பயமுண்டாயிற்று. இந்த கிருஷ்ணரின் தமயனான ஆதிசேஷனின் அவதாரத்தை தன் சரீர காந்தியால் சந்திரனை ஜயிப்பவராய் ஒரே வெண்மையாயிருப்பவரும் வெகு அழகாய் இருப்பவருமான பலராமரென்று பெயருள்ளவராய் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். 21 பிறகு சிறிது காலம் கழித்து ஸமர்த்தரான ராமச்சந்திரன் துஷ்டர்களான மாரீசன் ஸுபாஹு முதலான ராக்ஷஸர்களிடமிருந்து பயந்தவரான விசுவாமித்திர மஹரிஷியால் அவருடைய தபோவனத்திற்கு அழைத்துக் கொண்டுபோகப்பட்டார். அப்பொழுது அந்த ராமச்சந்திரனின் பிரிவைத்தாளாத தசரதர் அடிக்கடித் மிகுந்த துக்கத்துடன் பார்க்கப்பட்டார். பிறகு ராமர் தபோவனம் சென்றபின் தேவர்களுக்கு விருத்தமாயுள்ள தாடகை என்னும் ராக்ஷஸ ஸ்திரீயை ஸம்ஹாரம் செய்தார். (ii) ஸ்ரீ கிருஷ்ணர் பிறகு துஷ்ட ஆளான கம்ஸனினின்றும் பயந்தவராய் தபஸ்வியான தந்தை வசுதேவரால் நந்தகோபன் இருந்திருந்த பிருஹத்வனம் என்னும் வனத்திற்கு கொண்டுபோகப்பட்டார். அவருடைய பிரிவைத்தாளாதிருந்த தந்தையான வசுதேவரால் அடிக்கடி கவனிக்கப்பப்பட்டவராய் இரவில் சஞ்சரிப்பவளான அஸுர ஸ்வரூபமுள்ள பூதனையை ஸம்ஹாரம் செய்தார். 22 பிறகு தாடகையை ஸம்ஹாரம் செய்தபின் விசுவாமித்திர மஹரிஷியின் யக்ஞத்தில் த்வேஷ புத்தியுள்ளவனும் க்ரூரமான தலைமயிர்களைக் கொண்டவனும் அசுபங்களுக்கு ஆஸ்ரயமாய் துர்ஜனத் தலைவனுமான தன்னுடன் யுத்தம் செய்ய வந்த ஸுபாகுவை யுத்தத்தில் ஸம்ஹாரம் செய்யும் அந்த ஸ்ரீராமச்சந்திரனைப்பார்த்து தேவர்கள்



மஹரிஷிகள் முதலான ஸாது ஜனங்களின் கூட்டம் சந்தோஷமடைந்தது. (ii) ஜடைகளுடன் கூடிய மஹரிஷிகளின் குழந்தைகளிடம் த்வேஷ புத்தி கொண்டு அவைகளை எல்லாம் கொன்று வருகிறவர்களும் க்ரூரர்களான கேசி ராக்ஷஸன் அரிஷ்டாஸுரன் என்னும் பெயர்களைக்கொண்ட தலைவர்களான அஸுரர்களை ஸம்ஹாரம் செய்பவரும் யுத்தத்தில் அழகிய புஜங்களைத் தூக்கிக் கொண்டு யுத்தத்தில் நிபுணராயிருப்பவருமான ஸ்ரீகிருஷ்ணரைப் பார்த்து தேவாதி ஸத்ஸமூகம் ஆனந்தமடைந்தது. 23 ஸமஸ்தமான வேதாதி வாக்ய சமூகங்களால் முக்யமாய்ச் சொல்லப்படும் இந்த ராமச்சந்திரன் அழகிய பக்தி முதலான குணங்களென்ன உதாத்தம் முதலான ஸ்வரங்களென்ன இவைகளுடன் கூடிய பிராம்மணர்களுடனுள்ளதும் பிரகாசிப்பதாயுமுள்ள விச்வாமித்திரரின் யக்ஞத்தில் அதற்கு இடையூறு செய்பவர்களைக் கொல்வதற்காக ஆங்காங்கு சஞ்சாரம் செய்துகொண்டு காதுக்கு இனிமையாயுள்ளதும் அழகாயுள்ளதும் தம் மனோபீஷ்டம் பூர்த்தியான விச்வாமித்ர மகரிஷியின் சிநேகம் மிகுந்ததான வார்த்தைக்கு ஆதரணையைக் காட்டிக்கொண்டு விளங்கினார். (ii) அந்த ஸ்ரீ கிருஷ்ணர் பிரகாசிக்கும் இனிமையைக்கொண்டதும் நல்ல த்வனியுள்ளதுமான பக்ஷிகளுள்ளதும் சந்திரனின் சந்திரிகையால் விளங்குவதுமான பிருந்தாவன பூமியில் சஞ்சரித்துக்கொண்டு ஸமஸ்தமான பசுக்கூட்டத்திற்கு நண்பராய் மன்மத தாபமடைந்து சிநேகம் மிகுந்த புத்தியாலும் ஸரஸ வார்த்தைகளாலும் கூடியவர்களான கோபிகா ஸ்திரீ ஜனங்களை ஆனந்திப்படுத்திக்கொண்டு விளங்கினார்.

(தொடரும்)

# ஸ்ரீவித்யாதீசஸ்வாமிகளின் சரித்திரம்.

ஸ்ரீவித்யாதீசஸ்வாமிகள் உத்திராதிமடத்தின் ஸம்ஸ்தானாதிபதிகளில் ஒருவர். இவர் கிருகஸ்தாசிரமியாயிருந்தபொழுது இவர் பாண்டுரங்கி நரஸிம்ஹாசாரியார் என்று அழைக்கப்பட்டிருந்தார். இவருடைய தந்தை பாண்டுரங்கி வம்சத்து மூல புருஷரான ஆனந்த பட்டர். இவர் தந்தையிடமே எல்லா சாஸ்திரங்களையும் படித்து மகா

பண்டிதராயிருந்தார். ஸ்ரீ வரதிராஜஸ்வாமிகள் இவருடைய தந்தை பாண்டுரங்கி நரஸிம்ஹாசாரியாருக்கு உமது குமாரர் பரமஹம்ஸராய் ஆவார் என்று சொன்னதற்குத் தகுந்தபடி இவர் ஸன்யாஸியாய்ப் போனதுமன்றி உத்திராதிமடம் ஸம்ஸ்தானாதிபதியுமானார். தேசசஞ்சாரம் செய்துகொண்டு இவருடைய பிதுருஹள்ளி என்னும் ஊருக்கு சென்றிருக்கையில் அங்கு காசியிலிருந்து வித்யாப்யாஸம் செய்து மகா பண்டிதராய் வந்த ரங்கோஜிபட்டர் என்பவரை வாதத்தில் ஜயித்தார். காசியில் பல வருஷங்கள் வசித்திருந்தார். பிறகு கயா க்ஷேத்திரத்திலும் பல வருஷங்கள் வசித்திருந்தார். அச்சமயம் கயா க்ஷேத்திரவாஸிகளான கயா வாளிகள் யாத்ரீகர்களை பணம் கொடுக்க அதிகமாய் நிர்பந்தம் செய்துவந்ததைப்பார்த்து வருத்தப்பட்டு இனி தம் மாத்வர்கள் கயாவாளிகளின் சுவாதீனத்திலுள்ள இடங்களில் சிராத்தம் செய்ய சிரமப்படவேண்டாமென்றும் தம் மடத்தில் ஸ்ரீ மூலராமர் இருப்பதால் இது ராம கயை ஆகுமென்றும், இது மகா புண்ய ஸ்தலமாகுமென்றும் அறிவித்து, ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களுக்கு தன் இருப்பிடத்திலேயே சிராத்தாதிகளைச் செய்ய சௌகரியங்களை அளித்துவந்தார். இதனால் கயாவாளிகளுக்கு இவரிடம் மனத்தாங்கல் இருந்துவந்தபோதிலும், ஆயிரக்கணக்கான மாத்வர்கள் இவரிடம் மிக்க பக்தி கொண்டு, இவருடைய வார்த்தையின்படி நடந்து வருவதைப் பார்த்து இம்மகானிடம் அதியற்புதமாய் ஜனங்களை வசீகரணம் செய்யும் விசேஷமான ஒரு பகவத் சக்தி குடிகொண்டிருக்கவேண்டுமென்று நிச்சயித்து இவருடைய காரியங்களை நுட்பமாய் கவனித்து வந்தார்கள். ஸ்ரீவித்யாதீசஸ்வாமிகள் பகவத் பூஜை ஆனவுடன் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு தினம் தம் சிஷ்ய கோடிகளுக்கு பகவத் பாதோதக தீர்த்தம் கொடுக்கிற வழக்கம் உண்டு. இந்த இடத்திற்கு சமீபத்திலிருந்த ஓர் பட்ட மரத்தின் மீது இவருடைய சங்கோதக தீர்த்தம் விழுந்து அந்த பட்ட மரம் துளிர்த்து இலை விடுவதைப் பார்த்து கயாவாளிகள் எல்லோர்களும் மகா ஆச்சரியமடைந்து தங்கள் குற்றங்களை எல்லாம் மன்னித்து தங்கள் வகுப்பார்களை எல்லாம் அவருடைய சிஷ்யர்களாய் செய்து கொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். அதன்படி ஸ்ரீவித்யாதீசஸ்வாமிகள் கயா வாளிகளை தம் சிஷ்யராகச் செய்து கொண்டார். அன்று முதல் தான் கயாவாளிகள் உத்திராதிமடத்து சிஷ்யர்களானதுமன்றி கயாவிலுள்ள விஷ்ணு பாதக்கோவிலும் ஸ்ரீ உத்தராதி மடத்தாரின் ஆதீனத்திலிருந்து கொண்டு ஸ்ரீவிஷ்ணு பாதத்தின்



முதற் பூஜையும் இம்மடத்தாரால் செய்யப்பட்டுவருகிறது. ஸ்ரீஸ்வாமிகள் அங்கிருந்து புறப்பட்டு வடதேசத்தில் எல்லா இடங்களிலும் சஞ்சரித்து மத்வ மதத்தை பிரசாரம் செய்தார். யமுனா தீரத்திலுள்ள ஏகசக்ரா நகரத்தில் பல நாள் வசித்து அங்குள்ள மிச்ரர்களென்பார்களையும் சிஷ்யர்களாய்ச் செய்துகொண்டார். அந்தமிச்ர ஜாதியார்களில் ஒருவர் வனமாலாமிச்ரர் என்பார் நியாயாம்ருததரங்கிணிக்கு கண்டனமான பிரம்மானந்தீயத்திற்கு கண்டன கிரந்தம் எழுதவும் அது வனமாலாமிச்ரீயம் என்று பிரஸித்த நூலாய் இருக்கிறது. இவர் பதரிகாசிரமம் போயிருந்தார். வெகு நாள் அங்கு வசித்திருந்தார். வடதேசத்திலுள்ள மைதிலர்கள் முதலான பல வகுப்பார்கள் தாங்கள் மத்வமதத்தைச் சேர்ந்தவர்களென்றும் ஸ்ரீவித்யாதீசஸ்வாமிகளின் மடத்தைச்சேர்ந்தவர்களென்றும் இன்னமும் சொல்லிக்கொள்கின்றனர் இவருடைய காலத்தில் ஏகாதசி உபவாஸ விஷயமாய் பண்டிதர்களில் தகரார் ஏற்படவும் எல்லோரையும் வரவழைத்து உபவாஸ நிர்ணயம் செய்யும்படியாய் சாசுவதமான ஓர் திட்டத்தை ஏற்படுத்திக்கொடுத்தார். பாண்டுரங்கி ஸம்பிரதாயத்தார்கள் தாங்கள் வித்யாதீசஸ்வாமிகளின் ஸம்பிரதாயமுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்கின்றனர். இதர ஸம்பிரதாயத்தார்களில் ஒரு சிலரும் தாம் வித்யாதீசஸ்வாமிகளின் திட்டத்தை அனுஸரிப்பவர்கள் என்று சொல்லிக்கொள்வதிலிருந்து இதரர்களுக்கும் ஸ்ரீஸ்வாமிகள் அவரவர்களின் ஸம்பிரதாயப்படி திட்டத்தை ஏற்படுத்திக்கொடுத்திருப்பதாய் நிச்சயிக்கவேண்டியிருக்கிறது இவருடைய சிஷ்யர் வேதநிதிதீர்த்தஸ்வாமிகள். இவர் கலியுகம் சகம் 1553 ப்ரஜாபதி வருஷம் புஷ்ய மாஸம் கிருஷ்ணபக்ஷம் சதுர்தசியன்று ஏகசக்ரா நகரத்திலேயே பிருந்தாவன பிரவேசம் செய்ததாய் சொல்லப்படுகிறது இவர் வாக்யார்த்த சந்திரிகை என்று நியாயஸுதையின் முதல் ஐந்து அதிகரணங்களுக்கு டிப்பணி, த்வித்வவாதார்த்தம். தலவகார உபநிஷத் கண்டார்த்தம் ஓம்காரவாதார்த்தம், திதித்ரய நிர்ணயம் என்று பல நூல்களை இயற்றியிருக்கிறார்.

---

## மாத்வமித்திரன் காலண்டர்.

நாம் சென்ற மாதத்திய மாத்வமித்திரனில் பிரசுரித்திருந்தபடி பௌர்ணமியன்று எமது காலண்டர்கள் வெளியாகி எல்லா ஆர்டர்களுக்கும் அனுப்பியாகிவிட்டது. தேவைக்குத்தகுந்தபடித்தான் காபிகள் அச்சிடப்படுவதால் தற்போது எமது கைவசத்தில் சுவல்ப காபிகள்தான் இருந்துவருகின்றன. எல்லா ஊர்களிலும் எமது மாத்வமித்திரன் காலண்டர்கள் பிரசாரமடையவேண்டுமென்ற உத்தேசத்துடன் ஒரே ஊரிலிருந்துவந்த பெருவாரியான ஆர்டர்களுக்கு சிறிது குறைவாகவே காபிகள் அனுப்பப்பட்டிருப்பதை எமது நேயர்கள் மன்னிக்கக்கோருகிறோம். தற்போது நமக்கு கிடைத்து வரும் ஆர்டர்

களின் ரீதியில் வெகு சீக்கிரமே கைவசமுள்ள காபிகள் செலவடைந்து போகக்கூடும். ஆகவே எமது காலண்டர்களை அடைய விரும்பும் எமது சந்தாதாரநேயர்கள் இனி தவக்கமின்றி காலண்டர் 1-க்கு 0—2—9 இரண்டேமுக்காலணு வீதம் தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப்பெறக் கோருகிறோம். காலண்டர்கள் துரிதமாய் செலவழிந்துவருவதால் பிந்தி லேபில்களை அனுப்பி ஏமாறுதிருக்கக்கோருகிறோம். இவ்வருஷம் ஏகாதசி முதலான விரதானுஷ்டானங்களில் பலவகை தகராறுகள் இருப்பதால் மாத்வமித்திரன் காலண்டரின் உதவி ஒவ்வொரு மாத்வருக்கும் இன்றியமையாதது என்பது சொல்லத் தேவையில்லை. தற்போது பெரிய நகரங்களில் அடியிற்கண்டவர்களிடம் மாத்வமித்திரன் காலண்டர்கள் கிடைக்குமாதலால் அந்த பிராந்தியத்திலுள்ளவர்கள் ஸுலபமாய் சீக்கிறத்தில் அவர்களிடமிருந்து பெறலாம்.

(1) P. S. ராமராவ், 10 நெ. செட்டித்தெரு, சைதாப்பேட்டை, மதராஸ்.

(2) R. ஸ்ரீனிவாஸராவ், 36 நெ. ஸுந்தரதாஸ் குளத்தெரு, திருச்சி.

(3) காரியதரிசி பிரம்மவித்யாசிரம சபை, 49. பெருமாள் கோவில் தெரு, மதுரை.

(4) V. ராமராவ், 8/162, எடயர்தெரு, கோயம்புத்தூர்.

மாத்வமித்திரன் காலண்டர் 1க்கு விலை அணு 0—2—0 போஸ்டேஜ் முக்காலணு. இரண்டு டஜனுக்குமேல் வாங்குகிறவர்களுக்கு 2 காலண்டர் இனாமாய் கொடுக்கப்படும். கிரயத்தை முன்பணமாய் அனுப்பவேண்டியதவசியம். V. P. P. யில் அனுப்பப்படமாட்டாது. அடியிற்கண்ட விலாஸதாரருக்கு எழுதவேண்டும்.

மானேஜர், மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

## விசேஷ தினங்கள்

தாத்ருநாம ஸம்வத்ஸரம்

வைசாக மாஸம்

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | 4 | 36 | சுக்ரவாரம் | அக்ஷயத்திருதியை |
| 2 | 5 | 36 | சனிவாரம் | ஏகாதசி உபவாஸம் |
| 3 | 5 | 36 | பானுவாரம் | ப்ரதோஷம் |
| 4 | 5 | 36 | சோமவாரம் | நரஸிம்ம ஜயந்தி |
| 6 | 5 | 36 | புதவாரம் | பௌர்ணமி வைசாக ஸ்நாநம் பூர்த்தி ஸம்பத் கௌரி விரதம் விஷ்ணுபஉப |
| 13 | 5 | 36 | புதவாரம் | சிரவணம் உப விஷ்ணுப உப |
| 17 | 5 | 36 | பானுவாரம் | ஏகாதசி உப |
| 18 | 5 | 36 | சோமவாரம் | த்வாதசிஸா தனி மணி 6-25க்குள் பாரணை |
| 20 | 5 | 36 | புதவாரம் | அமாவாசை திலதர்ப்பணம் கிருத்திகா உப விஷ்ணுப உப |

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:**—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், ச்லோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறுதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணு 0—8—0 தபாற் கூலி அணு 0—1—0.

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:**—தேவநாகரத்திலும், தமிழிலும் ச்லோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணு 2 தபாற்கூலி 0—0—6

**ஸ்ரீவாயுஸ்துதி:**—தேவநாகரத்தில் ச்லோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன ச்லோகங்களால் இன்னின்ன பலர் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 0—5—0. தபாற்கூலி அணு ஒன்று.

**த்வைதமத விளக்கம்:**—ஸ்ரீபத்வைதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணு 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்:**—(தமிழ்) அணு 4. தபாற்கூலி பை 6.

**துருவசரித்திர நாடகம்:**— அணு 6. தபாற்கூலி அணு 0—1—0.

**கீதாதத்வம்:**— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

டு சந்தா ரூ 3 Regd. No. M 24

# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்தி விலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்நானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,


அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam

ந்தா ரூ. 3. Regd. No. M. 2419.



# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol. 8. | தாத்ருநாம ஸம்வத்ஸரம். | No. 11. |
|---|---|---|
| புஸ்தகம் 8. | வைசாக மாஸம். (6—5—36 புதவாரம்). | நெ. 11. |

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம். (ஸ்ரீமத்வாசாரியார்) | 313 |
| 2. | ஆசாரமாலை. | 321 |
| 3. | அணுபாஷ்யம் | 325 |
| 4. | விதவா விவாஹ கண்டனம். | 330 |
| 5. | ஸ்ரீஸத்தியஞானதீர்த்த ஸ்வாமிகளின் சரித்திரம் | 333 |
| 6. | பூஜாதிபத்தியத்தில் மாச்சரியம் | 338 |
| 7. | இந்த ஜேஷ்ட சுத்த ஏகாதசி உபவாசம் | 340 |
| 8. | விசேஷ தினங்கள். | 344 |


ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்

# மாத்வமித்திரன்.

---

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்யபுருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸ், கும்பகோணம்.

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

---

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतोभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பரிய நிர்ணயம்.

### இருபத்தி ஐந்தாவது அத்தியாயம்.

*(ஸ்ரீமலே ஆக்யம் பாகவத ரங்கநாதாசாரியார் மொழி பெயர்த்தது.)*

(முன் 288-ம் பக்கம் தொடர்ச்சி.)

---

அந்த ராக்ஷஸன் இராவந்தனிடம் யுத்தத்திற்கு வந்தான். மாயாவிகளும் வீர்யவான்களுமாகிய அலம்புஸ ராக்ஷஸனுக்கும் இராவானுக்கும் மிகவும் க்ரூரமாயும் அதி ஆச்சர்யமாயுள்ள யுத்தம் நடந்தது. அந்த ராக்ஷஸன் ஸவாரர்களுடன் கூடிய குதிரைகளை மாயையால் ஸ்ருஷ்டிசெய்தான். அந்த குதிரை ஸவாரர்கள் வானுடைய ஸவாரர்களை ஸம்ஹாரம் செய்தனர். பிறகு மாயையால் இராசேஷனின் ரூபத்தை தரித்த இராவானை அலம்புஸராக்ஷஸன் கருடன் ரூபத்தை எடுத்து ஸம்ஹாரம் செய்தான். க்ரூரமான பராக்கிரமமுள்ள கடோத்கசன் தன் தம்பியான இராவான் கொல்லப்பட்டதைக்கேட்டு கோபத்தால் கர்ஜித்தான். அதிகமாய் கர்ஜிக்கும் கடோத்கசனின் சப்தத்தால் ஸமுத்ரம் விருக்ஷ ச்ரேஷ்டங்கள் பர்வதங்கள் இவைகளுடன்கூடியபூமி அச்சமயம் மிகவும் ஆட்டம் அடைந்தது. அலம்பு ஸாஸான் பலபூர்ணமான அந்த கடோத்கசனைப்பார்த்து பயந்து ஓடினான். எல்லா துரியோதனனின் ஸேனைகளும் ஓடிற்று. பிறகு அரசனான துரியோதனன் கடோத்கசனிடம் வந்தான். கடோத்கசனின் மந்திரிமார்களையும் மகா பலசாலி

களான வேறு நான்கு ராக்ஷஸர்களையும் ஸம்ஹாரம் செய்தான். மீர்ந்த ராக்ஷஸர்கள் ஓடவும் கடோத்கசன் துரியோதனனை அடித்தான். துரியோதனன் கடோத்கசனால் யுத்தத்தில் ஹிம்சையடைந்தவனாய் கடோத்கசனிடம் பாணத்தை ப்ரயோகம் செய்தான். கடோத்கசன் துரியோதனின் பாணத்தால் பலமாய் அடிபட்டவனாயும் சங்கடமடைந்த இந்திரியங்களுள்ளவனாயுமாகி ரதத்திலிருந்து விழும்படியாய் இருந்தாலும் சிரமப்பட்டு ரதத்தில் நிலைநின்றான். மறுபடியும் துரியோதனன்மீது பாணங்களைப் போட்டான். ஒருவருக்கொருவர் ஜயிக்கமாளாதவர்களும் வெகுநேரம் யுத்தம் செய்பவர்களுமான துரியோதனன் கடோத்கசன் இவர்களை யுத்தபூமியில் சத்ருக்களைப்பொருப்பவர்களான துரோணாதிகள் பார்த்து துரியோதனனை ஸம்ரக்ஷிக்க விருப்பங்கொண்டவர்களாய் துரியோதனனிடம் வந்தார்கள். கடோத்கசன் ஆகாயத்தில் நின்றுகொண்டு மிக்க பருத்தவைகளும் மிக்க வேகமுள்ளவைகளுமான பாணங்களால் துரோணாசாரியார் சல்யராஜா இவர்களுடன் கூடிய அசுவத்தாமா கிருபாசாரியார் இவர்களையும் பூரிச்ரவஸ்ஸு ராஜன் கிருதவர்மன் முதலானவர்களையும் விருஷ்டி செய்தான். கடோத்கசன் ஒருவனே உத்தமர்களான ரதிகர்களால் சூழப்பட்டிருப்பதைப் பார்த்து பீமசேனர் இவர்கள் எல்லோருடனும் யுத்தத்திற்கு வந்தார். இவர்களில் பீமசேனர் போட்ட பாணங்களால் துரோணாசாரியார் மிகவும் சங்கடமடைந்து மூர்ச்சையாய் கீழே விழுந்தார். பீமசேனர் அசுவத்தாமாசாரியார் துரியோதனன் சேர்ந்த கிருபாசாரியார் முதலானவர்களை ஓர் க்ஷணத்தில் ரதமில்லாமல் செய்தார். பீமசேனரால் தடைசெய்யப்பட்ட இவர்களை கடோத்கசன் பாணங்களால் விருஷ்டி செய்தான். ஆகாயத்தில் நின்றுகொண்டு கடோத்கசன் மரங்களைப் போலுள்ள பாண ஸமூகங்களாலும், பூமியில் பீமசேனர் தம் பாண ஸமூகங்களாலும் சங்கடபடுத்தவும் கௌரவர்கள் விழுந்தார்கள். துக்கத்வனியை செய்தனர். மிகவும் பயந்துபோய் ஓட்டம் பிடித்தனர். பீஷ்மாசாரியாரைத்தவிர்த்துள்ள எல்லா கௌரவர்களையும் பீமசேனரும் கடோத்கசனும் அவர்களின் டேராவுக்கு ஓடும்படி செய்து தங்கள் கர்ஜனையால் உலகங்களை ப்ரதித்வனி கொடுக்கும்படியாய் செய்து



பெருத்த நாதத்துடன் சப்தம் செய்தார்கள். யுத்தம் விட்டு ஓடின பின் துரியோதனன் தன் ஜனங்களுடன் சேர்ந்து மறுபடியும் யுத்த பூமிக்கு வந்தான். பீஷ்மாசாரியாரைப் பார்த்து நான் எப்படி கடோத்கசனை ஜயிப்பேன் என்று கேட்டான். அதற்கு பீஷ்மாசாரியார் துரியோதனனைப்பார்த்து நீ கடோத்கசனிடம் யுத்தத்திற்கு போகாதே என்று சொன்னார். தேவநதியான கங்கையின் பிள்ளையான பீஷ்மாசாரியார் கடோத்கசனிடம் பகதத்தனை அனுப்பினார்.

பலிஷ்டனான பகதத்தன் கடோத்கசனிடம் வந்து யுத்தம் செய்தான். கடோத்கசன் ஸுப்ரதீகம் என்னும் யானையுடன் கூடிய பகதத்தனை ஹிம்சித்தான். கடோத்கசனால் ஹிம்ஸிக்கப்பட்ட பகதத்தன் கடோத்கசனிடம் சூலாயுதத்தை விட்டான். அப்பொழுது கடோத்கசன் ஆகாயத்தில் பறந்து சூலாயுதத்தைப் பிடித்து முழங்காலில் வைத்து முறித்துப்போட்டான். இந்த ஸாமர்த்தியத்தைப் பார்த்து தேவர்கள் சந்தோஷப்பட்டார்கள் அப்பொழுது பகதத்தன் கடோத்கசனின் சிப்பாய்களை ஸம்ஹாரம் செய்தான். அச்சமயம் பீமசேனர் பகதத்தனிடம் யுத்தத்திற்கு வந்தார். வீரனான பகதத்தன் பீமசேனரிடம் ஸுப்ரதிகமென்னும் யானையை தூண்டினான். பீமசேனர் அந்த யானையை பாணங்களால் தடுத்தார். மேலான பாணங்களால் யானை தடுக்கப்படவும் பகதத்தன் தன் பாணங்களால் பீமசேனரின் ரதத்திற்கு கட்டின குதிரைகளை ஹிம்சித்தான். கஷ்டப்படும் குதிரைகளுள்ள பீமசேனர் பிறகு கதாயுதத்தை தூக்கிக்கொண்டு யானையுடன் கூடிய பகதத்தனை கொல்லவந்தார். கொல்லவிரும்பி பீமசேனர் கோபத்துடன் பகதத்தனுக்கு எதிரில் யுத்தம் செய்யவந்தார். அர்ஜுனனுடன் சேர்ந்து கிருஷ்ணர் அந்த பகதத்தன் போடும் வைஷ்ணவ அஸ்திரத்தை தான் கிரஹிக்கும் நிமித்தம் பீமசேனர் பின்னடி வந்துசேர்ந்தார். இவ்விருவர்களையும் பார்த்து பயந்துபோய் பகதத்தன் ஓடிப்போனான்.

பகதத்தன் ஓடிப்போய்விடவும் எல்லா ராஜ ஸமூகங்களும் பீமார்ஜுனர்களால் ஓட பீஷ்மாசாரியார் தம் சைனியத்தை எடுத்துக்கொண்டு கூடாரத்திற்கு புறப்பட்டுப்போனார். துரியோ

தனன் அன்றிரவே பீஷ்மாசாரியாரிடம் வந்தான். பீஷ்மரைப் பார்த்து துரியோதனன் க்ரூரமான வார்த்தைகளைப் பேசினான். அப்பொழுது பீஷ்மாசாரியார் நான் சாகுவேன் என்ற மரண பயத்தை விட்டு தன் சக்திக்குத் தகுந்தபடி சத்ருக்களைக் கொல்வதாய் ப்ரதிக்ஞை செய்தார். அதன்படி பீஷ்மாசாரியார் ஒன்பதாவது நாள் தன் ப்ரதிக்ஞைப்படி யுத்தம் செய்தார்.

துரியோதனாதிகள் பீஷ்மாசாரியாரை சிகண்டியின் சமீபம் வராமல் தன் சக்தியால் ஸம்ரக்ஷித்து வந்தார்கள். பீஷ்மாசாரியாரால் ஹிம்ஸிக்கப்பட்டவர்களாய் அவருடைய பாணத்தால் மிகவும் பயந்தவர்களாய் சேதிராஜர்கள் பாஞ்சாலராஜர்கள் மத்ஸ்யராஜர்கள் சிம்ஹத்தால் பிடிக்கப்பட்ட அல்ப பிராணிகளைப்போல் ஓடினார்கள். ஓடிப்போகும் சேதிராஜர்கள் முதலானவர்களை நிறுத்தி பீஷ்மரிடம் யுத்தத்திற்கு வரும் அபிமன்யுவை அலம்புஸாஸுரன் தடுத்தான். க்ருஷ்ணரின் தங்கை பிள்ளையான அபிமன்யு அலம்புஸாஸுரனை ஜயித்து பீஷ்மரிடம் வந்தான். துரியோதனன் அபிமன்யுவிடம் வந்தான். துரியோதனனுக்கும் அபிமன்யுவுக்கும் விசித்ரமாயும் அதி ஆச்சரியகரமாயுமுள்ள பயங்கரமான யுத்தம் ஸமமாய் வெகுகாலம் நடந்தது. துரியோதனன் அபிமன்யுவின் தனுஸ்ஸையும் த்வஜத்தையும் சேதித்தான். பிறகு க்ரூரமான பாணங்களால் அபிமன்யுவை விருஷ்டிசெய்தான். வீரனை துரியோதனன் அபிமன்யுவின் ஸாரதியை ஸம்ஹாரம் செய்தான். அப்பொழுது பீமசேனர் துரியோதனனிடம் வந்தார். துரியோதனனுடைய நான்கு குதிரைகளையும் ஸம்ஹாரம் செய்தார். த்ரோணாசாரியார் அசுவத்தாமாசாரியார் பகதத்தன் க்ருபாசாரியார் சித்ரஸேனனுடன் சேர்ந்து பீமசேனரிடம் வந்தார்கள். பீமசேனர் இவர்கள் எல்லோரையும் திரும்பிப்போகும்படி செய்து சித்ரஸேனரைக் கொல்வதற்காக கதாயுதத்தைத் தூக்கிக்கொண்டார். கதாயுதத்தைத் தூக்கிக்கொண்டதை த்ரோணாசாரியார் முதலானவர்கள் பார்த்து ஓடினார்கள். துரியோதனனின் தம்பியான அந்த சித்ரஸேனன் ரதத்திலிருந்து மேலே பறந்தான். கதாயுதம் மேலே விழுந்து ரதம் பொடியாய்ப்போயிற்று. சித்ரஸேனன் பிழைத்துப் போனதிலிருந்து கௌரவர்கள் சந்தோஷமடைந்தனர். அன்று



க்ரூரரான பீஷ்மாசாரியார் பதினாயிரம் பாஞ்சால ராஜர்கள் கரூச ராஜர்கள் சேதி ராஜர்கள் இவர்களை ஸம்ஹாரம் செய்தார். க்ரூரமான தேஜஸ்ஸுள்ள பீஷ்மாசாரியார் வேறு சிரேஷ்டரதிகர்களையும் எப்படி ஓநாய் ஆடுகளை விரட்டியடிக்குமோ அப்படி விரட்டினார். பீஷ்மாசாரியார் எல்லா பாண்டவ ஸைனியங்களையும் விரட்டி தன் கீர்த்தியை உலகில் ப்ரசித்தம் செய்து துரியோதனாதிகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவராய் இராக்காலம் வந்து சேரவும் தன் ஸேனையை திரும்ப கூட்டிக்கொண்டு டேராவுக்கு வந்தார். த்ரோணாசாரியார் விராட ராஜனின் எதிரிலேயே அவனுடைய குமாரனை சங்கனை ஸம்ஹாரம் செய்து, விராட ராஜனை ஜயித்து பாண்டவ ஸேனையை விரட்டியடித்து பீஷ்மாசாரியாருடன் சேர்ந்து சந்தோஷமுள்ளவராய் தன் டேருபோய்ச்சேர்ந்தார்.

பீமார்ஜுனர்கள் சத்ருக்களை ஸம்ஹாரம்செய்து எல்லா மகாவீரர்களையும் யுத்தத்தில் நிறுத்தி, பீஷ்மாசாரியாரால் பீதியடைந்த தர்மபுத்திரர் ஸைனியத்தை திருப்பிக்கொள்ளவும், அவர்களின் டேராவுக்கு போனார்கள். பீஷ்மாசாரியாரின் பராக்கிரமத்தால் தர்மபுத்திரர் பயப்பட்டு அவரையே, அவரை எப்படிக்கொல்வதென்ற உபாயத்தைக் கேட்பதற்காக இராத்திரி காலத்தில் அவரிடம் போனார். தர்மபுத்திரரின் தம்பிமார்களும் க்ருஷ்ணரும் அவருக்குப் பின்னே போனார்கள். பீஷ்மாசாரியார் பாட்டனாராயிருப்பதால் பீமார்ஜுனர்கள் ஸமர்த்தர்களாயினும் பீஷ்மாசாரியாரின் ஆக்ஞையின்றி அவரைக்கொல்ல விருப்பமில்லை. மேலான காரியங்களுள்ள பீஷ்மாசாரியார் பூஜைக்கு அருகரானதால் பாண்டவர்களின் நிமித்தம் அவர்களுக்கு பீஷ்மாசாரியாரிடமிருந்து அனுமதி வாங்கித் தருவதற்காக மேலான ப்ரேரகரான ஸ்ரீ க்ருஷ்ணர் பாண்டவர்களுடன் கூடச்சென்றார். பாண்டவர்கள் பீஷ்மாசாரியாரிடமிருந்து அவரைக்கொல்வதற்காக அனுமதியைப்பெற்று அவருடைய வார்த்தையின்படி சிகண்டியை அவர் எதிரில் போகும்படிசெய்து பத்தாவது நாள் யுத்தம் செய்ய புறப்பட்டார்கள். துரியோதனாதிகள் பீஷ்மாசாரியாரை முன்னிட்டுக்கொண்டு யுத்தம் செய்ய புறப்பட்டார்கள். அர்ஜுனன் சிகண்டிக்கு ரக்ஷகனாய் ஆனான். துச்சாசனன் பீஷ்மாசாரியாருக்கு முன் ஸம்ரக்ஷகனாய்

புறப்பட்டான். மற்றவர்கள் எல்லோரும் பீஷ்மாசாரியாரை ஸம்ரக்ஷணம் செய்தார்கள். பீமசேனாதிகள் பீஷ்மாசாரியாரின் ரக்ஷகர்களைத் தடுத்தார்கள். பிறகு பீஷ்மாசாரியாரிடம் யுத்தம் செய்யப் புறப்பட்ட ஸாத்யகியை அலம்புஸாஸுரன் தடுத்தான். யாதவ சிரேஷ்டனான ஸாத்யகி வஜ்ஜிராயுதத்திற்கு ஸமமான பாணங்களால் அலம்புஸாஸுரனை அடித்தான். அப்பொழுது அலம்புஸாஸுரன் க்ரூரமான மாயையை சிருஷ்டி செய்தான். வீரனான ஸாத்யகி தன் அஸ்திரத்தால் அவனை அவமானம் செய்து அவனுடைய மாயையைப் போக்கி அவனை விரட்டி விட்டான். அந்த ராக்ஷஸன் ஓட்டம் பிடிக்கவும் தனுர் தாரியான ஸாத்யகி ரதத்தில் உட்கார்ந்து கொண்டு அர்ஜுனனுக்குப் பின்னடி பீஷ்மாசாரியாரிடம் வந்தான். துரோணாசாரியார் அசுவத்தாமாசாரியார் துரியோதனன் பூரிச்ரவஸ்ஸுராஜன் பகதத்தன் கிருபாசாரியார் சல்யராஜன் பால்ஹீகராஜன் கிருதவர்மா ஸுசர்மா எல்லா சைனியங்களும் பீமசேனரால் தடுக்கப்பட்டார்கள். வீரரான பீமசேனர் இவர்களை அடுத்தடுத்து ரதமில்லாதவர்களாய்ச் செய்து இவர்களை விரட்டி அர்ஜுனனிடம் யுத்தம் செய்ய விருப்பமுள்ளவனான யானையுடன் கூடிய பகதத்தனை தடுத்தார். அர்ஜுனன் பீஷ்மாசாரியாரிடம் வந்து பாணங்களால் அடித்தான். பீஷ்மாசாரியார் முன்பு சிகண்டி பெண்பிள்ளை என்று தெரிந்துகொண்டு அவனிடம் பாணத்தை ப்ரயோகம் செய்யவில்லை. சிகண்டியோ பீஷ்மாசாரியாரை அடித்தான். துர்மர்ஷணன் கோபத்தால் கலங்கிய கண்களுள்ளவனாய் பாணங்களால் சிகண்டியை தடுத்தான். சிகண்டி அவனைத்தாண்ட முடியவில்லை. அச்சமயம் துர்ச்சாசனன் அர்ஜுனனைத் தடுத்தான். அர்ஜுனன் உலகில் வீரனாய் இருந்தாலும் துராத்மாவான துச்சாசனனால் தடுக்கப்பட்டவனாய் துச்சாசனனை மீறி பீஷ்மாசாரியாரிடம் போகமுடியாதவனாய் ஆனான். பர்வதங்களிலேயும் தடையன்னியில் போகக்கூடிய அர்ஜுனனின் பாணங்கள் துர்ச்சாசனின் சரீரத்தை சேதிக்க மாளவில்லை. அர்ஜுனனும் துர்ச்சாசனனும் கோபங்கொண்டு வீரியவான்களாய் வெகுநேரம் ஸமயுத்தம் செய்தார்கள். அந்த யுத்தம் பார்த்துக் கொண்டிருந்த தேவர்களுக்கும் ராஜர்களுக்கும் வெகு ஆச்சரியகர



மாயிருந்தது. அப்பொழுது விராடராஜன் துருபதராஜன் குந்திபோஜராஜன் துரௌபதி பிள்ளைகள் கேகய ராஜர்கள் சேகிதான ராஜர்கள் இவர்களை பூரிராஜன் சலராஜன் ஸோமதத்தராஜன் விகர்ணன் இவர்கள் கேகயராஜர்களுடன் சேர்ந்து தடை செய்தனர். விராடராஜன் முதலானவர்கள் பூரிராஜன் முதலானவர்களை ஜயித்து பீஷ்மாசாரியாருக்கு எதிராக போனார்கள். அப்பொழுது அர்ஜுனன் துர்சாசனைக் கடக்கச்செய்து சிகண்டியை அவனிடமிருந்து தப்புவித்து சத்ருவைக் கொல்வதாயுள்ள பாணங்களால் பீஷ்மாசாரியாரை அடித்தான். இவர்கள் எல்லோரும் அநேக ஆயுத ஸமூகங்களால் பீஷ்மாசாரியாரை விசேஷமாய் அவருடைய மர்மஸ்தானங்களில் அடித்தார்கள். பீஷ்மாசாரியார் தன் தனுஸ்ஸினின்றும் வெளிவந்த பாண ஸமூகங்களால் ஸாத்யகி துருபதராஜன் தர்மபுத்திரர் முதலான எல்லோர்களையும் மதகுன்யர்களாய்ச் செய்தார். விருத்தியடைந்த ப்ரளய காலத்தின் அக்னியைப் போல் பீஷ்மாசாரியார் சேதிராஜர்கள் பாஞ்சால ராஜர்கள் கருசராஜர்கள் இவர்களில் ச்ரேஷ்டர்களாயுள்ள இருபத்தியையாயிரம் ரதிகர்களை பாணங்களால் யமலோகத்திற்கனுப்பினார். சூரியனைப் போல் கொளுத்தும் பீஷ்மாசாரியாரைப்பார்த்து கிருஷ்ணரால் ஏவப்பட்ட லோக வீரனான அர்ஜுனன் பீஷ்மாசாரியாரின் தனுஸ்ஸை அர்த்த சந்திர பாணத்தால் சேதித்தான். யுத்தம் செய்வதற்காக மற்றொரு தனுஸ்ஸை பீஷ்மாசாரியார் எடுத்துக்கொண்டார். அந்த தனுஸ்ஸையும் இந்திர புத்திரனான அர்ஜுனன் சேதித்தான். இவ்வாறு எட்டு தனுஸ்ஸுகளையும் சக்தி ஆயுதத்தையும் கேடயத்தையும் சிரேஷ்டமான கத்தியையும் துரியோதனனின் ஸேவகர்களால் கொடுக்கப்பட்ட இதர தனுஸ்ஸுகளையும் எல்லா ஆயுதங்களையும் அர்ஜுனன் சேதித்தான். பிறகு சூரியனுடைய கிரண பிரகாசமுள்ள பாணங்களால் பீஷ்மாசாரியாரை அடித்தான். தர்மபுத்திரர் முதலான எல்லோருமே பாணங்களால் அடித்தார்கள். அர்ஜுனாதிகளால் பீடிக்கப்பட்டவராய் பீஷ்மாசாரியார் பூமியில் விழுந்தார். பூமியில் விழுந்தபோதிலும் அந்த பீஷ்மாசாரியார் உத்தராயணம் பிறக்கும் வரை உயிர்தரித்திருந்தார். பீஷ்மாசாரியார் கீழே விழுந்துவிடவும் பீமசேனர் துரோணாசாரியார் முதலானவர்களை விரட்டி அங்கு வந்து சேர்ந்

தார். வீரர்களான பாண்டவர்களும் கௌரவர்களும் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பீஷ்மாசாரியாரின் சமீபம் வந்து சேர்ந்தார்கள். பீஷ்மாசாரியாரை நமஸ்காரம் செய்துவிட்டு அவருடைய வார்த்தையின் பேரில் அன்று எல்லோரும் கூடாரத்திற்கு போனார்கள்.

மறுநாள் எல்லோரும் கிருஷ்ணருடன் சேர்ந்து பீஷ்மாசாரியாரின் சமீபம் வந்து சேர்ந்தார்கள். இதற்கு முதல் நாள் அர்ஜுனன் பீஷ்மாசாரியாருக்கு மூன்றுபாணங்களால் தலையணையை கொடுத்தான். மறுநாளும் பீஷ்மாசாரியார் தாகத்துடன் அச்சமயத்திற்கு போக்யமானதாயுள்ள குடிக்கக்கூடிய ஜலத்தை யாசித்தார். துரியோதனாதிகளுக்கு அது விளங்கவில்லை. அதை அர்ஜுனன் அறிந்து வாருணாஸ்திரத்தால் பூமியை சேதித்து நல்ல வாஸனையுள்ளதாயும் உயரத்திலிருந்து விழுவதாயுமுள்ள ஆகாச கங்கையின் ஜலத்தை வாயில் விழச்செய்தான். அர்ஜுனனால் திருப்தியடைந்த பீஷ்மாசாரியார் இவ்வாறு பேசினார். ஹே துரியோதனாதிகளா! அர்ஜுனனுக்குஇருந்துவரும்அஸ்திரஞானத்தை தனக்கு இந்த ஜலம் கொணர்ந்த விஷயத்தில் பார்த்தீர்கள், பீமசேனரின் பாஹுபலத்தை யுத்தத்தில் அடிக்கடி பார்த்தீர்கள். ஸ்ரீகிருஷ்ணரின் நாசமில்லாததாயும் குறைவில்லாததாயுமுள்ள மகாத்மியம் எல்லோருக்கும் தெரிந்ததாய் இருக்கிறது. உங்கள் சபையில் விசுவரூப தரிசனத்தாலும் பார்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால் யுத்தத்தை நிறுத்திவிடுங்கள். ஸமாயத்திற்கு வந்த ராஜாக்கள் சௌக்யமாக இருக்கட்டும். அரசர்களே! உங்கள் யோக்யதைப்படி ஈசுவரன் விபாகம் செய்துகொடுத்த பூமியை எப்பொழுதும் ஸம்ரக்ஷணம் செய்துவாருங்கள். என்றிவ்வாறு பீஷ்மாசாரியாரால் சொல்லப்பட்ட துரியோதனன் மௌனமுள்ளவனாய் இருப்பிடத்திற்குச் சென்றான். வேதவியாஸரால் கொடுக்கப்பட்டதாயுள்ள திவ்விய ஞானமுள்ள ஸஞ்ஜயனால் துரியோதனனின் தந்தையான திருதராஷ்டிரன் பீஷ்மாசாரியாரின் பத்துநாள் யுத்தத்தையும் பீஷ்மாசாரியார் பாணப்படுக்கையில் படுத்துவிட்டதையும் கேட்டுவிட்டு துக்கப்பட்டான். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ஸ்வாமியாகக்கொண்ட பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணரால் போதிக்கப்பட்டவர்களாய் டேராவுக்கு வந்து சந்தோஷமடைந்தவர்களாயினர்.

ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத்பாதாள் இயற்றிய ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய
நிர்ணயத்தில் பீஷ்மாசாரியார் படுத்துவிட்ட கதையை
நிரூபிக்கும் இருபத்திரண்டாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.



# ஆசாரமாலை.

## காயத்ரீ விஷயம்.

(முன் 291ம் பக்கம் தொடர்ச்சி.)

இவ்வாறு காயத்ரியை ஜபிக்கும்பொழுது காயத்ரி மந்திரத்தின் பாதங்கள் அக்ஷரங்கள் ஸம்ஹிதை ஸந்தி ஸந்தானம் முதலியவைகளில் நிரூபிக்கப்படும் மேற்கண்ட பகவத்ரூபங்கள் ஒவ்வொரு அக்ஷரத்தின் ரிஷி, சந்தஸ், தேவதை, சக்தி, தத்வம், வர்ணம் ஸ்வரம், பீஜம், த்யானம், பலம் இவைகளை எல்லாம் தியானித்து, நன்கு மனதிற்குக் கொணர்ந்து வாய்விட்டும் சொல்லி கீலக முத்திரைகளைக் காட்டி ஜபிக்கவேண்டியதவசியம் என்று முன்னாடிகூறப்பட்டிருக்கிறது, இந்த காயத்ரி விஷயமாக எமது மித்திரனில் 7வது வாலியம் 12வது சஞ்சிகை முதல் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. த்யாத்வைவ த்ரிபதீம் ஜபேத் என்று ஸ்ரீபகவத் பாதாள் அறிவித்திருப்பதிலிருந்து காயத்ரி ஜபத்திற்கு மேற்கண்ட விஷயங்களின் தியானம் அவசியமென்பது செவ்வனே விளங்குகிறது. "ஸஹஸ்ரபரமாம் தேவீம் சதமத்யாம் தசாவராம்" | காயத்ரீம் து ஜபேந்நித்யம் ஸர்வ பாப ப்ரணாசனம் || என்று விதிக்கப்பட்டிருப்பதற்கு ஸாமானியமாய் எல்லோர்களுமே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேளையும் ஆயிரம் காயத்ரி ஜபம் செய்வது மேல். நூறு ஜபம் செய்வது மத்யமம். குறைந்தது பத்து ஜபத்தையாவது செய்யவேண்டும். அப்பொழுதுதான் ஸமஸ்த பாபங்களும் போய் ச்ரேயஸ்ஸு உண்டாகுமென்று அர்த்தம்சொல்கிறார்கள். காயத்ரி ஜபத்தில் மேற்கூறியபடி தியானம் செய்யவேண்டியவைகள் வெகு அதிகமாய் இருக்கிறபடியால் இந்த ஜபத்திலுள்ள காடிண்யத்தை உத்தேசித்து, இந்த ஸ்மிருதிக்கு ஸ்ரீ பகவத்பாதாள் அடியிற்கண்டவாறு அர்த்தம் செய்தார். உத்தமாதிகாரிகள் சதுர்முகன் முதலான தேவர்கள் ஆயிரம் காயத்ரிஜபம்செய்ய அருகர்கள். அவருக்கு குறைந்த மத்யமாதிகாரிகளான ரிஷியாதிகள் நூறு காயத்ரி ஜபம் செய்ய அருகராவார்கள். மனுஷ்யர்கள் பத்து காயத்ரி ஜபம் செய்யத்தான் அருகராவார்கள். ஆகவே ஸமஸ்த பாபாதிகள் போக அவ்வாறே ஜபம் செய்யவேண்டியதவசியமென்றார். இந்த காயத்ரிஜபம் சம்பந்தமாய் தர்மபுத்திரருக்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் மகாபாரதம் அனுசாசன பர்வத்தில் சம்பா

ஷணே நடந்திருக்கிறது. அதாவது—யுதிஷ்டிர உவாச| கதம் ஜபஸ்து கர்த்தவ்யோ காயத்ர்யா ப்ராம்மணைர்ஹரே| காயத்ரி தச ஸங்க்யாகேத்யேவ யாஹுஸ்து கேசன| ஸஹஸ்ரமிதி கேசித்துசதமித்யேவசேசன| அன்யேத்வஷ்டா விம்சதிஸ்து காயத்ர்யஷ்ட சதம்த்விதி | த்விஸஹஸ்ரமிதி ப்ராஹு: ப்ராஹுஸ்சாஷ்டசதம் த்ரயம்| இதிமேஸம்சயோபூயாத் தத்யதா வக்து மர்ஹஸி || ஸ்ரீ கிருஷ்ண உவாச | ஸஹஸ்ர ஸங்க்யா காயத்ரீ தேவானாம் விஹிதா பவேத் | ரிஷீணாம் சதமித்யாஹு: மனுஷ்யாணாம் தசைவது | ஜபகாலம் விநான்யத்ர ஸங்க்யா பேதோதிதம் து யத் | ப்ராயஸ்சித்தார்த்த முத்திஷ்டம் ஸந்த்யாகர்மணி நோதிதம்| ரிஷிச்சந்தோதைவதாது பாதஸ்யைய வாக்ஷரஸ்யச | விதித்வாது ஜப: கார்யோ நான்யதா பலமச்னுதே | ஜபகாலே மனோன்யத்ர ப்ரவிசேன் மத்ய ஏவது | தம்த்யக்த்வா புனராரம்ப : கர்த்தவ்யோ மோக்ஷமிச்சதா| கருத்வாது நவ பரியந்தம் தசமேன்யமனோபவேத்| புன: ப்ரதமமாரப்ய ஆதசாந்தம் ப்ரபூரயேத் | ஏவம் சதே ஸஹஸ்ரேபிக்ஞாதவ்யம் சமுமுக்ஷுபி:| சின்னாச்சின்னேதி காயத்ரீ த்விதா ஸம்ப்ரகீர்த்திதா| ஸ்வஸ்யநாசகரீச்சின்னா அச்சின்னா மோக்ஷகாமினீ | தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன அச்சின்னா ஸர்வஸாதனீ| அச்சின்ன கரணே சக்தி: பவேத்யதிதசைவது| சதம்:ஸஹஸ்ரம் கர்த்தவ்யம் அன்யதா கில்பிஷீ பவேத்||" இதன் தாத்பரியமாவது:—கிருஷ்ணா! பிராம்மணர்கள் எவ்வளவு காயத்ரி ஜபத்தைச் செய்யவேண்டும்? சிலர் பத்து காயத்ரிஜபம் செய்யவேண்டுமென்கிறார்கள்? சிலர் நூறு ஜபம் என்றும், சிலர் ஆயிரம்ஜபம் என்றும், சிலர் இருபத்தி எட்டு ஜபம் என்றும், சிலர் எண்ணூறு ஜபம் என்றும் சிலர் இரண்டாயிரம் ஜபம் என்றும், சிலர் இரண்டாயிரத்து நானூறு ஜபம் என்றும் செய்யவேண்டியதாய் சொல்வதால் எனக்கு இந்த சந்தேகம் நீங்கும்படி உண்மையைச் சொல்லவேண்டுமென்று யுதிஷ்டிரர் பிரச்னம் செய்தார். ஸ்ரீகிருஷ்ணர் சொல்வதாவது:— ஆயிரம் காயத்ரீ ஜபம் செய்வதென்பது தேவர்களுக்குத்தான் விதியாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ரிஷிகள் செய்யவேண்டியது நூறு காயத்ரி ஜபம். மனுஷ்யர்களுக்கோவெனில் பத்து காயத்ரி ஜபம் தான். இந்த கணக்கு ஸந்தியாவந்தன காலத்தில் அனுஷ்டிக்கப்படும் விதியாகும். இதைத்தவிர வேறு விதமாய் சொன்னகணக்குகளெல்லாம் ப்ராயச்சித்த ரூபமாய் செய்யப்படவேண்டிய காயத்ரி ஜபத்தின் கணக்கு ஆகும். ஆலையிலை எருக்க இலை அரசுஇலை இவைகளில் பிராம்மணன் எப்பொழுதும் சாப்பிடலாகாது. நிர்பந்தமில்லாதிருக்கும் பொழுது பிராம்மணன் சாப்பிடும் பக்ஷ



த்தில் அந்த பாபம்நீங்க அவன் நூறுஜபமும் ஆபத்காலத்தில் ஒருதரம் போஜனம் செய்தால் பத்து காயத்ரி ஜபமும் செய்யவேண்டுமென்று பிராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மஹத்யாதி மகத்தான பாபங்கள் நீங்க ஆயிரம் காயத்ரி ஜபம் விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு சிற்சில தோஷங்கள் நீங்க பிராயச்சித்த ரூபமாக வெவ்வேறு விதமாய் காயத்ரி ஜபத்தின் கணக்கு சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய ஸந்தியாவந்தன காலத்தில், ஸந்தியாவந்தனத்திற்கு அங்கமாய் மனுஷ்யர்கள் செய்யவேண்டிய காயத்ரிஜபம் பத்து தான். அதற்குமேல் ஏன் சொல்லவில்லை என்றால் அவ்வளவுதான் மனுஷ்யர்களால் ஸாத்யம். அவர்களின் புத்தி அவ்வளவுக்குத்தான் இடம் கொடுக்கும். ஸந்தியாங்கஜபத்தில் தியானம் அவசியம். அந்த காயத்ரியின் ஸம்பூர்ண மந்திரத்தாலும் அதின் பாதங்கள் பதங்கள் ஸந்தி ஸம்ஹிதை முதலியவைகள் அக்ஷரங்கள் இவைகளால் நிரூபிக்கப்படும் பகவன் மூர்த்திகள் அர்த்தம் ரிஷி சந்தஸ் தைவதம் முதலியவைகளை நன்கு மனதிற்கு கொணர்ந்து அவைகளை தியானம் செய்து கொண்டு உச்சரித்தால்தான் ஸந்தியாங்க ஜபம் செய்த பலன் ஏற்படும். அப்படி தியானமில்லாமல் செய்த ஜபம் நிஷ்பலம் தான். ஹே யுதிஷ்டிரா! மற்றொரு விசேஷமுண்டு. ஒருவன் ஜபம் செய்யும்பொழுது காயத்ரியின் இருபத்திநான்கு அக்ஷரங்களில் பத்து அக்ஷரங்களின் ரிஷிச்சந்தாதிகளை மனதில் தியானம் செய்துகொண்டு உச்சரித்தபின், இவனுடைய மனம் திடீரென்று வேறிடத்தில் சென்றுவிட்டால் அதுவரை செய்த தியானம் பிரயோஜனமில்லை. மீண்டும் முதல் அக்ஷரம் முதற்கொண்டு துவக்கவேண்டும். இப்படி ஸம்பூர்ண தியானத்துடன் ஒன்பது காயத்ரி ஜபம் செய்து பத்தாவது காயத்ரி ஜபம் செய்யும்பொழுது திடீரென இவனுடைய மனம் சஞ்சலப்பட்டு வேறிடத்தில் சென்று விட்டால் அதுவரை செய்த அந்த ஒன்பது ஜபமும் நிஷ்பலம். எல்லாவற்றையும் விட்டுவிட்டு முதல் ஜபத்தைத் துவக்கவேண்டும். இவ்வாறு அவிச்சின்னமாய் காயத்ரியின் 24 அக்ஷரங்களின் மகாத்மிய தியான பூர்வமாய் பத்து ஜபம் செய்வதற்கே மனுஷ்யர்களின் புத்தி இடம் தருவது வெகு சிரமமாதலால், மனுஷ்யர்களின் புத்திபலத்தை அனுஸரித்து பத்து ஜபத்தைத்தான் விதிக்கப்பட்டிருக்கிறது. இதே மாதிரி நூறு ஜபமும் ஆயிரம் ஜபமும் செய்யவேண்டும். இவ்வாறு நூறு ஜபம் செய்வது ரிஷிகளுக்குத்தான் சிரமத்துடன் சாத்யமென்றும் ஆயிரம் ஜபம் செய்வது பிரம்மாதி தேவர்களுக்கு ஸாத்யமென்றும் நிஷ்கரிஷித்து

அவரவர்களின் புத்திபலத்திற்குத் தகுந்தபடி அவரவர்களுக்கு நியமம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு அவிச்சன்னமாய் செய்யப்பட வேண்டுமென்று கடினமான நியமமுண்டாவென்றால் தர்மபுத்திரா! இதுதான் காயத்ரி ஜபத்தின் விசேஷம். காயத்ரி ஜபம் சின்ன என்றும் அச்சின்ன என்றும் இருவகை உண்டு. இந்த மாதிரி தொடர்ந்து செய்யப்படும் ஜபம் அச்சின்னவென்றாகும். தியானம் தொடர்ந்தில்லாமல் நடுவில் விச்சித்தியடைந்து செய்யப்படும் ஜபம் சின்ன எனப்படுகிறது. விச்சித்தியடைந்த ஜபமாகிய இந்த வகை ஜபம் செய்தால் தனக்கு நாசம் தான் ஏற்படும். அச்சின்னமான ஜபத்தால் மோக்ஷமுண்டாகும். ஆகையால் தன் முழு ஸாமர்த்தியத்தைக்கொண்டு அச்சின்னமான ஜபத்தைச் செய்யவேண்டும், அதனால் எல்லா காரியங்களும் ஸபலமாய்ஆகும். இதே மாதிரி தான் ரிஷிகளுக்குரிய நூறு ஜபமும் தேவர்களுக்குரிய ஸஹஸ்ர ஜபமும் செய்யப்படவேண்டும். இந்த காயத்ரியின் கணக்கைப்பொருத்து அதாவது எவ்வளவு காயத்ரி ஜபம் செய்யப்படுகிறதோ அந்த கணக்கின்படி நாராயணாஷ்டாக்ஷரி முதலான ஜபங்களைப் பெருக்கிச்செய்யவேண்டும். நாராயணாஷ்டாக்ஷரியில்லாமல் செய்யப்படும் காயத்ரீ ஜபம் பிரயோஜனமில்லை என்றார். காயத்ரி விச்வாமித்திர காயத்திரி என்றும் பிரம்ம காயத்ரி என்றும் இருவகை. விச்வாமித்ர காயத்ரி ஸந்தியா வந்தனத்திற்கு அங்கமானது. பிரம்ம காயத்ரி அஷ்ட மகா மந்திரங்களுக்கு அங்கமானது. எந்த காயத்ரி மந்திரத்தின் ஜபமும் ஸமஸ்த பாபங்களை நாசம் செய்யக்கூடியதாகும். இதில் விசேஷமாவது, பிரம்ம காயத்ரி நூறு ஜபித்தால் ஸமஸ்த பாபாதிகளைப்போக்கும், லக்ஷம் காயத்ரி ஜபம்செய்தால் பிரம்மஹத்யாதி மகா பாதகங்கள் போகும், கோடி ஜபம் செய்துவிட்டால் மனோபீஷ்டம் எதுவாகிலும் உண்டாகும்.

## காயத்ரி விஷயம் முடிந்தது.

———:X:———

பிறகு அஷ்டமகாமந்திரங்களை ஜபிக்கவேண்டியதவசியம். அதற்கு முன் ஹம்ஸமந்திரம் ஜபிக்கவேண்டும். அஷ்டமகாமந்திரங்களை ஜபிக்கும் முன் மந்திரார்க்யம் விடவேண்டும். அஷ்டாக்ஷராதி மந்திரார்க்யத்தை ஸாலக்ராமத்தின்மீது பகவானுடைய ஹஸ்தத்தில் சங்கத்தால் விடவேண்டும். பகவானுடைய ஹஸ்தத்தால் விடாமல் ஜலத்தில்மட்டில் விட்டால் அந்த அர்க்கிய ஜலம் ரக்தத்திற்கு சமமாகும். ரமாதி இதர தேவதைகளுக்கு மந்திரார்க்கியத்தை நிர்மால்யதீர்த்தத்துடன் கையால்



விடவேண்டியது. பகவானுக்கு அஷ்டாக்ஷராதி மந்திரார்க்யம் சங்கத்தால் தான் விடவேண்டியது. கட்டையில் உள்ள நெருப்பு கடைவதால் எப்படி வெளியாகிறதோ அம்மாதிரி ஸர்வ வியாபியான விஷ்ணு ஸாலக்ராமத்தில் பிரகாசிக்கிறார். ஆகையால் என் சம்பந்தமான எல்லா மந்திரங்களின் அர்க்யத்தையும் அந்த ஸாலக்ராமத்தில் ஸான்னித்யமடைந்திருக்கும் என் கையில் சங்கத்தால் விடவேண்டியதவசியம். என் பாதோதகத்தால் லக்ஷ்மி முதலானவர்களின் மந்திரங்களுக்கு சுத்த ஜலத்தில் அர்க்யம் விடவேண்டும். இதற்கு மாறாக செய்தால் நரகம் தான் ஏற்படும் என்று கபிஞ்சல ஸம்ஹிதையில் பகவானுடைய வசனமிருக்கிறது.

(தொடரும்.)

## ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் இயற்றிய

# அணுபாஷியம்.

இப்பால் மாத்வமித்திரனில் பிரம்மஸூத்திரங்களுக்கு ஸ்ரீ மத்வாசாரியார் செய்திருக்கும் அர்த்தம் பிரசுரிக்கப்பட்டு வருகிறபடியால் மித்திரன் வாசகர்களுக்கு முன்னதாகவே அந்த தாத்பரியத்தை ஸ்தூலமாக அறிவிக்கவேண்டி ஸ்ரீபகவத் பாதாளாலேயே இயற்றப்பட்டதாயுள்ள சங்கிரஹமான அணுபாஷியத்தின் அர்த்தமும் இங்கு நிரூபிக்கப்படுகிறது.

1. நாராயணம் குணைஸ்ஸர்வை: உதீர்ணம் தோஷவர்ஜிதம் |
க்ஞேயம் கம்யம் குரூம்ஸ்சாபி நத்வா ஸூத்ரார்த்த: உச்
[யதே ||

ஸமஸ்தமான க்ஞானானந்தாதி அனந்த கல்யாண குணங்களால் பரிபூர்ணமானவரும் அசுவாதந்திரியம் முதலான ஸமஸ்த தோஷங்களில்லாதவரும் சிரவணம் மனனம் த்யானம் இவைகளால் உண்டாகும் அபரோக்ஷ ஞானத்திற்கு எட்டுகிறவராயும் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களால் உபாஸிக்கப்படுகிறவராயும் நாராயணனென்னும் நாமத்தால் சொல்லப்படுகிறவராயுமுள்ள ஸ்ரீ

விஷ்ணுவையும் அவரைவிட வேறானவராயில்லாத என் குருவான ஸ்ரீ வேதவியாஸரையும் நமஸ்கரித்து பிரம்மஸூத்திரத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறேன்.

இதில் நாராயணனுக்குக் கொடுத்த விசேஷணத்தால் அதாவது க்ஞானானந்தாதி அநந்த கல்யாண குணங்களால் பரிபூர்ணமானவர் என்பதால் பிரம்மஸூத்திரம் முதல் அத்யாயத்தின் அர்த்தத்தையும், ஸமஸ்த தோஷங்களில்லாதவர் என்பதால் இரண்டாவது அத்யாயத்தின் அர்த்தத்தையும், சிரவணம் மனனாதிகளால் உண்டாகும் அபரோக்ஷக்ஞானத்திற்கு எட்டியவர் என்பதால் மூன்றாவது அத்யாயத்தின் அர்த்தத்தையும், மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களால் உபாஸிக்கப்படுகிறவர் என்பதால் நான்காவது அத்யாயத்தின் அர்த்தமும் குறிப்பிடப்பட்டதாய் அறியவேண்டியதாகும்.

2. விஷ்ணுரேவ விஜிக்ஞாஸ்ய: ஸர்வகர்த்தா ஆகமோதித: ।
ஸமன்வயாத் ஈக்ஷிதேஸ்ச பூர்ணாநந்தோந்தர: கவத் ॥

விஷ்ணு: ஏவ விஜிக்ஞாஸ்ய: நாராயணன்தான் சிரவண மனனாதி விசாரங்களுக்கு விஷயம். ஸர்வகர்த்தா மகாலட்சுமி சதுர்முகன் முதலான எல்லா பிரபஞ்சத்திற்கும் சிருஷ்டியாதிகளுக்கு காரணம், ஸமன்வயாத் உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலான அடையாளங்களாலும் ஈக்ஷிதேஸ்ச ஞானத்திற்கு விஷயமாயிருப்பதாலும், ஆகமை: வேதாதிகளால், உதித: பரமமுக்ய விருத்தியால் சொல்லப்படுகிறார். பூர்ணாநந்த: ஸம்பூர்ணமான ஆனந்தமுடையவராய் ஆனந்தமயனாய் இருக்கிறார். அந்தர: ஸர்வாந்தரியாமியாயிருக்கிறார். கவத் ஆகாச சப்தத்தால் சொல்லப்படுகிறவராய் இருக்கிறார்.

இந்த சுலோகத்தில் ஜிக்ஞாஸாதி காணம் ஜன்மாதி காணம் சாஸ்திர யோனித்வாதிகாணம் ஸமன்வயாதிகாணம் ஈக்ஷத்யதிகாணம் ஆனந்த மயாதி காணம் ஆகாசாதிகாணம் ஆகிய ஏழு அதிகாணங்கள் ஓம் ஜன்மாத்யஸ்யயத: முதல் ஓம் ஆகாசஸ்தல்லிங்காத் என்று 1 முதல் 22 சூத்ரங்கள் இவைகளின் தாத்பரியம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.



3. ப்ரணேதாஜ்யோதிர்த்யாத்யைப்ரஸித்தை ரன்யவஸ்துஷு ।
உச்யதே விஷ்ணுரேவைக: ஸர்வை: ஸர்வகுணத்வத: ।

ப்ரணேதா இவர் ப்ராணரென்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறார். ஜ்யோதி: ஜ்யோதிஸ் என்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறார். இத்யாத்யை: இவை முதலான, அன்யவஸ்துஷு ப்ரஸித்தை: இதர பதார்த்தங்களில் பிரஸித்தமானபெயருள்ள ஸர்வை: எல்லாசப்தங்களால், ஸர்வகுணத்வத: எல்லா குணபரிபூர்ணராயிருப்பதன் நிமித்தம் ஏக; விஷ்ணு: ஏவ: விஷ்ணுஒருவர்தான் உச்யதே முக்யவிருத்தியால் சொல்லப்படுகிறார்.

இந்த சுலோகத்தில் ப்ராணாதிகாணம், ஜ்யோதிரதிகாணம், காயத்ரயதிகாணம், அந்திமப்ராணாதிகாணம் ஆகிய நான்கு அதிகாணங்கள். 6 ஸூத்ரங்கள் அவைகளில் சொன்ன அர்த்தமும் முதல் அத்யாயம் முதல் பாதத்தில் சொன்ன அர்த்தமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

4. ஸர்வகோத்தா நியந்தாச த்ருச்யத்வாத்யுஜ்ஜிதஸ்ஸதா ।
விச்வஜீவாந்தரத்வாத்யை: லிங்கைஸ்ஸர்வைர்யுதஸ்ஸஹி ॥

ஸர்வக: பிருதிவி முதலான ஸமஸ்தத்திலும் அந்தர்யாமியாயிருப்பவர். அத்தா எல்லாவற்றையும் பக்ஷிப்பவர். நியந்தா ஸர்வாந்தர்யாமியாய் இருப்பவர். ஸதா எக்காலத்திலும் த்ருச்யத்வாதிபி: உஜ்ஜித: கண்ணிற்படாதிருக்கும் தன்மை முதலான குணமுள்ளவர். விச்வஜீவாந்தரத்வாத்யை: வைச்வாநரன் என்னும் சப்தத்தால் சொல்லப்படுவதால் ஸமஸ்த ஜீவர்களிலும் அந்தர்யாமியாயிருக்கும் தன்மை முதலான, ஸர்வை: லிங்கை: வழக்கில் இதர இடங்களில் பிரஸித்தமாயுள்ள சப்தாதி அடையாளங்களால், ஸஹியுத: அந்த விஷ்ணுதான் கூடியவர்.

இந்த சுலோகத்தில் முதல் அத்யாயம் இரண்டாவது பாதத்திலுள்ள ஸர்வகதத்வாதிகாணம், அத்ருத்வாதிகாணம், குஹாதிகாணம், அந்தராதி காணம், அந்தர்யாமியாதிகாணம், அதிருச்யதவாதிகாணம் ஆகிய ஆறு அதிகாணங்களின் அர்த்தம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

5. ஸர்வாச்ரய: பூர்ணகுண: ஸோக்ஷர: ஸன்ஹ்ருதப்ஜக:।
ஸூர்யாதி பாஸக: ப்ராணப்ரேரக: தேவதைரபி॥

அவர் ஸர்வாச்ரய: த்யோலோகம் பூலோகம் அந்தரிக்ஷ லோகம் மனஸ் பிராணன் இவைகளுக்கு ஆசிரயன். பூர்ணகுண: அனந்தமான சப்தங்களால் சொல்லப்படுவதால் குணபூர்ணராயிருப்பதன் நிமித்தம் அவர் பூமவென்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறார். ஸ: அந்த விஷ்ணு தான் அக்ஷர: அக்ஷர என்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறார். ஸம்வித்ருஷ்டி ப்ரகரணத்தில் சொல்லப்பட்டுள்ள ஸத் என்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறவர். ஹ்ருதப்ஜக: ஹ்ருதய பத்மத்தில் இருப்பவர். ஸூர்யாதி பாஸக: ஜகத்தை பிரகாசிக்கும் ஸூர்யன் முதலான பிரகாசப்படுத்துவதால் அனுகூலமாய் ஏற்றுக்கொள்ளப்படுகிறார். ப்ராணப்ரேரக: முக்ய ப்ராணரை ப்ரேரிப்பதால் ஈசானனென்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறார்.

இந்த சுலோகத்தில் முதல் அத்யாயம் மூன்றாவது பாதத்தில் த்யுப்யாத்யாதனத்வாதிகரணம், பூமாதிகரணம், அக்ஷராதிகரணம், ஸததிகரணம், தகராதி கரணம், அனுக்ருத்யாதி கரணம், வாமனாதி கரணம் ஆகிய இந்த ஏழு அதிகரணங்களின் தாத்பரியம் நிரூக்கப்பட்டிருக்கிறது.

6. க்ஞேயோ நவேதை: சூத்ராத்யை: கம்பகோன்யஸ்சஜீவத:।
பதித்வாதி குணைர்யுக்த: தத்ன்யத்ர சவாசகை:॥

தைவதை: அபிக்ஞேய: தேவர்களாலும் உபாஸிக்கத்தகுந்தவர் அவரே. சூத்ராத்யை: மூன்று வர்ணத்தார்களல்லாதவர்களால் கற்கப்பட்ட வேதை: வேதங்களால் நக்ஞேய: உபாஸிக்கத்தகுந்தவரல்ல. கம்பக: ஸர்வத்தையும் சேஷ்டை செய்பவனாய் இருப்பதால் வஜ்ர சப்தத்தால் சொல்லப்படுகிறார். ஜீவத: அன்ய: ச ஜீவர்களிடமிருந்து பின்னனாய் இருப்பதால் ஜோதிஸ் முதலான சப்தங்களால் சொல்லப்படுகிறார். பதித்வாதி குணை: ஸர்வத்துக்கும் அதிபதியாயிருக்கும் தன்மை முதலான குணங்களால் யுக்த: கூடியிருப்பதால் பிராம்மணனென்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறார்.



இந்த சுலோகத்தில் முதல் அத்யாயம் மூன்றாவது பாதத்தில் தேவதாதி கரணம், சூத்ராதி கரணம், கம்பனாதி கரணம், ஜ்யோதிரதி கரணம், ஆகாசாதி கரணம், ஸுஷுப்த்யதி கரணம், ப்ராம்மணாதிகரணம் ஆகிய ஏழு அதிகரணங்களின் தாத்பரியம் சொல்லப்பட்டிருக்கிறது.

7. முக்யதை: ஸர்வசப்தைஸ்ச வாச்ய ஏகோ ஜனார்த்தன:।
அவ்யக்த: கர்மவாக்யைஸ்ச வாச்ய ஏகோ அமிதாத்மக:।

தத்ன்யத்ரவாசகை; நாராயணனிடமும் வேறிடத்திலும் வாசகமாய் பிரசித்தமாயுள்ள, ஸர்வசப்தை: நாம ரூபங்களானவைகளும் லிங்க ரூபங்களானவைகளுமான எல்லா சப்தங்களாலும் ஏகோ ஜனார்த்தன: விஷ்ணு ஒருவரே, முக்யத: பரமமுக்ய விருத்தியால் வாச்ய: சொல்லப்படுகிறார். அவ்யக்த: உபாதான காரணமான ப்ரக்ருதியிலிருந்து அவரத்வம் தாக்கி பத்தத்வம் முதலான தர்மங்களுக்கு நியாமகனாய் இருப்பதன் நிமித்தம் அவ்யக்தம் அவரத்வம் தாக்கி பத்தம் முதலான சப்தங்களால் சொல்லப்படுகிறார். கர்ம வாக்யை: ஜ்யோதிஷ்டோமாதி கர்மங்களுக்கு ப்ரதானமான அங்கங்களைச் சொல்லும் வாக்யங்களாலும் வாச்ய: சொல்லப்படுகிறார். ஏக: தன் அவதார ரூபங்களால் அபின்னராயிருப்பினும் அமிதாத்மக: அநேக ரூபமுள்ளவராய் பஞ்சஜனன் ஆகாசன் முதலான சப்தங்களால் சொல்லப்படுகிறார்.

இந்த சுலோகத்தில் முதல் அத்யாயம் மூன்றாவது பாதம் ப்ராம்மணாதிகரணம், நான்காவது பாதத்திலுள்ள ஆனுமானிகாதி கரணம், ஜ்யோதிருபக்ரமாதி கரணம், நஸங்க்யோப ஸங்கிரஹணாதி கரணம் காரணத்வேன ஆகாசாதிகரணம் இந்த அதிகரணங்களின் தாத்பரியத்தை விளக்கியிருக்கிறார்.

8. அவாந்தரம் காரணம் ச ப்ரக்ருதி: சூன்யமேவச।
இத்யாத்யன்யத்ர நியதை: அபிமுக்யதயோதித:।
சப்தை ரதோ அனந்தகுணோ யச்சப்தா யோகவிருத்தய:।

விஷ்ணுவே அவாந்தரம், காரணம் காரியமாகவும் காரணமாகவும் இருக்கும் அவாந்தர காரணங்களுக்கு நியாமகனாய் இருப்ப

தால் ஆகாசாதி சப்தத்தால் சொல்லப்படுகிறார். ப்ரக்ருதி: ஸ்திரீ ரூபமுடையவராதலால் பிரகிருதி முதலான ஸ்திரிலிங்க சப்தத்தால் சொல்லப்படுகிறார். சூன்யம் தன் ஸுகத்தைவிட இதரர்களின் ஸுகத்தைக் குறைத்திருப்பதால் சூன்யமென்னும் சப்தத்தால் சொல்லப்படுகிறார். ச அனுத்பாத்யத்வம் அல்லது இதரர்களால் உத்பாதனம் செய்யமுடியாத தன்மை முதலான தர்மங்களால் அபத்ரன் முதலான சப்தங்களால் சொல்லப்படுகிறார். இத்யாதிபி: இவை முதலான அன்யத்ரைவநியதை: இதரபதார்த்தங்களிலேயே கட்டாயம் பிரஸித்தமாயுள்ள சப்தங்களாலும் முக்யத: பரம முக்ய விருத்தியால் உதித: சொல்லப்படுகிறார். யத் எந்த காரணத்தால் சப்தா: சப்தங்கள் யோகவிருத்தய: யோகவிருத்தியைக்கொண்டு பகவத் குணத்தைச்சொல்லக்கூடியவைகளாய் இருக்கின்றனவோ அந்த காரணத்தால் விஷ்ணு: அனந்தகுண: விஷ்ணு அபரிமிதமான குணபரிபூர்ணர் என்று ஸித்தமாகிறது.

ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத் பாதாள் இயற்றிய
ஸ்ரீ அணுபாஷியத்தில் முதல் அத்யாயம்
ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

---

# விதவா விவாஹ கண்டனம்.

(முன் 274ம் பக்கம் தொடர்ச்சி.)

விதவா விவாக வாதிகளில் பலர் ப்ரௌடையாகாத விதவைக்குத்தான் புனர் விவாகம் செய்யலாமென்று சொல்கிறார்கள். அவர்களில் ஒருசிலர் புனர் விவாகம் செய்யப்படலாமென்று சொல்கின்றனர். இச்சபையாரோ குழந்தைகளுள்ளவர்களுக்கும் ப்ரஸவித்தவர்களுக்கும் வயது முதிர்ந்த கிழவிகளுக்கும் பர்த்தா இறந்தபின்பும் அல்லது பர்த்தா பிழைத்திருக்கும்பொழுதும் மறுவிவாகம் உண்டென்று அவர்கள் சொல்வதாய் ஏற்படுகிறது. அவர்களின் அர்த்தமாவது:—

"On recieving no tidings of a husband on his demise, on his turning on ascetic on his being found impotent o



on his degradation, under any one of these five calamities it is canonical for woman to take another husband. A Brahmin woman should wait eight years for her absent lord and four years only, if she be childless; then let her marry again. A Kshatriya woman should wait for six years and in case she has no issue, three years only. A Vaisya woman, if she has a child, four years; other-wise only two. For sudra woman no period is specified for which she is to wait for her husband; if it be heard that he is living, the rule is. that the aforesaid periods are to be doubled. When tidings are not recieved the foremen-tioned periods are enjoined. Such is the opinion of Brahma, the Lord of men. In such cases therefore there is no harm in women marrying again."

Narada Samhitha (chap XII)

In the light of the authorities quoted above, it is quite clear that the marriage of widows is not contrary to the opinion of Manu and other jurists. The Dogma has been accepted by all the Rishis alike, with this differ-ence that whereas Manu and some other Rishis designate the remarried female as Punarbhava and sons, born in such second wedlock as Punarbhavas, Parasara takes off this difference also for marriages in Kaliyuga. In Kali yuga the remarried females and the sons born in such second wedlocks, are to enjoy the same status, privelige and respect as in the case of those wedded ones or born in first wedlocks.

தான் கெட்டதுமன்னியில் சந்திர புஷ்கரணியையும் கெடுத்தான் என்று சொல்லுகிறபடி தான் தாறுமாறாய் அர்த்தம் செய்ததுமன்னியில் மகாஜுண நாரதரே அவ்வாறு அர்த்தம் செய்திருப்பதாய் பகிரங்கப்படுத்துகிறார்கள். இந்த விதமான அபிப்பிராயத்தை வேறு எந்த ரிஷியாவது வெளியிடப்பட்டிருக்கிறாரோவென்பதை இச்சபையார் காட்டுவார்களா? எல்லாமகாரிஷிகளின் அபிப்பிராயத்துக்குவிரோதமாகவா நாரதர்சொல்லியிருப்பார் என்பதை யோசிக்கவேண்டியதவசியமாகும். கலகப்ரியரான

நாரதர் தாமஸஸ்வபாவமுடையவர்களை ஏமாறும்படிசெய்து நரகத்தில் வீழ்த்த சந்தேகமுள்ள பதங்களை உபயோகப்படுத்தியிருப்பதாய் பிறர் குறை கூறும்படியாய் கூட அவர் இங்கு நடந்துகொள்ளவில்லை. ஸமாச்ரயேத், திஷ்டேத், வஸேத் இப்படித்தான் உபயோகப்படுத்தியிருக்கிறாரே ஒழிய விவாகயேத் உத்வஹேத் இத்யாதி பதங்களை உபயோகிக்கவில்லை. தம்கக்ஷிக்கு ஆதாரமான பிரமாணங்கள் எங்கேயாவது கிடைக்கின்றனவா என்று மூலைமுடுக்குகளைத் தேடும் விதவா விவாக வாதிகள் பிரமைபிடித்து மோகத்தால் இவ்வாறு அர்த்தம் செய்தால் நாரதர் என்ன செய்வார்? இது நாரதருடைய அபிப்பிராயம் தானு என்பதை மேற்கண்ட சுலோகங்களை மறுமுறை ஆராய்ந்து பார்க்கட்டும். இது நாரதருடைய அபிப்பிராயமல்ல. திருஷ்டிரேஷா ப்ரஜாபதே: என்றே இந்த சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இது ப்ரஜாபதி என்பவரின் நோக்கம் என்று தெளிவாய் அறிவித்திருக்கிறார். அதைத்தான் ஆமோதித்திருப்பதாயும் அறிவிக்கவில்லை. நாரதர் அதை வெளியிட்டிருப்பதிலிருந்தே அதை அவர் ஆமோதித்திருப்பதாய் அர்த்தமாகிறது என்று கக்ஷி சொன்னால், நாரதர் இந்த தன் ஸ்மிருதியில் திருட்டு வகைகளை எல்லாம் சொல்லியிருப்பதினால் அவைகளை அவர் ஒப்புக்கொண்டிருப்பதாய் அர்த்தம் செய்யவேண்டி வரும். மேலும் ப்ரஜாபதியின் நோக்கம் என்று அவர் சொல்லியிருப்பதை திருத்தி ப்ரஜாபதி என்பதற்கு பிரம்மா என்று அர்த்தம் செய்து இது பிரம்மாவின் அபிப்பிராயம் என்று வெளியிடப்பட்டிருக்கிறது. யதிஸாபாலவிதவா என்னும் பிரம்ம புராண வசனத்தை ப்ரஜாபதி ரிஷியும் உபயோகப்படுத்தியிருப்பதாய் சொல்லி அதை 3வது பிரமாணமாகக் காட்டியிருக்கும் இச்சபையார், இந்த இடத்தில் மட்டில் பிரம்மா என்று பிரசித்தர்களான ஸ்மிருதி கர்த்தாக்களுடைய கோஷ்டியில் மனுயாக்ஞவல்க்யர் இவர்களால் சேர்க்கப்படாத அர்த்தம் செய்தது ப்ரஜாபதியின் நோக்கத்திற்கு அவ்வளவு அதிகமான கௌரவம் ஏற்படமாட்டாது என்ற பயத்தாலோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. விரோதமாகத்தென்படும் எந்த வாக்யத்தையும்யபிரபலமான நிரவகாசமுள்ள பிரமாணங்களுடன் ஏக வாக்யதை செய்தல் அவசியமென்ற ஸத்ஸம்பிரதாயத்தைக் கொண்டிருந்தால் இந்த பயம் ஏற்பட நியாயமில்லை.

இந்த சுலோகங்கள் விவாகத்தைச் சொல்லவரவில்லை என்று நாம் நிச்சயமாகச் சொல்லலாம். அத: அன்யகமனே ஸ்திரீணாம் ஏஷ தோஷோ ந வித்யதே என்று முடிவில் சொல்லப்பட்டிருக்கிறது. இச்



சபையார் முன்னுடி பல சுலோகங்களுக்குச் சொன்ன அர்த்தத்தை ஒட்டிப்பார்த்தால் ஸ்திரீகள் விபசாரம் செய்வது தோஷமில்லை என்று இவர்கள் சொன்னது போலாகிறது. இந்த இடத்தில் இவர்கள் விவாகம் செய்யப்படலாம் என்று அர்த்தம் செய்திருந்தபோதிலும் இந்த விவாகம் விவாகமாகாதென்றும் இது விபசாரம் செய்ததாய் ஆகுமென்றும் நாம் சொல்வோம். நாரதர் இதே ஸ்மிருதியில் விபசாரங்களில் பல வகைகளை விஸ்தாரமாய் கூறியிருக்கிறார். அதில் "தேசதர்மான் அபேக்ஷ்ய ஸ்திரீ குருபி: யாப்ரதீயதே| உத்பன்ன ஸாகஸா அன்யஸ்மை அந்த்யாஸாஸ்வைரிணீ ஸ்மிருதா." தேசவழக்கத்தை ஒட்டி விவாகமான ஓர் ஸ்திரி பிரஸவித்தவளாயிருந்தாலும் சரி, அல்லது பிரஸவிக்காதவளாயிருந்தாலும் சரி, அன்னியனுக்கு அவளுடைய பெரியோர்களால்கொடுக்கப்பட்டு அவள் அவனுடன் இல்லறவாழ்க்கையை நடத்திவந்தால் அவள் கடைசி வகையான விபசாரி எனப்படுகிறாள் என்று அறிவித்திருக்கிறார்.

(தொடரும்.)

## ஸ்ரீஸத்யதியானதீர்த்த ஸ்வாமிகளின் சரித்திர ஸங்கிரஹம்.

---

இவர் ஸன்யாஸத்திற்கு முன் கொரளஹள்ளி சேதுராமாசாரியார் என்று மகா பிரஸித்தர். உத்திராதி மடம் ஸ்வாமிகளான ஸ்ரீ ஸத்யதீர ஸ்வாமிகள் இவருடைய தந்தை. ஸ்ரீ ஸத்யவீர ஸ்வாமிகள் இவருடைய பெரிய தகப்பனார். இவர் பாலியத்திலேயே நான்கு சாஸ்திரங்களிலேயும் பண்டிதராகி 26வது வயதிலேயே ஸ்ரீ மத்வமத நூல்களில் உயர்தரமாயும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைவிட பெரிய கிரந்தமாயுமுள்ள நியாயஸுதை என்னும் நூலை சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லி ஆத்தகூரில் ஸுதா மங்களத்தை நடத்தினார். அச்சமயம் நாட்டிலிருந்த எல்லா பண்டிதர்களை வரவழைத்து பெரிய சபையை நடத்தி விசேஷமான சம்பாவனைகளைச் செய்தார். இவருடைய பாண்டித்யத்தைக் கண்டு எல்லா பண்டிதர்களும் மகா ஆச்சரியமடைந்தனர். அப்பொழுது இவரிடம் படித்திருந்த சிஷ்யக் கூட்டங்களில் சேர்ந்தவர் இவருக்கு ஆசிரமம் தந்த மகா யோகீசுவாரான ஸ்ரீ ஸத்யக்ஞான தீர்த்த மகா ஸ்வாமிகள். அப்

பொழுது அவருடைய பெயர் கிண்ணளம் ஐய்யாசாரியார். 28வது வயதில் மீண்டும் அநேகருக்கு பாடம் சொல்லி ஸுதா மங்களம் செய்தார். 31வது வயதில் தம் சிஷ்யருக்கும் தம் தந்தையைக்கொண்டு ஸன்யாஸம் தரச் செய்து அவருக்கு ஸ்ரீ ஸத்யக்ஞான தீர்த்தர் என்று பெயரிடச் செய்தார். அப்பொழுது ஏராளமாய் பணச் சிலவு செய்து பரதநாடெங்கும் சுமார் 120 நகரங்களில் ஸ்ரீ மத்வ மதம் பரவச் செய்ய த்வைத வேதாந்த பாடசாலைகளை ஏற்படுத்தினார். 32வது வயதில் தார்வாருக்கு சென்று அவ்வூர் ஸ்ரீ மத்வ ஸித்தாந்த உத்தேஜ ஸபைக்கு விசேஷ பொருளுதவி செய்து அது விரிவாய் நடைபெறச் செய்தார். 32 முதல் 38வது வருஷம் வரை ஸ்ரீ ஸத்யக்ஞான தீர்த்தருடன் மடத்திலிருந்து எண்ணிறைந்த சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லிக்கொண்டும் பண்டிதர்களுடன் வாக்யார்த்த விசாரம் செய்துகொண்டும் தேச சஞ்சாரம் செய்தார். அச்சமயம் பிரதி வருஷம் திருப்பதி சபைக்கு வந்து பரீக்ஷாதிகளை நடத்தி தாம் அலாதியாகவும் சம்பாவனைகளைச் செய்து வந்தார். 38வது வயதில் மடத்துடன் உடுப்பி சென்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு ஏராளமான திரவியங்களைக் கொடுத்து மகா பண்டிதரான ஸ்ரீ அதமார மடம் ஸ்வாமிகளை வாக்யார்த்தத்தில் மௌனமாக்கினார். 39வது வயதில் வைராக்ய பாக்யம் பெற்று விரோதிகிருது ௵ புஷ்ய பஹுள தசமியன்று ராஜமகேந்திரத்தில் ஸ்ரீ ஸத்யக்ஞான தீர்த்தரிடமிருந்து ஸன்யாஸம் பெற்று ஸ்ரீ ஸத்யதியான தீர்த்தரென்று திருநாமம் படைத்தார். அச்சமயம் லோக பிரஸித்தமான மகா வித்வத் சபை நடந்தது. பரத நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான மகா பண்டிதர்களெல்லாம் வரவழைக்கப்பட்டிருந்தனர். அப்பொழுது வாதம் செய்த விஜயநகரம் மகா வித்வானாகிய ஸங்கமேசுவர சாஸ்திரிகளுடன் அதி அற்புதமாய் தொடர்ந்து சிலநாட்கள் வாதம் செய்து அவரை மௌனமாக்கி எல்லா பண்டிதர்களும் இவருடைய பாண்டித்யத்தைக் கண்டு திடுக்கிடும்படி செய்தார். 40வது வயதில் காசி யாத்திரை சென்று கயாவில் மகா சபையைக் கூட்டி எல்லா பண்டிதர்களையும் வரவழைத்து எல்லோருக்குப்



காசி யாத்திரையை தம் சிலவில் செய்து வைத்து ஏராளமான சம்பாவனைகளைச் செய்தார். அச்சமயம் நடைபெற்ற வித்வத் சபையில் காசிமா நகரத்தில் சிவகுமார பட்டரை வாதத்தில் மௌனமாக்கினார். இந்த மகா பண்டிதர் எப்பொழுதும் பல்லக்கிலேறிக்கொண்டு செல்பவரும் நூற்றுக்கணக்கான மகா பண்டிதர்களை சிஷ்யர்களாய் கொண்டவருமாவார். தாம் ஸமானமான ஆஸனத்தில் உட்காரவேண்டுமென்றும் தாம் நமஸ்காரம் செய்யமுடியாதென்றும் பலவகையான நிபந்தனைகளைச் செய்துகொண்டு பதினாயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்த மகா சபையில் இப்பண்டிதர் அதி அற்புதமாய் வாதம் செய்யவும் ஸ்ரீ ஸ்வாமிகள் அவருடன் பேசி அவருடைய வாதம் நிலைநிற்க முடியாமற் செய்து அவரை மேலே கோடி சொல்லமுடியாமல் மௌனமாக்கிவிடவும், மிக்க கீர்த்தி வாய்ந்த பட்டர் சபையின் நடுவில் நின்று இரு கைகளையும் கூப்பி இந்நாட்டில் தாம் நமஸ்காரம் செய்யக்கூடிய தம்மைவிட மேலான பண்டிதர் இந்த ஸ்வாமிகள்தானென்று பகிரங்கமாகச்சொல்லி, தம்சிஷ்யக்கூட்டங்களுடன் சாஷ்டாங்கமாய் பன்முறை நமஸ்கரித்தார். அவர் தம் சிஷ்யர்களின் மகாபாண்டித்யத்தை அறிவிக்கச்செய்யவும் ஸ்ரீ ஸ்வாமிகள் எல்லோரையும் பரீக்ஷித்து விசேஷமான சம்பாவனைகளைச்செய்தார். பிறகு ராமேச்வர யாத்ராகிரமத்தில் தக்ஷிணதேசம் வந்து இவ்விடத்திலுள்ள மகா பிரசித்தமான பண்டிதர்களை எல்லாம் வாதத்தில் மௌனமாக்கி அவரவர்களின் பாண்டித்யத்தை மெச்சி விசேஷ சம்பாவனைகளைச் செய்துவந்தார். மாயவரத்தில் மகா வித்வானான ஹரிஹர சாஸ்திரிகளையும், கும்பகோணத்தில் மகாமகோபாத்யாயம் கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளை தத்வமஸி விசாரத்திலேயும் பதில் சொல்லமுடியாமற் செய்தார். ராமேசுவரத்தில் மகா சபையை நடத்தி விசேஷ சம்பாவனைகளை அளித்தார். 43வது வயதில் பெங்களூரில் தமது குருவின் மகா சமாராதனையை மைசூர் மகாராஜாவும் ஆச்சரியப்படும்படியான ரீதியில் ஏராளமான சிலவில் நடத்தி வித்வத் சபையை நடத்தி கலியுகக் கர்ணனே என்று ஜனங்கள் சொல்லும்படி வித்வத் சம்பாவனைகளைச் செய்தார். அச்சமயம்

நடந்த வித்வத் சபையில் சிதம்பரம் மகாமகோபாத்யாயம் தண்டபாணிதீக்ஷிதர் தம்மால் ஸ்ரீ சுவாமிகள் கூறும் ஆக்ஷேபணைகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை என்று பகிரங்கமாய் ஒப்புக்கொண்டார். மைசூரில் நடந்த விதவா விவாக வாதத்தையும் ப்ரௌடா விவாக வாதத்தையும் பிரமாணங்களுடன் கண்டித்தார். 47 வது வயதில் பெங்களூரில் ஏராளமான செலவில் இரண்டு மடங்களை கட்டினார். 45 வது வயதில் பம்பாய் மகாணத்தைச் சேர்ந்த கதக் என்னும் ஊரில் மகா சமாராதனையை நடத்தி தப்த முத்ராதாரணம் அவசியம் என்பதை இதாவாத நிராகரண பூர்வமாய் ஸ்தாபித்தார். 46 வது வயதில் இந்தியா கவர்ன்மெண்டாரையே பயப்படும்படி செய்த தேசீயத் தலைவரான லோகமான்ய பாலகங்காததிலகரை இரண்டுதடவை இரண்டு மகாசபைகளில் பூனா, சிக்கோடி இந்த நகர்களில் சந்தித்து அவர் தம் கீதாரஹஸ்யமென்னும் நூலில் தவறுதலாய் ஸ்ரீமத்வபாஷ்யத்தை தூஷித்தெழுதியதைப்பற்றி வாதம் செய்து, அவரை தன் தவறுதலை எழுத்து மூலமாய் ஒப்புக்கொள்ளச்செய்தார். பிறகு இவருடைய ஆதரவில் ஆறு சாஸ்திரங்களிலும் பூனாவில் இடைவிடாது அநேக பண்டிதர்களுடன் பலநாட்கள் விசாரம் செய்து ஸ்ரீ மத்வஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார். 47வது வயதில் அநேக ஜாகீர்களை வாங்கி திருப்பதியில் தங்கியிருக்கும்பொழுது கும்பகோணத்திற்கடுத்த திருவசலூரிலிருந்த மகா பிரஸித்த பண்டிதரான மகாமகோபாத்யாயம் ராமசுப்பாசாஸ்திரிகள் சந்திரிகாகண்டனமென்னும் நூலை எழுதியதற்கு அவரை வாதத்திற்கழைத்து, அவர்வாராமலிருந்ததின் நிமித்தம், திருப்பதியில் அநேக ஸஜாதீய விஜாதீய பண்டிதர்களடங்கிய மகா ஸபையில் அந்த நூலில் எழுதிய தூஷணைகளுக்குத்தக்க விடைகளை அளித்து, அந்தநூலை கண்டித்து தாம் எழுதியசந்திரிகாகண்டனமண்டனமென்னும் நூலுக்கு பண்டிதர்களின் சம்மதி வாங்கி யானையின் மீது வைத்து ஊர்வலம் நடத்தினார். 48வது வயதில் உடுப்பியிலுள்ள சீரூர்மடம் ஸ்வாமிகள் வந்து இவரிடம் நியாயஸுதையைப் படித்து ஸுதாமங்களம் செய்தார். இவ்வாறு இந்த ஸ்வாமிகள் சுமார் 40 தடவை சிஷ்யர்களுக்கு ஸுதா ஸம்பூர்ணம் பாடம் சொல்லி மங்களம் செய்ததாய் தெரியவ(



கிறது. 54வது வயதில் ஸக்தி என்னும் ஊரில் ஸுதாமங்களம் செய்தபொழுது இவரிடம் படித்த சிஷ்யர்கள் சுமார் 50க்கு மேல் இருந்தனர். 55வது வயதில் ஜ்யோதிஷசாஸ்திரத்தில் வாதங்களை நாட்டிலுள்ள கேத்கர் வைத்தியர் முதலான பிரபல ஜோதிஷர்களை வரவழைத்து தார்வாரில் ஜோதிஷஸம்மேளனத்தை நடத்தி பஞ்சாங்கத்தை கணிக்கவேண்டிய முறையை நிர்ணயம் செய்து ஜ்யோதிஷ சாஸ்திரத்திலுள்ள மகா பாண்டித்யத்தை பிரசித்தப்படுத்தினார். 57வது வயதில் பகவத்கீதை விஷயமாய் மைசூரில் பல உபன்யாஸங்களைச் செய்து கீதா வாக்யங்களாலேயே ஸ்ரீ மத்வ மதத்தை ஸ்தாபித்ததுமன்றி அத்வைதம் பிரச்சன்ன பௌத்தமதமென்று கிரந்த மூலமாய் நிரூபித்தார். பெரிய ஒரு லைப்ரெரியை பெங்களூரில் ஏற்படுத்தி மைசூர் மகாராஜாவை அவருடைய வம்ச மூலபுருஷரான ஸ்ரீ கிருஷ்ணரின் மதமான த்வைத மதத்தைப் பின்பற்றும்படிக்கும் அபேத மதத்தைப் பின்பற்றி அவருடைய சிக்ஷைக்கு ஆளாகவேண்டாமென்றும் நேரில் யோசனை சொன்னார். மைசூர் பெங்களூரில் ஆயிரக்கணக்கான பிரசினங்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் பல கிரந்தங்களாக அநேக பாஷைகளில் வெளியாயிருக்கின்றன. அவ்வூரில் மாத்வர்களின் பாங்கு ஒன்றையும் பிரஸ்தத்தார். 58வது வயதில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாயகி ஸன்னதியில் அஹோபில மடம் ஸ்வாமிகளை சந்தித்து ஆனந்த தாரதம்ய விசாரம் செய்து தம் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார். நாட்டிலுள்ள எல்லாசமாசார பத்திரிகைகளிலும் பிரசித்தப்படுத்தி எல்லாமதங்களிலேயும் பிரசித்தமானபண்டிதர்களுடன் பதினாயிரக்கணக்கான ஜனங்கள்கூடிய சபையில் 21நாட்கள் தொடர்ந்துவிவாதம் செய்து த்வைதமே வைதிகமென்றும் அத்வைதம் அவைதிகம் என்றும் கும்பகோணத்தில் ஸ்தாபித்தார். வாதத்திற்கு வந்த அத்வைதபண்டிதர்கள் பதிலுரைக்க முடியாமல் சபையிலிருந்து எழுந்து போகநேரிட்டது. புதுக்கோட்டையில் தானாதிகாரி காளிங்காசாரியாரையும், மதுரையில் சிருங்கேரி மடம் வித்வான் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளையும் வாதத்தில் வென்று மேல் கக்ஷியை நிறுத்தினார். ராமேசுவரம் போய் திரும்பிவரும்பொழுது ஸ்ரீமுஷ்ணத்தில் ஸ்ரீ பூவராஹரை தம் மூல ராமருடன் பூஜை செய்யும் பாக்கியத்தை நிலை நிறுத்தினார். மதராஸில் அதிககாலம் இருந்து அநேக உபன்யாஸங்களை செய்தார். உடுபி சுப்பிரமணிய மடம் ஸ்வாமிகளை சிஷ்யராய் ஏற்றுக்கொண்டு பாடம் சொன்னார். விஜயநகரத்தில் புரொபஸர் ராதாகிருஷ்ணய்யர் வெங்கட்டராமய்யர் முதலியவர்களை ஜெயித்து மீண்டும் காசிக்குப் போய் ஹிந்து

யூனிவர்ஸிடியில் ஸ்ரீ மத்வ மத உபன்யாஸங்களைச் செய்து அநேக பண்டிதர்களை ஜயித்து பல புஸ்தகங்களை வெளியிட்டார். ஸிஷில் ஸுவட்டு முதலான அரிய கிரந்தங்களை பல பாஷைகளில் வெளியிட்டு அத்வைத மதத்தைக் கண்டித்து மத்வ மதத்தை ஸ்தாபித்துள்ளார். இவருடைய காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பலவுள. இவருக்கு தமிழிலும் இங்கிலீஷிலும் பரிசயமிருப்பதுடன் ஸம்ஸ்கிருதம், மகாராஷ்டிரம், கன்னடம், தெலுங்கு, ஹிந்துஸ்தானி இந்த பாஷைகளில் வெகு அழகாய் உபன்யாஸங்களைச்செய்யவும் திறமை பெற்றவர். ஆறு சாஸ்திரங்களில் நிபுணராயிருப்பதுடன் ரத்ன பரீக்ஷை, சாலக்ராமபரீக்ஷை, யானை குதிரை பசு முதலிய உத்தமபிராணிகளின் பரீக்ஷை, யானையேற்றம், குதிரையேற்றம், துப்பாக்கிபிரயோகம், மோட்டார்ரிபேர், கோர்ட்டு வியவஹாரம், விவசாயம், தேகப்பயிற்சி, யோகநிலை முதலிய பல கலைகளிலும் நுட்பமான அறிவுகொண்டவர். சுருங்கச்சொல்லின் தற்போது உத்தராதிமடத்தின் பீடாதிபதியான இந்த ஸ்வாமிகள் ஸர்வக்ஞரான ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத்பாதாளின் பெரிய சக்தி படைத்தவரே ஆவார்.

## பூஜாதிபத்தியத்தில் மாச்சரியம்.

முக்தி க்ஷேத்திரமாகிய காசியைவிட வீசம் மடங்கு அதிகம் புண்ணியங்கொண்டதென்று பிரசித்தமான இந்தகும்பகோணக்ஷேத்திரத்தில் முப்பத்தி முக்கோடி தேவர்களுடன் வந்துசேர்ந்த ஸ்ரீரங்கநாதனான ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமியை அவருடைய அபின்னரூபமான ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமியுடன் ஏகாஸனத்தில் ஏளப்பண்ணி தூபதீப நைவேத்தியங்களால் ஆராதிக்கும் அதி அபூர்வமான ஸர்வசுவாதந்திரியம் ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளின் பிருந்தாவன பூஜகரான நம்மாத்வருக்கிருப்பதைக்கண்டு, ஸ்ரீவைஷ்ணவர்கள் மாச்சரியப்படுவதும் அதை எப்பாடுபட்டாவது தப்புவித்துவிட எத்தனப்படுவதும் அடிக்கடி வெளியாகி வருகிறது. இது சம்பந்தமாய் 1932௵த்தில் சச்சரவு ஏற்பட்டு அதுதீர்ந்தவிபரம் எமது மித்திரன் நான்காவது வாலியம் 9வது ஸஞ்சிகை 285, 287ம் பக்கங்களில் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருடத்திய சைத்ரோத்ஸவத்திலும் 2வது நாள் உத்ஸவத்தில் அதாவது 6-5-36 புதவாரம் வைசாக சுத்த பௌர்ணமி தினத்தன்று காலையில் வீதிப்ரதக்ஷிணமான பின் வழக்கப்படி ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமி ஸ்ரீசக்கிரபாணிஸ்வாமியை அழைத்துக்கொண்டு ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் மடத்துக்குச் சொந்தமான தோட்டக்குடிராயர்சத்திரம் வெளிமண்டபத்தில் எழுந்தருளினார். கோயில் மகாநைவேத்யமாவதற்கு முன் இவ்விரண்டுபெருமாள்களுக்கும் ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் மடத்திய மிருஷ்டான்ன நைவேத்யம் மாத்வர்களால் செய்யும்படி நேர்ந்திருப்பதைத் தப்புவிக்க முடியாமலி ஸ்ரீமான்



ராகவபட்டாசாரியார் வழக்கத்திற்குவிரோதமாக இருபெருமாள்களையும் மாறிமாறி இருக்கச்செய்து நைவேத்யாதி ஆராதனைகளைச்செய்ய நம்மவர்களுக்கு இடங்கொடுத்தார். ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் பிருந்தாவன பூஜகரும் ஸ்ரீமடத்து ஸம்பேதாரருமான ஸ்ரீமான் புருஷோத்தமாசாரியார் இதன் மர்மத்தைக்கண்டுகொண்டு ஆராதனையைச்செய்ய மறுத்து சுமார் 400 வருஷங்களாய் தலைமுறை தத்துவமாய் ஸம்பிரதாயத்தில் வந்திருப்பதை அனுஸரித்து கிழக்கே திருமுகத்துடன் தென்புரமாய் முதலில் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமியையும் அவருக்கு இடதுபுறத்தில் அடுத்தபடி ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமியையும் ஏளப்பண்ணவேண்டுமென்றும் அப்பொழுதுதான் ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமிக்கு வலதுபுறத்தில் கீழே அடுக்குமனையில் ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகளின் மடத்து விக்ரஹங்கள் ஸாலக்ராமாதிகளடங்கிய பூஜை பெட்டிகளை வைத்து மூவர்களுக்கும் தூபாரத்தி மங்களாரத்தி கர்பூரார்த்தி நைவேத்யம் முதலியவைகளைச் செய்ய சௌகரியமென்றும் வாதித்தார். மற்றும் பலரும் கோயில் சிப்பந்திகளும் கூட ஆசாரியார் சொல்வதுதான் வழக்கமென்று சொன்னபோதிலும் பட்டாசாரியார் இனி எக்காரணத்தைக்கொண்டும் வேறுவிதமாய் மாற்றிவைக்கமுடியாதென்று மறுத்துவிடவும், சுமார் 200 பேர்களுக்குமேல் மாத்வர்கள் வருத்தத்துடன் போஜனமில்லாமல் மாலைவரைகாத்திருக்க நேரிட்டது. ஸ்ரீமான் K-R. ரகுநாதராயர் அவர்களின் ப்ரயத்தினத்தின் பேரில் ஷை ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமிகோயில் டிரஸ்டி ஸ்ரீமான் வக்கீல் R ஸ்ரீனிவாஸாசாரியார் வந்து வயோதிகரும் ஆகமத்தில் பண்டிதருமான ஸ்ரீமான் சீனுபட்டாச்சாரியாரை வரவழைத்து சம்பிரதாயத்தைக் கேட்கவும் இந்த பட்டாச்சாரியார் பிருந்தாவனபூஜகர் சொன்னதைத்தான் நன்று ஆமோதித்து இந்தசம்பிரதாயத்தைத் தாங்கிச் சொல்லவும் ஷை ஷைபட்டாசாரியாரின் பிரேரணையின் பேரிலும் டிரஸ்டியின் உத்திரவின் பேரிலும் ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமி தக்ஷிணத்தில் கிழக்கே திருமுகத்துடன் ஏளப்பண்ணப்பட்டு சம்பிரதாயப்படி சமீபத்தில் மடத்து ஸ்வாமி பெட்டியை வைத்து ஸ்ரீ பகவத்பாதாளால் செய்யப்பட்ட த்வாதச ஸ்தோத்திரம் பாடத்துடன் நைவேத்யம் மகா நீராஜனம் முதலியவைகளால் கிரமப்படி ஸ்ரீ சாரங்கபாணி சக்ரபாணி இவர்களுக்கு ஆராதனம் நடைபெற்று, பிறகுதான் ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளுக்கு ஹஸ்தோதகமும் மகா ஜனங்களுக்கு மிருஷ்டான்னமும் அளிக்கப்பட்டது. இந்த மடத்தாருக்குள்ள இவ்வபூர்வ பாத்யதையைப்பற்றி இந்நகரெங்கும் ஒரே பேச்சாயிருக்கிறது. இவ்வாறே திருப்பதி வெங்கடேசனை ஆராதிக்கும் பாத்யம் வியாஸராஜமட ஸ்வாமிகளுக்கும் ஸ்ரீமுஷ்ணம் பூவராகனை ஆராதிக்கும் பாத்யம் உத்திராதிமடம் ஸ்வாமிகளுக்குமிருப்பது குறிப்பிடத்தக்கதேயாகும்.

## இந்த ஜேஷ்டசுத்த ஏகாதசி உபவாஸம்.

தஞ்சாவூர் அரண்மனை ஜோஸி ராகவேந்திராசாரியார் பஞ்சாங்கத்தில் காணப்படுவதாவது:—

| | | | | |
|---|---|---|---|---|
| 30—5—36 | சனிவாரம் | தசமி | 49-57 | ஆர்யதசமி 55-55 |
| 31—5—36 | பானுவாரம் | ஏகாதசி | 55-0 | |
| 1—6—36 | ஸோமவாரம் | த்வாதசி | 60-0 | |
| 2—6—36 | மங்களவாரம் | த்வாதசி | 0-5 | |

திருக்கோயிலூரில் பிருந்தாவனஸ்தராய் ஸேவார்த்திகளுக்கு ஸர்வாபீஷ்டங்களை அளித்தவரும் மகாதபஸ்வியான பாவபோத காரரென பிரஸித்தராயுள்ள ஸ்ரீ ரகூத்தமஸ்வாமிகள் இயற்றிய திதித்ரயவினிர்ணயம் என்னும் நூலில் எழுதியிருப்பது இந்த ஸந்தர்பத்திற்கு மிக்கப்பொருத்தமாய் மாத்வ உலகத்திற்கு இந்த ஏகாதசி உபவாஸம் நிர்ணயம் செய்ய உபயோகமாயிருப்பதால் அந்த பாகத்தைமட்டில் கீழே பிரசுரிக்கப்படுகிறது. அதில் காணப்படுவதாவது:—

அத்ர வியாஸராஜமடீயா: ஆர்யபட்டேன கணனம் தசம்யாதி தினத்ரயே இத்யஸ்ய, தசம்யா: ஆதிம் நவமீம் ஆரப்ய ஏகாதசி பரியந்தம் ஆர்யமானேன கணனம், அதோ தசமீ வேத: உபயோஸ்ஸமான:] பரதோத்வாதசீ ஸித்தாந்தவை ஷஷ்டி கடிகா திருச்யேதசேத், அதிரிக்தோத பவாஸத்வயம் கார்யமித்யாஹு:] தேஷாம் த்வாதச்யாதி விரதாதீனி இதிநிர்ணய ஸாரவசனவிரோத:] நனு அதி விருத்தௌ ஸித்தாந்தே தசமி 48, 49, 50 கடிகாவா திருஷ்டா த்வாதசீ ஷஷ்டி கடிகா திருஷ்டா ஸதி பாதினோபி ஏகத்வித்ரி கடிகா அவசிஷ்டாசேத் கதமிதிசேத் தனுச்யதே] அருணோதயவேளாயாம் தசமீ நாஸ்திசேத்யதி] ஏகாதசீயதாதத்ர அருணோதய காமினீ] த்வாதச்யாமுபவாஸஸ்து த்வாதச்யாமேவபாரணம்]] இதிதர்ம ரத்னவளீ வசனேன, ஏகாதசீ வாதசமீதி ஸ்மிருதிமாலா வசனேன, அருணோதய வேளாயாமிதி ஸாரஸந்திரிகாவசனேனச அருணோதய வேதஸ்ய ஸத்வாத் அதிரிக்தோபாவஸ்ய வேதராஹித்ய மாதிமம்] ஸித்தாந்தே பரதோத்வாதச்யபாவோன்யச்ச காரணம், இத்யுக்த வேதராஹித்யா பாவாத் நது அதிரிக்தோ பாவஸத்வயம் கார்யம் இதிஸித்தம்.

இதன் அர்த்தமாவது:—இந்த தசமி ஏகாதசி த்வாதசி ஆகிய தினத்ரயங்களை நிச்சயிக்கும் விஷயத்தில் வியாஸராஜமடத்தார்கள் ஆர்ய பட்ட ரீதியாய் தசமி ஆதி தினத்ரயங்களை கணிக்கவேண்டுமென்னும் பிரமாண சுலோகத்திற்கு, தசமியை ஆதியாயுள்ள நவமி



முதல் ஏகாதசி வரை 3 நாட்கள் ஆர்யமானத்தின்படி கணக்கிட வேண்டுமென்கிறார்கள். ஆகையால் தசமிவேதம் நம்மிருவர்களுக்கும் ஸமம். அவர்கள் த்வாதசி ஸம்பூர்ணமாய் 60 நாழிகையிருந்து மறுநாளும் த்வாதசி இருக்கும் பக்ஷத்தில், அதிரிக்த உபவாஸம் இரண்டு செய்யவேண்டுமென்கிறார்கள். த்வாதச்யாதி விரதாதீனி என்னும் நிர்ணய ஸார கிரந்தத்தின் வாக்யத்திற்கு இது விரோதமாயிருப்பதால் இவ்வாறு இரண்டு உபவாஸங்கள் அவர்கள் செய்வது சரியானதன்று. அப்படி அவர்கள் இரண்டு உபவாஸங்கள் செய்வது சரியல்லவென்று இருந்தால் அதிவிருத்தி பக்ஷத்தில் ஸித்தாந்த பஞ்சாங்கத்தில் தசமி 48, 49, 50 நாழிகை இருந்து த்வாதசியும் 60 நாழிகை இருந்து மறுநாளும் 1, 2, 3 நாழிகை இருந்தால் அப்பக்ஷத்தில் என்ன செய்வது என்று பிரசினம் செய்தால் அதற்கு பதில்சொல்லுகிறேன். இரண்டு உபவாஸம் செய்ய வேண்டியதில்லை தான். அருணோதய காலத்தில் தசமி இல்லாமலிருந்து ஏகாதசி அருணோதயத்திலிருந்தால் த்வாதசியன்றே உபவாஸம் செய்து த்வாதசியன்று பாரணை செய்ய வேண்டுமென்று தர்ம ரத்னவளியில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே ஏகாதசி வா தசமி என்று சுலோகத்தால் ஸ்மிருதிமாலா என்னும் நூலும் அறிவிக்கிறது. அப்படியே அருணோதய வேளாயாம் என்னும் சுலோகத்தில் ஸாரசந்திரிகை என்னும் நூலும் அறிவிக்கிறது. இந்த பிரமாணங்களைக்கொண்டு அருணோதயவேதம் இருப்பதாலும் அதிரிக்தோபாவஸத்திற்கு வேதமில்லாமலிருப்பது முதல் நியமமாகவும் ஸித்தாந்தத்தில் மறு நாள் த்வாதசி யில்லாமலிருப்பது இரண்டாவதான நியமமாகவும் இருப்பதாலும், உபவாஸத்திற்கு அவசியமாயுள்ள வேதமில்லாமலிருக்கும் தன்மை இல்லாமலிருப்பதால் அதிரிக்தோபவாஸம் இரண்டு செய்யவேண்டாமென்று ஸித்தமாகிறது. ஸ்ரீமுஷ்ணாசாரியாளும் பக்ஷ அதிவிருத்தி: சதுபஞ்சஷடித்யார்ஹமானீதிணா: இதிகாலப்ரகாசிகாவசனாத், அதிவிருத்தௌது ஸித்தாந்தே பரதோத்வாதசீ பதி] தரிஷ்வேக கடிகா ஸஹ்யா தசம்யா வேதவர்ஜனயா]] இதிஸார நிர்ணயவசனாச்ச அதிவிருத்தௌது ஸித்தாந்தே தசமீ 48-49-50 கடிகாவா திருஷ்டா ஸித்தாந்தே பரதோத்வாதசீ ப்ரதமதினோ ஷஷ்டி கடிகாஸதீ ஏகத்வித்ரி கடிகாவசிஷ்டா ததா 48 கடிக்கயா த்ரிகடிகாதிக்யம் 49 கடிகயா த்விகடிகாதிக்யம் 50 கடிகயா ஏககடிகாதிக்யம் உன்னீய த்வாதசீ ஸித்தாந்த பஞ்சாங்க திருஷ்ட ஏகபலேன ஆர்யமான கடிகா சதுஷ்டயேனஸஹ 55 கடிகாத: பரமுக்த பலவதி பவதி அதோவேத இதி நிர்தாரிதத்வேபி நாஸ்மதுக்த நியமஸ்ய பங்க:]

ஸ்ரீ முஷ்ணம் ஆரியா சாரியாளின் ஸம்பிரதாயத்தில் 4, 5, 6

நாழிகை விருத்தியுள்ள அதிவிருத்திபக்ஷத்தில் நிர்ணய ஸார மென்னும் நூலின், அதிவிருத்தௌது ஸித்தாந்தே என்னும் பிரமாணத்தின் பேரில், ஸித்தாந்தத்தில் 48, 49, 50 இருந்து த்வாதசி 60 நாழிகையுமிருந்து மறுநாள் 1, 2, 3, நாழிகை பாக்கி இருக்கும் பக்ஷத்தில், தசமி இன்னமும் அதிகமாய் இருக்கவேண்டு மென்று ஊகிக்கவேண்டியதாகு மென்றும், அதனுல் தசமி 48 நாழிகைக்கு 3 நாழிகையும் 49க்கு 2 நாழிகையும் 50க்கு 1 நாழிகையும் சேர்க்கவேண்டும் என்றும் அந்த நாழிகையுடன் ஆர்யமானுதிகளைச் சேர்த்தால் 55 நாழிகைக்குமேல் ஏற்படு மென்றும் சொல்வதால் எங்கள் அபிப்பிராயத்திற்கு இந்த ஸம்பிரதாயம் விருத்தமாக இல்லை.

நம் மடத்தில் இப்படித்தான் அனுஷ்டானமும் இருந்து வருகிறது. அது பின் வருமாறு.

(1) துந்துபி ஸம்வத்ஸரம் வைசாக பக்ஷ தசமி ஸித்தாந்தத்தில் நா. 49-34 ஏகாதசி 55-40 த்வாதசி 60-0 த்வாதசி 2, இச்சமயம் ஸ்ரீவித்யாதீச தீர்த்த ஸ்வாமிகளின் ஆஜ்ஞைப்படி எல்லோரும் தசமிவேதத்தை அனுஷ்டித்தார்களேயன்றி அதிரிக்தோபவாஸம் இரண்டு செய்யவில்லை. (2) விச்வாவஸு ஸம்வத்ஸரம் ஆஷாட சுத்த தசமி ஸித்தாந்தத்தில் 48-17 ஏகாதசி 54-38 த்வாதசி 60 த்வாதசி 3-40; இச்சமயம் ஸ்ரீ ஸத்யநாத தீர்த்த ஸ்வாமிகள் முதலியவர்கள் எல்லோரும் தசமிவேதத்தையே அனுஷ்டித்தனர்; அதிரிக்தோபாவாஸம் இரண்டு செய்யவில்லை. (3) ஸ்வபானுஸம்வத்ஸரம் ஆச்வீஜபக்ஷம் தசமி ஸித்தாந்தம் 51-7 ஏகாதசி 55-10 த்வாதசி 59-23 அச்சமயம் ஸ்ரீ ஸத்யாபிநவ தீர்த்தர் ஸ்வாமிகள் முதலியோர் வேதானுஷ்டானம் செய்தனர். அதிரிக்தோபாவாஸம் இரண்டு செய்யவில்லை. (4) ஸௌம்ய வருஷம் ச்ராவணசுத்த தசமி ஸித்தாந்தத்தில் 50-40 ஏகாதசி 55-44 த்வாதசி 60 த்வாதசி 3 இச்சமயம் ஸ்ரீ ஸத்யவிஜய தீர்த்த ஸ்வாமிகள் முதலியோர் எல்லோரும் வேதானுஷ்டானம்தான் செய்தனர். அதிரிக்தோபாவாஸம் இரண்டு செய்யவில்லை. (5 ப்லவங்க வருஷம் பாத்ரபத சுக்ல தசமி ஸித்தாந்தத்தில் 51⅛ ஏகாதசி 55 த்வாதசி 59 அச்சமயம் ஸ்ரீ ஸத்யஸந்த தீர்த்தஸ்வாமிகள் முதலியோர் வேதானுஷ்டானம் செய்தனர். அதிரிக்தோபவாஸம் செய்யவில்லை, (3) காளாயுக்திபால்குண பக்ஷ தசமி 49 ஏகாதசி 55 த்வாதசி 60- த்வாதசி 2 அச்சமயம் ஸ்ரீ ஸத்யதர்மதீர்த்தஸ்வாமிகள் முதலியோர் வேதானுஷ்டானம் செய்தனர் அதிரிக்தோபாவஸம் 2 செய்யவில்லை.



இவ்வாறு ரகுவர்யமுனீந்திரனும் கராப்ஜோத்தேன பிக்ஷுணு] ரகூத்தமேன ரசித: திதிக்ரயவினிர்ணய:]] என்று முடிவுரை எழுதப்பட்டிருக்கும் படியான ஸ்ரீ ரகூத்தமஸ்வாமிகளின் நூலில் காணப்படுகிறது. இதனுல் இந்த ஜேஷ்டசுத்த ஏகாதசி உபவாஸம் ஒன்றே செய்யப்படலாமென்று நன்குவிளங்குகிறது. இப்பால் உத்தராதி மடத்தில் வேறு சம்பிரதாயம் புகுந்திருப்பினும் ப்ராசீனமாய் ஸ்ரீ மடத்தில் சலாரி ஸம்பிரதாயம் தான் இருந்ததாய் தெரிய வருகிறது. ஆத்யாசாரியாளின் சம்பிரதாயமும் இதுவே.

சலாரீ ஸ்மிருத்யர்த்தஸாகரமென்னும் நூலில் காலதாங்கத்திலிருந்து இந்த உபவாஸம் ஒன்றே செய்யப்பட மற்றொரு ஆதாரமும் காணப்படுகிறது. "இதம் த்வார்யபட்ட சாஸ்திரீத்யா கணகஸத்வே க்ஞேயம்] கணகாபாவே ஆர்யபட்ட பஞ்சாங்கானு ஸாரேண தசம்யாதி தினத்ரயம் க்ராஹ்ய:] ததபாவே து ஸௌரபக்ஷ பஞ்சாங்கே ஏகாதச்யாதினைம் தசம்யாத்யபேக்ஷயா பஞ்சஷட் கடிகாதிரூப ஆதிவிருத்தௌ ஸத்யாம் த்வி பஞ்சாசத் கடிகா தசமீ கிஞ்சித் அதிகா கிஞ்சித் ந்யூனசேத் ததார்ய பட்டரீத்யா பஞ்சபஞ்சாசத்வம் பவிஷ்யதீத்யனுமாய ஏகாதச்யா தசமீ வேதோக்ஞேய:

இதன் பொருளாவது:—ஆர்ய மானத்தை ஆர்யப்பட்ட சாஸ்திரரீதிப்படி செய்யப்பட்டிருந்தால் அதன்படி நிச்சயிக்கவேண்டும். கணனம் செய்யவதில்லாமலிருந்தால் ஆர்யபட்ட பஞ்சாங்கத்தின்படி தசமி முதலான தினத்ரயத்தை அறியவேண்டும். அந்த ஆர்யப்பட்ட பஞ்சாங்கமும் கிடைக்காமலிருக்கும்பக்ஷத்தில் ஸௌரமான பஞ்சாங்கத்தில் தசமி முதலானவைகளை 5 ,6 நாழிகை அதிகமாகிய அதிவிருத்தி பக்ஷம் இருக்கும்பக்ஷத்தில் தசமி 52 நாழிகைக்கு சிறிது அதிகம் சிறிது குறைவாய் இருந்தால் ஆர்யப்பட்டரீதிப்படி தசமி 55 நாழிகை ஆகிறதென்று ஊகித்து, ஏகாதசிக்கு தசமி வேதமிருப்பதாய் நிச்சயிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்போது நெ. 28 மனோஞ்மணி விலாச வாக்ய பஞ்சாங்கத்தில் அதிவிருத்தி பக்ஷத்தில் தசமி 54-14 காணப்படுவதால் தசமி வேதம் கட்டாயம் ஏற்பட்டிருப்பதாய் சித்தியாகிறது.

ஸ்ரீமுஷ்ண சம்பிரதாயத்தார்களும் கௌலகீ சம்பிரதாயத்தார்களும் தஞ்சாவூர் அரண்மனை ஜோஸீ ராகவேந்திராசாரியார் பஞ்சாங்கத்தில் ஆர்ய தசமி 55-55 என்று போடப்பட்டிருப்பதை அங்கீகரிப்பதாலும் அவர்களுக்கு ஊகதசமி உண்டென்று தெரிய வருவதாலும் அவர்களுக்கு தசமி வேதம் வந்து இரண்டு உபவாஸங்கள் இல்லை.

ஸ்ரீ வியாஸராஜ மடத்தார்கள் கஷ்டப்பட்டாவது தசமீ வேதத்தை ஸம்பாதிக்கவேண்டுமென்ற முறையை அனுசரித்து தேசாந்திர பஞ்சாங்கம் வாக்ய பஞ்சாங்கம் முதலியவைகளை ஏற்றுக்கொள்வது வழக்கமாயிருப்பதால், அதை அனுசரித்து செ. 28 மனோன்மணி விலாஸ வாக்யபஞ்சாங்கத்தில் தசமி 54-14 வருவதால் அவர்களுக்கு தசமி வேதம் ஏற்படுகிறது. தஞ்சாவூரிலிருந்து வெளியாகும் மற்றொரு அனந்தாச்சாரியார் பஞ்சாங்கத்தில் ஸோமவாரம் துவாதசி 59-18 என்று கண்டிருப்பதின் நிமித்தம் அவர்களுக்கு பாதோ த்வாதசியும் ஏற்படுவதில்லை. ஆதலால் அவர்கள் பானுவாரம் ஏகாதசி உபவாஸம் செய்து ஸோமவாரம் காலையில் நாழிகை 10-35 வரை ஹரிவாஸரம் அனுஷ்டித்து பாரணை செய்யப்படலாமென்பது எமது அபிப்ராயம்.

[illegible]

## விசேஷ தினங்கள்.

[illegible] ஜேஷ்டமாஸம்.

---

### 30-5-36 சனிவாரம்

பாண்டுரங்கி, வரகேடி, இந்த சம்பிரதாயத்தார்கள், ஸ்ரீ முஷ்ணம் சம்பிரதாயத்திலுள்ள காபே சம்பிரதாயத்தார்கள், ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடம், வியாஸராஜமடம் இவர்களுக்குமட்டில் இன்று தசமி.

### 31-5-36 பானுவாரம்

மேற்கண்ட சம்பிரதாயத்தார்களுக்கு மட்டில் ஏகாதசி. சலாரி, ஆத்யம், கௌலகீ, தாம்பரபர்ணி, உடுபி இந்தஸம்பிரதாயத்தார்களுக்கு தசமி.

### 1-6-36 ஸோமவாரம்

மேற்கண்ட சம்பிரதாயத்தார்கள் அனைவருக்கும் ஏகாதசி. முதல் இட்டத்தில்கண்ட சம்பிரதாயத்தார்களுக்கு இரண்டாவது உபவாஸம் அவர்களில் வியாஸராஜமடத்தாருக்கு மட்டில் த்வாதசி பாரணைநாழிகை 10-35 மணி 9-54க்கு மேல்.

| | | |
|---|---|---|
| 2-6-36 | மங்களவாரம் | அனைவருக்கும் பாரணை காலை மணி 5-40க்குமேல் |
| 4-6-36 | குருவாரம் | வடஸாவித்திரி பூஜை, ஸ்ரீபாதராஜர் புண்ய தினம் |
| 5-6-36 | சுக்ரவாரம் | பௌர்ணமி, விஷ்ணு ப. உப |
| 9-6-36 | மங்களவாரம் | சிரவணம், உப, விஷ்ணு ப. உப |
| 15-6-36 | சோமவாரம் | ஏகாதசி உப. |
| 17-6-36 | புதவாரம் | ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் புண்யதினம் |
| 18-6-36 | குருவாரம் | [illegible] தர்ப்பணம் |
| 19-6-36 | சுக்ரவாரம் | [illegible] விஷ்ணுப. உப. |

20865

வருட சந்தா ரூ. 3 Regd. No M

# டி. எஸ். ஆர்.

அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

| | |
|---|---|
| ஸ்தாபிதம் | தந்தி விலாஸம் |
| 1909 | "கோகுல்" |

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊறுகாய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்நானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் [தைலம் |
| அம்பர், அரகஜா | பற்பொடி |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடை.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.



Printed at Sri Venkateswar Power Printing Wo
Published by Bhagavatha Ranganathachariar, Ki